
உமா பாலகுமாரின்
ஞாபகம்
பூ மழை
தூவும்

## உள்ளே...


1. ஞாபகம் பூ மழை தூவும் 5

2. இதயம் தீட்டிய ஓவியமே 111


# ஞாபகம் பூ மழை தூவும்

## 1

அழகாகப் புலர்ந்திருந்த அந்த இனிய காலைப் பொழுதைப் "பராக்... பராக்" எனக் கட்டியம் கூறித் தன் வெளிச்சக் கரங்களால் சிவக்கச் செய்து கொண்டிருந்தான், ஆதவன்!

அந்த விடியலில்... எங்கு திரும்பினாலும் தீப்பிழம்பாய்... செஞ்சுடராய்... சிவப்பு நிறத்தில் மரங்களை நிறைத்து அழகாய்ப் புன்னகைத்துக் கொண்டிருந்தன... "ப்ளேம் ஆஃப் பாரெஸ்ட்" மலர்கள்!

காலையிலேயே அந்தக் கலெக்டர் அலுவலகம் பரபரப்பாகக் காட்சியளித்தது.

இன்று புதிதாய்ப் பதவியேற்க ஒரு பெண் கலெக்டர் வரும் செய்தியால், அனைவருமே பதைப்புடன் காத்திருந்தனர்.

அரசு வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து வர, அந்தக் காரிலிருந்து கம்பீரமாக இறங்கினாள் "கவின் மலர் ஐ.ஏ.எஸ்."

கம்பீரமான ஐந்தரை அடி உயரம். பாரதியின் புதுமைப் பெண்ணைப் போன்ற தோற்றத்துடனும், அழகிய குழந்தை முகத்துடனும் புன்னகைத்தபடி இறங்கி நிதானமாய் நடந்த வளைப் பணிவும் பயமுமாகப் பின் தொடர்ந்தனர் அலுவலக ஊழியர்கள்!

சப் கலெக்டர் சாமிநாதன் அவளுக்குப் பூங்கொத்தை அளித்து முதலில் வரவேற்க, மற்றவர்களும் அதே பாணியில் மரியாதை செய்து அவளை அந்தக் கலெக்டர் நாற்காலியில் அமர வைத்தனர்.

எல்லாமே ஒரு கனவு போலிருந்தது கவின் மலருக்கு!

இதயம், பரமேஸ்வரனுக்கும் அங்கயற்கண்ணிக்கும்... தன்னை இந்த அளவு உயர்த்தியதற்கு, மானசீகமாய் நன்றி கூறியது!

பதவியேற்ற முதல் நாளே, பல ஊர்ப் பெரிய மனிதர்கள் அவளைச் சந்திக்கக் காத்திருந்தனர்.

ஒவ்வொருவராய்ப் பார்த்துச் சென்ற பிறகு உள்ளே வந்தான் பி.ஏ. வெங்கடேஷ்!

"மேடம்! இளங்கதிர் சார் வந்திருக்காங்க... இந்த ஊரிலேயே பெரிய குடும்பம் அவங்களுது! நல்ல மனுஷர்... ஊர் மக்களுக்கு ரொம்பப் பிடிச்ச ஒருத்தர்! வரச் சொல்லட்டுமா மேடம்?" பரபரப்புடன் வினாவினான்.

"ம்... வரச் சொல்லுங்க... இவரே கடைசியா இருக்கட்டும்... மதியச் சாப்பாட்டு நேரமாச்சே..." சிறு முறுவலுடன் தலையசைத்தாள் மலர்.

"சரி மேடம்!" என்று வெளியே சென்றவன், ஒரு இளைஞனுடன் வந்தபோது, அவளுக்குச் சிறிது வியப்பாய் இருந்தது.



ஊர்ப் பெரிய மனிதர் என்று கூறியதும், வயதானவரை அவள் கற்பனை செய்திருக்க, முப்பது வயதுக்குள் சலவை செய்த வெள்ளை வேட்டி சட்டையில், ஆறடி உயரத்திற்கும் மேல், ஒரு கம்பீரமான ஆண் மகன் ஒருவிதக் கர்வத்துடன் வணங்கியபோது, திகைத்துத்தான் போனாள்.

திடீரென்று அவனுடைய ஆழ்ந்த குரல் அவளைக் கலைத்தது.

"வணக்கம் மேடம்! என் பெயர் இளங்கதிர்... இந்த ஊரிலதான் இருக்கேன்! உங்களைச் சந்திச்சதில எனக்கு ரொம்ப மகிழ்ச்சி! இந்த மாவட்டத்துக்கு உங்களால் முடிஞ்ச நற்பணிகளைச் செய்வீங்கன்னு எதிர்பார்க்கிறேன்!..."

சிறிதும் அலட்டிக் கொள்ளாமல், அனாவசிய வழிசலின்றி, ஆணித்தரமாகத் தன் எதிர்பார்ப்பைக் கூறி விட்டு, அவன் பூங்கொத்தை நீட்ட, புன்னகையுடன் அதைப் பெற்றுக் கொண்டாள் மலர்!

இதுவரை வந்தவர்களிடம் தெரிந்த போலிப் பாசாங்கும், செயற்கைத்தனமும் வழிசலும் அவனிடம் இல்லாதது புரிய, முதல் சந்திப்பிலேயே வித்தியாசமானவனாக அறிமுக மானான் அவன்!

பிறகு அவன் விடைபெற்றுச் சென்றதுமே அவன் புகழைப் பாட ஆரம்பித்தான் வெங்கடேஷ்!

"மேடம்! சார் பெரிய ராவ்பகதூர் வம்சத்தைச் சேர்ந்தவரு... இந்த ஊருக்கு நிறைய நன்மைகள் செஞ்சிருக்காரு! இந்த ஊர் மக்களுக்கு கதிர் சாருன்னா ஒரு தெய்வம் மாதிரி!" பரவசத்துடன் உரைத்தான்.

"ஓ! இனிமே யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம்! லன்ச் முடிஞ்சி பாக்கறேன்...! ஓ.கே...?"

அவள் கேட்க, பவ்யமாகத் தலையசைத்துவிட்டு வெளியேறினான் அவன்.

அன்று முழுவதும் வருபவர்களைச் சந்திப்பதிலும், பழைய கோப்புகளைப் பார்ப்பதிலுமே நேரம் சென்றது!

★★★

அன்று மாலையில் அவள் வீடு வந்து சேர்ந்தபோது டிபனுடன் தயாராகக் காத்திருந்தார் அங்கயற்கண்ணி!

அந்த ஊருக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருந்ததால், முதல் நாள் வேலையிலிருந்து பரமேஷ்வரனும் வந்திருக்க வில்லை!

அன்றைய நிகழ்வுகளைப் பற்றி அவள் ஆவலாக விவரிக்கும்போதே, பரமேஷ்வரனும் வந்துவிட்டார்.

அவரைக் கண்டதும், புதிதாய் ஒரு பரவசம் இருவரிடமும்! மகளிடமும், மனைவியிடமும் பெரிதும் பாசம் கொண்டவர் அவர்!

பிறகு மூவருமாகச் சேர்ந்து அரட்டை அடித்தபடி காபியைப் பருக, பொழுது சிறகு விரித்த பறவையாய்க் கடந்தது.

பரமேஷ்வரன் இங்கு தொழிற்சாலைகளின் உதவித் தலைமை ஆய்வாளராகப் பணியேற்றிருக்கிறார்.

தொழிற்சாலைகளை மேற்பார்வை செய்து சரியான முறையில் நடைபெறுகிறதாவென்பதைக் கண்காணித்து உரிமம் வழங்குவதும், ரத்து செய்வதும் அவர் பணி!



நேர்மையான ஒரு அதிகாரியாக இன்றுவரை செயல்பட்டு வருகின்றவருக்கு. இந்த ஊரில் பலவிதச் சோதனைகள் காத்திருப்பதை மூவருமே அறியவில்லை!

"நாளைக்கு நான் இந்த ஊரைச் சுத்திப் பார்க்க லாமின்னு இருக்கேன்ப்பா!" மலர் உற்சாகத்துடன் மொழிந்தாள்.

"பாரும்மா! முதன் முதலா இந்த மாவட்டத்துக்குப் போஸ்டிங் ஆகி வந்திருக்கே! ஏதாவது நல்லது செய்யணும் கிறதை மட்டும் மனசில வச்சிக்க! உன் சின்ன வயசுக் கனவு இது! மத்தவங்களுக்கும் பயன்பட்டு இந்த ஊரோட வளர்ச்சிக்கும், நன்மைக்கும் நீ பாடுபடணும்!" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் வாழ்த்தினார்.

"தேங்க்யூப்பா! உங்களோட ஆசிர்வாதம்தான் என்னை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கு!"

விழிகள் கசிய நெகிழ்ச்சியுடன் கூறும்போதே, பழைய நினைவுகள்!

சிறு வயதிலிருந்தே அவளுக்குள் விதைக்கப்பட்டிருந்தது இந்த ஐ.ஏ.எஸ். கனவு!

அவள் ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும் என்றதுமே, ஒரு பெண்ணிற்கு கலெக்டர் படிப்புத் தேவையா என்று அங்கயற்கண்ணி தயங்கியபோதும், அவளுடைய பால்யக் கனவை நிறைவேற்றப் பாடுபட்டவர் அவர்!

இன்று அவள் ஒரு கலெக்டராகப் பதவியேற்றிருப்பதற்கு முக்கியமான காரணகர்த்தாவும் அவர்தான்!

# 2

மறுநாளைய விடியலில்... தோட்டத்தில் அமர்ந்திருந்த மரங்களிலிருந்து துயிலெழ ஆரம்பித்து விதவிதமாய்ச் சப்தமிட்டுப் புவியை உயிர்ப்பிக்கச் செய்து கொண்டிருந்த பறவைகளின் ஒலி, இனிய பூபாளமாய்!

மெல்ல விழித்துச் சோம்பலுடன் எழுந்து தோட்டத்திற்கு வந்தவளை, மைனாக்களும், தேன் சிட்டுகளும் செம்போத்துப் பறவைகளும், குயில்களும் நட்புடன் குரல் கொடுத்து வரவேற்றன.

குளித்துக் கிளம்பி காரில் சென்றபோது மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த அந்த ஊர், மிகுந்த செழுமையுடன் பசுமையாய் இனிய சாரலுடன் இருந்தது.

முன்புறம் அமர்ந்திருந்த வெங்கடேஷ் அந்த ஊரைப் பற்றிப் பெருமையுடன் விவரித்துக் கொண்டிருந்தான்.

"இந்த மலை, முன்னாடி வறண்டு இருந்தது மேடம்! இப்போ கதிர் சாரோட முயற்சியால மரங்கள் நடப்பட்டு பசுமையா மாறி இருக்கு... இதெல்லாம் கூட அவங்க வயல்தான்!"

கடந்து சென்ற நெல் வயல்களைப் பார்வையிட்டபடி வந்தவளுக்குள் பெரும் யோசனை!

ஒரு மலையை எப்படித் தனி மனிதனால் பசுமையாக்க முடியும்... மனதில் கேள்வி வர அவனிடமே கேட்டாள்.

"மேடம்! அவர் மட்டும்னா இந்த ஊர் மக்களோட துணையோட இதை அவர் செஞ்சாரு! நிறைய மரங்களை



நட்டு அங்கங்கே தண்ணீர் இயற்கையாவே பாயற மாதிரி தடுப்புகள்லாம் அமைச்சி, இந்த மலையையே பசுமையாக்கி இருக்காரு!

"இப்போ நிலத்தடி நீரும் நல்லாக் கிடைத்தது! மழை நீரைச் சேமிக்க, ஊர் மக்கள்லாம் அவர் தலைமையில சேர்ந்து குளம் வெட்டியிருக்காங்க... யாராவது செய்யட்டுமேன்னு இல்லாம தன்னால முடிஞ்ச நன்மைகளை இந்த ஊருக்குச் செய்யறதால தான், இந்த மக்களுக்கு அவர் மேல அப்படி ஒரு மரியாதை...!"

"ஓ...!" அவள் யோசனையுடன் பதிலளிக்க, பேச்சை உற்சாகமாகத் தொடர்ந்தான் அவன்.

"அது மட்டும் இல்லை! அவங்கப்பா பேருல ஒரு இலவசப் பள்ளிக்கூடம் கூட நடத்துறாரு... ஒரு ஹாஸ்பிடல் கூட உண்டு மேடம்! குறைஞ்ச பணம் வசூலிக்கிறாங்க...!

"ஏழைங்களுக்கு இலவசத் திருமண மண்டபம்... இப்படி நிறைய செஞ்சிட்டிருக்காங்க!" பெருமையுடன் முடித்தான்.

"அதுக்கெல்லாம் ஏது அவ்வளவு பணம்?"

அவள் ஆர்வத்துடன் கேட்க, "ஹாஸ்பிடல், கல்யாண மண்டபம்லாம் அவங்கப்பா காலத்திலேயே ஆரம்பிச்சது...

"இடையில கொஞ்ச நாள் சிரமத்துல இருந்தப்பக் கூட விடாம அதை நடத்தி வெற்றியடைஞ்சது கதிர் சார் தான்!

"லோன் போட்டு ஸ்பின்னிங் மில் ஒண்ணை ஆரம்பிச்சி வெற்றிகரமா நடத்தி கேஸும் நடத்தி இழந்த சொத்தை எல்லாம் மீட்டாரு...

"இப்ப பக்கத்து ஊரிலே ஒரு காலேஜ் இருக்கு... வயலும் நிறைய இருக்கு! சதுரகிரி அய்யா பேரிலதான் எல்லாமே நடக்குது!

"அவர் இறந்துட்டாரு... அப்பக் கதிர் அய்யா டிகிரி முடிச்சிருந்தாராம்! அப்புறம் சொத்துப் பிரச்சனை... இப்ப எல்லாம் சரியாகி பிசினஸிலயும் கொடி கட்டி வாழ்ந்துட்டு இருக்காங்க..."

"உங்களுக்கு அவங்க குடும்பத்தைப் பத்தி இவ்வளவு தெரிஞ்சிருக்கே! எப்படி?" வியப்புடன் வினவினாள் மலர்.

"எங்கப்பாதான் அவங்க வீட்டு மேனேஜர் மேடம்! அதனால எல்லாமே தெரியும்...

"அரசாங்கம் செய்யட்டுமேன்னு அவங்க எதிர் பார்க்கறதேயில்லை... தங்களால முடிஞ்ச நன்மைகளைக் கதிர் ஐயா செஞ்சிட்டேதான் இருக்காங்க... சாரி மேடம்! ரொம்ப நேரம் அதைப் பத்தியே பேசிட்டேன்!" தர்ம சங்கடத்துடன் மன்னிப்பை யாசித்தான்.

"பரவாயில்லை... இந்த ஊர் மக்களைப் பத்தி எனக்கும் தெரிஞ்சிருக்கறது நல்லது தானே!"

ஒருவிதக் கம்பீரத்துடன் மொழிந்துவிட்டுத் திரும்பியபோது தான், கதிரை மீண்டும் சந்தித்தாள் அவள்.

புல்லட்டில் சென்று கொண்டிருந்தவன் கலெக்டரின் காரைக் கண்டதும் நிறுத்த, டிரைவரும் மலரின் ஒப்புதலுடன் ஓரம் கட்டி நிறுத்தினான்.

புல்லட்டை நிறுத்திவிட்டு இறங்கி வந்து அவன் வணக்கம் கூற, அவளும் வணங்கிவிட்டு மரியாதைக்காக இறங்கி நின்றாள்.



"எங்க ஊரைச் சுத்திப் பாத்தீங்களா? நல்லாருக்குங்களா மேடம்? ரொம்ப அருமையான மனுஷங்க நிறைஞ்ச ஊர் இது! அதுக்கு அதிகாரியா நீங்க வந்ததிலே, எங்க எல்லாருக்கும் பெருமைதான்!"

"தேங்க்யூ! வெங்கடேஷ்தான் அந்த மலையிலே நீங்க செஞ்ச பசுமைப் புரட்சியைப் பத்திச் சொன்னாரு! ஆச்சர்யமா இருந்தது!"

சிறு முறுவலுடன் அந்த மறைமுகப் பாராட்டை ஏற்றவன், "அது தனி மனித சாதனை இல்லை மேடம்... இந்தக் கிராம மக்களோட உழைப்பு!

"கிட்டத்தட்ட எழுபதாயிரம் செடிகளை நட்டுப் பராமரிக் கிறாங்களே! செயற்கை உரங்கள் இங்கே கிடையாது! மலைச் சரிவில சின்னச் சின்னக் குழிகளையும், மணலையும் கல்லையும் கொண்டு தடுப்புகளும் குளங்களும் அமைச் சிருக்கோம்!

"இந்த விவசாய முறைக்கு "பெர்மாகல்ச்சர்"ன்னு பேரு! அதாவது அந்தச் சுற்றுப்பகுதியில இருக்கிற வசதிகளை வெச்சே அந்த இடத்தைப் பாதுகாக்கறது!

"அதே மாதிரி மலையிலேயிருந்து இறங்கிற மழைநீர் வீணாகாம ஒரு இடத்திலே தேங்கி, பல இடங்களுக்கும் பிரிஞ்சு போயி பாசனத்துக்கு உதவற மாதிரி செஞ்சிருக்கோம்!

"இதனால எல்லா இடத்துலயும் நீர்வரத்து இருக்கு... கிரௌண்ட் வாட்டர் லெவலும் அதிகரிச்சிருக்கு!"

அவன் கூறியதும் அவனுடைய சமூக அக்கறையும், செயல்பாடுகளும் அவளுள் பெரும் பிரமிப்பை ஏற்படுத்தின.

"ஓ! இதுக்கெல்லாம் பணம் எப்படி?"

அவள் அக்கறையுடன் விசாரிக்க, "பாதி எங்க சொந்தப் பணம்... மீதி இந்த ஊர் மக்கள் தாங்களா விருப்பப்பட்டுத் தந்தது... அப்புறம் ஃபாரின்ல இருக்கிற என் நண்பன் கிட்டருந்து கிடைக்கிற "எய்ட்" எல்லாமே இதுக்குத்தான் செலவு செஞ்சிட்டிருக்கோம்!" அவன் இயல்பாகப் பதிலளித்தான்.

"தேங்க் யூ மிஸ்டர் கதிர்! வெங்கடேஷ் எல்லாம் சொன்னப்ப எனக்கு அதோட தீவிரம் புரியலை! ஆனா இப்பப் புரியுது... உங்க பொறுப்புணர்ச்சியும், சமூக அக்கறையும்!

"இவ்வளவு புகழும் நல்ல பேரும் இருக்கறப்ப பேசாம எலக்ஷன்லே நின்னு இந்த ஊருக்கு 'எம்.எல்.ஏ.'வா ஆகியிருக்கலாமே!"

"இல்லை... வேண்டாம் மேடம்! பதவி ஆசை எல்லாம் எனக்குக் கிடையாது! நல்லது செய்ய அரசியல்லே இறங்கித்தான் செய்யணும்னு இல்லையே! தனி மனிதனா சாதிக்கத்தான் நான் விரும்பறேன்! நான் கிளம்பறேன் மேடம்!"

கம்பீரமாய் விடைபெற்றுச் சென்று, புல்லட்டில் ஏறிக் கிளம்பியவனை அவள் விழிகள் பிரமிப்புடன் அளவிட்டன!

## 3

மறுநாளிலிருந்து, வேலைகள் அவள் பொழுதை வேகமாய் ஸ்வீகரிக்க ஆரம்பித்தன!

லேண்ட் மெயின்டெனன்ஸ், லா அண்ட் ஆர்டர், ஜெனரல் அட்மினிஸ்ட்ரேஷன் என்று பல பொறுப்புகள் அந்தச் சிறு மலரின் மேல் சுமத்தப் பட்டன!



ஆனால் எல்லாவற்றையும் லாவகமாகக் கையாளும் வித்தையும் தன்னம்பிக்கையையும் பெற்றிருந்தாள் அவள்!

நாட்கள் விரைய... அந்தப் பதவியில் இயல்பாய்ப் பொருந்திப் போனாள் அவள்!

அப்போதுதான் ஒருநாள், பக்கத்து ஊரிலிருந்து ஒரு மனுவுடன் அந்த ஊர்க்காரர்கள் அனைவரும் அவளைப் பார்க்க வந்து காத்திருப்பதாக வெங்கடேஷ் கூறினான்.

அவர்களை உள்ளே அழைத்து விசாரித்த போதுதான் தெரிந்தது... அவர்களுடைய ஊரில் புருஷோத்தமன் என்பவர் நடத்தி வருகின்ற தோல் பதனிடும் தொழிற் சாலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீர் ஆற்றில் கலந்து பலர் நோய்வாய்ப்பட்டிருக்கின்ற விபரம்!

பழைய கலெக்டர், எந்த நடவடிக்கையும் எடுக்காததால், இன்று அவளை நம்பி வந்திருந்தனர்.

உடனே அதை வாங்கியவள், அன்றே செயல்பட ஆரம்பித்தாள்.

உடனே பரமேஷ்வரனிடம் பேசியவள், இதைப்பற்றி அவசரமாகக் கவனித்துச் செயல்படும்படி கூறினாள்.

மறுநாளே ஒரு குழுவினர் அந்த ஊருக்குச் சென்று அது சம்பந்தமாக அந்த நீரை ஆய்வுக்கு உட்படுத்தினர்.

சில நாட்களிலேயே அதில் உடலுக்குத் தீங்கு செய்கின்ற ரசாயனப் பொருட்கள் கலந்திருப்பது தெரிய வந்தது.

உடனே மேலிடத்திற்கு இதைப் பற்றிக் கூறி அனுமதி வாங்கியவள், அந்தத் தொழிற்சாலையின் உரிமத்தை ரத்து செய்து ஆணை பிறப்பித்தாள்.

மறுநாளே, அந்தப் புருஷோத்தமனும், அவர் மகன் கலியமூர்த்தியும் கலெக்டர் அலுவலகத்திற்கே வந்துவிட்டனர்.

எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருவதாகவும், தொழிற்சாலை நடத்த மீண்டும் அனுமதி வழங்கும்படியும் கெஞ்சியவர்கள், அவள் மசியாமல் போகவே மிரட்ட ஆரம்பித்தனர்.

சட்டென்று மனதில் தீப்பிடிக்க எழுந்தவள், "வெளியே போங்க.. இல்லைன்னா நான் போலீஸைக் கூப்பிட வேண்டியிருக்கும்... வெங்கடேஷ்..." என்று மணியடித்து அவனை அழைத்தாள்.

பதட்டத்துடன் உள்ளே வந்தவன், அவர்களை வெளியேற்றும்போதே கலியமூர்த்தி சப்தமிட ஆரம்பித்தான்.

"இதுக்கெல்லாம் யார் காரணமின்னு எனக்குத் தெரியும்! அந்தக் கதிர்தானே? ஊருக்கு நல்லது செய்யறதா சொல்லிட்டு எங்க தொழில்லே கை வைக்கிறானா அவன்! இந்தத் தடவை அவனை என்ன செய்யிறேன் பாருங்க!" வெறியுடன் கத்தினான்.

"பழி ஓரிடம் பாவம் ஓரிடமா!" வென்ற நினைப்புடன், "ஒரு நிமிஷம் மிஸ்டர்! நீங்க சொல்ற கதிர் இதைச் செய்யலை! உங்க ஊர் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டதாலே ஒண்ணு சேர்ந்து இந்த மனுவை என்கிட்ட கொடுத்தாங்க...! எதுவா இருந்தாலும் சந்திக்க நான் தயார்! நீங்க கிளம்புங்க!" சீற்றத்துடன் கூறிவிட்டு அமர்ந்தாள்.



பரமேஷ்வரனும் இதில் தீவிர அக்கறையுடன் செயல் பட்டார்.

அந்த வாரமே, இதுபற்றி மேலிடத்தில் சீப் இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸிடம் பேசி உடனே அந்த ரத்து அறிக்கையை உறுதி செய்தாள் மலர்!

இந்த தேசத்திற்குத் தீங்கு செய்பவர் யாராக இருந்தாலும் அந்தத் தீய சக்தியை அழித்து நிர்மூலமாக்குவேன்... மனம் சூளுரைத்தது.

★★★

அன்று மதியமே கதிர் நேரிலேயே வந்துவிட்டான்.

சாப்பிட்டு முடித்து அவள் கோப்புகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, கதிர் அவளைச் சந்திக்க வந்திருப்பதாக ப்யூன் ரங்கசாமி வந்து கூறினார்.

உடனே அவனை அழைத்தபோது, அவனும் பதட்டத்துடனிருப்பது தெரிந்தது.

"மேடம்! நீங்க ரொம்ப ஜாக்கிரதையா இருங்க... அந்தக் கலியமூர்த்தியும் புருஷோத்தமனும் அவ்வளவு நல்லவங்க இல்லை... ரொம்ப மோசமானவங்க!"

அக்கறையுடன் அறிவுறுத்தியவனைக் கம்பீரத்துடன் எதிர்கொண்டவள், "மிஸ்டர் கதிர்! நானும் சாதாரணமா இல்லை... ஒரு கலெக்டர்! அதனால என்னை யாரும் ஒண்ணும் செய்ய முடியாது!" சிறு முறுவலுடன் கூறினாள்.

"ஆனா வீரத்துக்கும் காட்டுமிராண்டித்தனத்திற்கும் நிறைய வித்தியாசமிருக்கே மேடம்! அவங்க எதுக்கும்

துணிஞ்சவங்க! என்ன உதவி வேணும்னாலும் என்கிட்ட தயங்காமக் கேளுங்க... ரொம்ப நன்றி... ஊரையும் மக்களையும் காப்பாத்தினதுக்கு!" நன்றியுடன் வணங்கியபடி விடைபெற்றான் அவன்.

ஊரே இந்த நிகழ்வில் பிரமித்துப் போயிருந்தது.

அன்று, வீட்டிற்குச் சென்றபோது, விபரமறிந்து ஆர்வத்துடன் விசாரித்தார் அவன் தாய் தையல்நாயகி!

"என்னப்பா? இந்த புருஷோத்தமனோட பேக்டரியை மூடறதுக்கு புதுசா வந்திருக்கற கலெக்டர் ஆர்டர் போட்டுட்டாங்களாமே!"

"ஆமாம்மா! அந்தக் கலெக்டரோட அப்பாதான் இங்கே டெபுடி சீஃப் இன்ஸ்பெக்டர் ஆப் ஃபேகடரீஸ்! அதனாலே அவரே ஆய்வு செஞ்சு இதைக் கண்டுபிடிச்சிருக்காரு! மக்கள் முன்னாடியே மனு குடுத்திட்டாங்க.. அதான் உடனே ஆக்ஷன் எடுத்திருக்காங்க!"

"கடவுள் நின்று கொல்வாருங்கறது இதான் போலிருக்கு! எவ்வளவு திமிரா இருந்தாரு அவரு! அதுக்குச் சரியான கூலி கிடைச்சிருக்கு!"

"இப்பவும் நம்ம பேரைத்தான் சம்பந்தம் இல்லாம இதிலே இழுத்திருக்காரு! வெங்கடேஷ்தான் போனிலே சொன்னான்... அவருக்கு என்ன கெடுதல் வந்தாலும் நம்மாலதான்னு சொல்வாரு போலருக்கு!"

சிறு கேலியுடன் கூறிவிட்டு, அவன் உள்ளே செல்ல, தையல் நாயகிக்கோ பழைய நினைவுகளின் ஆக்ரமிப்பு!

புருஷோத்தமனின் முகத்திரை கிழிக்கப்பட்டதும், அவருடைய வில்லத்தனம் அம்பலப்படுத்தப்பட்டதும்,



பலமான காயத்துடன் ஞாபக அடுக்குகளில் வலம் வர ஆரம்பித்தன.

பத்து வருடங்களுக்கு முன்பு... அவருடைய கணவர் சதுரகிரி ஹார்ட் அட்டாக் வந்து இறந்திருந்த நேரம் அது!

கதிர் மட்டுமே கல்லூரிப் படிப்பை முடித்திருக்க, அன்பு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான்.

தொழில்கள் அனைத்துமே சதுரகிரியின் மேற்பார்வை யிலிருந்ததால், அந்த நிலையில் குடும்பமே ஒரு வழி காட்டியின்றித் தனித்து நின்றது.

அப்போதுதான் பக்கத்து ஊரிலிருந்து தையல் நாயகியின் அண்ணன் புருஷோத்தமன் அவர்களுக்கு உதவ முன் வந்தார்.

அவரே எல்லாவற்றையும் பொறுப்பேற்று மேற்பார்வை யிட, அதற்குப் பிறகே பல குழப்பங்கள் வர ஆரம்பித்தன.

அப்போது கதிர் 'எம்.எஸ்.சி.' விவசாயம் படித்துக் கொண்டிருந்தான்.

இரு வருடங்களிலேயே அவன் படிப்பு முடித்து வந்தபோது குடும்பத்திலும் தொழிலிலும் அவர் செய்த பெரும் குளறுபடிகள் தெரிய வந்தன.

கதிருக்கு எல்லாமே தெரிய வந்த போது, பல சொத்துக்கள் புருஷோத்தமனின் பெயரில் மாற்றப் பட்டிருந்தன.

தன் தங்கையையே ஏமாற்றி அவர் கையெழுத்து வாங்கி எல்லாவற்றையும் தன்னுரிமை ஆக்கியிருந்தார்.

அது தெரிய வந்தபோது, அந்த வீடு மட்டுமே மிச்ச மிருக்க, உடனே வழக்குத் தொடர்ந்தான் கதிர்.

அப்போது அவனுக்கு மிகவும் உதவியாக இருந்தது அந்த ஊர் மக்களும், அவர்களுடைய மேனேஜர் சபாபதியும் தான்! பல விபரங்கள் அவர்களுக்குச் சாதகமாக இருந்த தாலும், தையல் நாயகியே எதிர்த்து வழக்குத் தொடுத்ததாலும் ஐந்து வருடங்களுக்கு முன்... அவர்கள் பக்கமே தீர்ப்பானது.

ஆனால், எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு வெளியேறிய புருஷோத்தமனுக்கும் அவர்களுக்கும் ஒட்டுறவே இல்லாமல் தொடர்பு அறுந்தே போனது!

அன்றிலிருந்து இரு குடும்பத்தினருமே ஒருவருக் கொருவர் நிரந்தர எதிரிகளாகிப் போயினர்.

அதுவும் புருஷோத்தமனுடைய மகன் கலியமூர்த்தி கதிருக்குப் பெரும் எதிர்ப்பாகவே மாறிப் போனான்.

மருத்துவமனை, பள்ளி வளாகம், திருமண மண்டபம் எல்லாவற்றையும் சீரமைத்தவன், கல்லூரியையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபிறகு, ஒரு ஸ்பின்னிங் மில்லையும் துவக்கி நன்றாக நடத்தி வருகிறான்.

அவர்களிடமிருந்து பிரிந்து சென்ற புருஷோத்தமன், பக்கத்து ஊரில் ஆரம்பித்த லெதர் தொழிற்சாலையே இப்போது பிரச்சனைக்குள்ளாகியிருக்கிறது!

அன்றிலிருந்து இன்றுவரை உடன்பிறந்த அண்ணனே ஏதாவது ஒரு பொது நிகழ்ச்சியிலோ, விழாவிலோ எதிர்ப்பட்டாலும் தையல்நாயகி பேசுவதில்லை!

★★★



இன்று கதிர் கூறிய விபரங்களால் பழைய நினைவுகள் காட்டாறாய்ப் பெருக்கெடுத்துவிட்டன.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் அந்தத் துரோக நினைவுகளிலிருந்து விடுபட்டவர், மெதுவாக எழுந்தபோது, தொலைபேசி ஓசை இசையாய் அழைத்தது.

வேகமாகச் சென்று எடுத்தால், சென்னையிலிருந்து அவருடைய மகன் அன்புச் செல்வன்தான் பேசினான்.

அவன் இப்போது 'பி.இ. டெக்ஸ்டைல் டெக்னாலஜி' இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கிறான்.

"அம்மா... எப்படி இருக்கீங்க? அண்ணன் எங்கே?" ஆவலுடன் விசாரித்தான்.

"நான் நல்லாருக்கேன்ப்பா! கதிர் இப்பத்தான் வந்தான்... ட்ரெஸ் மாத்தப் போயிருக்கான்னு நினைக்கிறேன்... நீ எப்ப வருவே? வந்து அவனோட சுமையைக் கொஞ்சம் இறக்கி வைடா அன்பு!" – அன்பு வேண்டுகோள் விடுத்தார்.

"செமஸ்டர் முடிஞ்சவுடனே ஓடி வந்திடறேம்மா! அண்ணன் கிட்ட சொல்லுங்க! அங்கே வந்தப்புறம் எல்லாமே நான் பாத்துக்கறேன்!" உற்சாகத்துடன் கூறிவிட்டு, அனைவரையும் விசாரித்துவிட்டு வைத்தான்.

மனதிற்குள் பெரும் உற்சாகம் கைவசப்படத் திரும்பியபோது, எதிரில் மாலினி வருவது தெரிந்தது.

முன்பு தன்னையே தோழியாய்ச் சுற்றிச் சுற்றி வந்தவள்... இப்போது வேறு ஒருவனுடன் பழகத் தொடங்கிய பிறகு தன்னைத் தவிர்ப்பது நினைவு வந்தது.

'எஸ்.எம்.எஸ்.' மூலம் நல்ல தோழியாய்க் கிடைத்தவள், இன்று விலகிச் சென்று ஒரு தவறான பாதையில் செல்வதை அவனும் அறிந்திருந்தான்.

இன்று அவளிடம் எப்படியாவது பேசிவிட வேண்டு மென்று அவளை நிறுத்தினான்.

ஆனால் அலட்சியமாக அவள் விலகிச் செல்ல, மெதுவாக யாரோ அவன் தோளைத் தொட்டு நிறுத்தினர்.

"விடு அன்பு! இப்ப அவ யாரையும் மதிக்கறதில்லை! பாக்கெட் மணிக்காகத் தப்பான வழியில போறது... வாரக் கடைசியில கெஸ்ட் ஹவுசுக்குப் போயி என்ஜாய் பண்றதுன்னு ஒரு தப்பான குரூப்போட சேர்ந்துட்டா... விடு... தானாத்தான் திருந்தி வரணும்!"

சக தோழன் கூறியதைக் கேட்டபோது, இதயத்தின் நடுவே யாரோ ஒரு கூரிய கத்தியைச் செருகியது போல்!

நம் கலாச்சாரம், பணபாடு எல்லாம் இது போன்ற ஒன்றிரண்டு பெண்களால் அதல பாதாளத்திற்குத் தள்ளப் பட்டு விட்டதே! மனதிற்குள் கவலையாய் ஒரு கேள்வி!

பிறகு அவன் ஹாஸ்டலுக்கு வந்தபோதுதான், மேனேஜரின் பெண் ரேவதியின் நினைவு வந்தது.

சிறு வயதிலிருந்தே இருவரும் ஒன்றாக வளர்ந்த வர்கள்... ஒரே பள்ளியில் படித்தவர்கள்!

சென்ற முறை விடுமுறைக்குப் போனபோது அவளைப் பார்த்தது... கல்லூரியில் பி.காம்.. படித்து வருவதாக அவள் கூறிய ஞாபகம்!



சிறு வயதிலிருந்தே நெருங்கிய தோழி என்பதால் அவள் எப்படி மாறியிருக்கிறாளோ என்ற இயல்பான ஆர்வம் எழத் தன்னையே அடக்கினான் அவன்.

இப்போதெல்லாம் அடிக்கடி அவளுடைய நினைவுகள் ஏன் தன்னை ஆக்ரமிக்கின்றனவென்ற விடை தெரியாத கேள்வியுடன் படிக்க ஆரம்பித்தான்.

# 4

ஒருநாள், மலர் தன் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்றிருந்தாள்.

அவளைக் கண்டதும் ஓடிவந்து வரவேற்ற தர்மகர்த்தாவும் கமிட்டிக் குழுவினரும் பவ்யமாக அவர்களை உள்ளே அழைத்துச் சென்றனர்.

அவர்கள் தரிசனம் செய்யும்போதே கதிரும் அவன் தாயும் மேனேஜருடன் உள்ளே நுழைவதைக் கண்டாள் அவள்.

தர்மகர்த்தாவும் மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு அவர்களை வரவேற்க, கதிரின் முகம் அவளைக் கண்டதும் இனிய புன்னகையில் விரிந்தது.

பிறகு இரு குடும்பத்தினரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொள்ள, தையல்நாயகிக்கு அவர்களை மிகவும் பிடித்துப் போனது.

ஒருநாள் கட்டாயம் தங்கள் வீட்டிற்கு விருந்திற்கு வருமாறு அழைத்தார் அவர்.

பிறகு அன்று அவருக்குப் பிறந்தநாள் என்பது தெரிய, அனைவரும் அவரை வாழ்த்தினர்.

சிறப்புப் பூஜைக்குப் பிறகு மலர் அவரின் பாதம் தொட்டு வணங்கி விடைபெற, தையல்நாயகிக்கோ வெகு நிறைவு!

“எவ்வளவு அருமையான பொண்ணு கதிர்! கலெக்டரா இருந்து கூட அடக்கம், பெரியவங்ககிட்டே மரியாதை எல்லாமே நிறைஞ்சிருக்கு பாரு! எனக்கு அந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்குப்பா!”

அவர் கூறியதும் ஆமோதித்தவனின் இதயமும் “எனக்கும் தாம்மா!” என்று முணுமுணுக்க, சட்டென்று ஒருவிதப் புரியாத உணர்வில் தவித்துப் போனான் அவன்.

முதன் முதலாகத் தன்னுள் ஒளிந்திருக்கும் காதலை உணர்ந்தவனால், சரியாக மூச்செடுக்கவும் முடியாமல் போயிற்று!

கடந்த சில நாட்களாக ஏதோ ஒரு இனம் புரியாத் தவிப்பிலிருந்தவனுக்கு இன்றுதான் தன் மனமே புரிந்தது!

இது நடக்குமாவென்ற அலைப்புறுதலும் தவிப்பும் உடனே ஆக்ரமிக்க, உறுதியுடன் அதை விலக்கினான் அவன்!

சிறுவயதில் கேட்ட தேவதைக் கதைகளினால், கனவில் உலா வந்த ஒரு பெண்ணை இன்று நேரில் தரிசித்த உணர்வு!

முதல் காதல்... முதல் நேச உணர்வு மனதில் மாயம் செய்ய இனம் புரியாப் பரவசத்தில் இருந்தான் அவன்!

★★★



அந்த வாரக் கடைசியிலேயே ஊர்ப் பெரிய மனிதர் என்ற முறையில், கதிரின் வீட்டிற்கு விருந்திற்கு வரச் சம்மதித்திருந்தாள் அவள்.

ஆனால் அவனுடைய வீட்டிற்குச் சென்றபோது;, அதன் பிரமாண்டமும், ஒரு குட்டி அரண்மனையைப் போல் மலைமகளின் மடியில் அது வீற்றிருந்த கம்பீரமும், அவளைப் பிரமிக்கச் செய்தன!

எல்லாவற்றிற்கும் ஆட்கள் இருக்க, வாசலுக்கே வந்து இருவரும் வரவேற்றனர்.

அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தபோதுதான், அவர்களுடைய பாரம்பரியமும், அந்தஸ்தும் தெரிந்தன.

கதிரே அவர்களுக்கு அந்த வீட்டை அறிமுகப்படுத்த, எல்லாவற்றையும் விளக்கியபடி கூடவே வந்தான்!

பிறகு விருந்து முடிந்தவுடன், தாம்பூலத்துடன் பட்டுப் புடவையும் வைத்து அவர் பரிசளிக்க, அவளோ மறுத்தாள்.

“மேடம்! இது எங்க வீட்டு வழக்கம்... மறுக்காம எடுத்துக்கங்க... ப்ளீஸ்... கலெக்டர்ங்கிறதால இல்லை!” சிறு முறுவலுடன் கூறினான் கதிர்.

“அம்மா... நீங்க எடுத்துக்கங்க!” என்றவளின் முகம் திடீரென்று சுருங்கிவிட, அவனுக்குத் தான் பெரும் தவிப்பாய் இருந்தது!

ஒருவேளை, தான் கலெக்டர் என்பதால் இப்படி எல்லாம் பரிசுகளைக் கொடுத்துத் தன்னைக் காக்கா பிடிப்பதாக அவள் நினைத்துக்கொண்டு விட்டாளோ என்ற நினைவில் அவன் முகம் சுருங்கியது!

சிறு மறுப்புடன் அவள் விடைபெற்றுச் சென்று காரில் ஏறிவிட, பரமேஸ்வரனும், அங்கயற்கண்ணியும் பின் தொடர்ந்தனர்.

காரில் திரும்பி வரும்போது, பரமேஷ்வரன்தான் அவளிடம், "ஏம்மா? அவங்க பெரிய மனுஷி! ஒரு மரியாதைக்காகவாவது வாங்கிட்டிருக்கலாமே!" கனிவுடன் கேட்டார்.

"என்னப்பா, நீங்களே இப்படிக் கேக்கறீங்க? எனக்குத் தான் இந்த மாதிரி பழக்க வழக்கங்கள்லே விருப்ப மில்லைன்னு உங்களுக்குத் தெரியுமே!"

"சரிடா... விடுங்க! அதான் நான் வாங்கிட்டேனே!" வாஞ்சையுடன் முடித்தார் அங்கயற்கண்ணி!

★★★

மறுநாளே, பக்கத்துக் கிராமத்தில் சுய உதவிக் குழுக்கள் அமைத்துப் பெண்களின் முன்னேற்றத்திற்கும், சுய சம்பாத்தியத்திற்கும் வழிவகை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணித்து, அது சம்பந்தமான பைலில் கையெழுத்திட்டாள் மலர்.

அதே நிமிடம், உள்ளே வந்த வெங்கடேஷிடம் அதைக் கொடுத்தனுப்ப, "ரொம்ப தேங்க்ஸ் மேடம்... கதிர் சார் இதுக்காகப் பல முயற்சிகள் செஞ்சிட்டிருந்தாரு... பழைய கலெக்டர், புருஷோத்தமன் ஐயாவோட நண்பர்...

"அதனால இவருக்குச் சாதகமா எதையும் செய்யற தில்லை...! இதை உடனே அவர்கிட்டச் சொல்லணும்... ரொம்ப சந்தோஷப்படுவாங்க!" விரிந்த முறுவலுடன் கூறிவிட்டு வெளியேறினான்.



எதில் ஆரம்பித்தாலும் அவன் கதிரிடமே வந்து முடிப்பது புரிய, சிறு சலிப்பும் சோர்வும் எழுந்தன.

தலையைக் குலுக்கி மீண்டவள், வேலையில் ஆழ்ந்தாள்.

## 5

நாட்கள் நதியின் வேகத்துடன் விரைந்து கடந்தன.

அன்றைய விருந்திற்குப் பிறகு, கதிரும் அவளைச் சந்திக்கவில்லை.

இன்றுதான் செமஸ்டர் தேர்வுகள் முடிந்து அன்புச் செல்வன் ஊருக்கு வருவதாகத் தகவல் அனுப்பியிருக்கிறான்.

விடிகாலையிலேயே கிளம்பி, ரயில் நிலையத்திற்குச் சென்றபோது, ஏதோ பரபரப்பாகத் தெரிந்தது.

பிறகுதான் தெரிந்தது...: ஒரு பெரிய அரசியல் தலைவர் உடல் நலமின்றி மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் விபரம்!

அவர் இறந்துவிட்டதாக வதந்திகள் பரவ ஆரம்பிக்க, நகரமே பதட்டத்திலிருந்தது!

உடனே அவன் வெங்கடேஷிடம் பேசியபோது, தகவல் வந்து லா அண்ட் ஆர்டர் கட்டுக்குள் இருப்பதாகவும், எல்லா இடங்களிலும் காவல்துறை குவிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது.

கலெக்டர் என்ற முறையில் அதிகாலையிலேயே மலரும் அலுவலகம் வந்து பரபரப்புடன் ஆர்டர்கள் கொடுத்துச்

செயல்படுவதாகவும் தெரிவித்துவிட்டு, இணைப்பைத் துண்டித்தான் அவன்.

தீவிர யோசனையுடன் ரயில்வே ஸ்டேஷனுக்கு உள்ளே சென்றபோது, ரயில் வந்திருக்க, அன்பு ஓடிவந்து அணைத்துக் கொண்டான்.

"என்ன அன்பு? கோர்ஸ் முடிஞ்சுதா? ஃபிரெண்ட்ஸ் எல்லாம் பிரிஞ்சு வந்தது கஷ்டமா இருக்கா?" நட்புணர்வுடன் விசாரித்தான்.

"அப்படியெல்லாம் இல்லைண்ணா! இனிமே உங்களுக்கு உதவியா இருக்கலாம்... ஃபேக்டரியைப் பாத்துக்கலாம்... அம்மா கையால சாப்பிடலாம்கிற சந்தோஷம்தான்!"

லக்கேஜ்களுடன் இருவரும் காருக்கு வரும்போதுதான் அந்த விபரீதம் நிகழ ஆரம்பித்தது!

எதிரே நின்றிருந்த ஒரு பேருந்தின் கண்ணாடிகளைச் சிலர் உடைத்து நொறுக்க ஆரம்பித்தனர்.

உடனே பதறிப் போன கதிர் வேகமாக ஓடிச் சென்று அவர்களைத் தடுக்க ஆரம்பித்தான்.

அன்பும் அவனைப் பின் தொடர்ந்து அவர்களைச் சமாதானம் செய்யச் செல்ல, அவர்களின் கோபம் இருவர் மீதும் பாய்ந்தது!

"வேண்டாம்ங்க. இது தப்பு! ஒரு தலைவர் இறந்துட்டாருன்னா உடனே மறியல் செய்யறது... பஸ்ஸை அடிச்சு நொறுக்கறது... கடைகளை உடைக்கிறது... இதெல்லாம் தப்புன்னு உங்களுக்குப் புரியலை!



"எப்ப மாறப் போறீங்க? நீங்க எல்லாரும் கொஞ்சம் பொறுப்போட நடந்துக்கங்க... அது அரசாங்கச் சொத்து... அதைச் சிதைக்க நாம யாருக்குமே உரிமை கிடையாது... அதோட உங்க தலைவர் நல்லாருக்காரு... இதெல்லாம் வெறும் வதந்திதான்!"

கதிர் கூறுவதைக் கேட்கும் மனநிலையில் ஒருவருமே இல்லை... அனைவருமே வக்ரம் நிறைந்த மூர்க்க நிலையிலிருந்தனர்.

அவர்களின் கோபம் கதிரின் பின்புறமிருந்த அன்புவின் மேல் செல்ல, உருட்டுக் கட்டையை எடுத்து வீசினான் ஒருவன்!

கதிர் லாவகமாக நகர்ந்து கொள்ள, அந்தக் கட்டை அன்புச் செல்வனின் நெற்றியைப் பதம் பார்த்தது.

"ஆ..."வென்று அலறியவன், அப்படியே மல்லாந்து விழுந்து, சட்டென்று பெருகிய ரத்தத்தை அழுத்தி நிறுத்த முயன்றான்.

அதைக் கண்டதும் பதறி அவனிடம் சென்ற கதிரின் செவிகளில் அந்த ஹாரன் சப்தம் பலமாய்!

அதே நேரம் போலீஸ் பாதுகாப்புடன் ரோந்து வந்து கொண்டிருந்த கலெக்டரின் கார் உடனே நிற்க, போலீசாரும் ஓடிவந்து அந்த ரவுடிகளைப் பிடித்து அடித்துத் தள்ளி ஜீப்பில் ஏற்றினர்.

நடந்த விபரீதத்தை உடனே புரிந்துகொண்ட மலரும், வெங்கடேஷை அவர்களுக்கு உதவுமாறு பணித்தாள்.

இருவருமாகச் சேர்ந்து அன்புச் செல்வனைக் கதிரின் காரில் ஏற்ற, அது வில்லிலிருந்து அம்பாய்ப் புறப்பட்டது.

மருத்துவமனையில், அவனுடைய தலைக் காயத்திற்கு மருந்திட்டுக் கட்டுப் போட்டு முடித்த டாக்டர், இரண்டு மணி நேரமாவது அப்சர்வேஷனில் இருக்க வேண்டும் என்றார்.

உடனே போன் செய்து தையல்நாயகிக்குத் தகவல் தெரிவித்தபோது, அழுதுகொண்டே மருத்துவமனைக்கு வந்துவிட்டார் அவர்.

அன்புச் செல்வனே அவருக்குத் தைரியம் கூறி ஆறுதல்படுத்தியும், தையல்நாயகி சமாதானமாகவில்லை!

"கதிர்! ஊருக்காக... ஊருக்காகன்னு செஞ்சதெல்லாம் போதும்! என்னால தாங்க முடியலை... உங்க ரெண்டு பேருக்கும் சின்னக் காயம் பட்டாக்கூட நான் பதறிப் போவேன்னு தெரியாதா அன்பு?"

கண்ணீருடன் அவர் புலம்ப, அந்த நிமிடம் அதிகாரி களுடன் உள்ளே நுழைந்தாள் மலர்.

"சாரி மிஸ்டர் கதிர்! போலீஸ் அங்கே வர்றதுக்குள்ளே இந்த அசம்பாவிதம் நடந்துடுச்சி! எனிவே சமூக அக்கறை யோட நீங்க ரெண்டு பேரும் செயல்பட்டதுல எனக்கு ரொம்பப் பெருமையாயிருக்கு..." என்றவள், அன்புச்செல்வனிடம் சென்று ஆறுதல் கூறினாள்.

பிறகு தையல்நாயகியிடம் திரும்பியவள், "கவலைப் படாதீங்கம்மா... உங்க பையனுக்குச் சீக்கிரமே சரியாயிடும்... இவ்வளவு சமுதாயப் பொறுப்பும் தேசப் பற்றும் நிறைஞ்சவங் களை மகன்களாப் பெற நீங்க குடுத்து வச்சிருக்கணும்!" பெருமையுடன் பகர்ந்தாள்.

"என் பிள்ளை இல்லேம்மா அடிபட்டுக் கிடக்கிறான்... இவங்கப்பாவும் இப்படித்தான்... ஊரு ஊருன்னு



உழைச்சாரு... அவரோட பசங்களும் அதே மாதிரி இருக்காங்க!" சிறு சலிப்புடன் மொழிந்தார்.

"அப்படிச் சொல்லாதீங்கம்மா! நான் என் குடும்பம்னு யோசிக்கறவங்கதான் நாட்டில அதிகம்! இப்படிப் பொதுநலமா இருக்கறது ரொம்பப் பெருமை இல்லியா?"

"என்னவோம்மா...! இன்னிக்குத்தான் படிப்பை முடிச்சி ஊருக்கே வந்தான்... வந்த உடனே ரத்தம் சிந்தியாச்சு!"

பெருமூச்சுடன் அவர் நிறுத்த, "இப்ப எப்படி இருக்கு? லா அண்ட் ஆர்டர் கண்ட்ரோல்ல இருக்கா...? பதட்டம் குறைஞ்சிருக்கா?" அக்கறையுடன் விசாரித்தான் கதிர்.

"ம்... பரவாயில்லை... மக்கள் எப்போதான் மாறப் போறாங்கன்னு தெரியலை...! தங்களோட தலைவர் இறந்துட்டா, இரங்கல் தெரிவிச்சு அமைதியா இறுதிக் காரியங்கள்லே பங்கேற்கிறதுதான் நியாயம்கிற பக்குவம் எப்ப வரப் போவுதோ தெரியலை!"

"அவரோட மறைவு ரொம்ப வருந்தத்தக்கதுதான்... அதுக்கான தீர்வு கடைகளை உடைக்கறதும், பஸ்ஸை நொறுக்கறதும், பொது மக்களைத் துன்புறுத்தறதும் இல்லையே... இதை இந்தச் சமூகம் எப்போ உணரப் போகுது?" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

"அப்போ... அவர் இறந்திட்டாரா?" கவலையுடன் கேட்டான் கதிர். மருத்துவமனையில் இருந்ததால் எந்தச் செய்தியும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

"ஆம்," எனத் தலையசைத்த மலர் உடனே கிளம்பி விட்டாள்.

★★★

காலை பதினோரு மணிக்கு வீடு வந்து சேர்ந்தபோது வேலையாட்கள் அனைவரும் பதட்டத்துடன் காத்திருந்தனர்.

எல்லோருக்கும் சிறு புன்னகையில் தான் நலமாக இருப்பதை அறிவித்துவிட்டுத் திரும்பியபோதுதான், சபாபதியின் அருகில் கவலை சுமந்த முகத்துடன் நின்றிருந்த ரேவதியைக் கவனித்தான் அவன்.

விழிகள் நீரில் மிதக்க நின்றிருந்தவளை எப்படிச் சமாதானம் செய்வதென்று யோசிக்கும்போதே, தையல் நாயகியின் குரல் அவனைக் கலைத்தது.

"அன்பு! முதல்லே உள்ளே வா! திருஷ்டி சுத்தணும்! அப்புறம் ரெஸ்ட் எடுக்கலாம்...!" என்றார்.

வேலை செய்யும் பெண்மணி ஓடிவந்து தயாராக திருஷ்டி சுற்ற, உள்ளே தன் அறைக்கு வந்து ஓய்வெடுத் தான் அவன்.

கண்களை மூடியும், மனம் நிறைய அவளுடைய முகமே நிறைந்திருந்தது.

## 6

அன்று முழுவதும், அசிஸ்டெண்ட் கமிஷனரிடம் பேசிச் சூழ்நிலையை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதிலும், பொருட் சேதம், உயிர்ச்சேதம் எதுவும் ஆகாமல் காக்கக் காவல் துறையைக் களமிறக்குவது மாய்ப் பொழுது சென்றது.

பிறகு அரசியல் தலைவர் என்ற முறையில் அவளும் அவருடைய இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள, மறுநாளே சென்று வர வேண்டியிருந்தது.



அன்று மாலையே நிலைமை கட்டுக்குள் வர, நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் அவள்.

இரவு, பரமேஸ்வரனும் இதுபற்றி அவளிடம் கவலை யாகப் பேசினார்.

"நீ பொறுப்பேத்துக்கிட்ட உடனே, குருவி தலையில பனங்காயை வெச்ச மாதிரி ஆயிடுச்சேன்னு வருத்தமா இருக்கும்மா!" என்றார் பரமேஸ்வரன்.

"அப்பதாங்க, எல்லா நேரங்கள்லேயும் சமாளிக்கிற தைரியமும் தெளிவும் வரும்... இதெல்லாம் நல்லதுக்குத் தான்! பெண்களாலே எல்லாத்தையும் எதிர்கொள்ள முடியும்... திறமையா நிர்வகிச்சு பெயரெடுக்க முடியும்னு நீ நிரூபிச்சுக் காட்டுடா!" செல்லமாக மகளை அணைத்தபடி தைரியம் கூறினார் அங்கயற்கண்ணி!

தொடர்ந்த நாட்களில் வாழ்க்கை அதன் தடத்திலேயே பயணம் செய்ய ஆரம்பித்தது.

ஆனால், தினமும் ஏதாவது ஒரு சாக்கிட்டு அன்புச் செல்வனைப் பார்த்துச் செல்வது ரேவதியின் வழக்கமாயிற்று!

அப்பாவைப் பார்க்க வருவதாக ஒருநாள்... சாப்பாடு தருவதென்று மறுநாள்... இதுவே தொடர்ந்தது.

அப்படி வந்தபோதுதான், அவளைக் கைப்பிடித்து நிறுத்திக் கேட்டுவிட்டான் அன்பு!

"ரேவதி! என்னைப் பத்தி நீ என்ன நினைக்கிறே? நீ இங்கே வருவதற்கான காரணம் நான்தான்... இல்லையா?"

அவன் வினவியதும் விதிர்த்துப் போனவள், உடனே கையை விலக்கி ஓடிவிட்டாள்.

அப்போது அங்கு வந்துவிட்ட தையல்நாயகி அதைக் கவனித்துவிட்டதையும், அவர் முகம் கோபத்தில் சுருங்கி இறுகியதையும் அவன் அறியவில்லை!

மறுநாளே அவள் வருகை திடீரென்று நின்றுவிட, தவித்துப் போனான் அவன்.

அவளுடைய பார்வையும், தைரியம் தரும் புன்னகையும், சிறு வெட்கம் சுமந்த விழிகளும், அவனை மறக்க விடாமல் படாதபாடு படுத்தின.

ஆனால் மறுநாள் வீட்டிற்கு வந்த ரேவதியைத் தனியே அழைத்துப் பேசினார் தையல்நாயகி.

"ரேவதி! நீ வயசுப் பொண்ணு! சின்ன வயசில இருந்து என் பிள்ளைகளோட சேர்ந்து வளர்ந்திருந்தாலும், அவங்க இப்ப வயசுப் பசங்க! இந்த ஊரோ, மத்தவங்களோ உன்னையும் என் பிள்ளைகளையும் தப்பாப் பேசறதை நான் விரும்பலை! புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்!"

அழுத்தமான குரலில் அவர் கூறியதும் சட்டென்று பொங்கிய கண்ணீருடன், திரும்பி வீட்டிற்கு ஓடிவிட்டாள் அவள்.

பின்புறமிருந்த சிறு வீட்டில்தான் அவர்கள் குடியிருந்தனர்.

வீட்டிற்குள் நுழைந்த மறு நிமிடம் அவளுக்குத் தங்களின் நிலையும், அன்புச்செல்வனின் அந்தஸ்தும் புரிந்தது!

இனி அவனுடைய வீட்டிற்குச் செல்லக் கூடாதென்ற வைராக்யம், விருட்சமாய் மனதில் எழும்பியது!

அன்றிலிருந்து அவள் மனதில் காதல் போராட்டம் அலையெனப் பொங்கிப் பெருக ஆரம்பித்தது.



ஆனால், அதை மறைத்து... தனக்குள் புதைத்து... அந்த சுகமான நினைவுகளிலேயே வாழத் தொடங்கினாள் அவள்!

★★★

ஒரு நாள், கதிர் கலெக்டர் அலுவலகத்திற்குச் சென்றிருந்தான்.

பக்கத்துக் கிராமத்தில், இலவச நூலகம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான் அவன்.

அதைப் பற்றிப் பேசத்தான் வெங்கடேஷ் அவனை இன்று வரச் சொல்லியிருந்தான்.

சிறு முறுவலுடன் அவனை வரவேற்ற மலருக்குள் அவனுடைய சமூக அக்கறையும், விடா முயற்சியும் பெரும் நன்மதிப்பை விதைத்தது.

அவனுடைய கோரிக்கையைக் கூடிய சீக்கிரமே நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தாள் அவள்.

தன் பங்கிற்கு ஒரு தொகையை அளித்தவன், "எங்க வீட்டிலயே ஒரு சின்ன லைப்ரரி இருக்கு! அப்பாவுக்கு நல்ல புத்தகங்கள்லே ஆர்வம் அதிகம்... ஒரு நல்ல புத்தகம்... ஒரு நல்ல ஆசிரியருக்குச் சமம்னு சொல்லுவாங்க!

"நான் அதை இப்பவும் பராமரிச்சிட்டு வரேன்! அப்பாவோட நண்பர் ஒருத்தர் சமீபத்துல இறந்துட்டாங்க... அவர் மகன் தன் அப்பாவோட கலெக்ஷன்ஸ் எல்லாம் தரேன்னு சொல்லியிருக்காரு!

"நேத்துதான் போய்ப் பார்த்துட்டு வந்தேன்... பாதிப் புத்தகங்கள் அவங்க வீட்டிலேயே இருக்கு... நாவல்கள், சுய

முன்னேற்ற நூல்கள், ஆன்மீகப் புத்தகங்கள் நிறைய இருக்கு... ஜெனரல் புக்ஸ், குழந்தைகளுக்கான புத்தகங்கள் வாங்கினாக் கூடப் போதும்...”

ஆர்வத்துடன் அவன் கூற, ஒரு மாய வலையாய் அவளையும் அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது!

இவன்தான் எவ்வளவு உற்சாகமும் சக்தியும் நிறைந்தவனாக இருக்கிறான்... மனம் பிரமித்தது!

இந்த இளம் வயதில், அவனுக்கிருந்த சமூக அக்கறையும், பொறுப்புணர்வும், மனித நேயமும் அவளிடமும் உத்வேகத்தை விதைத்தது.

## 7

அன்று, மலரிடம் தெரிந்த மாற்றம், கதிரிடம் பெரும் நம்பிக்கையை விதைத்து இதயத்தை இதமாக்கியது.

மாலையில், அதே நினைவில், தன் மனதில் இடம் பிடித்த பாடலை மென்மையாய் ‘ஹம்’ செய்தபடி மொட்டை மாடியில் நின்றிருந்தான் கதிர்!

இன்று, இந்த உலகமே ரம்யமாய் அழகாய் மாறிய ஓர் உணர்வு!

திடீரென்று ஒலித்த அன்புவின் குரல் அவனைக் கலைத்தது.

இப்போது அவனுடைய காயம் முழுமையாக ஆறியிருந்தது.



“என்னண்ணா, ரொம்ப சந்தோஷமான மனநிலையிலே இருக்கீங்க போலருக்கு!” மகிழ்ச்சியுடன் கேட்டான் அவன்.

“ம்... என்ன விஷயம் அன்பு?”

“அண்ணா! நானும் நாளையிலிருந்து உங்க கூட டெக்ஸ்டைல் பேக்டரிக்கு வரேன்! கத்துக்குடுங்க! இனிமே நான் அதைப் பாத்துக்கறேன்! நீங்க மத்த பிசினஸ்லே கான்சன்ட்ரேட் பண்ணுங்க!” அக்கறையுடன் உரைத்தான்.

வாஞ்சையுடன் அவனுடைய முன்னுச்சியை வருடியவன், “ஓ.கே! அதுதான் உன் விருப்பம்னா எனக்கும் சம்மதம்தான்! உனக்கு ஹெல்த் இப்ப நல்லா இருக்கு இல்லியா? ரெஸ்ட் எடுத்துட்டு கொஞ்ச நாள் கழிச்சி வரதுன்னாலும் பரவாயில்லை!” இளகிய குரலில் பகர்ந்தான்.

“இல்லைண்ணா! நாளைக்கே வரேன்! வீட்டிலேயே அடைஞ்சி கிடக்கிறது போரா இருக்கு... எனக்கும் ஒரு மாற்றமா இருக்கும்!”

அவன் கூறியதும் சரியென்பதுபோல் தலையசைத்தான் கதிர்!

மறுநாளிலிருந்தே கதிருடன் பேக்டரிக்குச் சென்ற அன்பு, இயல்பாய் அதில் தன்னைப் பொருத்தி ஈடுபடுத்திக் கொண்டான்!

அதனால் கதிரின் பளு சிறிது குறைய ஆரம்பித்தது.

விவசாயத்தைப் பொறுத்தவரை புதுப்புது உத்திகளையும், சோதனைகளையும் செய்வதில் கதிர் வல்லவனாய்த் திகழ, தன் துறையில் பெரிதும் ஆர்வம் காட்டி பேக்டரியின் உற்பத்தியை உயர்த்தும் பணியில் ஈடுபட்டான் அன்பு!

அவனுடைய ஆர்வத்திற்கும், முயற்சிக்கும் முக்கியமான ஒரு காரணமும் இருந்தது.

★★★

அன்று, தொழிற்சாலைக்கு வந்தவுடன் நூல்களைத் தேர்வு செய்து சரி பார்க்கும் பொறுப்பிலிருந்த ரேவதியைத் தன் அறைக்கு அழைத்தான் அவன்!

அவளும் பயத்துடனே 'எம்.டி'யின் அறைக்குள் செல்ல, குறும்புச் சிரிப்புடன் அவளை வரவேற்றான்.

"என்ன ரேவதி? இப்பல்லாம் உன்னை ஆளையே பாக்க முடியலை... ரொம்பப் பிசியா?"

"சார்... இது நான் வேலை செய்யற இடம்... நாலு பேர் பாத்தா தப்பா நினைப்பாங்க... என்னை இது மாதிரித் தனியா இனிமே கூப்பிடாதீங்க!"

அவசரமாகக் கூறிவிட்டு விரைந்து வெளியேறிய வளையே யோசனையுடன் தொடர்ந்தது அவன் பார்வை!

ஏன் இவள் என்னை விட்டு விலகி விலகிச் செல்கிறாள்... ஒருவேளை என்னைப் பிடிக்கவில்லையோ?

இல்லையே... இரண்டு வருடங்களாக அவள் கண்கள் சிந்தும் காதல் கவிதைகளை எந்தன் மனதில் எழுதித்தானே வைத்திருக்கிறேன் நான்?

"அவளுடைய மாற்றத்திற்கு என்ன காரணம்?" யோசனையுடன் அமர்ந்திருந்த போதுதான் யாரோ தோளைத் தட்டி உசுப்புவது புரிந்தது.

தன் நினைவுகளிலிருந்து கலைந்து நிமிர்ந்தபோது, எதிரே கதிர் நின்றிருந்தான்.



"அப்படி என்ன தீவிர யோசனை அன்பு?" வியப்புடன் விசாரித்தான்.

"ஒண்ணுமில்லைண்ணா... சும்மா... காலேஜ் ஞாபகம்!" உண்மையை மறைத்துப் பூசி மெழுகியபோதுதான் பெரும் குற்றக் குறுகுறுப்பாய்!

"உனக்கு உன் ஃப்ரெண்ட்ஸைப் பார்க்கணும்னா சென்னைக்குப் போயிட்டு வரலாமே. போன்ல பேசு... நெட்லே சாட் பண்ணு!"

வாஞ்சையுடன் அவன் கூற, "சரிண்ணா..." என்றபடி எதிரிலிருந்த பைலில் ஆழ்ந்தான்.

★★★

ஒரு ஞாயிறன்று மாலையில் கோயிலுக்குப் போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள் மலர்.

பரமேஸ்வரனும் அங்கயற்கண்ணியும் ஏதோ பேசியபடி வர, அவள் கவனம் சட்டென்று சிதறியது.

ஒரு கம்ப்யூட்டர் சென்டரின் வாசலில் கதிரின் கார் நின்றிருக்க, அருகிலேயே ஒரு பெண்ணைத் தோளோடு அணைத்து விடைபெற்றுக் கொண்டிருந்தான் அவன்.

ஏனோ அவளுக்கு விதிர்ப்பாய்... அவன் ஒரு பெண் ணிடம் பேசினால் உனக்கென்ன...? மனம் இடித்துரைத்தது!

ஆனால் அவனைப் பற்றிப் பெரிய மதிப்பு மரியாதை யுடன் நினைத்திருந்தவளுக்கு... இன்று சிறு தவிப்பாய்!

ஒரு கடைத்தெருவில் பலர் முன்னிலையில் இப்படி ஒருவன் நடந்து கொள்வதாவென்ற குறுகுறுப்பும் தவிப்பும் வந்தன.

உடனே அவள் யாரென்று தெரிந்துகொள்ள வேண்டும் போல்!

மறுநாளே அதற்கு விடை கிடைத்தது.

அன்று அவளை நூலகம் விஷயமாகச் சந்திக்க வந்திருந் தான் கதிர்.

எல்லாம் பேசி முடித்த பிறகு, பக்கத்து ஊரில் பாசனத் திற்காகத் திறந்து விடப்படும் சிறிய டேமின் அளவு பற்றி அவளிடம் விசாரித்தான் அவன்.

"அந்த ஊரில் இப்பத்தான் ஆத்து நீரைச் சுத்திகரிச் சிட்டிருக்காங்க... இந்தக் கண்மாய் தண்ணிதான் பாசனத் துக்கு உதவும்! இப்ப பயிர்களுக்குக் கட்டாயம் தண்ணி தேவை... நீங்க தான் டேமைத் திறந்துவிடச் சொல்லணும்! மழை வந்துடிச்சின்னா அப்புறம் கவலை இல்லை!"

பொறுப்புணர்ச்சியுடன் கூறியவனையே ஒரு கணம் அளவிட்டவள், "உங்களுக்கு இந்த ஊர்ப் பிரச்சனையே தலைக்கு மேல இருக்கு... இதிலே பக்கத்து ஊருக்காகவும் என்கிட்டே பேசறீங்க... குட்!" என்றவளுக்குள் நேற்றைய நினைவு!

உடனே, "நேத்து சாயந்ரம் கோயிலுக்குப் போயிட்டு வரும்போது... டவுன்லே ஒரு ஜெராக்ஸ் சென்டர் வாசல்லே உங்களைப் பார்த்தேன்..." ஒரு பெண்ணுடன் பார்த்தேன் என்று கூறாமல் நிறுத்தினாள்.

"ஓ! அது பத்திக்கூட உங்ககிட்ட பேசணும்னு நினைச்சேன்... நல்ல வேளை! நாளைக்கே முத்தழகை இங்கே அழைச்சிட்டு வரேன்!" என்றபடி விடைபெற்றான்.



மறுநாள் வரை அந்த சஸ்பென்சை அவளால் தாங்கவே முடியவில்லை!

அந்தப் பெண் யார்... இவ்வளவு நெருக்கமாக அவன் அவளிடம் பழகுகிறானே, அந்த உறவுக்கு அர்த்தம் என்ன? பல கேள்விகள் இதயத்திற்குள்!

மதியம், அந்தப் பெண்ணுடனே அவளைத் தேடி வந்திருந்தான் கதிர்!

இருவருமாக உள்ளே வந்து வணங்கியபோதுதான் அவளிடம் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிவதுபோல்...! மலர் எண்ணியதைவிடச் சின்னப் பெண்ணாய்!

அவள் அமரச் சொன்னதும் தயக்கத்துடன் உட்கார்ந்த வளையே விழிகள் வருட, இவ்வளவு கம்பீரமும் அழகும் கொண்ட கதிர், இந்தப் பெண்ணை எப்படி விரும்பினான்... காதலுக்குக் கண்ணில்லை என்பது இதுதானா?

அவள் எண்ண ஓட்டத்தைக் கலைத்து மலரை அதிரச் செய்தது... கதிரின் அறிமுக வார்த்தைகள்!

"இவ என்னோட கசின்.... சின்ன வயசுல இருந்து ஒண்ணா பழகினவங்க! இவ ஒரு திருநங்கை... என் மாமாவோட பையன் காளிமுத்துதான் இப்ப முத்தழகா மாறியிருக்கா!"

அந்த வார்த்தைகள் அவளுக்குள் இடியாய் இறங்கின.

இந்த விஷயத்தைப் பற்றி எவ்வளவு தவறாகக் கணித் திருக்கிறோம்... குற்றவுணர்வில் மனம் கேள்வி கேட்டது!

"ஓ..." வியப்புடன் கேட்டுவிட்டு அந்தப் பெண்ணிடம் திரும்பினாள் மலர்.

"எப்படி இருக்கீங்க முத்தழகு...? என்னைப் பார்க்கணும்னு வந்திருக்கீங்கன்னா ஏதாவது ப்ராப்ளமா?" பரிவுடன் விசாரித்தாள்.

"ம்... எங்கப்பாவும் அண்ணனும் தினம் ஆளுங்களை விட்டு என்னை மிரட்டறாங்க மேடம்! அவங்க குடும்பத்துக்கு ஒரு தீராப்பழியாம் நான்! நான் என்ன செய்வேன்... இப்படி என்னைப் படைச்சது கடவுள்தானே!"

முகம் மூடி விசும்பலுடன் அழ ஆரம்பித்தவளை, ஒரு குழந்தைபோல் அணைத்துக் கொண்டான் கதிர்.

"ப்ச்... முத்து, அழக்கூடாது... அவங்களுக்கும் இது மரபணுக்களோட ஒரு விளையாட்டுன்னு புரியவரும்! பொறுமையா இரு... அவங்க உன்னை ஏத்துப்பாங்க!"

அவள் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்தபடி ஆறுதல் கூறினான்.

மலருக்குத்தான் பெரும் பரிதாபமாய்...!

"சரி... இதுக்கு நான் என்ன செய்யணும் முத்தழகு?" அக்கறையுடன் வினவினாள்.

"எங்களை மாதிரிப் பெண்கள் இங்கே நிறையப் பேர் இருக்காங்க... அவங்களையும் ஒரு சுய உதவிக் குழுவில சேத்துக்கணும்!

"எனக்குக் கதிர் அண்ணன் கிடைச்சாங்க பக்க பலமா! ஆறு மாசம் முன்னாடி நானும் மத்தவங்க மாதிரி கடை கேட்டு பொழப்பு நடத்திட்டிருந்தேன்!"

"அப்படின்னா!" புரியாமல் வினவினாள் அவள்.



"அது பாடிப் பாடிக் கடைகள்லே காசு வசூலிக்கறது... ஆனா கதிர் அண்ணன் தான் எனக்கு இந்த ஜெராக்ஸ் கடையை வெச்சித் தந்தாங்க... எனக்கு அதைப் பத்தி எதுவுமே தெரியாது... ஒரு ஆளு இருக்காரு பாத்துக்க! இப்ப கொஞ்சம் கத்துக்கிட்டிருக்கேன்."

பெருமையுடன் கதிரைப் பார்த்தபடி அவள் கூற, அவள் போன்ற பெண்களுக்குத் தான் சுய உதவிக் குழுக்களில் வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதாக வாக்களித்தாள் மலர்.

பிறகு, "உங்க அப்பாவுக்கும் அண்ணனுக்கும் நீங்க கடை நடத்துறதிலே என்ன ப்ரச்னை?" யோசனையுடன் வினவினாள்.

"எங்கப்பா புருஷோத்தமன்தான் பக்கத்து ஊரில பெரிய மனுஷர்! அவர் பையன்... நான் இப்படி ஒரு திருமங்கையா மாறிட்டேன்னு கோபம்...

"எங்களைப் புரிஞ்சிக்க மறுக்குது இந்தச் சமுதாயம்! இதுக்கு நாங்களா காரணம்? பிறப்பால ஆணாவும், உணர்வுகளாலே பெண்ணாவும் படைக்கப்பட்ட பிறவிகள் நாங்க... எங்க அப்பா அம்மா குடும்பமே எங்களைப் புரிஞ்சிக்கலை... மத்தவங்களைப் பத்தி என்ன சொல்றது?"

பெரும் விரக்தியும் ஒதுக்கப்பட்ட வேதனையும் தெரிந்தன அவள் குரலில்!

இவளுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற உணர்வு உள்ளே பரவியது.

"கவலைப்படாதே முத்தழகு!... உனக்கு இனிமே எந்தக் கஷ்டம் வந்தாலும் என்கிட்டே சொல்லலாம்! போலீஸை விட்டு

உன் குடும்பத்துக்கு ஒரு வார்னிங் குடுக்கச் சொல்லி டறேன்..." அவளுக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தாள்.

## 8

மறுவாரத்தில் ஒரு நாள்... தாங்க முடியாத கோபத்துடன் தன் தந்தையிடம் கத்திக் கொண்டிருந்தான் கலியமூர்த்தி!

"அப்பா! நேத்து அந்தக் காளிமுத்துப் பயலை மிரட்டலாமின்னு போனா அவன் என்னையே மிரட்டறான்! போலீஸ்கிட்ட சொல்லிட்டானாம்... இனிமே தன்னை ஒண்ணும் பண்ண முடியாதுங்கறான்! இதெல்லாம் அந்தக் கதிர் குடுக்கற தைரியம்ப்பா!"

"ம்! எனக்கு ரெண்டு நாள் முன்னாடியே தெரியும்... சொன்னா நீ கோபப்பட்டு கத்துவேன்னு தான் சொல்லலை! ஒரு போலீஸ்காரரு நேராவே இங்கே வந்தாரு!"

புருஷோத்தமன் முடிப்பதற்கு முன்பே, வெகுண் டெழுந்தான் கலியமூர்த்தி...

"என்னது... நம்ம வீட்டுக்கா... ஏம்ப்பா இதை முன்னாடியே சொல்லலை?"

"ப்ச்... விடுடா மூர்த்தி... அந்தப் பய முத்து கலெக்டர் கிட்ட மனு குடுத்துட்டானாம், நாம அவனைப் பொழப்பு நடத்தவிடாம டார்ச்சர் குடுக்கறதா?

"அதான் இனிமே அவனைத் தொந்தரவு செய்யா தீங்கன்னு கேட்டுக்கிட்டுப் போனாரு!"

"ஓ! முன்னாடி நமக்கு ஒரு எதிரிதான் இருந்தான்... இப்ப அந்தக் கலெக்டரும் வந்துட்டாளா? இருக்கட்டும்... சரியான



ஒரு நேரம் வரட்டும்... காத்துட்டிருக்கேன்!" உறுமிவிட்டு வெளியே சென்றான்.

"மூர்த்தி, பொறுமையா இருப்பா! உனக்குக் கல்யாணம் வேற முடிவு பண்ணியிருக்கு... இப்ப எந்த வம்பும் வெச்சுக் காதே... சம்பந்தி வீட்டுக்குத் தெரிஞ்சா அசிங்கமாயிடும்!"

அவனுடைய தாய் ருக்மணி புலம்பியபடி அவனை வழியனுப்பினாள்.

அன்றிலிருந்தே பொறாமையும், வன்மமுமாக தனக்குச் சாதகமான ஒரு நாளுக்காகக் காத்திருக்கத் துவங்கினான் கலியமூர்த்தி!

★★★

அன்று, கதிர் வயல் வேலையாக டவுனுக்குச் சென்றிருந்தான்.

அப்போதுதான், கலியமூர்த்திக்குத் திருமணம் முடிவான விஷயத்தை முத்தழகு கூறினாள்.

"முத்தழகு! இனிமேலாவது மூர்த்தி திருந்தி நல்லவனா மாறினா எல்லாருக்கும் நல்லது... பாப்போம்..." என்றபடி தான் எடுத்து வந்திருந்த இரு சுரிதார்களை அவளிடம் அளித்தான்.

"தேங்க்ஸ் அண்ணா! என்னை நீங்களாவது புரிஞ்சி பாசமா இருக்கீங்களே... அத்தையும் அன்பு அண்ணாவும் எப்படி இருக்காங்க?" ஆவலுடன் விசாரித்தாள்.

"ம்... எல்லாரும் நல்லாயிருக்காங்க... அன்புதான் கொஞ்ச நாளா ஏதோ மாதிரி இருக்கான்... யாரையோ லவ்

பண்றான்னு நினைக்கிறேன்... ஆனா அது யாருன்னுதான் தெரியலை! கண்டுபிடிக்கணும்!"

சிறு முறுவலுடன் அவன் கூறியபோது, இவன்தான் தன் குடும்பத்தினரிடம், இந்த ஊரிடம் எவ்வளவு அக்கறை உள்ளவனாக இருக்கிறான் என்ற பிரமிப்பு எழுவதாய்!

"இவன் தன் அண்ணனா இருந்தால் எப்படி இருக்கும்... அவள் மனம் பாசத்திற்கு ஏங்கித் தவித்தது.

"என்ன முத்தழகு... அவ்வளவு தீவிர யோசனை?" முகத்தின் முன் சொடக்குப் போட்டு அழைத்தான் கதிர்.

"இல்லை... நீங்க என் அண்ணனா இருந்திருக்கக் கூடாதான்னு..."

அவள் முடிக்கும் முன்பே, "ஏய்... இப்ப நான் உனக்கு அண்ணன் இல்லையா? எப்பவுமே நீ எனக்கு ஒரு குட்டித் தங்கைதான்... நான் கிளம்பறேன்... டேக் கேர்!" என்றபடி விடைபெற்றான்.

அந்த மனிதனின் கம்பீரமும், உயர்ந்த மனமும் உள்ளத்தை நிறைத்து விழியோரம் கசியத் தலையசைத்தாள்.

அந்த வாரமே தன் போன்ற திருநங்கைகளைச் சுய உதவிக் குழுவில் சேர்த்துக் கொண்டதற்காக நன்றி கூறுவதற்காக மலரைத் தேடிக் கதிருடன் வீட்டிற்கே வந்து விட்டாள் முத்தழகு!

ஆவலுடன் அவர்களை வரவேற்று அமர வைத்தபோது தான் அங்கயற்கண்ணி அங்கு வந்தார்.



பரஸ்பர அறிமுகத்திற்குப் பிறகு, காபி எடுத்து வருவதாகக் கூறி, அவர் உள்ளே செல்ல, கதிரிடம் திரும்பினாள் மலர்!

அந்த நிமிடம், அவன் பார்வை ஒரு இனம் புரியா உணர்வைத் தாங்கியபடி சிறு குறுஞ் சிரிப்புடன் தன் முகத்திலேயே பதிந்திருப்பதை உணர்ந்தவளுக்கோ பெரும் தர்ம சங்கடமாய்!

சட்டென்று விழிகளைத் தழைத்தவள், "முத்தழகு! எப்பவுமே எனக்கு உங்க மாதிரி திருநங்கைகள் மேல ஒரு பரிதாபம், அக்கறை உண்டு! இந்த உதவியைச் செய்ய ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்ததுக்கு நான்தான் உனக்கு நன்றி சொல்லணும்..." மென்குரலில் நிறுத்தினாள்.

"மேடம்! எங்க உணர்வுகளைப் புரிஞ்சிக்கிட்டீங்களே, அது போதும்! சின்ன வயசுலருந்தே வீட்டில பெண் இல்லைன்னு என்னை ஒரு பொண்ணாவே வளர்த்தாங்க...

"எனக்கு நல்லா விபரம் தெரிஞ்சப்புறம் கூட முடி வெட்டாம ரெண்டு ஜடை போட்டு பொட்டு வச்சி கண்ணுக்கு மை வச்சி விடுவாங்க எங்கம்மா!

"நான் அஞ்சாவது போனப்ப, எனக்குக் கூடப் படிக்கிற ஆம்பிளைப் பசங்களைப் பார்த்தா வெக்கம் வர ஆரம்பிச்சுது... பொண்ணுங்களோட தான் கோக்கோ விளையாடுவேன்... ஸ்கூல் படிப்பை முடிச்சப்பதான் பொண்ணாவே மாறிடறதுன்னு முடிவு பண்ணினேன்... அதுக்குள்ளே ஸ்கூல்லயே விஷயம் பரவ ஆரம்பிச்சுது!

"இவன் ஆம்பிளை மாதிரி இருக்கிறான்... ஆனா நடவடிக்கை பொம்பளை மாதிரி இருக்குதுன்னு பேச ஆரம்பிச்சாங்க.

"ஒரு ஆம்பிளை மாதிரி இருடா...! ஊரெல்லாம் உன்னை ஒன்பதுன்னு சொல்றப்ப எங்களுக்கு அவமானமா இருக்குன்னு அம்மா அழுதாங்க!

"அண்ணன் என்னைப் போட்டு அடிச்சாரு! 'நீ இப்படி அரவாணியா ஆயிட்டு எங்க வம்சத்தையும் குடும்பத்தையும் கெடுக்க வந்தியா?'ன்னு அப்பா திட்டினாரு!

"ஒருநாள் எங்கண்ணன் மட்டும் வீட்டில இருந்தாரு... அம்மாவும் அப்பாவும் ஒரு கல்யாணத்துக்குப் போயிருந் தாங்க... அவங்க வரதுக்குள்ளே நீ எங்காவது ஓடிப் போயிடு... இங்கே இருந்தா கொன்னுடுவேன்னு மிரட்டினாரு!

"அன்னிக்கு ஊரைவிட்டு ஓடினேன்! பெங்களூரிலே வேலை செஞ்சேன்... என்னை மாதிரி திருநங்கைகளோட சேர்ந்து பாட்டுப் பாடி தெருத் தெருவா சுத்தி கடைகள்லே காசு வசூலிப்போம்!

"அப்புறம் எங்க ஜமாத்துல சேர்ந்து வேற ஒரு குருவுக்கு மடி கட்டி மகளாகி வடநாட்டுக்குப் போனேன்... குழந்தை பிறந்த வீட்டுக்குப் போய்க் காசு வாங்குவோம்! எனக்கும் அந்த வாழ்க்கை பிடிச்சிருந்தது!

"அப்புறம் எங்க குழுவில எல்லாரும் இங்கே வந்தாங்க... கூத்து கரகம்னு ஆட ஆரம்பிச்சோம்... எனக்குள்ளே வேற ஏதோ ஒரு தேடல் இருந்தது!

"போற இடங்கள்லே அழகா இல்லைன்னு ஒதுக்கப் பட்டிருக்கேன்... சில ஊர்கள்லே எங்களுக்குத் துணி மாத்தக்கூட சரியான இடம் இருக்காது... பொது இடத்தில்தான் எல்லாமே!



"அப்பதான் இங்கே மறுபடியும் வந்தேன்... கதிர் அண்ணாதான் எனக்கு உதவி செஞ்சாங்க!

"நான் நிர்வாணமும் செஞ்சுக்கலை... தந்தாவும் பண்ணினதில்லை!" என்று கூறிவிட்டுத் தர்ம சங்கடத்துடன் கதிரைப் பார்த்தாள்.

உடனே எழுந்தவன், "சரி! நீ பேசிட்டு வா... நான் வெளியே காத்துட்டுருக்கேன்..." கூறிவிட்டு இங்கிதத்துடன் எழுந்து வெளியேறினான்.

"நிர்வாணம்னா டாக்டர்கள் அரவாணிக்கு செய்யற ஆபரேஷன்... 'தந்தா'ன்னா ஆண்களோட தவறான உறவுக்கு ஆட்படறது... அதெல்லாம் எனக்குப் பிடிக்கலை... என் மன உணர்வுகளுக்கு ஏத்த மாதிரி ஒரு பெண்ணா வாழணும்... அவ்வளவுதான்!

"எங்களையும் ஒரு அம்மாதானே பெத்தாங்க... எங்களுக்கு மட்டும் ஏன் தங்கள் குடும்பத்துல ஒரு இடத்தை... நல்ல அந்தஸ்தைக் குடுக்க மறுக்கிறாங்க?" தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

திருநங்கைகளின் மனதை வாட்டும் வேதனை, வலிகள், அவர்களது நெஞ்சில் குமுறிக் கொண்டிருக்கும் கோபம், ஆழ்ந்த சோகம், ஏமாற்ற உணர்வு, ஆச்சர்யமளிக்கின்ற தைரியம் எல்லாமே அந்த ஒரு பெண்ணின் வாய்மொழி யாய்... ஒட்டு மொத்தத் திருநங்கைகளின் கூக்குரலாய் அவளுக்குள் ஒலித்தன.

உடனே எழுந்து வந்து அவள் தலையை வருடிச் சமாதானப்படுத்திய மலருக்குள் எப்போதோ படித்த ஒரு புத்தகத்தின் ஞாபகம்!

பிறகு இருவரும் நன்றி கூறி விடைபெற்றுச் செல்ல, கதிரைப் போல்... தன்னைப்போல் எத்தனை பேர் இது போன்ற திருநங்கைகளின் உணர்வுகளைப் புரிந்து நடக்கிறார்களென்ற பரிதவிப்பு அவளுள்!

ஆண் உடலையும், பெண் உணர்வுகளையும் கொடுத்த படைப்பின் மீது தவறா?

ஆண் பாதி, பெண் பாதி கொண்ட அர்த்தநாரீஸ்வரரை வணங்கும் நம் நாட்டில் ஏன் இவர்கள் கேவலமாக நடத்தப்படுகிறார்கள்?

இவர்களும் இந்த நாட்டுக் குடிமக்கள்தானே... உறவுகளே இவர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, சமூகத்தைப் பற்றி எப்படி யோசிக்க முடியும்?

முதலில் உறவுகளும் நட்பும் அவர்களையும் சக மனிதர்களாக உறவாக ஏற்க வேண்டும் என்ற ஏக்கம் எழ, அந்த இனத்தின் மேல் பரிதாபமும் இரக்கமுமே எழுந்தன!

## 9

அன்று, அங்கிருந்து கிளம்பிச் சென்றபோது, முத்தழகு மகிழ்ச்சியுடன் மலரின் புகழ் பாடியபடி வர, கதிருக்குள் சுகமான இளந் தென்றலாய்ப் பரவின... அவளின் நினைவுகள்!

செல்லும் வழியெங்கும் முகம் விரித்துச் சிரித்த பல வண்ண மலர்களில், அவள் முகமே தெரிவது போல்!

இரு உயிர்களை இணைத்து விளையாடும் அந்தக் காதல் உணர்வில் சிக்கிச் சிலிர்ப்புடன் தவித்திருந்தான் கதிர்!



கல்லூரிக் காலங்களிலும், காதல் ஆட்படுத்தாமல் தன் தந்தை இறந்தவுடனே குடும்பப் பொறுப்பை ஏற்றதால் அந்த சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமலிருந்தவனுடைய மனவானில் புதிதாய் ஒரு நேசப்பூ மலர ஆரம்பித்திருந்தது!

அன்று மாலையே கோயிலுக்குச் சென்றபோது தன் தாயிடம் தன் மனதைப் பற்றிக் கூறிவிட்டான் அவன்.

அவருக்கோ பெரும் ஆச்சர்யம்...!

இதுவரை திருமணம் என்றாலே ஏதோ ஒரு காரணம் கூறித் தவிர்த்து வந்தவன், இன்று முதன்முதலாய் தான் ஒரு பெண்ணை விரும்புவதாகக் கூற, நெஞ்சு முழுவதும் சந்தோஷத்தில் நிறைந்தது.

ஒரு தென்றல் வந்து தீண்டி, தணியாத தாகமாய் ஒரு தீ மூட்டிச் சென்றதை உள்ளூர ரசித்தபடி பிராகாரத்தில் அமர்ந்திருந்தான் கதிர்!

மலரைப் பார்த்த முதல் கணமே நெஞ்சிற்குள் லட்சம் சிறகு முளைத்ததும்... தான் இரண்டாவது முறையாக உயிர் கொண்டதும் ஞாபகம் வருவதாய்!

தன் மனம் போன போக்கில் உதடுகளில் கசிந்த கம்பீர முறுவலுடன் அமர்ந்திருந்த மகனைப் பார்த்தபோது, பெருமிதமானது அந்தத் தாயுள்ளம்!

தன் கடமைகளை முடிக்கும்வரை அவன் தன்னைப் பற்றியே நினைக்கவில்லையே என்ற பிரமிப்பு அவரிடம்!

இதுபோல் அன்புவுக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து முடித்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணும்போதே ரேவதியின் நினைவு, அவரைச் சுட்டது.

என்னதான் சபாபதி அந்தக் குடும்பத்திற்கு எவ்வளவோ நன்றியுடன் உழைத்தாலும், அந்தஸ்து எனும் மாயச் சுவர் தடையாய் எழும்ப, அவரது முகம் சுருங்கி இறுகியது.

“என்னம்மா முகமே மாறிடுச்சி... உங்களுக்கு மலரைப் பிடிக்கலையா?” தவிப்புடன் கேட்டான் கதிர்.

“என்னப்பா கேட்டே? மலரை யாருக்காவது பிடிக்காமப் போகுமோ? தேவதை மாதிரியில்லே இருக்கு அந்தக் கலெக்டர் பொண்ணு! நீயாவது தராதரம் பார்த்து விரும்பி இருக்கே... எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லைப்பா!” பெருமையுடன் கூறினார்.

“நீயாவது தராதரம் பார்த்துன்னா... வேற யாரும்மா தராதரமில்லாம விரும்பினது?” கூர்மையுடன் கேட்டான் அவன்.

“அது ஒண்ணுமில்லைப்பா! விட்டுடு! நாம ஒரு நல்ல நாளாப் பாத்து அவங்க வீட்டில போய்ப் பொண்ணு கேக்கலாம்!”

அவருடைய மழுப்பலான பதில் அவனுள் யோசனையை விதைக்க, உடனே அன்புவின் நினைவு வர, எழுந்தான்.

★★★

அந்த ஞாயிறன்று... மாலையில் தாங்கள் வருவதாகத் தையல்நாயகி போனிலேயே மலரிடம் கூறிவிட்டார்.

கதிர், அன்பு, சபாபதியுடன் அவர் மனைவி கலாவதியையும் சுமங்கலி என்பதற்காக உடன் அழைத்துக்கொண்டு கிளம்பினார் தையல்நாயகி!

விபரம் அறிந்த அன்பு, அண்ணனைக் கிண்டல் செய்தபடி வந்து கொண்டிருந்தான்.



“ஏண்ணா! இனிமே நம்ம டிஸ்ட்ரிக்ட்டுல மட்டுமில்லை... நம்ம வீட்டுலயும் கலெக்டரம்மா ஆட்சிதான்னு சொல்லுங்க!” குறும்புடன் சீண்டினான்!

அதற்குப் பதில் கூறாமல் அமைதியாக முறுவலித்தபடி அமர்ந்திருந்த கதிரைப் பார்த்தால் அவனுக்குப் பெருமையாய்!

கலெக்டர் மாளிகைக்குச் சென்று இறங்கியபோது, வாசலுக்கே வந்து அன்புடன் வரவேற்றது பரமேஸ்வரனின் குடும்பம்!

உள்ளே சென்று அமர்ந்ததும், ஊர் விஷயமாக எதுவும் பேச வந்திருக்கிறார்களோவென்ற நினைவில் கதிரை ஏறிட்டாள் மலர்!

அதற்குள் தையல்நாயகியின் குரல் இடைமறித்தது...

“நாங்க திடீர்னு வந்த விஷயம் என்னன்னு யோசிச்சிட்டிருப்பீங்க... பொண்ணு கேக்கணும்னா முறையா வீட்டில வந்து பேசறதுதானே சரி!”

அவர் முடித்ததும் திடுக்கிட்டு விழி விரித்த மலரின் தேகம் நடுங்கி விரைத்தது!

உடனே அங்கயற்கண்ணி தவிப்புடன் பரமேஸ்வரனையே நோக்க, அவர் சிறு முறுவலுடன் கதிரை ஏறிட்டார்.

“எனக்கு ரொம்ப சந்தோஷம்பா! ஆனா, மலர்தான் முடிவெடுக்க வேண்டியவ... என்னம்மா சொல்றே?” மலரிடம் திரும்பி வினவினார்.

சிறு நடுக்கத்துடன் எழுந்தவளின் முகமே மாறியிருக்க, “சாரிப்பா...! என்னால முடியாது...! ப்ளீஸ்... தப்பா நினைச்சிக்காதீங்க!”

அவர்களின் புறம் திரும்பிக் கூறியவள், சட்டென்று திரும்பி உள்ளே விரைந்துவிட்டாள்.

உடனே கதிரின் முகம் இறுகிவிட, வேகமாக எழுந்து காருக்குச் சென்றவனுக்குள், பெரும் தவிப்பும், குழப்பமும்!

"ஒருவேளை என்னை அவளுக்குப் பிடிக்கவில்லையோ?" அந்த நினைவே அவனைச் சிதைப்பதாய்!

தனக்குள்ளேயே மறுகி நின்றவனுடைய தோளை மெதுவாகப் பிடித்து அழுத்தியது ஒரு கரம்!

சோர்வுடன் திரும்பினால், அங்கு பரமேஸ்வரன்தான் நின்றிருந்தார்.

"நான் உங்களோட கொஞ்சம் பேசணும்!" தொண்டையைச் செருமியபடி பேச ஆரம்பித்தார் அவர்.

"மிஸ்டர் கதிர்! உங்களைப் பத்தி இந்த ஊருக்கே நல்லாத் தெரியும்... ஏன்... எனக்கே தெரியும்... எங்க பொண்ணும் உங்களைப் பத்தி எப்பவுமே உயர்வாத்தான் பேசுவா!"

அவன்... அவர் பேசுவதையே மௌனமாகக் கைகளைக் கட்டியபடி கவனித்திருந்தான்!

"ஆனா... கல்யாணம்னு வரப்ப..."

அதற்குள் இடைமறித்தது அவன் குரல்!

"ஏன்... என் படிப்பு ஒருவேளை குறைச்சல்னு நினைக்கிறாங்களோ... ஏன்னா நான்... எம்.எஸ்.ஸி. அக்ரி தான் படிச்சிருக்கேன்..."

அவன் கூற, உடனே இல்லையென்றார் அவர்!



பிறகு அவர் பேசிய விபரங்கள்... பெரும் ரகசியங்களைத் தன்னுள் ஒளித்திருந்தன!

## 10

"மலர்... எங்க சொந்தப் பொண்ணு இல்லை... என் மகன் சிவமுருகனோட மனைவி!"

அவர் முடித்ததும் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தவனைக் கருணையுடன் ஏறிட்டவர், "பயப்பட வேண்டாம்! என் மகன் உயிரோட இல்லை! அவன் ஒரு பாம் பிளாஸ்ட்டுல இறந்திட்டான்..."

அதற்கு மேல் கேட்க முடியாமல் "சாரி..." என்றபடி காரில் ஏறி விரைந்து விட்டான் கதிர்!

அவனுடைய நெஞ்சம் உடைந்து சிதறியிருந்தது!

தான் விரும்பிய பெண் ஒரு விதவை என்றாலும் பரவாயில்லை... அவள் மேல் கொண்ட காதல் இன்னும் அதிகரித்ததுதான் உண்மையாய்!

ஆனால், அவளைப் பெண் கேட்டு அவள் கணவனுடைய பெற்றோரிடமே போய் நின்றிருக்கிறோமே என்ற குற்றவுணர்வுடன் காரை வெறித்தனமாக ஓட்டிச் சென்றான்!

மலரின் வீட்டில் அங்கயற்கண்ணி கூறிய செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போன தையல்நாயகி, அதற்குமேல் ஒன்றும் பேசாமல் எழுந்துவிட்டார்.

அன்பும், சபாபதியும் கவலையுடன் கூடவே எழ, அசாத்திய அமைதியுடன் வெளியே வந்தால், கதிரையும் அங்கு நின்றிருந்த ஒரு காரையும் காணவில்லை!

கவலை சுமந்த முகத்துடன் உள்ளே வந்து கொண்டிருந்த பரமேஸ்வரன் முகமோ களையிழந்திருந்தது!

“அம்மா! கொஞ்சம் பொறுமையா இருங்க! கலெக்டரோட பேசிப் பார்க்கலாமே! அண்ணன் விருப்பத்தை நிறை வேத்தறதுதான் இப்ப முக்கியம்!” மெல்லிய குரலில் தாயை நிறுத்தினான்.

உடனே கோபமாகத் திரும்பியவர், “அங்கே பாரு, உன் அண்ணனைக் காணோம்! அவனுக்கும் இதிலே விருப்பமில்லைன்னு நினைக்கிறேன்... வாங்க கிளம்பலாம்!” வேகமாகச் சென்று காரில் ஏறினார்.

பிறகு, அமைதியாக வீடு வந்து சேர்ந்தவர்களுக்கு, கதிர் அங்கில்லாதது பெரும் அதிர்ச்சியாய்!

உடனே அன்பு அவனை செல்லில் தொடர்புகொள்ள, அவன் எடுக்கவில்லை!

இந்த நிமிடம் அவனுக்குத் தனிமை தேவை என்பதை உணர்ந்தவன், கவலையுடன் தன் அறைக்குச் சென்றான்.

★★★

**கா**ரை வேகமாக ஓட்டிச் சென்று கதிர் நிறுத்திய இடம், அந்தச் சிறு குன்றில் குடியிருக்கும் முருகன் கோயில்தான்!

காரை நிறுத்திவிட்டு ஸ்டியரிங்கில் முகம் புதைத்த வனுக்குள் பெரும் பிரளயம் நிகழ்வதாய்!

எந்த நிலையிலும்... அவள் ஒரு கைம்பெண் என்றால் கூட, அதை ஏற்றுக்கொள்கின்ற மனநிலையில் அவன் இருக்க, மலர் மறுத்தது அவனை உடைத்துப் போட்டது.



அன்று வெகுநேரம் கழித்தே வீட்டிற்குச் சென்றவனை, வாசலிலேயே காத்திருந்து வரவேற்றது அன்புதான்!

இந்த எதிர்பாராத அதிர்ச்சியால் ஓய்ந்து போய்த் தன் அறையில் படுத்திருந்தார் தையல்நாயகி!

கதிரின் முகத்திலிருந்தே அவனுடைய எண்ணங்களை அறிந்த அன்பு, அவனிடம் எதுவுமே கேட்கவில்லை!

வேகமாகச் சென்று தன் அறைக் கதவைக் கதிர் மூடிக்கொள்ள, உடனே ஹாட்பேக்கில் இரவு டிபனையும் பாலையும் ட்ரேயில் வைத்து எடுத்துச் சென்று கதவைத் தட்டினான் அவன்!

சிறிது நேரம் கழித்துச் சலிப்புடன் கதவைத் திறந்து பார்த்தவன், “எனக்குப் பசிக்கலை அன்பு...! எதுவும் வேண்டாம்,” என்றான்.

“அண்ணா! மனசும் வயிறும் வேற வேற! இதை வெச்சிட்டுப் போறேன்... பசிக்கிறப்ப சாப்பிடுங்க! அவ்வளவு தான்!” என்றபடி உள்ளே சென்று வைத்துவிட்டு, அன்பு கதவை மூடிச் சென்றான்.

★★★

**க**திருக்கோ... அவனுடைய உணர்வுகள் அவன் வசமின்றித் தவித்துத் தத்தளித்தன!

இப்போதுதான், அவள் மேலிருந்த நேசம் இன்னும் அதிகமாவது புரிவதாய்!

அவள் மனதிலிருப்பதை எப்படி அறிவது? உடனே முத்தழகின் நினைவுதான் வந்தது.

அவளை வைத்துத்தான் மலரிடம் பேசி அவள் மனதின் முடிவை அறிய வேண்டும்! ஒரு முடிவுடன் சாப்பிடாமலே படுத்தவனுக்கு உறக்கமே வரவில்லை.

மறுநாள் அதிகாலையிலே கிளம்பியவன், நேராக முத்தழகின் வீட்டிற்கே சென்றுவிட்டான்.

கடைசியிலேயே பின்புறமிருந்த அறையைத் தன் வசிப்பிடமாக்கியிருந்தாள் அவள்!

தூக்கக் கலக்கத்தில் அவனைக் கண்டதும் பதறி எழுந்தவள், "அத்தை நல்லா இருக்காங்களா அண்ணா?" பதட்டத்துடன் வினவினாள்.

"ம்... நல்லாயிருக்காங்க! உன்கிட்ட ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன் முத்தழகு!"

அவன் மெதுவாகக் கூற, "சொல்லுங்கண்ணா! நான் என்ன செய்யணும்? நீங்க இதுவரைக்கும் உதவின்னு யார்கிட்டயும் போய் நின்னதில்லையே! அப்பாவும் கலியமூர்த்தி அண்ணனும் ஏதாவது ப்ரச்னை பண்றாங்களாண்ணா?" கவலையுடன் வினவினாள்.

"ப்ச்... அதெல்லாம் இல்லைம்மா!" என்றவன், நேற்று நடந்த விபரங்களை எல்லாம் மெதுவாகக் கூற அதிர்ந்து போனாள் அவள்!

"அப்போ...மலர் மேடத்துக்கு முன்னாடியே கல்யாண மாயிடுச்சாண்ணா? நான் சந்தேகப்பட்டேன்... நீங்க அவங்களை விரும்பறீங்களோன்னு! அது உண்மை யாயிடுச்சி! ஆனா... அவங்க... இப்படின்னு நான் எதிர் பார்க்கலை!" கவலையுடன் நிறுத்தினாள்.



"நீதான் அவங்ககிட்ட போய்ப் பேசி மலரோட மனநிலையைத் தெரிஞ்சிட்டு வந்து சொல்லணும் முத்தழகு!"

பெரும் யோசனையும் கவலையும் தெரிந்தன அந்தக் குரலில்!

"நிச்சயமாண்ணா! இன்னிக்குச் சாயந்திரமே பாத்துப் பேசறேன்... நீங்க கவலைப்படாதீங்க!" என்று சமாதானப் படுத்தி அவனை அனுப்பி வைத்தாள் அவள்.

கதிர் எவ்வளவு அற்புதமான மனிதன்... அவன் விரும்பிய பெண் கலெக்டராகவே இருந்தாலும், அவனுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ப்ரார்த்தனை அவளுக்குள் அதிகமாய்!

அன்று மாலையே அவள் ஒரு முடிவுடன் மலரைக் காணச் சென்றாள்.

அலுவலகத்திற்குச் சென்று காத்திருந்து கடைசி ஆளாகப் பார்க்கச் சென்றபோது மலர் சிறிது ஓய்ந்திருப்பது போல் தோன்றியது!

சிறு முறுவலுடன் அவளை அமரச் செய்துவிட்டு முத்தழகையே ஊடுருவியபடி என்னவென்று விசாரித்தாள் அவள்!

"நான்... அண்ணன் விஷயமா...!" தயக்கத்துடன் நிறுத்தினாள் அவள்!

அதற்குள் மலரின் முகம் மாறிவிடச் சட்டென்று எழுந்தாள்.

"இங்கே எதுவும் பேச வேண்டாம்... வீட்டுக்குத்தான் போறேன்... வர முடியுமா?"

ஒருவித விலகல் தன்மையுடன் வந்தது அவள் குரல்!

பிறகு வீட்டிற்கு வந்தபோது, அங்கயற்கண்ணிதான் அவளிடம் எல்லா விபரங்களையும் கூறினார்.

"உக்காரும்மா! என் மகன் சிவ முருகன்... ஒரு சாஃப்ட்வேர் இஞ்சினியர்! அவன் ஒரு அநாதைப் பொண்ணுக்கு வாழ்க்கை குடுக்கணும்னு விரும்பினான்!

நாங்க எல்லோருமா சேர்ந்து ஒரு இல்லத்துக்குப் போனோம்! அங்கே தான் மலரைப் பார்த்தோம்... டிகிரி முடிச்சிட்டு லீவுலே அங்கே இருக்கற பசங்களுக்கு டியூஷன் எடுத்திட்டிருந்தா...

என் மகனுக்கு அவளை ரொம்பப் பிடிச்சிப் போயிடுச்சி! அப்புறம் அங்கே இருந்த மதர் சுப்பீரியர்கிட்டே பேசி அவ விருப்பத்தையும் தெரிஞ்சிக்கிட்டு அப்புறம் கல்யாணம் நடந்தது.

ஆனா, யார் கண்ணு பட்டுதோ ஒரே வாரத்துல முருகனுக்கு டெல்லியில ஒரு ட்ரெயினிங்... அதுக்காகப் போனப்பதான் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்ட ஒரு வெடிகுண்டு விபத்துல அவன் இறந்து போயிட்டான்!"

அவர் விழிகள் கலங்கிவிட, "மலரும் நாங்களும் உடைஞ்சு போயிட்டோம்... ஆனா, அவ ஆசையை நிறைவேத்தணும்னு அவன் எங்ககிட்டே கடைசியா சொன்னது தான் எங்க நினைவுக்கு வந்தது!

மலருக்குத் தான் ஒரு கலெக்டராகணும்னு ஆசையாம்... அதை நிறைவேத்தணும்ப்பான்னு எங்களோட ஒருநாள் பேசிட்டிருந்தான்...



ஊருக்குப் போயிட்டு வந்தப்புறம் அதுக்கான ஏற்பாடுகளைச் செய்யறேன்னு மலர்கிட்டே சொல்லிட்டுப் போனவன்தான்! திரும்ப வரவே இல்லை!"

வாய்க்குள் முந்தானையைப் பொத்தியபடி அழ ஆரம் பித்தவரை முத்தழகுதான் சமாதானப்படுத்த வேண்டிய தாயிற்று!

அதற்குள் உடைமாற்றி வெளியே வந்த மலர், அவர் அழுவதைக் கண்டதும் பதறிப்போய் விட்டாள்.

"அழாதீங்க அம்மா... ப்ளீஸ்!" என்று... அணைத்து ஆறுதல் படுத்தியவள், "ஒரு நிமிஷம்மா..." என்றபடி வெளியே வந்த பிறகு முத்தழகியிடம் திரும்பினாள்.

"எனக்கு இவங்க ரெண்டு பேரும்தான் எதிர்காலமே! என்னை ஒரு அநாதை இல்லத்துலருந்து அழைச்சிட்டு வந்து கல்யாணம் செஞ்சி நான் ஆசைப்பட்ட... என் வாழ்க்கையோட லட்சியமான ஐ.ஏ.எஸ். கனவை நிறைவேத்தி... என்னைத் தங்களோட மகளாவே பாத்துட்டிருக்கறவங்களை விட்டுட்டு. என்னால கல்யாணம் அது இதுன்னு சுயநலமா யோசிக்க முடியாது!

"ப்ளீஸ் உங்க அண்ணன்கிட்டே சொல்லிடுங்க முத்தழகு...! வேற நல்ல பொண்ணைப் பாத்து கல்யாணம் செஞ்சுக்கச் சொல்லுங்க!"

அழுத்தமான குரலில் கூறிவிட்டு, கம்பீரத்துடன் உள்ளே சென்றவளையே பார்த்திருந்த முத்தழகின் விழியோரங்கள் மெல்ல நிறைந்தன!

★★★

அங்கிருந்து கிளம்பியவள், நேரே கதிரைத் தேடி வந்து விபரம் கூறியபோதுதான் தெரிந்தது... வீட்டில் தையல் நாயகியும் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள மறுத்த விபரம்!

மதியம் சாப்பிடும்போது கதிரிடம் மெதுவாக ஆரம்பித்தார் அவர்!

"கதிர்! நமக்கு இந்தச் சம்பந்தம் வேண்டாம்ப்பா! ஒரு தடவை கல்யாணம் முடிஞ்சி அறுத்துக் கட்டினவளோட ஜாதகம் எப்படி இருக்குமோ...?

ஒருவேளை அவ ராசியில்லாதவளா இருந்தா, என்னால உன்னை இழக்க முடியாதுப்பா! உன் மனசை மாத்திக்க!" கண்ணீர் சுமந்த விழிகளுடன் கூறினார்.

"அம்மா! மலரோட முதல் கணவர் இறந்ததுக்கு அவளை ஏம்மா நாம குத்தம் சொல்லணும்? பாவம்மா அவ! இந்தச் சின்ன வயசுல இப்படி ஒரு கஷ்டம் அவளுக்கு...!

"நான் முடிவு பண்ணிட்டேன்... அவதான் உங்க மருமக!"

ஒருவிதத் தீவிரத்துடன் கூறிவிட்டு அவன் எழுந்தபோது அவருடைய குரல் இடைமறித்தது.

"ஒரு நிமிஷம்ப்பா... என்னால ஒரு விதவையை மருமகளா ஏத்துக்க முடியாது! அவ்வளவுதான் சொல்லுவேன்!"

கம்மிய குரலில் உரைத்துவிட்டு உள்ளே சென்றவரையே யோசனையுடன் தொடர்ந்தது கதிரின் பார்வை!

அவன் முடித்ததும், ஒருவித இயலாமையுடன் ஆறுதல் கூறிய முத்தழகு, "அண்ணா... கொஞ்ச நாள் இந்த விஷயத்தை ஆறப் போடுங்க... ரெண்டு பேரும் நிச்சயம்



மாறுவாங்க... பார்ப்போம்..." என்றபடி அவளிடம் விடை பெற்றாள்.

காலத்தின் பதிலுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான் கதிர்!

## 11

அன்றிலிருந்து... கதிரை எங்காவது கண்டாலே தவிப்புடன் ஒதுங்க ஆரம்பித்தாள் மலர்!

ஒருநாள்... இலவச நூலகத் திறப்பு விழாவிற்கென அவளை அழைக்க வந்திருந்தான் கதிர்.

இருவருமாகச் சேர்ந்து திட்டமிட்டு ஆரம்பித்த ஒரு நல்ல திட்டத்தைக் கதிர் செயல்படுத்தி முடித்திருக்க, சிறு முறுவலுடன் அவனை வரவேற்று அமரச் செய்தாள் அவள்.

"வாங்க மிஸ்டர் கதிர்..."

அவள் இயல்பாகவே இருப்பதாகத் தோன்றினாலும், அவள் பார்வை மட்டும் அவன் விழிகளை ஒருமுறை கூடச் சந்திக்கவில்லை!

ஒருவிதத் தயக்கத்துடன் அதைத் தவிர்த்தவள், உடனே வெங்கடேஷை அழைத்து, அவனுக்குப் பருகுவதற்கு ஏதாவது கொடுக்கும்படி பணித்தாள்.

அவன் பார்வை அவளையே குறும்புடன் வருடியபடி அவளுடைய தவிப்பையும், திணறலையும் ரசிக்க, வேறு வழியின்றி நிமிர்ந்தவளின் விழிகள்... அவள் உணர்வுகளை வாசித்ததும் சட்டென்று தழைந்தன.

முதன் முதலாய்... வெகு நாட்களுக்குப் பிறகு இதயத்திற்குள் ஏதோ ஒரு இனம் புரியாப் படபடப்பும் அவஸ்தை உணர்வும்!... டீன் ஏஜ் பெண்ணின் பருவக் குறுகுறுப்பும்...!

உணர்வுகள் சிலிர்க்க தனை மறந்திருந்தவளை அவன் குரல் கலைத்தது.

“மேடம்! இந்த விழாவுக்கு நீங்கதான் தலைமை தாங்கணும்னு நான் பர்சனலா விரும்பறேன்... ஏன்னா இதுக்கான முயற்சிகள்லே எனக்குத் துணையா இருந்தது நீங்கதான்...!”

“துணையா...” என்பதை இழுத்தாற்போல் அழுத்தமாக அவன் கூற, விதிர்த்து நிமிர்ந்தாள் அவள்.

ஒற்றைப் புருவம் மேலே ஏறி ஒருவிதக் கவர்ச்சியுடன் வளைந்திருக்க, “எனக்குத் துணையா வாழ்க்கையோட கடைசி வரைக்கும்தான் வரமாட்டேன்னு மறுத்திட்டீங்க! அட்லீஸ்ட் இந்த விழாவுக்காவது வரணும்னுதான் கூப்பிட வந்தேன்,” என்றவன் சட்டென்று எழுந்தான்.

அவனுடைய வார்த்தைகள் அவளை அசைத்துவிட... என்ன செய்வதென்று புரியாத தவிப்பிலிருந்து அவள் வெளிவரும் முன்பே அழைப்பிதழை அளித்துவிட்டு வேகமாக வெளியேறினான்.

அதே நிமிடம், காபியுடன் வந்த வெங்கடேஷுக்கோ சிறு ஏமாற்றம்... கதிரைக் காணாமல்!

“எங்கே மேடம் கதிர் சார்?”

ஆவலுடன் வினவியனிடம், “ம்... போயிட்டாரு!” என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தாள் மலர்.



அவன் முகம் யோசனையாய்ச் சிவந்திருந்த அவளுடைய முகத்தில் பதிந்தது.

மெதுவாக அவளருகே வந்தான். “கதிர் சார் ரொம்ப அற்புதமான மனுஷர் மேடம்! எங்கப்பா புலம்பிட்டே இருக்காங்க...

கதிர் இதுவரைக்கும் தனக்குன்னு ஆசைப்பட்டு எதுவுமே கேட்டதில்லை... குடும்பம், ஊர், தொழிலாளர்கள் அப்படின்னு மத்தவங்களுக்காகவே வாழ்ந்தவரு!

முதன் முதலா அவர் விரும்பினதும் வாழ்க்கையில அவருக்குக் கிடைக்காம போயிடும் போலருக்கேன்னு உடைஞ்சு போயிட்டாங்க!”

அவன் முடிக்கும் முன்பே இடைமறித்தவள், “வெங்கடேஷ்! இது கலெக்டர் ஆஃபீஸ்! பர்சனல் மேட்டர் எதுவும் இங்கே பேசறது எனக்குப் பிடிக்காது!” ஒருவிதக் கம்பீரத்துடன் முடித்துவிட்டுக் கோப்புகளில் ஆழ்ந்தாள்.

உடனே, “சாரி மேடம்!” என்றபடி, காபியுடன் உள் அறைக்குச் சென்றான் அவன்!

★★★

**நூ**லகத் திறப்பு விழாவன்று, காலையிலேயே கிளம்பிச் சென்றவளுடன் பரமேஸ்வரனும் வந்தார்.

அவரையும் தனியாகச் சந்தித்து அழைப்பிதழ் கொடுத்திருந்தான் கதிர்!

அந்தச் சிறு எளிமையான ஓட்டு வீட்டில் ஆரம்பிக்கப் பட்டிருந்த நூலகம், வெகு நேர்த்தியாய் அமைக்கப் பட்டிருந்தது.

ஊர்ப் பெரிய மனிதர்கள் ஒன்று கூடியிருக்க, கதிர் அவர்களை மரியாதையுடன் அழைத்துச் செல்ல, அன்பு கலர் ரிப்பன் சுற்றப்பட்ட கத்தரிக்கோலைப் பவ்யமாக எடுத்து நீட்டினான்.

ரிப்பன் வெட்டி உள்ளே நுழைந்தவர்களுக்கு இனிப்பும், பருகுவதற்குப் பானமும் அளித்த பிறகு நூலகத்தைச் சுற்றிக் காட்டினான் கதிர்!

ஒருபுறமிருந்த அடுக்கில் சுய முன்னேற்ற நூல்கள், மறுபுறம் சிறுகதைகள், நாவல்கள் எனத் தனித்தனியாகப் பிரித்து அடுக்கப்பட்டிருந்தன.

குழந்தைகளுக்கான கதைகள், பாட சம்பந்தமான அறிவு நெறிப் புத்தகங்கள், ஆங்கிலப் புதினங்கள் என ரகவாரியாக அடுக்கப்பட்டிருந்தன.

உடனே அவன்புறம் திரும்பியவள், "ரொம்ப அழகா அடுக்கியிருக்கீங்க! இதே மாதிரிப் பராமரிக்கணும்!" சிறு முறுவலுடன் பாராட்டினாள்.

"தேங்க்யூ! ஏன்னா ஐடியா மட்டும்தான் என்னுடையது... செயல் படுத்தினது அன்பு, முத்தழகு, ரேவதி மூணு பேரும் தான்!

"ஒரு லைப்ரேரியனை அப்பாயிண்ட் பண்ணியாச்சு! ரேவதி, முத்தழகு ரெண்டு பேருமே ஓய்வு நேரங்கள்லே பாத்துக்கறேன்னு சொல்லியிருக்காங்க!"

"ஓ..." என்றவள் ஒவ்வொரு அடுக்காக நின்று பார்த்தபடி வந்தபோது சட்டென்று திரும்பிய அவளையே ஊசியாய் உரசிக் கொண்டிருந்தது கதிரின் பார்வை!



தன்னையே அம்பாய்த் துளைத்த அவனுடைய விழிகளின் கூர்மை, அவளுக்குள் புரியாத ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்த, ஒரு கணம் நின்று விட்டவளின் பார்வை எதிரே செல்ல, "மனச் சிறகுகள்!" – "இளங் கதிர்" என்ற கவிதைத் தொகுப்பு விழிகளில் பட்டது.

ஆர்வத்துடன் அதை எடுத்து விரித்தபோது முதல் பக்கத்திலேயே கதிரின் புகைப்படம்... கொஞ்சம் வயது குறைந்து கல்லூரி இளைஞனைப் போல் தெரிந்தது!

மெல்லப் புரட்டியபோது, சோஷலிஸம், சுய முன்னேற்றம், நாட்டுப் பற்று என்று புரட்சிகரமான கருத்து களுடன் கவிதைகள் நீண்டன.

வியப்புடன் நிமிர்ந்தவள், "நீங்க கவிதை எல்லாம் கூட எழுதுவீங்களா மிஸ்டர் கதிர்! ஆச்சர்யமா இருக்கு!" என்று உற்சாகத்துடன் உரைத்தாள்.

அவள் விழிகளில் தன் பார்வையை இரண்டறக் கலந்து நெய்தவன், "ஏன்... நான் கவிதை எல்லாம் எழுதக் கூடாதா?" என்று சிறு கேலியுடன் வினவினான்.

பரமேஸ்வரன் மற்றவர்களிடம் பேசியபடி வேறுபுறம் சென்றிருக்க, அந்தத் தனிமை அவனுக்குப் பொக்கிஷமாய்!

"இல்லை... நான் எதிர்பார்க்கலை!"

மெல்லக் கூறியவளிடம், "இந்தப் பட்டிக்காட்டுப் பண்ணையாருக்கு என்ன தெரியும்னு நினைச்சிருப்பீங்க..." வறண்ட குரலில் நிறுத்தினான்.

"நோ! அப்படி நினைக்கலை... கவிதை எல்லாம் எழுதற அளவு..." நாக்கைக் கடித்து நிறுத்தினாள்.

"எழுதற அளவு மென்மையானவனா என்னைக் கற்பனை பண்ணிப் பார்க்க முடியலை இல்லை...?"

ஆழமான குரலில் அவன் கேட்க, "உங்க கவிதைகள்... நான் பாத்த வரைக்கும் மென்மையா தெரியலையே!" என்று அவளும் விடாமல் உரைக்க, "ஓ! என்னை மாதிரியே கொஞ்சம் முரட்டுத்தனமா வல்லினமா இருக்கா?" குறும்புடன் கேட்டான் அவன்.

எவ்வளவுதான் முயன்றும் அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை!

சட்டென்று சிரித்த முகத்தையே குறுகுறுப்பாய் அளவிட்டவன், "தேங்க்ஸ்..." என்றான் மிருதுவான குரலில்!

"எதுக்கு?"

புரியாமல் கேட்டவளிடம், "என்னை... இன்னும் ஒரு நண்பனா நினைச்சு இயல்பாய்ப் பேசிச் சிரிச்சதுக்கு!" ஆழமான குரலில் பகர்ந்தான்.

"வெல்கம்... ஒரு பணக்காரப் பண்ணையாருக்குள்ளே சோஷலிஸமும் கம்யூனிஸமும் வித்தியாசமா இருக்கே?"

வியப்புடன் அவள் கூற, "பணக்காரங்க எல்லாரும் சர்வாதிகாரிகள் இல்லை கலெக்டர் மேடம்! அவங்களுக்குள்ளேயும் மனிதாபிமானமும் கருணையும் இருக்கும்!

"என்னைப் பொறுத்தவரைக்கும் சின்ன வயசுல இருந்து பணம் செழிக்கிற ஒரு வீட்டில வளர்ந்ததாலேயோ என்னவோ இந்தப் பணம், பந்தா, படாடோபம் இது மேல எல்லாம் அவ்வளவு ஈடுபாடு இல்லை!

"அதைவிட உயர்ந்த விஷயங்கள் நிறைய இருக்கு! நம்மை மாதிரியே இந்த ஊரிலே இருக்கறவங்களும் சந்தோஷமா இருக்கணும்... அவங்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செஞ்சு தரணும்... எல்லாரும் சுகமா... இந்த ஊரே அமைதியா இருக்கணும்னு நான் நினைக்கிறேன்!"



அவன் முடித்ததும்... இவன்தான் எவ்வளவு உயர்ந்த எண்ணம் கொண்டவன்... இதுபோல் எத்தனை பேர் உள்ளனர்... அந்த நிமிடமே அவனைக் கையெடுத்து வணங்க வேண்டும் போல்!

சிலிர்ப்புடன் அவள் நிமிரும்போதே, பரமேஸ்வரன் அவனை வாஞ்சையுடன் அணைத்துப் பாராட்டிக் கொண்டிருந்தார்.

"இங்கே வந்ததிலிருந்து நான் உன்னைப் பத்தித்தான் நிறையக் கேள்விப்பட்டேன்! மலையைச் செழிப்பாக்குனதிலிருந்து இலவச மருத்துவமனை, ஸ்கூல், கல்யாண மண்டபம்னு எல்லாம் நடத்திட்டிருக்கறது வரைக்கும் சொன்னாங்க!

"ரொம்ப சந்தோஷம் தம்பி! மக்கள் கிட்ட இருந்து சுரண்டற மனுஷங்களுக்கு மத்தியிலே சத்தமே இல்லாம பொதுச் சேவை செய்யற உங்கள மாதிரி நல்லவங்க இருக்கறதாலதான், இந்த மாதிரி ஊரெல்லாம் நல்லா இருக்கு!" மனமாரப் பாராட்டினார்.

"அதெல்லாம் இல்லைங்க! இது நல்ல விஷயம்தானே! எங்க அப்பா செய்ய ஆரம்பிச்சதை இப்ப நான் தொடர்ந்து செஞ்சிக்கிட்டிருக்கேன்... அவ்வளவுதான்!"

இயல்பாகக் கூறியவனையே பிரமிப்புடன் நோக்கினாள் மலர்.

"முகஸ்துதி உங்களுக்குப் பிடிக்காதோ?"

அங்கிருந்து விலகிப் பரமேஸ்வரன் புத்தகங்களைப் பார்வையிடச் சென்றவுடன், அவனிடம் வினவினாள்.

"ம்... என்னைப் பொறுத்தவரைக்கும் நம்மைப் பலவீன மாக்கிடறதே இது மாதிரிப் புகழ்ச்சியும், பாராட்டும்தான்! அதுலே மயங்கி, நம்மோட இயல்பைத் தொலைச்சி அந்த போதையிலே ஆழ்ந்து போகவும் வாய்ப்பிருக்கே! அதான்!"

அழுத்தமான குரலில் அவன் முடித்ததும், அவள் மனம் தன்னையறியாமலே அவன் வசம் சரியத் துவங்க, விதிர்த்துப் போய் வெளியே வந்தாள்.

அவள் கையில் அவனுடைய கவிதைப் புத்தகம் இருக்க, "ஒரு நிமிஷம்! என் மனசைத் திருப்பித் தராம எடுத்துட்டுப் போறீங்க?" என்றான்.

அவனுடைய மிருதுவான குரலில் தூக்கிவாரிப் போட்டது. "என்ன உளர்றீங்க?" சுள்ளென்று பரவிய சீற்றத்துடன் வினவினாள்.

தன் மனதின் பலவீனத்தை அவன் உணர்ந்துகொண்டு விட்டானோவென்ற பயமும் தவிப்பும் அவளிடம்!

"உளறலை! உங்க கையில இருக்கறது என் மனசுல இருந்து பிறந்த உணர்வுகள்தானே! அதான் சொன்னேன்!"

அவள் கையிலிருந்த தன் கவிதைப் புத்தகத்தையே கூர்ந்தபடி முடித்தான் அவன்.

உடனே தெளிந்தவள், "ஓ! சாரி! இதைப் படிச்சிட்டுத் தரலாமா?" என மெல்லக் கேட்டாள்.



"ம்... இதை நீங்களே சொந்தமாக்கிக்கலாம்... உங்களுக்கு விருப்பமிருந்தா!"

கண்கள் மட்டும் குறும்பாய்ச் சிரிக்க... இரு பொருள்பட அவன் சிலேடையாகக் கூற... அவள் தவிப்புடன் திருப்பித் தர முனையும்போதே பரமேஸ்வரன் அங்கு வந்துவிட்டார்.

"என்னம்மா... கிளம்பலாமா? இதென்ன... ஓ... நம்ம கதிர் கவிதை எல்லாம் கூட எழுதியிருக்காரா?"

அதைப் புரட்டிப் பார்த்தவர், "இதை நான் படிச்சிட்டுத் தரேன் கதிர்," என்றபடி எடுத்துக்கொண்டார்.

பிறகு அவர்கள் விடைபெற்றுச் செல்லும்போதோ, அவளுடைய மனதையும், அதில் பதிந்திருந்த தன் உருவத் தையும் அறிந்து கொண்ட வெற்றிக் களிப்பில், தனக்குள் முறுவலித்துக் கொண்டான் கதிர்!

## 12

அடுத்த மாதம் புருஷோத்தமனுடைய மகன் கலிய மூர்த்தியின் திருமண ஏற்பாடுகளால் ஊரே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

கலெக்டர் என்ற முறையில், அவளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

பரமேஸ்வரனும் அங்கயற்கண்ணியும் அவளைப் போக வேண்டாமென்று கூறினாலும் ஒரு மரியாதைக்காகச் சென்று வர முடிவு செய்தாள்.

மண்டபத்திற்குச் சென்றபோது, முத்தழகுதான் ஓடி வந்து வரவேற்று அழைத்துச் சென்று அமர வைத்தாள்.

எதிர்பாரா விருந்தாளியாய்க் கதிரும் அன்பும் அங்கு வர, வரவேற்கும் விதமாக மெல்ல முறுவலித்தாள்.

இருவரும் அவளருகே வந்து அமர, அன்புதான் அவளிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"மேடம்! என்ன அப்படி அதிசயமாப் பாக்கறீங்க? ரெண்டு குடும்பத்துக்கும் பகையாச்சே... எப்படி நாங்க ரெண்டு பேரும் இந்தக் கல்யாணத்துக்கு வந்தோம் அப்படின்னா?"

அவன் கேட்டதும் திகைத்தவளுக்குள், இவனும் தன் அண்ணனைப் போலவே மனதைப் படிப்பானோவென்ற கேள்வியும் எழுவதாய்!

"எங்க மாமாவும், கலியமூர்த்தியும்தான் எங்களை எதிரியாகவே நினைப்பாங்க...! ஆனா மாமியும் முத்தழகும் நேரா வந்து பத்திரிகை குடுத்தாங்க! அந்த மரியாதைக்கு வந்துட்டோம்!"

கலகலவென்று கல்மிஷமில்லாமல் பேசியவனை ஏனோ அவளுக்கு உடனே பிடித்துப் போயிற்று!

கதிர் இவனைப் போல் இல்லை...! அழுத்தமானவன்... சற்று இறுக்கமானவனும்!

அவளுடைய எண்ண ஓட்டத்தைத் தடுத்தது முத்தழகின் குரல்!

"மேடம்!... வாங்க சாப்பிட்டுட்டு வந்திடலாம்..." என்று அழைத்தாள்.

"இல்லை... நான் சாப்பிட்டாச்சு!" என்றவள், கதிரின் பக்கமே திரும்பவில்லை!



மேடையில் பெண்ணை அழைத்து வந்து அமர வைத்தபோதுதான், அசுவாரசியமாக அங்கு பார்வையைப் பதித்த அன்பு அதிர்ந்து போனான்!

அவனுடைய கல்லூரித் தோழி மாலினியே மணப் பெண்ணாக இருக்க, அவனால் விழிகளை விலக்கவே முடியவில்லை!

பிறகு மாங்கல்ய தாரணம் நடந்து முடிந்ததும் அன்பளிப்புடன் மேடையேறிய அன்பைக் கவனித்த மாலினி... முகம் மிரட்சியுடன் சுருங்கியது!

பயமும் சஞ்சலமுமாகத் தலை குனிந்து கொண்டவளையே பரிதாபத்துடன் கவனித்தவனுக்குள், கலியமூர்த்தியை எண்ணிக் குறுநகையொன்று ஜனித்தது!

இனியாவது அவள், அவனுக்கு உண்மையாக நடந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அதிகமாய்!

திருமணம் முடிந்து, மலர் பரிசைக் கொடுத்துவிட்டுக் கிளம்பும்போது, கதிரும் பரிசளித்துவிட்டு வெளியே வருவது தெரிந்தது!

ஒரு மரியாதைக்காக நின்றபோது, அருகில் வந்தான். "என் கவிதைகளைப் பத்தி எதுவுமே சொல்லலை! என்னைக் கவனமாத் தவிர்க்கிற மாதிரி இருக்கு!" சிறு கவலையுடன் வினவினான்.

"ப்ச்... சாரி! சொல்ல மறந்திட்டேன்! எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது!"

"என்னைத்தானே!" அடிக்குரலில் கேட்டுவிட்டு, அவன் சிரிக்க, விதிர்த்து நிமிர்ந்தாள் அவள்.

"பரவாயில்லை... லேட்டா வந்த ஒப்புதல்னாலும் நன்றி!"

அவன் குரல் மயிலிறகாய் வருட, ஒரு கணம் உணர்வுகள் மரத்துப் போயின!

உடனே அதை உயிர்ப்பித்து நிமிர்ந்து, "நோ! நான் உங்க கவிதையை மட்டும்தான் சொன்னேன்!" என்று பதைப்புடன் முணுமுணுத்தபோது, அவன் முகவரியின்றி கார் பார்க்கிங் வெறிச்சோடியிருந்தது!

"பை மேடம்!" குரல் கேட்கத் திரும்பினால் வேகமாகக் கடந்து சென்ற காரிலிருந்து அன்புதான் குரல் கொடுத்தான்.

நேர் பார்வையுடன், அருகே அமர்ந்து காரை ஓட்டிய கதிரின் உருவம்... ஒரு கிரேக்கச் சிற்பமாய்!

பலமாகத் தலையைக் குலுக்கி உணர்வுகளைத் தூர விலக்கியவள், உடனே காரில் ஏறி அமர்ந்தாள்!

★ ★ ★

அலுவலகம் வருவதற்குள், இதயம் தடதடத்துத் தேகம் வியர்த்திருந்தாள் மலர்!

இவன் ஏன் என்னை இவ்வளவு தூரம் தவிக்க வைக்கிறான். இவனுடைய கம்பீரத்தாலும், மனித நேயத்தாலும், இலக்கிய ஆர்வத்தாலும், உயர்ந்த பண்புகளாலும் ஈர்க்கப்படுகிறேனோ... கடவுளே... இவனை ஏன் சந்தித்தேன்?

என் லட்சியங்கள்... கனவுகள்... கொள்கைகளை இவன் தகர்த்து விடுவானோவென்ற பயம் முதன் முதலாக வருவதாய்!

மனம் பெரும் அலைப்புறுதலுடன் தவிக்க, அதை அதிகமாக்குவதைப் போல் வெங்கடேஷ் கூறினான்... அன்பு அவளைச் சந்திக்க வந்திருப்பதாக!



அப்போதிருந்த மன நிலையில் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்று கூறி விட்டுக் கோப்புகளில் ஆழ்ந்த போது, ஏனோ மனம் சூன்யமாய்த் தவறு செய்தாற்போலத் தவித்தது!

அங்கிருந்து இருவரையும் சேர்த்து வைத்துவிட வேண்டுமென்ற வெறியும் வேகமும் அவனுள் அதிகமாய்!

இன்று இருவரையும் சேர்த்துப் பார்த்தபோது, எப்படியாவது மலரிடம் பேசி ஒரு முடிவை அறிந்து கொள்ளும் ஆர்வம் எழவேதான் அவளைச் சந்திக்கச் சென்றிருந்தான்.

ஆனால் அவனைச் சந்திக்க அவள் மறுத்துவிட, கோபத்துடன் வீட்டிற்குத் திரும்பும்போதுதான் வழியில் ரேவதியைச் சந்தித்தான்.

இப்போது, அவள் தொழிற்சாலைக்கு வேலைக்கு வருவதில்லை!

நூலகப் பொறுப்பாளருக்கு உதவியாக அங்கேயே வேலை செய்ய ஆரம்பித்திருந்ததால், அவனாலும் ஒரு மாதமாக அவளைப் பார்க்கவே முடியவில்லை!

மதியம் சாப்பிட்ட பிறகு நூலகத்திற்குச் சென்று கொண்டிருந்தவளை ஒரு கார் வழிமறிக்க, திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அதிலிருந்து அன்புதான் இறங்கிக் கொண்டிருந்தான்.

"ஏய்... என்ன... இப்பல்லாம் என்னைப் பார்த்தாலே ஓடறே! இன்னிக்கு எல்லாத்துக்கும் பதில் சொல்லிட்டுதான் நீ போறே! காரில ஏறு!" சலுகையுடன் அதட்டினான்.

உடனே சிறு தளிராய் உடல் நடுங்க,"ப்ளீஸ்! யாராவது பார்த்துடப் போறாங்க!" என்று அடிக்குரலில் கெஞ்சினாள்.

"இப்படியே நின்னு பொழுதைக் கடத்திட்டிருந்தாத்தான் யாராவது பாப்பாங்க! சொல்ற பேச்சை நீயாவது கேளு ரேவதி!" செல்லமாக அதட்டினான்.

"ம்... வேற யார் நீங்க சொன்ன பேச்சைக் கேக்கலையாம்?"

குறும்புடன் அவள் கேட்க, "அது தெரியணும்னா முதல்லே கார்ல ஏறு!" என்றபடி அவளைக் காருக்குள் ஏற்றியவன், நேரே தோப்புப் பக்கம் ஓட்டிச் சென்றான்!

அங்கு சென்று நிறுத்தியதும் இறங்க மறுத்தவளிடம், "ம்... இங்கே அப்படியே சினிமாவில வர்ற மாதிரி உன்னைத் துரத்தித் துரத்தித் தப்புச் செய்யப் போறேன்னு நினைக்கிறீயா? ப்ச்... இறங்கி வா ரேவதி!" சலிப்புடன் அழைத்தான்.

மெதுவாக இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தபடி, அவள் நடக்க, ஒரு மரத்தின் கீழே அவளை அமரவைத்து, எதிரே உட்கார்ந்தான்.

"என்ன கேட்டே? நான் சொல்ற பேச்சை யாரு கேக்கலை அப்படின்னா? வேற யாரு... கலெக்டர் மேடம் தான்! அண்ணா பாவம்... இதுவரைக்கும் வாழ்க்கையில தனக்குன்னு அவங்க எதையுமே ஆசைப்பட்டதில்லை... எதுவுமே கேட்டதுமில்லை! முதன் முதலாக விரும்பினதும் கிடைக்குமோ கிடைக்காதோன்னு இருக்கு!" ஒரு பெருமூச்சுடன் முடித்தான்.

உடனே தர்ம சங்கடத்துடன் நிமிர்ந்தவள், "வீட்டில கூட அப்பாவும் அண்ணனும் இதேதான் சொல்லி வருத்தப்



பட்டாங்க! பொண்ணு கேக்கப் போனப்பதான் தெரிஞ்சுதாமே அவங்க ஒரு விடோன்னு!" மெதுவாக நிறுத்தினாள்.

"அதுக்காக அண்ணனோ நானே கவலைப்படலை... பெரிசாவும் எடுத்துக்கலை! அம்மாதான் கொஞ்சம் பிடிவாதம் பிடிக்கறாங்க... அவங்களை மாத்திடலாம்! இந்த கலெக்டர் தான் மாட்டேங்கிறாங்க... அண்ணன் எவ்வளவோ பேசிப் பாத்தாச்சு! இன்னிக்கு என்கூட பேசக்கூட மறுத்திட்டாங்க!"

"ஆச்சர்யமா இருக்குங்க! கதிர் அண்ணாவை... அவ்வளவு நல்ல மனுஷரை யாருக்காவது பிடிக்காமக் கூடப் போகுமா?"

குழந்தைத்தனமாகக் கேட்டவளையே பார்த்திருந்தவன், "ம்... என்ன செய்யறது? நாங்க ரெண்டு பேருமே விரும்பின பொண்ணுங்க சரியில்லை... கொஞ்சமாவது எங்க அருமை தெரியுதா? ப்ச்...!"

சோர்வுடன் சலித்தவனுடைய விரல்களை மெதுவாகப் பற்றியவள், "சாரி! அன்னிக்கு அம்மா..." சற்றுத் தயங்கிவிட்டு தையல்நாயகி பேசியதைப் பற்றிக் கூறினாள்.

"ஓ! அதான் ரேவதிக் குட்டி என்னை விட்டு விலகிப் போனாளோ?" குறும்புடன் கேட்டவன் யோசனையுடன் திரும்பினான்.

"எனக்கென்னவோ, கலெக்டர் மேடமும் மனசுக்குள்ளே ஆசையை வச்சிட்டு மறைக்கிற மாதிரிதான் தெரியுது!

"லைப்ரரி திறப்பு விழாவுக்கு வந்தப்ப, அவங்க அண்ணாவைப் பார்த்த பார்வை, பேச்சு, சிரிப்பு

எல்லாத்திலயுமே காதல் கசிஞ்ச மாதிரித் தெரிஞ்சுது! நான் ரெண்டு பேரையும் வாட்ச் பண்ணிட்டேதான் இருந்தேன்!"

"ஓ! நீங்க காதல்லே பெரிய எக்ஸ்பர்ட்டோ அன்பு?"

அவள் சிறு கேலியுடன் வினவ, "ம்... பெயரிலேயே அன்பும் காதலும் இருக்கறப்ப, அதைப் பத்தி தெரிஞ்சிக்காம இருக்க முடியுமா?" என்று அவன் கேட்கும்போதே, யாரோ வருவது போல் சப்தம் கேட்க, பயந்து போய் மரத்தின் பின்னால் மறைந்தாள் அவள்!

"ஏய்... என்ன பயம்? ஏதாவது பாம்பு ஓடியிருக்கும்... அதுக்குப் போய் யாரோ வர்ற மாதிரி பதுங்கறே?"

அதைக் கேட்டதும் "வீல்..." என்று அலறியபடி ஓடிவந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

உடனே நமட்டுச் சிரிப்புடன் அவளை அணைத்தவன், "தேங்க் யூ!" என்றான் அடிக் குரலில்!

உடனே பதறி விலகியவள், "சீ... நீங்க ரொம்ப மோசம்! நான் இனிமே உங்களோட தனியா வரவே மாட்டேன்!" என்றாள்.

ஊடலுடன் கோபித்தபடி நடக்க ஆரம்பித்தாள்.

"ஏய்... இதுக்குப் போய்க் கோபிச்சிக்கிறே?" சீண்டலாக அவள் கையைப் பிடித்து நிறுத்தினான் அவன்.

"ப்ளீஸ்... விடுங்க! கோபிச்சிக்காம கொஞ்சுவாங்களா?"

"ம்! கொஞ்சலாமே! நீ கொஞ்சலைன்னாலும் நான் ரெடி!" சிரிக்காமல் உரைத்தான்.

"தம்பி..." சட்டென்று ஒலித்த அதிர்ச்சிக் குரல் அதே அதிர்வை இருவரிடமும் ஏற்படுத்தத் திரும்பினர்.



அங்கு சபாபதி தான் புன்னகையைத் தொலைத்த முகத்துடன் இறுக்கமாக நின்றிருந்தார்.

★★★

இருவருமே உறைந்து நின்றிருக்க, மெதுவாக அருகில் வந்தவர், "வேண்டாம் தம்பி! அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்காது... உங்க அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் செஞ்சிக்கங்க! ரேவதி... போய் வெளியே இரு... நானே உன்னை லைப்ரரியில விட்டுடறேன்!" என்று மகளிடம் அதட்டினார்.

"அங்கிள்! நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம்... நான் ரேவதியைத்தான்..."

அதற்கு மேல் பேச விடாமல் அவருடைய கூப்பிய கைகள் தடுக்க, "தம்பி! பெரிய தம்பி தெரியாம அம்மாவைக் கஷ்டப்படுத்திடுச்சு! நீங்க தெரிஞ்சே அவங்களை நோகடிக்கறீங்க!

"எப்படி ஒரு விதவையை... மருமகளா அவங்களாலே ஏத்துக்க முடியாதோ... அதே மாதிரிதான் உங்களுக்குக் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லாத என் மகளையும் அவங்களால ஒத்துக்க முடியாது!

"என் மக மூலமா அவங்க நிம்மதி கெடும்னா அப்புறம் நான் சும்மா இருக்க மாட்டேன்ப்பா! ஏய்... போடி... இனிமேலாவது ஒழுங்கா இரு... இல்லைன்னா வெட்டிப் போட்டுடுவேன்!" என்று அவர் கத்த, அழுதபடி ஓடிய ரேவதியைப் பார்த்தால், அன்புக்குப் பரிதாபமாய்!

"அங்கிள்..." அவன் குரல் காற்றில் கலக்க, மகளை இழுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார் அவர்.

## 13

**தோ**ப்பிலிருந்து அதே யோசனையுடன் கிளம்பி வந்தபோது, அடுத்த அதிர்ச்சி அன்புவுக்காகக் காத்திருந்தது.

வீட்டு வாசலிலேயே தவிப்புடன் நின்றிருந்தாள் மாலினி!

அவளைக் கண்டதும் யோசனையுடன் வரவேற்றவன், "வா மாலினி! எங்க ஞாபகமெல்லாம் கூட இருக்கா? உள்ளே வா!" என்றபடி வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்.

"அம்மா! நம்ம மூர்த்தியோட மனைவி மாலினி இவங்க தான்! இவங்க என் காலேஜ் மேட்! கல்யாணத்திலே பார்த்தப்பதான் தெரிஞ்சுது!" தாயிடம் அறிமுகம் செய்தான்.

அவள் வணங்க, "வாம்மா! நீ இங்கே வந்தது உன் புருஷனுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்! எங்க ரெண்டு குடும்பத்துக்கும் ரொம்ப நாளாப் பகையாச்சே! வா!" கவலையுடன் வரவேற்றார்.

பிறகு, அவர் டிபன் காபி எடுத்து வருவதற்காக உள்ளே செல்ல, "அன்பு! என் வயசு, கூடப் பழகினவங்க சகவாசம்னு நானும் நிறையத் தப்பு செஞ்சிட்டேன்! உன்னோட நட்பைக் கட் பண்ணினது எவ்வளவு பெரிய தப்புன்னு லேட்டாதான் புரிஞ்சிக்கிட்டேன்!

"படிப்பு முடிஞ்சி ஊருக்குப் போனதுமே, அப்பா எனக்கு இந்த அலயன்ஸைப் பேசி முடிச்சிட்டாரு! என்னால எதிர்க்கவும் முடியலை!

"வயசுக் கோளாறில நான் செஞ்ச தப்புக்கு இது ஒரு பிராயச்சித்தம்னு நினைச்சி இந்த வாழ்க்கையை ஏத்துக் கிட்டேன்! ஆனா உன்னைப் பாத்ததும் பயமாயிடுச்சி!



"என்னைப் பத்தின உண்மையச் சொல்லி என் வாழ்க்கையக் கெடுத்திடாதேன்னு தான் ரிக்வெஸ்ட் பண்ண வந்தேன்!" என்று தவிப்புடன் நிறுத்தினாள்.

"என்ன மாலினி இது... என்னைப் பத்தி நீ புரிஞ்சிக்கிட்டது இவ்வளவுதானா? எங்களுக்கும் கலியமூர்த்தி குடும்பத்துக்கும் பகைன்னாலும் அவன் வாழ்க்கையைக் கெடுக்கணும்கிற நோக்கமெல்லாம் எனக்குக் கிடையாது! நீயாவது அவனைத் திருத்தணும்கிறதுதான் என்னோட ஆசையே!"

அவன் முடிக்கும் முன்பே, டிபனுடன் அங்கு வந்த தையல்நாயகி என்னவென்று விசாரித்தார்.

"ஒண்ணுமில்லைம்மா! மூர்த்தி இனிமேலாவது திருந்தி நல்லவனா மாறணும்கிறதுதான் என் ஆசைன்னு சொல்லிட்டிருந்தேன்!"

அதற்குள் கதிரும் வந்துவிட, பரஸ்பர அறிமுகத்திற்குப் பிறகு, சமையல்காரம்மா எடுத்து வந்த காபியைப் பருகிவிட்டு விடைபெற்றாள் மாலினி!

★★★

**அ**ன்றிரவு! பரமேஸ்வரனும் அங்கயற்கண்ணியும் மலரிடம் வெகு நேரம் பேசினர்.

"மலர்! எங்களுக்கப்புறம் உனக்கு ஒரு துணை கட்டாயம் வேணும்! நீயும் இளமையிலிருந்து உறவுகள் இல்லாத ஏக்கத்தோட ஒரு ஆசிரமத்துல வளர்ந்தவ!

"அப்புறம் உங்க கல்யாணம் முடிஞ்சதும் நாங்க எல்லோரும் உன் உறவுகளாக வந்தோம்... உன் தனிமை, ஆழ்மன ஏக்கம், துக்கம் எல்லாம் ஒரே நாளிலே சந்தோஷத் தருணமா மாறிச்சு!

"ஆனா அதுவும் ஒரு வாரத்துக்கு மேல நீடிக்கலை! ஆனா அதனால நீ உடைஞ்சு மூலையிலே உக்காந்திடலையே!

"மெல்ல மெல்ல உன் மனசு மேல பறக்கத் தயாராச்சு! உன் லட்சியத்தை அடையணும்கிற ஏக்கம் தூண்டுதலா இருக்க வெறியாப் படிச்சே! உருவமில்லாம உன்னைச் சிதைச்சிட்டிருந்த கவலைகளை உள் மனசு களைஞ்சுது... ஒரு ஃபீனிக்ஸ் பறவையா உயிர்த்தெழுந்தே!"

அவர் முடிப்பதற்குள் அவள் இடைமறித்தாள்... "அப்பா! என் மனமாற்றம், தைரியம், படிப்பு, உயர்வு, வளர்ச்சி எல்லாத்துக்கும் காரணம் நீங்களும் அம்மாவும்தான்! என்னைப் பெறாத அம்மாவும் அப்பாவும் நீங்க ரெண்டு பேரும்தான்!"

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவள் பகர, "அதைத் தான் சொல்ல வரேன்! வாழ்க்கை இதோட முடிஞ்சு போயிடலை! இனிமே தான் உனக்கு வாழ்க்கையே இருக்கு!" என்றார்.

"இல்லப்பா! என்னால என்னை மாத்திக்க முடியாது!" உறுதியுடன் மறுத்தாள் அவள்.

"ஓ! எதை மாத்திக்க முடியாது மலர்? நாம எல்லாருமே மாறித்தானே இருக்கோம்! நம்ம உடை வேட்டி... இந்த வெயில் பிரதேசத்துக்கு உகந்த பருத்தி உடை!

"ஆனா கட்டறோமா... இல்லையே? வெளிநாட்டில குளிருக்கு வசதியா அவங்க போட்ற பேண்ட் சட்டைதான்! புடவை, பாவாடை தாவணியே பார்க்க முடியலை!



"நைட்டி, சுடிதார், ஜீன்ஸுன்னு நிறைய மாறியாச்சு! உடையில மட்டும் இல்லை! முன்னாடி முற்றம் வெச்சி காற்றோட்டமா பெரிசா நாலு கிரெளண்டிலே இருக்கும் வீடு!

"இப்போ அதே இடத்தில முப்பது ஃப்ளாட் கட்டறோம்... மாற்றம் உலக நியதியாயிடுச்சிம்மா!

"என் வாழ்க்கையில குறுக்கிட உங்களுக்கு என்ன உரிமைன்னு கூட இப்ப நீ நினைக்கலாம்!"

உடனே விழியோரம் துளிர்ந்துவிட, கலக்கத்துடன் குறுக்கிட்டாள் அவள்.

"அப்பா... ப்ளீஸ் அது மாதிரிப் பேசாதீங்க... உங்களை விட என் மேல அக்கறை உள்ளவங்க வேற யாருமில்லை... சொல்லுங்க!" அவரை ஊக்கினாள்.

"ம்... உன் மனசை... உன் ப்ரச்னையை... உன் தர்ம சங்கடத்தை உணர்ந்தவங்க நாங்க ரெண்டு பேரும்தான்! எனக்குத் தெரிஞ்சு அறிவுரை எல்லாம் உனக்குத் தேவை இல்லை! உன்னாலயே யோசிக்க முடியும்! முடிவெடுக்க முடியும்! எங்களுக்காக யோசிக்காம, எங்க தோளிலே சாயாம நீ தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கணும்னு நானும் அம்மாவும் விரும்பறோம்!

"எங்களுக்கு அப்புறம் உனக்கு ஒரு துணை கட்டாயம் வேணும்கிறது எங்க ரெண்டு பேரோட ஆணித்தரமான கருத்து... அதை நீ மதிக்கணும்னு எதிர்பாக்கலை... உன்னைப் பத்தி நீயே யோசிச்சி ஒரு நல்ல முடிவெடு! கதிரைப் பத்தி இன்னொரு தடவை நல்லா யோசிச்சிப் பாரு!

"முருகன் போனது பெரிய இழப்புதான்...! ஆனா அது முடிஞ்சு அஞ்சு வருஷமாச்சு! காலம் அதுக்குண்டான

ஆறுதலையும் மாற்றத்தையும் நமக்குத் தந்தாச்சு! மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு எதிர்காலத்தை எதிர்நோக்கற பொறுப்பு நமக்கு இருக்கு!"

"இந்த அஞ்சு வருஷத்துல எத்தனை மாறுதல்கள்... உன் வாழ்க்கையில படிப்பு... விழாக்கள்... புத்தகங்கள்... சினிமா, டி.வி... கண்காட்சிகள்... அழகான விடியல்... இயற்கை... கவிதைத் தொகுப்புன்னு இப்படி எவ்வளவு கடந்து வந்திருக்கே!

"மறதி... நமக்குக் கடவுள் தந்திருக்கிற ஒரு அருமையான வரப் பிரசாதம்! இந்த உலகத்துல நல்லதும் இருக்கு... கெட்டதும் இருக்கு... கெட்டதை விலக்கித் தவிர்த்து, நல்லதை ஏத்துக்கணும்மா!

"இது உபதேசம் கேக்கிற வயசில்லைதான்! பட்... யோசி... புரியும்!" என்றபடி அவள் தலையைப் பாசமாக வருடிவிட்டு வெளியேறினார்.

அவளுக்குள்... உணர்வுகள் ராட்டினமாய்ச் சுழலத் துவங்கின!

மனதின் உறுதியும், வீம்பும் சிறுசிறு துகள்களாய்ச் சிதற ஆரம்பித்திருந்தன!

## 14

**நா**ட்கள் நகர்ந்தன! அந்தப் பாறையின் உள்ளே கசிந்த ஈரத்தை அவரின் பேச்சு சிறு உளியாய் உடைத் திருந்தது.

அந்த வாரம், சுய உதவிக் குழு விஷயமாக அவளைச் சந்திக்க வந்த



முத்தழகு, தன் அண்ணனுடைய புகழையே பாடியபோது மனம் கிளர்ச்சியாகச் சிலிர்த்தது.

அதை வெளிக்காட்டாமல் மறைத்து, பெரும்பாடுபட்டு அமைதி காத்து, அவளை அனுப்பி வைத்தாள்.

அன்று மாலையில், ஏனோ கோயிலுக்குச் செல்ல வேண்டும் போல் ஒரு உணர்வு!

அந்தக் குன்றின் மேலிருக்கும் முருகனைத் தரிசித்த போது, சொல்லொணாத அமைதி கிடைத்தது.

பிராகாரத்தில் அமர்ந்திருந்த அங்கயற்கண்ணியைத் தொந்தரவு செய்ய மனமின்றி, சுற்றுச் சுவரருகே நின்றபடி, கீழே தெரிந்த இயற்கையை மெல்ல ரசித்திருந்தாள்.

"என்ன கலெக்டரம்மா... தனியா நிக்கறீங்க?"

கதிரின் ஆழமான குரல் உசுப்ப, சிலிர்ப்புடன் திரும்பினாள்.

சிறு முறுவலுடன், "தனிமை எனக்கு ரொம்பப் பிடிக்கும்!" என மெல்லக் கூறினாள்.

"ம்... சில நேரம் அதுவே போரடிச்சிடும்..."

ஒரு விதக் கூர்மையுடன் பகர்ந்தவனிடம், "உங்க கவிதைகள் எல்லாமே படிச்சேன்... அற்புதமா இருந்தது! ஆனா..." உதட்டைச் சுழித்தபடி நிறுத்தினாள்.

"என்ன ஆனா...?" கர்வமும் குறுகுறுப்புமாய் அவன் வினவினான்.

"இல்லை! கவிதைகள்னாலே... அதிலே காதலுக்குத் தனியிடம் உண்டு! ஆனா, ஒரு காதல் கவிதை கூட அதிலே இல்லையே?"

"ம்... அப்போ நான் காதலிக்கலையே!"

அவள் முகத்தையே ரசனையுடன் வருடிய அவன் பார்வையில் சட்டென்று செந்தூரப் பூவாய்ச் சிவந்தவள், உடனே குனிந்து கொண்டாள்.

அவளுடைய நாணமும், தவிப்பும் பெரும் பலம் தர, "ஆனா... என் மனசுக்குப் பிடிச்சவளைப் பார்த்ததும் இப்போ ஒரு கவிதை எழுதியிருக்கேன்... படிக்கணுமா?" என்று சீண்டலாகக் கேட்டான்.

"ம்... வேண்டாம்! நேரமாயிடுச்சி... நான் கிளம்பணும்!"

அவள் விலகி நடக்க, நமட்டுச் சிரிப்புடன் பின் தொடர்ந்தான் கதிர்.

அங்கயற்கண்ணியும் தையல்நாயகியும் பேசிக் கொண்டிருக்க, அவரை வணங்கியவள், இருவரிடமும் அவசரமாக விடைபெற்றாள்.

★★★

**ச**மீப காலங்களாகவே, தினமும் அன்பு அவரிடம் இதுபற்றிப் பேசியபடியேதான் இருந்தான்.

தையல்நாயகிக்கு... அன்று மலரைக் கண்டதும், நேற்று அன்பு தன்னிடம் மனம்விட்டுப் பேசியதுதான் நினைவிற்கு வருவதாய்!

மாலினியைப் பற்றிக் கூறியவன், அது போலன்றி உண்மையைக் கூறிய மலரையும் அவளுடைய பெற்றோரையும் பற்றிய உன்னதத்தைப் புரிய வைத்திருந்தான்!

திருமணத்திற்கு முன்பே தவறு செய்துவிட்டு, அதை மறைத்துத் திருமணம் செய்து கொள்பவர்களைவிட, முதல்



திருமணத்தைப் பற்றி மறைக்காமல் கூறி, அவர்களின் ஒப்புதலைக் கேட்ட பரமேஸ்வரனுடைய செயலின் உயர்வு தாமதமாகத்தான் அவருக்கும் புரிந்திருந்தது.

இரவு வெகு நேரம் யோசித்ததில், ஊர் உலகத்தின் பேச்சுகள், விதவைப் பெண் என்கிற தாழ்வான அபிப்ராயம்... அவருடைய குறுகிய மனப்பான்மை அனைத்துமே அவன் பேச்சில் கரைந்து போயிருந்தன!

இன்று அங்கயற்கண்ணியிடம், அது பற்றித்தான் பேசியிருந்தார் அவர்.

தன்னுடைய முந்தைய மனநிலையையும், இப்போது புரிந்து தன் மகளுடைய விருப்பமும், நிம்மதியும், நல்ல எதிர்காலமுமே முக்கியமென்று உணர்ந்து கொண்ட மனமாற்றத்தையும் பற்றி அவரிடம் கூறியவர், மலரிடம் ஏதாவது மாற்றம் தெரிகிறதாவென்று விசாரித்தார்.

அவரும், இரு வாரங்களுக்கு முன்பு தன் கணவர் அவளிடம் பேசியதையும், அதிலிருந்து மலரிடம் சிறுமாற்றம் தெரிவதாகவும் சொன்னார்.

மனம் மகிழ்ச்சியில் ஊஞ்சல் கட்டி ஆட, திரும்பி வரும்போது கதிரிடம் எல்லா விபரங்களையும் கூறினார் தையல்நாயகி.

உடனே அவன் முகம் மின்னலாய் ஒளிர, அவனுடைய விருப்பம் நிறைவேற வேண்டுமென்று இதயம் மௌனமாய் ப்ரார்த்தனை செய்தது.

இதுவரை, அவன் தன்னிடம் எதுவுமே விரும்பிக் கேட்டதில்லை என்ற நிஜம் உரைக்க, தங்கள் குடும்பத்தை

உயர்த்த அவன் பட்ட கஷ்டமும், அதற்காக அவன் உழைத்ததும், செய்த தியாகங்களும் நினைவு வர, உடனே இதற்கொரு முடிவு செய்ய வேண்டுமென்று மனம் உறுதி பூண்டது!

தன் மகனை நினைத்தாலே அவருக்குப் பெருமையாய்!

அதற்குள் கதிரின் குரல் அவரைக் கலைத்தது.

"தேங்க்ஸ்மா! நீங்க என்னைப் புரிஞ்சிக்கிட்டு உங்களோட பிடிவாதத்தையும் கொள்கைகளையும் விட்டுத் தந்தது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு, தெரியுமா?"

"நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேனா கதிர்? ஹூம்! வாழப்போற காலம் எவ்வளவுன்னே தெரியாதப்ப, மத்தவங்களையும் கஷ்டப்படுத்தி நம்மையும் வதைச்சிக் கறதுல என்ன பிரயோஜனம் சொல்லு... ஆனா! என் கண்ணைத் திறந்ததே அன்புதான்!

அவன் பேச்சுதான் என்னை யோசிக்க வச்சிது... மாத்துச்சி! எனக்கு வேற என்ன வேணும்? நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா நிம்மதியா இருக்கணும். அதானே! அதுக்குத் தடையா இருந்த என்னோட குறுகிய மனப் பான்மையையும், தேவை இல்லாத சஞ்சலங்களையும் தூக்கி எறிஞ்சிட்டேன்!

"இப்ப நிம்மதியா லேசா இருக்கு மனசு! மலரோட மனசு மாறட்டும்... உடனே கல்யாணம்தான்... ரொம்ப நாள் கழிச்சி நம்ம வீட்டில நடக்கப் போற ஃபங்ஷன்! மனசு ஆசையோட எதிர்பார்த்திட்டிருக்குப்பா!" கூறிவிட்டு நிறைவுடன் சாய்ந்து கொண்டார்.



# 15

**நா**ட்கள்... மழைச் சாரலாய் விரைந்தன!

மாலினி இப்போது கருவுற்றிருப்பதாக வேலைக்காரர்கள் மூலம் செய்தி கிடைத்த போது அன்புவின் மனம் மகிழ்ச்சியானது!

அவள் திருந்தித் தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டது நிறைவாய்!

இப்போது ரேவதி நூலகத்தின் பொறுப்பு முழுவதையும் ஏற்றிருந்தாள்.

அடிக்கடி அங்கு சென்று அவளைப் பார்க்கின்ற சாக்கில் புத்தகங்களை எடுத்துவர ஆரம்பித்த அன்பு, இப்போது ஒரு புத்தகப் புழுவாகவே மாறியிருந்தான்.

ஓய்வு நேரங்களில் புத்தகங்களுடனே தனித்திருந்தவனை, கதிரே கேலி செய்யும் அளவு இருந்தது... அவனுடைய மாற்றம்!

பல எழுத்தாளர்களின் புத்தகங்கள் அவனை ஈர்த்திருக்க, ரேவதியும் ஆர்வமாகப் படிப்பவள் என்பதால், இப்போ தெல்லாம் இருவருமே அதைப் பற்றி ஆர்வத்துடன் விவாதிக்க ஆரம்பித்திருந்தனர்.

சுந்தர ராமசாமி, வைக்கம் முகமது பஷீர் என்று இலக்கியக் கதைகளில் ஆர்வம் பிறந்திருக்க, கதிரின் கவிதைத் தொகுப்பும் சேர்ந்து அவனையும் ஒரு சோஷ லிஸ்டாக மாற்றியிருந்தது!

தொழிலாளர்களின் கஷ்டங்கள், தேவைகள், அவர் களின் மேம்பாடு, உயர்வு என்று அவன் பேசப் பேச... ரேவதி பெரிதும் நெகிழ்ந்து போனாள்!

அந்த நேரம்தான், அவள் கேட்ட ஒரு கேள்வி அவனை அசைத்துப் போடுவதாய்!

"நீங்களும் கதிர் அண்ணாவும் இவ்வளவு ஆர்வமா சோஷலிஸம், கம்யூனிஸம்னு பேசறீங்களே! ஒரு சாதாரண ஏழைப் பெண்ணை உங்கம்மா மருமகளா ஏத்துப்பாங்களா?"

உதட்டுச் சுழிப்புடன் வினவிய ரேவதியையே ஏறிட்டவன், "ம்... ஏத்துப்பாங்க! ஏன்னா பேசிப் பேசி இப்போ அம்மாவைக் கரைச்சிருக்கேன்!

"அண்ணனோட திருமணத்துக்கு இப்ப ஒப்புதல் தந்திட்டாங்களே! இனிமே அடுத்து நம்ம கல்யாணம்தான்! பாரு... அம்மா நிச்சயமா மாறிடுவாங்க!"

அவன் முடிப்பதற்குள், "யாரு மாறுவாங்க?" என்றபடி வந்தான் வெங்கடேஷ்.

"ம்... இந்த சொசைட்டியைப் பத்திச் சொல்லிட்டிருந்தேன்! எங்கம்மாவே இப்ப கதிர் அண்ணா விஷயத்துல மாறியாச்சு! கலெக்டரை மருமகளா ஏத்துக்க சம்மதிச்சிட்டாங்களே!"

அவன் முடித்ததும், மகிழ்ச்சியுடன் மலர்ந்தது வெங்கடேஷின் முகம்!

"அப்படியா? சந்தோஷமா இருக்கு! கலெக்டர் அம்மாவும் ரொம்ப நல்லவங்க... கதிர் சார் மாதிரியே! அவங்க ரெண்டு பேரும் சேர்ந்துட்டா நம்ம ஊருக்கும் மக்களுக்கும் எவ்வளவோ நல்லது!" நிறைவும் பெருமையுமாய்ச் சிலாகித்தான்.

"நல்லாத்தான் இருக்கும்! ஆனா உங்க மேடம் சம்மதிக்கணுமே?"



"ம்... கூடிய சீக்கிரம் சம்மதிச்சிடுவாங்கன்னு நினைக்கிறேன்... இப்பக் கூட அவங்க எடுத்துட்டுப் போன புத்தகத்தை ரிடர்ன் பண்ணத்தான் வந்தேன்!"

"அப்பதான் டேபிள்லே இருந்த கதிர் சாரோட கவிதைப் புத்தகத்தைப் பாத்தேன்! அதை ரிடர்ன் பண்ணவான்னு கேட்டதுக்கு அது இருக்கட்டும்னுட்டாங்க! பாப்போமே!"

"அது சரி... கவிதை பிடிச்சிருக்குன்றதால கவிதை எழுதுனவங்களையும் பிடிக்கணும்னு சட்டமில்லையே?" அன்பு குறும்புடன் கூற உடனே சிரித்த வெங்கடேஷ், "இதுவே ஒரு நல்ல டெவலப்மெண்ட்டாச்சே! ஏனோ மேடம் மனசு மாற ஆரம்பிச்சிருக்குன்னு எனக்குத் தோணுது!

"அன்னிக்குக் கதிர் சார் வந்தப்ப அவர் முகத்தைப் பார்த்தே பேசாம ரொம்ப ரெஸ்ட்லெஸ்ஸா இருந்தாங்க! சார் அவங்களைக் கொஞ்சம் கூடப் பாதிக்கலைன்னா ஏன் அப்படி இருக்கணும்?" என்று அவன் கேட்டவுடன், "அதானே! அண்ணா யூகிச்சதுதான் சரி!" என உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தாள் ரேவதி!

பிறகு அவன் புத்தகங்களைக் கொடுத்துவிட்டுச் செல்ல, அன்புவும் கூடவே அவனுடன் கிளம்பிவிட்டான்!

★★★

**வீ**ட்டிற்கு வந்து இறங்கும்போதுதான், பதட்டத்துடன் அங்கு ஓடிவந்தாள் மாலினி!

"அன்பு! ஏதோ தப்பு நடக்கப் போகுதுன்னு நினைக்கிறேன்... எங்களோட நெல் கோடவுன் இருக்கில்லையா? அதிலே தங்கறதுக்கு ரெண்டு பேரு வந்திருக்காங்க!"

அவள் பதட்டத்துடன் மொழியும்போதே, கதிர் வந்து விட்டான்.

"அதுக்கு ஏன் நீ இவ்வளவு பதட்டமா ஓடி வர்றே? அதிலே என்ன தப்பு மாலினி? நீ இப்ப கர்ப்பமா இருக்கறதா கேள்விப்பட்டேன்... கங்கிராட்ஸ்!

"இந்த நிலைமையில இப்படி டென்ஷனாகக் கூடாது!" அன்பு பரிவுடன் அறிவுறுத்தினான்.

"அது சரி அன்பு! ஆனா அவங்க பேசிக்கிட்டிருந்ததை நான் கேட்டேன்! ஏதோ ட்ரெயின், பாம் அது இதுன்னு பேசினாங்க!

"ரெண்டு நாள் அங்கே தங்க, என் மாமனார்கிட்டே ஒரு லட்ச ரூபா குடுத்தாங்க... நான் பார்த்தேன்... எனக்கு என்னவோ பயமாயிருக்கு!"

கண்களில் நீருடன் அவள் பகர, வேகமாக முன்னால் வந்தான் கதிர்.

"நீ வீட்டுக்குப் போம்மா! எல்லாம் நாங்க பாத்துக் கறோம்... நான் உடனே இது பத்தி கலெக்டரோட பேசறேன்!" என்றவன் உடனே டிரைவரை அழைத்தான்.

"இவங்களை அவங்க வீட்டுக்கு முன்னாடி இருக்கற தெருவில பத்திரமா இறக்கிவிட்டு வா... வரும்போது எப்படிம்மா வந்தே?"

அக்கறையுடன் மாலினியிடம் அவன் வினவினான். "வீட்டிலே யாருக்கும் தெரியாம பஸ்ஸிலேதான் வந்தேன்!" தயக்கத்துடன் நிறுத்தினாள் மாலினி!



"சரி! நீ உடனே கிளம்பு! நாங்க கலெக்டரைப் போய்ப் பாத்து என்ன செயயலாமின்னு முடிவு செய்றோம்!"

அவளை அனுப்பிவிட்டு, உடனே இருவரும் கிளம்பி மலரைப் பார்க்க கலெக்டர் அலுவலகத்திற்குச் சென்றனர்.

★★★

கதிரைக் கண்டதும் தன்னுள் மலர்ந்த நேசப் பூக்களை மறைத்தபடி எழுந்து வரவேற்றாள் மலர்.

ஆனால் விபரத்தை அறிந்ததும், ஒரு கலெக்டராக மாறி உடனே காவல்துறையை அழைத்துச் சில ஆணைகளைப் பிறப்பித்துவிட்டு, உடனே கிளம்பினாள்.

கூடவே கதிரும், அன்புவும் கிளம்பி கோடவுனுக்குச் சென்றபோது, காவல் துறையினர் அந்த இருவரையும் கைது செய்திருந்தனர்.

அங்கிருந்த போதைப் பொருட்களையும் வேறு கைப்பற்றி இருந்தனர்.

அவர்களை அழைத்து விசாரித்தபோதுதான் தெரிந்தது... மறுநாள் இரவு அந்த ஊரை ரயில் கடக்கும்போது பாலத்தில் வெடிகுண்டு வைக்க இருவரும் சேர்ந்து முடிவு செய்திருந்த விபரம்!

குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததற்காக, புருஷோத் தமனையும் கைது செய்தது காவல்துறை!

மலரும், காவல்துறை உயர் அதிகாரிகள் இருவரையும் பாராட்டி நன்றி தெரிவித்து விடைபெற, குரோதத்துடன் அவர்களையே வெறித்தபடி நின்றிருந்தான் கலியமூர்த்தி!

அவர்கள் அனைவரும் கிளம்பிய மறுகணமே, வீட்டிற்குள் சென்று மனைவியை அடித்து வெளியே இழுத்து வந்தான் அவன்!

"எங்களையா காட்டிக் குடுக்கறே... நாயே! போடி! அவனோடவே போயிடு! அவனும் நீயும் ஒண்ணாப் படிச்சவங்கன்ன உடனே நான் நினைச்சேன்!"

பெரும் விசும்பலுடன் அவள் கீழே விழ, கோபமாகச் சென்று ஜீப்பில் ஏறியவன் முகம் உன்மத்தமாய் மாறி யிருந்தது.

கீழே விழுந்தவளை எழுப்பி ஆறுதல் சொல்ல அங்கு ஒருவருமே இல்லாமல் போக, தட்டுத் தடுமாறி எழுந்து நடக்க ஆரம்பித்தவளை டிரைவர்தான் தடுத்தார்.

"அம்மா! வாங்க... இங்கே இருந்தா உங்களுக்கு ஆபத்து! கதிர் ஐயா வீட்டில விட்டுடறேன்! அங்கேயிருந்து உங்கம்மா வீட்டுக்குப் போயிடுங்க!"

பதைப்புடன் கூறிவிட்டு அவளைக் காரில் ஏற்றிப் புறப்பட்டார் அவர்.

★★★

பிறகு நடந்தவை எல்லாமே ஒரு கனவாய்... மாலினியை அவள் குடும்பத்தினர் வந்து நன்றி சொல்லி அழைத்துச் சென்றனர்.

புருஷோத்தமனும், கலியமூர்த்தியும் தீவிரவாதத் தடுப்புச் சட்டத்திலும், போதை மருந்துத் தடுப்புச் சட்டத்திலும் கைது செய்யப்பட்டு, வெளிவர முடியாதபடி மாட்டி இருந்தனர்.

இப்போது, அவர்களுடைய வீட்டின் உரிமை சட்டப்படி முத்தழகிக்கு வழங்கப்பட்டிருக்க, அவள் அந்த வீட்டையே



அன்புலகமாக மாற்றி இருந்தாள். அவள் தாய் ருக்மணியும் இப்போது அவளுக்குப் பெரும் ஆதரவாய், புரிதலோடு மகளாய் ஏற்றுக்கொண்டார்.

கதிரும், அன்புமாய்ச் சென்னைக்குச் சென்று சமரசம் பேசி, மாலினியையும் அழைத்து வந்து இருவருக்கும் துணையாக்கி இருந்தனர்!

காலம் மழைத் தூறலாய்க் கடக்க... மலருக்குள்ளும் மெல்லிய தூவானமாய்க் காதலின் சாரல்!

தன்னை வெளிப்படுத்தவும் முடியாமல் அவள் தவித்த போதுதான்... ஒருநாள் அன்பு அவளைத் தேடி வந்தான்!

## 16

அந்த ஞாயிறன்று... ஓய்வாக அமர்ந்து தொலைக் காட்சியில் பாட்டுப் போட்டி ஒன்றை அவள் ரசித்துக் கொண்டிருந்தபோதுதான், அன்பு வந்திருப்பதாகச் செக்யூரிட்டி வந்து கூறினார்.

கடந்த இரு மாதங்களாகக் கதிரையும், அவனுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் அவள் சந்திக்கவே யில்லை!

அவ்வப்போது, வெங்கடேஷிடம் அவர்களைப் பற்றி விசாரிப்பதோடு சரி!

ஆனால், கதிரைப் பார்க்க முடியாத இந்த இரு மாதங்களில், அவன் விசுவரூபமெடுத்து நெஞ்சுக்குள் நிறைந்திருந்தான்.

இப்போதெல்லாம் அவனை நினைத்தாலே, இதயப் பறவை றெக்கை கட்டிக் கொள்ள ஆரம்பித்திருந்தது.

அவனிடம் பேச வேண்டிய சுகவரிகளுக்காக மனம் அலைபாய்ந்து கொண்டிருக்க, நிஜம் இன்று புரிவதாய்!

ஒருவரைப் புரிந்து கொள்வது கடினம்... ஆனால் நன்றாகப் புரிந்துகொண்டு விட்டால் அவரைப் பிரிந்திருப்பது கடினம் என்பதை இப்போதுதான் உணர்ந்தாள் அவள்!

சமீபத் தருணங்களில் மூச்சுக் காற்றாய் அவளுள் நிரம்பத் துவங்கியிருந்தான் அவன்!

அவளுடைய எண்ணங்களைக் கலைத்தது அன்புவின் குரல்!

"மேடம்! உள்ளே வரலாமா?" தயக்கத்துடன் அவன் வாசலிலேயே நிற்க, பதறி எழுந்து வரவேற்றாள் அவள்!

"வாங்க அன்பு... உள்ளே வாங்க!"

"சாரி! நான் உங்களை ஏதும் தொந்தரவு செஞ்சிடலையே?"

புன்னகையுடன் விசாரித்தபடி உள்ளே வந்தவனைக் குற்றவுணர்வுடன் அமர வைத்தாள் அவள்.

"அன்பு! நான்தான் சாரி சொல்லணும்... ஏதோ நினைவுகள்! அதான்... அப்படியே உக்கார்ந்துட்டேன்..." தவிப்போடு உரைத்தவள் எதிரே அமர்ந்தாள்.

"ம்... அந்த ஞாபகங்கள் அண்ணாவைப் பத்தினதா இருந்தா... இனிமேலாவது உங்களை அண்ணின்னு கூப்பிட முடிஞ்சா, நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன் மேடம்!"



சட்டென்று உறைந்தவள், மறுகணமே தன்னைச் சுதாரிக்க, "ஓ! என் கணிப்பு சரிதான்... இல்லை மேடம்?" எனக் குறும்புடன் வினவினான் அன்பு!

அவளுடைய கன்னங்கள்... சட்டென்று இரு செம்பூக்களாய் மாறின.

"என்ன விஷயம் அன்பு? வீட்டுக்கே வந்திருக்கீங்க!" மெதுவாகப் பேச்சை மாற்றினாள்.

"எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு மேடம்! ரேவதிதான் கல்யாணப் பொண்ணு! ஒரு வழியா அம்மாவைச் சம்மதிக்க வெச்சாச்சு!"

அவன் குரல், எதிர்பார்த்த உற்சாகமின்றிச் சற்றுத் தொய்வுடனே வந்தது.

"ஓ... கங்கிராட்ஸ்! என்னாச்சு? புது மாப்பிள்ளை துள்ளிக் குதிக்க வேண்டாம்... உங்க காதல்தான் நிறைவேறப் போகுதே!"

உற்சாகத்துடன் அவள் வாழ்த்த... மெல்ல அவளை ஏறிட்டான் அவன்!

"ப்ச்! இதேமாதிரி எங்க அண்ணனோட காதலும் வெற்றி பெற்றிருந்தா முழுசா சந்தோஷப்பட்டிருப்பேன் மேடம்!"

அழுத்தமான குரலில் அவன் முடிக்க, விதிர்த்துப் போனாள் அவள்!

சட்டென்று பார்வையைத் தழைத்தவளால், எதுவுமே பேச இயலவில்லை!

"அண்ணா பாவம்! எங்க கல்யாணத்தை முடிச்சி வைக்க அம்மாவோட பேசி எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்மதிக்க வெச்சாங்க தெரியுமா?"

"ஆனா, என்னால அவருக்காகப் பேசி உங்களைச் சம்மதிக்க வைக்க முடியலையே... வருத்தமா இருக்கு மேடம்!"

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவள், "உங்க அம்மா எப்படி இதுக்கு ஒத்துக்கிட்டாங்க? மிஸ்டர் கதிர் திருமணமாகாம இருக்கும்போது... உங்களுக்கு...?" எனத் தர்ம சங்கடத்துடன் நிறுத்தினாள்.

"அம்மாவும் ரொம்பக் கெஞ்சிப் பாத்தாங்க... ஆனா அண்ணா பிடிவாதமா மறுத்திட்டாங்க... கடைசி வரைக்கும் உங்க நினைவிலேயே வாழப் போறதா சொல்லிட்டாங்க...

"அதனால எங்க கல்யாணத்தை அவங்களே முன்னே நின்னு நடத்தப் போறாங்க... அடுத்த மாசத்துல முகூர்த்தத்துக்கு நாள் பாத்திருக்காங்க..."

"உங்க அம்மா இதுக்குச் சம்மதிச்சாங்களா?" பதைப்பும், பரிதவிப்புமாய் அவள் வினவும்போதே அவன் ஆழமான குரலில் இடைமறித்தான்.

"எங்க வீட்டில அண்ணாவோட பேச்சுக்கு எப்பவுமே மறுபேச்சு இருந்தது கிடையாது! அவரோட பிடிவாதம் எங்களுக்குத்தான் தெரியும்!

"ஆனா அதிலேயும் ஒரு நியாயம் இருக்கும்! அவரோட செயல்களால யாரையும் காயப்படுத்திடக் கூடாதுன்ற நேர்மை இருக்கும்!

"முதல் தடவையா அவரோட திருமண மறுப்பால எல்லாருமே காயப்பட்டுத் தவிச்சித்தான் நிக்கறோம்...

"அதான் கடைசியா உங்களைப் பாத்துப் பேசிட்டுப் போகலாமின்னு..." அவன் முடிப்பதற்குள் பரமேஸ்வரனும், அங்கயற் கண்ணியும் கோயிலிலிருந்து திரும்பினர்.



"வாங்க தம்பி! எப்படி இருக்கீங்க?" வாஞ்சையுடன் அவனை வரவேற்றார் பரமேஸ்வரன்!

மரியாதைக்காக எழுந்து வணங்கினான், "நல்லாருக்கேன் சார்! நீங்க எல்லாரும் சுகமா?" சிறு முறுவலுடன் பொதுவாக வினவினான்.

"ம்... ஏதோ இருக்கோம்ப்பா!" எங்களோட கோரிக்கையை நீயாவது நிறைவேத்தி வைப்பான்னு அந்தச் சிவனைப் பார்த்து வேண்டிக்கிட்டு வரோம்!"

ஒரு பெருமூச்சுடன் கூறிய அங்கயற்கண்ணி இருவருக்கும் பிரசாதத்தை அளித்தார்.

"உக்காருப்பா! கோவில்லே என் பழைய நண்பன் ராமச்சந்திரனைப் பார்த்தேன்... அவன் இப்பப் பக்கத்துக் கிராமத்துல ஒரு அநாதை ஆசிரமம் நடத்திட்டிருக்கானாம்!

"உங்க ஊரிலே யாரோ பெரிய மனுஷராமே இளங்கதிர் அப்படின்னு... அவர் எங்க ஆசிரமத்துல இருந்து ஒரு குழந்தையைத் தத்தெடுக்கப் போறாருன்னு சொன்னான்!"

"அதுக்கான பேச்சு வார்த்தை எல்லாம் முடிஞ்சு ஏற்பாடுகள் நடந்துட்டிருக்கறதாச் சொல்லி, உங்க அண்ணனைப் பத்தி என்கிட்ட விசாரிச்சான்!

"ரொம்ப நல்லவர்... நல்ல ஒரு முடிவை எடுத்திருக்காருன்னு நான் சொன்னேன்... ஆனா ரொம்பப் பிரமிப்பா இருந்தது...! மிஸ்டர் கதிர் ஏன் திடீர்னு இப்படி ஒரு முடிவெடுக்கணும்?"

அவர் கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சியில் உறைந்துவிட்ட மலர், மெதுவாக வந்த அன்புவின் பதிலைச் செவிமடுக்க ஆரம்பித்தாள்.

புலன்கள் உறைந்திருக்க, இதயம் மட்டும் படபடவென்று அடித்துத் தன் தவிப்பை வெளிப்படுத்தியது.

"ஆமாம் சார்! எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கு... வெங்கடேஷோட தங்கை ரேவதிதான் பொண்ணு!"

"அண்ணா... கல்யாணமே செஞ்சுக்கப் போறதில்லை யாம்! அவங்களாலே... வேற யாரையும் தன் மனைவியா நினைக்கவே முடியலை!

"அதான்... ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க முடிவு செஞ்சிருக்காங்க! அதுவே தனக்கு வாழ்க்கை முழுக்கப் போதும்னு முடிவா சொல்லிட்டாங்க!"

வேதனையும் குமுறலுமாய் முடித்தவன், வேகமாக எழுந்தான்.

மூவரையும் பார்த்துக் கைகூப்பி, "நான் வரேங்க!" என்று விடைபெற்று வேகமாக வெளியேறியபோது, முதலில் உடைந்தது மலர்தான்!

சட்டென்று பொங்கிய விசும்பலுடன் எழுந்து வாயைப் பொத்தியபடி அவள் உள்ளே செல்ல... பெரியவர்கள் இருவரும் நெகிழ்வும், யோசனையுமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 17

அறைக்குள் ஓடிச் சென்று படுக்கையில் விழுந்த மலர், தேற்றுவாரின்றி அழுது மடியச் சிறிது நேரம் கழித்து ஒரு கரம் அவள் சிகையை வருடியது!

"மலர்! இன்னும் ஒண்ணும் காலம் தாழ்ந்திடலை! உன் மனசு மாறி இருக்கறது எங்களுக்குப் புரியுது!



"அதை நீ கதிர்கிட்ட வெளிப்படுத்த வேண்டியதுதான் பாக்கி! போம்மா! போய் உன் மனசு விட்டுப் பேசு... நீ ஒரு விதவை... கலெக்டர்... அப்படிங்கிற மாயக் கூட்டிலிருந்து முதல்ல வெளியே வா!

"இப்போ நீ ஒரு பொண்ணு! அன்புக்காக ஏங்கற... உனக்குன்னு தவமிருக்கிற ஒருத்தி மட்டும்தான் அப்படிங்கறதை மனசுல வச்சிக்கிட்டு கதிரைப் போய்ப் பாரு!"

பரமேஸ்வரன் மெல்லிய குரலில் ஆணையிட, அவர் மடியில் சரிந்து குழந்தையாய்க் கதற ஆரம்பித்தாள் அவள்!

"அப்பா! எனக்குள்ளே கலெக்டர் அப்படிங்கற கர்வம் எல்லாம் இல்லை! ஆனா... உங்களைத் தனியா விட்டுட்டு... இன்னொரு திருமண வாழ்க்கையச் சுயநலமா யோசிக்க முடியலை!

"எனக்காகவே வாழ்ந்து... என் நலனுக்காகவே யோசிச்சி... என் விருப்பத்தை நிறைவேத்தி... என்னைப் பொத்தி வச்சிப் பாதுகாத்திட்டுருக்கறவங்க நீங்க!"

அப்போது ஒற்றை விரலால் அவள் உதட்டை மூடிய அங்கயற்கண்ணி, மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"நீ சொல்றது எல்லாம் நிஜம்தான்! ஆனா ஒரு பொண்ணை உயர்த்தறதோட பெற்றோரோட கடமை முடிஞ்சிடறதில்லை மலர்! அவளுக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சித் தர்ற வரைக்கும் அவங்களால நிம்மதியாத் தூங்க முடியாது!

"இப்போ... நாங்களும் அந்த நிலைமையிலேதான் இருக்கோம்...! நீ எப்ப சரின்னு சொல்லுவேன்னு தினமும் ப்ரார்த்தனையோடு காத்திட்டிருக்கோம்!

"அடுத்த வருஷத்தோட உங்க அப்பா ரிடையராகப் போறாரு! அப்புறம் என்ன... இங்கேயே ஒரு வீட்டை வாங்கி செட்டிலாயிடப் போறோம்... அவ்வளவுதானே!

"உன்னைப் பக்கத்துலயே இருந்து பாத்துக்கப் போறோம்... நினைச்சப்ப நீ நம்ம வீட்டுக்கு வந்து தங்கலாம்...

"கதிர் ரொம்ப நல்லவரு! அவரால உன் வாழ்க்கை சந்தோஷமா, நல்ல சிறப்பா அமையும்னு என் உள் மனசு சொல்லுது!

"உன் மனசுல... இதுவரைக்கும் நீ ஒளிச்சி வச்சிருந்த பிரியத்தைக் கதிர்கிட்ட வெளிப்படுத்திடுடா! அவர் அதைப் புரிஞ்சு உன்னை ஏத்துப்பாரு!"

மலரின் கையைப் பிடித்தபடி ஆனந்தக் கண்ணீருடன் பகர்ந்தார் அங்கயற்கண்ணி!

பிறகு இருவரும் மெதுவாக எழுந்து வெளியேற, ஒரு முடிவுடன் எழுந்தவள், தலைவாரி முகம் கழுவிச் சேலை மாற்றித் தயாராக ஆரம்பித்தாள்!

## 18

அதே நேரம்... கதிர் அந்த ஆசிரமத்தில் இருந்தான்!

எல்லாக் குழந்தைகளுக்கும், சாப்பிடு வதற்கு இனிப்பு வாங்கிச் சென்று அவர் களிடம் அளித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அவன் செல் ஒலிக்க, எடுத்தால் வெங்கடேஷ் தான் பேசினான்.



"கதிர் சார்! நான் உடனே உங்களைப் பார்க்கணும்! நீங்க எங்கே இருக்கீங்கன்னு சொல்ல முடியுமா? அங்கேயே வரேன்!'

அவசரமாக அவன் வினவ, "ஏன் வெங்கடேஷ்? அப்படி என்ன தலை போற காரியம்...? நான் இங்கே நம்ம பக்கத்துக் கிராமத்துல இருக்கற ஆசிரமத்துல இருக்கேன்!

"எப்படியும் நான் கிளம்ப ஒருமணி நேரமாவது ஆகும்... சில வேலைகள் முடிக்க வேண்டியது இருக்கு! சாயந்திரம் பார்க்கலாமே!" என்றான்.

"ம்... முடிஞ்சா நான் அங்கேயே வரேன் சார்!" என்று வைத்தான் அவன்.

குழந்தையைத் தத்தெடுப்பது சம்பந்தமான ஆவணங் களைத் தயார் செய்ததுடன், அது தொடர்பான வேலை களையும் முடித்துவிட்டு, ஆசிரமக் குழந்தைகளுடன் முன்புறம் தோட்டத்தில் ஓய்வாக அவன் விளையாடிக் கொண்டிருந்த போதுதான், கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

அவன் யோசனையுடன் திரும்பினால், பரமேஸ்வரனின் காரிலிருந்து மலர் இறங்கிக் கொண்டிருந்தாள்.

"இவள் எங்கே இங்கே...?" வியப்பும் சிலிர்ப்புமாய் அவன் எழும்போது, உடலெங்கும் மெல்லிய சாமரம் வீசியது அவள் வருகை!

மலரைப் பார்த்து இரு மாதங்களாவது ஆகி இருக்குமே என்று தோன்ற... வெங்கடேஷ் காரைத் திருப்பி எடுத்துச் செல்வது புரிவதாய்!

அழகிய சில்க் காட்டன் சேலையில் முகம் நிறைந்த விகசிப்புடன் அவனை நோக்கி அவள் ஒரு பூஞ்சோலையாய் நடந்து வர, இதயம் சட்டென்று இடம் மாறியது!

மனக் குளக்கரையில் கற்பனை வந்து ஒரு கவிதையாய் எட்டிப் பார்த்தது!

உடனே அதை அடக்கியவன், அவள் முகத்தையே அடக்க இயலா வேட்கையுடன் கூர்ந்து நோக்க, நாணத்தால் தேய்ந்தது அந்த நிலா முகம்!

தன்னுள் உறங்கும் அவளின் நினைவுகள் இனிய நறுமணம் பரப்ப ஆரம்பிக்க, இனம் புரியா இனிய உணர்வில் சிலிர்த்தது அவன் ஆண்மை!

அவனருகில் வந்ததுமே மெல்ல விழிகளை உயர்த்தியவள், "நான்... நாம ரெண்டு பேரும் எங்காவது வெளியே போய்ப் பேசலாமா?" என்றாள்.

மெல்லிய மயிலிறகாய் வந்த அவள் குரல் பூஞ் சிலிர்ப்பாய் அவன் இதயம் வருட, விழிகளில் குறும்புப் பூக்கள் பூத்தன!

"ம்... போகலாம்!"

ஆழ்ந்த குரலில் பகர்ந்தவனுடைய ஒவ்வொரு சொல்லும், அவளுடைய சம்மதத்தை எதிர்பார்த்துக் குழலாய் இசைத்தன!

பிறகு அங்கிருந்த அனைவரிடமும் அவளை அறிமுகம் செய்து விடைபெற்றான் அவன்! மனதிற்குள் மட்டும் அவளைப் பற்றிய கவிதையின் ஊர்வலம்!



நீ...
ராஜபுதனத்து
ராஜ மலரோ...?
சிந்து நதி தீரத்துத்
தேவதையோ...?
நர்மதை நதிக்
குயிலோ...?
அந்தி நேரத்து
அதிசய வெண்புறாவோ...?
இன்று...
உன் விழிகள்
ஆயுதமேந்தி வந்தன!
அன்பெனும்
ஆயுதம்!
என்...
மாசறு மலரே
வருக!

## 19

இருவருமாகச் சென்று அவனுடைய காரில் ஏறியவுடன் அதைக் கிளப்பிச் சென்று அவன் நிறுத்திய இடம்... பசுமைப் புரட்சியால் அவன் செழிப்பாய் மாற்றியிருந்த அந்த மலை அடிவாரம்!

ஆங்காங்கு வேலை செய்பவரின் சிறு குடிசைகள் தெரிய, மெல்ல அவள் விரல் பற்றி, ஆளரவமில்லாத் தனிமைப் பிரதேசத்திற்கு அவளை அழைத்துச் சென்றான் கதிர்!

அவனுடைய முதல் தீண்டல் அவளுடைய உயிர் வரை தீண்டி ஆதியும் அந்தமுமாய் நிறைய... அவன் வீட்டுச் செல்லப் பிராணியாய்த் தொடர்ந்தது மனது!

அவனுடைய விரல் பட்ட பரவசத்தில்... இதய வாசலில் மலர்ந்து சிரித்தன நேசக் கோலங்கள்!

"ம்... இப்ப சொல்லுங்க... என்கிட்டே என்ன பேசணும்?"

ஆண்மை நிறைந்த அவனுடைய கம்பீரக் குரல் செவியை வருட, ஒரு கணம் அவளால் பேச முடியாமல் போனது!

மெதுவாகச் சமாளித்து நிமிர்ந்தவள், "கதிர்! அன்னிக்கு ஒரு நாள் எங்க வீட்டுக்கு என் சம்மதம் கேட்டு நீங்க வந்தீங்க! எனக்குச் சம்மதம்...!"

சிறு நடுக்கம் குரலில் ஓடப் பகர்ந்தவள், மெல்லத் தலை குனிந்து கொண்டாள்.

மறுகணமே வந்த அவனுடைய ஆழ்ந்த குரல், புதிராய்!

"நீங்க என்ன சொல்றீங்கன்னே எனக்குப் புரியலை!"

அவன் கூறியதும், விதிர்த்து நிமிர்ந்தால், கண்கள் குறும்புடன் நகைக்க, உதடுகள் புன்னகையில் துடிக்க, அவளையே கூர்ந்தவனுடைய கரங்கள் மெல்ல உயர்ந்து அவள் புறம் நீண்டன!

"ஹும்! நான் பயந்திட்டேன்!" செல்லச் சிணுங்கலோடு அவன் கைகளில் ஓடிவந்து சரணடைந்தாள் அவள்!

சப்தங்களின் சுவடின்றி மௌனத் தவமாய் உணர்வுகள் உற்சாகத்துடன் ஊஞ்சலாட... தனக்கே உரித்தான இடத்தில் சரணடைந்ததை ஒருவித இன்பத்துடன் உணர்ந்தாள் மலர்!



தூரத்தில் அவளிருந்தபோதே மனதிற்குள் வைத்து மகிழ்ச்சி கொண்டாடிய கதிருக்கோ... இன்று கோடி மலர்கள் தன்னை அர்ச்சித்தது போல்!

பூங்காற்று... பனிச் சாரல்... மலர்களின் வாசம்... பட்டாம்பூச்சியின் சிறகடிப்பு... எல்லாம் ஒன்றாய்த் தீண்டிய உணர்வு அவனுள்!

★★★

கடந்த காலம் எப்படி இருந்தாலும்... தன்னுடைய நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையும் அவனே ஆக்ரமித் திருப்பது மலருக்கு இன்று புரிந்தது!

அவளுக்கான காத்திருப்பில்... ஒற்றைத் தனிமரமாய் நின்றிருந்தவன்... அந்தத் தனிமைத் தருணங்களுக்குப் பரிசாய்... அந்த ஆகாயமே மண்ணிற்கு வந்தது போல்...!

காதல்... சொர்க்கத்தைக் கூடப் பூமிக்கு அனுப்பி விடுமோ... அளவிட முடியா உற்சாகத்தில் உறைந்து நின்றிருந்தான் கதிர்!

திடீரென்று ஒலித்த இரு கிளிகளின் 'கீச் கீச்' என்ற குரலும் சிறகுகளின் சடசடப்பும், இருவரையும் நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தன!

மெல்ல விலக ஆரம்பித்தவளை இழுத்து இறுக அணைத்தவன், "என்னைப் பிடிச்சிருக்கா மலர்?" என்று மென்மையாக வினவினான்!

"ம்... ரொம்ப!"

அவளுடைய மெல்லிய தலையசைப்புடன் கூடிய அந்த வார்த்தைகள் அவனைச் சிலிர்க்க வைத்தன!

"தேங்க்யூ மலர்!" என்றபடி அவளைத் தன் மடியில் ஏந்தி அமர்ந்து கொண்டான் அவன்!

அந்தப் பாறை இருவரையும் சுமந்தபடி, அவர்கள் பேச்சைச் செவி மடுத்துக் காத்திருந்தது!

"இது எப்படிச் சாத்தியமாச்சு... இது நிஜம்தானா?" சிறு முணுமுணுப்புடன் தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டான் கதிர்!

"ம்... நிஜம்தான்!" என்றபடி அவனுடைய கன்னத்தைச் செல்லமாகச் சுண்டியவள், மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

"என்னவோ தெரியலை கதிர்.. ஆரம்பத்தில இருந்தே உங்க மேல ஒரு தனி ஈர்ப்பு எனக்குள்ளே வந்தது உண்மைதான்!

"அதுக்குக் காரணம்... இந்த மலையையே நீங்க பசுமையா மாத்தினது... இந்த ஊருக்கு நீங்க செஞ்ச பல நல்ல காரியங்கள்... இலவசமா ஸ்கூல், ஆஸ்பத்திரி நடத்தறது... லைப்ரரி அமைக்கப் பாடுபட்டது... இப்படின்னு நிறையச் சொல்லலாம்!

"உங்களோட சோஷலிஸக் கவிதைகள்கூட எனக்கு ரொம்பப் பிடிக்கும்...

"அப்புறம்... முத்தழகு, வெங்கடேஷ், அன்பு, ரேவதி எல்லோரும் உங்களைப் பத்திப் பேசிப் பேசியே, எனக்குள்ளே பெரிய தாக்கத்தை உண்டாக்கிட்டாங்க!

"என் மனசுல நான் அணை போட்டுத் தடுத்து மறைச்சு வெச்சிருந்த காதல், ப்ரியம் எல்லாம், இன்னிக்கு முட்டி மோதி வெளியே வந்துடுச்சி!



"நான் இப்படி மாறுவேன்னு நானே நினைக்கலை... என்னை வாழ வெச்ச பரமேஷ்வரன் அப்பாவுக்கும், அங்கயற்கண்ணி அம்மாவுக்கும் நன்றியோட இருக்கணும்னு நான் ஆசைப்பட்டேன்...

"என்னைப் பத்தி மட்டுமே சுயநலமா யோசிக்க மனசு ரொம்பத் தயங்கிச்சி...

"ஆனா அவங்க விருப்பம் இதுதான்னு தெரிஞ்சப்ப கொஞ்சம் கொஞ்சமா மாற ஆரம்பிச்சேன்... ஆனா அதை வெளிப்படுத்தத்தான் தயங்கினேன்..."

பெரும் வெட்கமும் சிறு ஊடலுமாய் அவள் கூற, தலை சாய்த்து வசீகரமாய்ச் சிரித்த கதிரின் மனதில், மாய மயக்கமாய் ஒரு வித இன்பச் சாரல்!

"நானும் அப்படித்தான்! நீ ஒரு விதவைன்னு தெரிஞ்சவுடனே, உன்மேல இருந்த நேசம் இன்னும் அதிகமாச்சே ஒழியக் குறையலை!

"நீ மாறுவேன்னு பொறுமையா காத்திருந்தேன்... கடவுளுக்கு நன்றி!"

நெகிழ்வும் பரவசமுமாய் உரைத்தவன், அவளை மார்போடு ஏந்தி அணைத்துக் கொண்டான்.

திடீரென்று நிமிர்ந்தவன், அவள் முகவாயை ஒற்றை விரலால் நிமிர்த்தினான். "நான் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கிறது உனக்குத் தெரியுமில்லை? அதிலே உனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே?" தவிப்புடன் கேட்டான்.

“சத்தியமா இல்லை கதிர்! நானும் அதுமாதிரி வளர்ந்தவ தானே! நாம ரெண்டு பேருமா சேர்ந்து அந்தக் குழந்தையை அன்பா வளர்க்கலாம்!

“இந்த மனசு வேற யாருக்கு வரும்? உங்களை நினைச்சா ரொம்பப் பெருமையா இருக்கு கதிர்!”

பெருமிதத்துடன் கூறிவிட்டு, மெல்ல எம்பி அவன் கன்னத்தில் அவள் முத்தமிட, சுண்டிவிடப்பட்டுச் சிலிர்த்தது அவன் தேகம்!

“ம்... அதுக்கு ஏதும் பரிசில்லையான்னு கேக்க நினைச்சேன்... அதுக்குள்ளே நீயே குடுத்திட்டே!” என்றபடி அவளைத் தன் வசமாக்கிக் கொண்டான் அவன்.

திடீரென்று வானம் இருட்டி, அவர்கள் மேல் நீர்ப் பூக்களைத் தூவ... வேர்களுக்கு அடியில் ஜலதரங்கம் வாசித்த மழையின் தாளலயத்திற்கு ஏற்ப... மரங்கள் தாங்க முடியாத உற்சாகமும், ரசனையுமாய் வேகமாகத் தலை யாட்டின!

# இதயம் தீட்டிய ஓவியமே!

## 1

அந்தப் பொன் அந்தி மாலைப் பொழுதின் மேகங்களில்லா வானத்தில், வரவேற்பு வளையமாய் எப்போதாவது பரிசளிக்கப்படும் வானவில்... தன் மாய நிறங்களால், பார்ப்பவர் எண்ணங்களிலும் வர்ணம் சேர்த்து மதி மயக்கிக் கொண்டிருந்தது.

அந்த வர்ணஜாலத்தை... ரம்யமாய் விழிவிரித்து ரசித்துக் கொண்டிருந்த சந்யோகிதாவிற்குள் இனிய சிலிர்ப்பு!

ஆனால், பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த அலங்கார வளைவு மறைந்துவிட, ஏக்கத்துடன் குனிந்து பாதத்திற்குக் கீழே சுதி பாடிய அரசலாற்றின் சிற்றலைகளில் பார்வையைப் பதித்தாள் அவள்.

கல்லூரி முடிந்து தோழிகள் அனைவரும் விடைபெற்றுச் சென்றிருக்க ஆட்டோவிற்காகக் காத்திருந்தாள் சந்யோகிதா!

அவள் கும்பகோணத்திலிருக்கும் அந்த மகளிர் கல்லூரியில் பி.காம். இறுதியாண்டு படிக்கிறாள்.

ஆட்டோவிற்காகக் காத்திருந்த நேரத்தில், அருகிலிருக்கும் அரசலாற்றுப் பாலத்தில் நின்று நோக்கியபோது, எந்தக் கவலையுமின்றி தன் போக்கில் உற்சாக ஆரவாரம் செய்து சுழித்துக் கொண்டு ஓடிய நதி, பெரும் உற்சாகத்தையும் தெம்பையும் அளிப்பதாய்!

அப்போது, செல்லிலிருந்து இசையாய் அழைப்பு வர, எடுத்தால் ஆட்டோ டிரைவர்தான் பேசினார்.

"சதாம்மா! ஆட்டோ திடீர்னு வழியிலே ரிப்பேரா யிடுச்சிம்மா! வேற ஆட்டோவை அனுப்பிடறேன்... அங்கேயே வெயிட் பண்ணுங்க!" பதட்டத்துடன் கூறினார்.

"வேண்டாம் லெனின்! நான் நடந்தே போய்க்கறேன்! ஒண்ணும் பிரச்னையில்லை! காலையில் ஆட்டோவை ரிப்பேர் செஞ்சி எடுத்துட்டு வாங்க! போதும்..." என்றபடி செல்லை அணைத்தாள் அவள்.

பிறகு மெதுவாக நடக்க,ஆரம்பித்தபோது, வானம் தன் உடையை மாற்ற, மேகங்கள் திடீரென்று கருமையாக மாறித் திரண்டன.

சந்யோகிதா... மழையின் காதலி! அவள் விழிகள் விகசிப்புடன் வானம் பார்த்தன.

மறுகணமே, மெல்லிய சாரலாய்த் தேன் துளிகளைச் சிந்த ஆரம்பித்தது ஆகாயம்! மகாமகக் குளத்தில்



தாளலயத்துடன் ஜலதரங்கம் வாசித்த மழைத் துளியை ரசனையுடன் அளவிட்டபடி நடக்க ஆரம்பித்தாள் அவள்!

தேகமெங்கும் சுகமாய்ப் பரவிய வெண்முத்துச் சாரலை, இதயம் முத்துச் சிப்பியாய் உள்வாங்கிப் பொக்கிஷமாய் மூடியது!

இயற்கையின் அபிஷேகத்தில் குளிர நனைந்து, அதைச் சுகமாய்ச் சுவீகரித்தபடி வீட்டிற்கு வந்தபோது, பதட்டத்துடன் வாசலில் காத்திருந்தார் குருநாதன்.

"என்னடா, இப்படி நனைஞ்சிட்டு வரே! ஆட்டோ வரலை?" சிறு கோபத்துடன் வினவினார்.

"அப்பா! ஆட்டோ ரிப்பேர்... வேற அனுப்பறதாத்தான் லெனின் சொன்னாரு! நான்தான் வேண்டாம்னேன்... கொஞ்ச தூரம் நடந்தப்புறம் திடீர்னு மழை... அப்புறம்தான் அதை வேஸ்ட் பண்ண வேண்டாம்னு தோணுச்சி! கோடை மழை... எவ்வளவு அபூர்வம்ப்பா! அதான், அதை ரசிச்சிட்டே வந்தேன்!" சிறுமுறுவலுடன் முடித்தாள்.

உடனே உள்ளே வந்தவர், "வேம்பு! சதா வந்தாச்சு! மழையில நனைஞ்சிட்டு வந்திருக்கா பாருங்க... கொஞ்சம் துடைச்சிவிடுங்க..." சமையல்காரம்மாவைப் பணித்தார்.

உடனே, தேங்காய்ப்பூத் துவாலையுடன் அங்கு வந்த வேம்பு, செல்லமாகக் கடிந்தபடி, அவளுடைய நீண்ட பின்னலைப் பிரித்துத் தலையை உலர வைக்க ஆரம்பித்தாள்.

"என்ன சதாம்மா... இப்படிப் பண்றீங்க... அப்புறம் சளி பிடிச்சி ஜுரம் வந்தா என்னாகிறது?"

"இயற்கையை அதோட சேர்ந்து அனுபவிக்கணும் வேம்பும்மா! ப்ச்... உங்களுக்குப் புரியாது!" என்றபடி தலையை உலர்த்த ஆரம்பித்தாள் அவள்.

அன்றிரவு சாப்பிடும்போது, குரு மெதுவாக ஆரம்பித்தார்.

"சதாம்மா! நாலு மாசத்துக்கு முன்னாடி உன்னைப் பொண்ணு பாக்க வரேன்னு சொல்லியிருந்தாங்களே... திடீர்னு அந்தப் பையன்கூட அமெரிக்காவுக்கு ட்ரெயினிங் போயிட்டதால வர முடியாமப் போச்சே...!"

"....."

"அவங்க... நாளைக்கு உன்னைப் பாக்க வரதா போன் பண்ணியிருந்தாங்கடா! நானும் சரின்னுட்டேன்... நீ நாளைக்கு காலேஜுக்கு லீவு போட்டுடு... என்ன!" வாஞ்சையுடன் சொன்னார்.

"அப்பா! இப்ப எனக்குக் கல்யாணத்துக்கு என்ன அவசரம்? நான் மேல படிச்சி வேலை பாக்கணும்னு நினைக்கிறேன்ப்பா! ப்ளீஸ்!" செல்லம்மாய்ச் சிணுங்கினாள்.

"உனக்குப் படிக்கணும்... அவ்வளவுதானே! கல்யாணம் செஞ்சிட்டு அப்புறமா படி! யார் வேண்டாம்னா? உன்னை மருமகளாக்கிக்கணும்னு அவங்க விரும்பி வராங்க! பெரிய பணக்காரக் குடும்பம்... பையன் ஃபாரின்லே போய் எம்.பி.ஏ. படிச்சவராம்!

இப்போ அப்பாவோட சேர்ந்து அவங்களோட டைல்ஸ் ஃபேக்டரியையும், டெக்ஸ்டைல் ஷாப்பையும் அவர்தான் நிர்வாகம் பண்றாராம்! நல்ல சம்பந்தம்... வேண்டாம்னுடாதேடா!"

கெஞ்சும் குரலில் அவர் யாசிக்க, "ம்! சரி... ஆனா நீங்களும் என்கூடவே வந்துடணும்..." என்று செல்லமாக ஆணையிட்டாள்.

"ஓகே! வந்தாப் போச்சு... போதுமா?" என்றபடி உள்ளே சென்றவருக்குள் பழைய நினைவுகளின் அணிவகுப்பு.



## 2

நான்கு மாதங்களுக்கு முன்பு, சென்னையில் குருநாதனின் அக்கா பெண்ணுடைய திருமணத்திற்கு இருவரும் சென்றிருந்தனர்.

சதா, திருமணத்தில் ஓடியாடி எல்லாரையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தாள். அதோடு, மணமகளுக்கு அலங்காரம் செய்வதிலும் உதவிக் கொண்டிருந்தாள். ஐந்தரை அடிக்கு மேல் உயரத்தில், துறுதுறுக்கும் விழிகளுடன், பெண்மைக்கு இலக்கணமாய் உருக்கி வார்த்த ஸ்வர்ண சிற்பமாய் வலம் வந்து கொண்டிருந்தவளை, அந்த மண்டபத்திலிருந்த அனைவரின் விழிகளும் ஆர்வத்துடன் கவனித்தன.

திருமணம் முடிந்ததும் வெளியில் நின்று, தாம்பூலப் பைகளை உறவுப் பெண்களுடன் அவள் விநியோகித்துக் கொண்டிருந்தபோதுதான், அந்த விபரீதம் நிகழ்ந்தது. அங்கிருந்து விடைபெற்றுச் சென்றுகொண்டிருந்த ஒரு நடுத்தர வயது மனிதர், நெஞ்சைப் பிடித்தபடியே சரிய, உடன் வந்திருந்த பெண்மணி பதட்டத்துடன் அவரைத் தாங்கி அழ ஆரம்பித்தார்.

அவருக்கு வியர்த்துக் கொட்ட, நிலைமையைப் புரிந்து கொண்டவள், உடனே குருநாதனிடம் ஓடினாள்.

அவருக்கு முன்பே ஒரு முறை ஹார்ட் அட்டாக் வந்திருந்ததால், எமர்ஜென்ஸிக்கு நாக்கிற்கு அடியில் வைக்கவேண்டிய மாத்திரையை எப்போதுமே வைத்திருப்பார்.

அவசரமாக அதை எடுத்துக் கொண்டு, கூடியிருக்கும் கூட்டத்தை விலக்கி, காற்று வரும்படி செய்து, மாத்திரையை அளித்தார்.

அங்கிருந்தவர்கள், உடனே காரில் ஏற்றி மருத்துவ மனைக்கு அவரை அனுப்பி வைத்தனர்.

கண்ணீரும் நன்றியுமாய்க் கையெடுத்துக் கும்பிட்டபடி சென்ற அந்தப் பெண்மணியை, ஏனோ சதாவால் மறக்கவே முடியவில்லை.

பிறகு ஊருக்குத் திரும்பியும் மனதோரம் அந்த மனிதரின் உடல்நலம் பற்றிய சிறு கவலை முணுமுணுப்பாய்!

**ம**று வாரமே ராஜாத்தி அத்தையிடமிருந்து வந்த ஒரு ஃபோன் கால், அவர் நன்றாக இருப்பதை உறுதிப்படுத்தியது.

அன்று கல்லூரி விடுமுறை என்பதால், தன் சுடிதாரில் எம்பிராய்டரி வேலை செய்து கொண்டிருந்தாள் சதா.

தொலைபேசி ஒலிக்க, குருநாதன் எடுத்தார்.

அவர் பேசுவதிலிருந்தே யாரென்று அவளுக்குப் புரிந்து போயிற்று.

போனை வைத்ததும் உற்சாகத்துடன் அவளிடம் திரும்பியவர், "உன் அத்தைதான். அப்புறம்... அன்னிக்குக் கல்யாணத்துல உடம்பு சரியில்லாமப் போச்சே, அந்தப் பரணியும் பேசினாரு! மைல்ட் அட்டாக் தானாம்... இப்ப உடம்பு பரவாயில்லையாம்!" மெதுவாக நிறுத்தினார்.

"தேங்க் காட்! நான் கூட அவர் எப்படி இருக்காரோன்னு நினைச்சிட்டே இருந்தேன்ப்பா!" சிறு நிம்மதியுடன் பகர்ந்தாள்.

"அப்புறம்... இன்னொரு விஷயம்டா! அவங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிடுச்சாம்... கல்யாணத்தப்ப, ரெண்டு நாளா உன்னையே அந்தம்மா கவனிச்சிட்டிருந்தாங்களாம்! தன் வீட்டுக்கு நீதான் மருமகள்னு மனசுக்குள்ளே முடிவு



செஞ்சிருந்தப்பதான், அவருக்கு உடம்பு சரியில்லாமப் போயிருக்கு!

"அடுத்த வாரமே அந்தம்மாவும், அவங்க மகனும் உன்னைப் பொண்ணு பாக்க வராங்களாம்!" உற்சாகத்துடன் முடித்தார்.

"ப்ச்... அப்பா! இப்பதான் ஃபைனல் இயர்! எக்ஸாமுக்கு இன்னும் நாலு மாசம்தான் இருக்கு... இந்த நேரத்துல ஏம்பா வரச் சொன்னீங்க? மெதுவாப் பாத்துக்கலாம்ப்பா!" சலுகையுடன் சிணுங்கினாள்.

"இல்லம்மா...! நல்ல அலயன்ஸ் வரப்ப செஞ்சிடணும்! அவங்க வரட்டும்... ஜாதகத்தில எல்லாம் அவங்களுக்கு நம்பிக்கை இல்லியாம்! உனக்குப் பிடிச்சிருந்தாதான் மத்ததெல்லாம்!" சமாதானம் கூறி அவளை ஏற்றுக்கொள்ள வைத்தார்.

**ஆ**னால், அவர்கள் அந்த வாரம் வரவில்லை... முதல் நாள் போன் மட்டுமே செய்திருந்தனர்.

தங்கள் மகன் திடீரென்று வேலை விஷயமாக அமெரிக்கா கிளம்பிச் செல்வதால், மூன்று மாதங்கள் கழித்து வந்தவுடன், கட்டாயம் வந்து பார்ப்பதாகக் கூறினார் பரணீதரன்.

அதைக் கேட்டதும், நிம்மதியுடன் படிப்பைத் தொடர்ந்தாள் சதா.

இடையில் நிறைய வரன்கள் வந்த போதெல்லாம், படிப்பு முடியட்டும் என்று தட்டிக் கழித்து விட்டாள்.

இப்போது, அவர்களே மீண்டும் வருகிறோம் என்று தகவல் அனுப்பி இருக்கிறார்கள்.

அவருடைய அக்கா ராஜாத்தி கூறிய வரையில், இது மிகவும் நல்ல சம்பந்தமென்று புரிந்தது.

ஒரு பெருமூச்சுடன் – மீண்டும் வலுக்கத் தொடங்கி, வல்லினமாய்ப் பூமியில் தன் சுவடைப் பதிக்க ஆரம்பித்த மழையை, ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்கத் துவங்கினார் அவர்.

## 3

மறுநாள் மாலை... அழகிய இளம் பிங்க் நிற சில்க் காட்டன் புடவையில் அவள் தேவதையாகக் காத்திருந்தபோது, சரியான நேரத்திற்கு மாப்பிள்ளை வீட்டினர் வந்து விட்டனர்.

சதா வெளிப் பார்வைக்கு அமைதியாக இருந்தாலும், சுனாமியை உள்ளடக்கிய ஆழ்கடலாய், அவள் மனம் முழுவதும் பெரும் யோசனையிலும் போராட்டத்திலும் இருந்தது.

அதற்குக் காரணம், ஒரு மணி நேரத்திற்கு முன்பு வந்த ஒரு போன்கால்தான்!

குருநாதன் டிபனுக்கு ஏற்பாடு செய்துவிட்டு முகம் கழுவி உடை மாற்றச் சென்றிருந்தார்.

வேம்பு, வீட்டில் ஒரு டிபனாவது செய்ய வேண்டுமென்று, பஜ்ஜி போடுவதில் முனைந்திருந்தார். அப்போது தொலை பேசி ஒலிக்க, ஓடிச் சென்று எடுத்தால், ஒரு புதிய குரல்!

"ஹலோ! மிஸ் சதா இருக்காங்களா?" ஆழ்ந்த கம்பீரத் தொனியில் வந்தது ஒரு ஆண் குரல்!

"யெஸ்! நான்தான் பேசறேன்!"



அவள் முடிக்கும் முன்பே, "நான் ப்ருத்விராஜ் பேசறேன்... இன்னும் கொஞ்ச நேரத்தில உன்னைப் பெண் பார்க்க வரப் போறது நான்தான்! ஒரு மணி நேரத்துல வந்துடுவோம்," என்றான்.

"இருங்க... நான் அப்பாவைக் கூப்பிடறேன்..." என்பதற்குள், "வேண்டாம்! நான் உன்னோடுதான் பேசணும்!" அழுத்தமாகக் கூறினான்.

"நான்... என்னோட..."

அவள் தவிக்கும்போதே, "எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லை! வாழ்க்கையில நிறையச் சாதிக்கணும்னு நினைக்கிறேன்... அதனால என்னைப் பிடிக்கலைன்னு நீயே சொல்லிடு!" என அமர்த்தலான குரலில் ஆணையிட்டான்.

திடீரென்று, அவளுடைய வானம் இருண்டது போல்!

தன்னை ஒருவன் மறுப்பதா... அதுவும் நேரில் கூடப் பார்க்காமல்... நெஞ்சம் இறுகியது.

புதிதாய் ஒரு உணர்வு தேகமெங்கும் பரவியது!

"என்ன... பதிலே காணோம்?" சிறு எரிச்சலுடன் வந்தது அவன் குரல்!

சட்டென்று கலைந்தவள், "ம்... அதை நீங்களே சொல்லிடலாமே? நான் சொல்றதைவிட, பிடிக்கலைன்னு நீங்க சொல்றதுதான் சரி! ஏன்னா, இதுவரைக்கும் நான் உங்களைப் பார்த்ததில்லை... என்னால பொய் சொல்ல முடியாது!" எனத் தைரியமாகவே பதிலிறுத்தாள்.

"நான்..." அவன் முடிப்பதற்குள், "என்னப்பா... ஒருமணி நேரத்துல வருவோம்னு சொல்லிட்டியா?" – ஒரு பெண் குரல் கேட்டது.

"ம்... எல்லாம் சொல்லிட்டேம்மா..." சட்டென்று வைத்து விட்டான் அவன்.

இப்போது, இருவரும் ஹாலில் வந்து அமர்ந் திருக்கின்றனர்.

அவளுக்குத்தான் என்ன செய்வதென்றே புரியவில்லை. மௌனப் புரட்சி ஒன்று வித்தாய் மனதில் வீழ்ந்து செயல்படத் துவங்கியது. பக்கத்து வீட்டு பங்கஜம் மாமிதான் அவளை ஹாலுக்கு அழைத்துச் சென்றார்.

மெதுவாகச் செங்காந்தள் இதழ்களைப் போல் கை குவித்து அவள் வணங்கி நிமிர்ந்தபோதுதான், எதிரே அவனைச் சந்தித்தாள்.

கோதுமை நிறத்தில், அடர்ந்த சிகை அலைஅலையாய்ப் பரவி நிற்க, கூர்மையாக ஊடுருவும் விழிகளும், தீட்சண்ய மான முகமும், உறுதியான முகவாயுமாக, வெகு கம்பீரமாக அமர்ந்திருந்தான் அவன்.

இருவரும் பரிமாறிக் கொண்ட பார்வைப் பந்தியில்... விழித்தீண்டல் இனிக்க, ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்தது, மனதில்!

என்றோ... அவளுடைய இளமைக் கனவுகளில் உலா வந்த ஒரு தேவகுமாரனாய்... மறக்க முடியா மன்னவனாய்த் தோன்றியது, அவனைப் பார்த்தபோது!

ஆனால், அவன் முகத்திலிருந்து எதையுமே யூகிக்க முடியாமல் பாறையாய் இறுகித் தெரிய, உறைந்து நின்றிருந்தாள் அவள்.

அதுவரை திருமணம் என்ற வார்த்தையே கசந்திருக்க, முதன் முதலாய் இன்று... அது புதுப்புது வர்ணங்களை உள்ளே வாரியிறைத்துச் சுகித்தது!



"வாம்மா! இங்கே வந்து உக்காரு!"

அவனுடைய தாய் அழைத்ததும்தான், சிலைக்கு உயிர் வந்ததைப்போல், நடந்து அருகில் சென்று அமர்ந்தாள்.

வேம்புவும், பங்கஜமும் பலகாரங்களைப் பரிமாற, மெல்லிய குரலில் அவளைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார் புஷ்பா.

"இந்த வருஷம்தான் ஃபைனல் இயராம்மா?" அவர் கேட்க, "ஆமாம்..." என்பதுபோல், சதா தலையசைத்தாள்.

"மேலே படிக்கணும்னு நீ விரும்பினதா, உங்க அத்தை ராஜாத்தி சொன்னாங்க! எங்களுக்கு எந்த ஆட்சேபணையு மில்லை! கரஸ்பாண்டன்ஸ்லே எம்.சி.ஏ படிக்கலாம்!" பரிவுடன் கூறினார்.

பதில் கூறாமல் அவள் அமர்ந்திருக்க, ப்ருத்வியின் விழிகள், அவளிடமே யோசனையும், எதிர்பார்ப்புமாகப் பதிந்திருந்தன.

மற்ற விஷயங்களைப் பற்றிப் பெரியவர்கள் இருவரும் பேச, சம்பந்தப்பட்ட இருவருமே மௌனித்திருந்தனர்.

அவளுக்குள் மட்டும்... மார்கழிப் பனிச் சாரலில் நனைந்த சிலிர்ப்பு!

"சதாம்மா...! நீ உள்ளே போடா!" குருநாதன் கூறியவுடன், மெல்ல எழுந்தவளின் விழிகள், தன்னிச்சையாய் உயர்ந்தன.

உணர்வுகளுக்குள் ஊடுருவிய பரவசம்... பார்வையிலும் படர்ந்தது. ஆனால், அவனுடைய பார்வை அம்புகள் கூராய்த் தாக்க, உடனே கண்களைத் தழைத்தபடி உள்ளே சென்றாள் அவள்.

அவளுடைய மனக்கிளையில்... பூவாய் அவன் மலர்வு!

சிறிது நேரத்திற்குப் பிறகு, குருநாதன் மட்டும் உள்ளே வந்தார்.

"என்னம்மா! மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருக்கா?" உற்சாகத்துடன் விசாரித்தார்.

முதல் பார்வையிலேயே, தன்னை வேரோடு அசைத்து விட்டவனை... புரியாத ஒரு உணர்வில் தத்தளிக்கச் செய்தவனை... முதன் முதலாய்த் தன்னை ஈர்த்த ஒரு கம்பீர ஆண்மகனை, ஏனோ அவளால் மறுக்க இயலவில்லை.

அவனிடம்... இனம் புரியா ஈர்ப்பாய்த் தான் உணர்ந்ததுதான் முதல் காதலோ...?

"ம்..." சிறு நாணத்துடன் தலை குனிந்து சம்மதம் தெரிவித்தவள், உடனே நிமிர்ந்தாள்.

"அப்பா! அவங்களுக்கும் பிடிச்சிருக்கான்னு கேட்டுடுங்க!" சிறு பிசிர் தட்டியது அவள் குரலில்!

"அவங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்காம்! இப்பதான் சொன்னாங்க... எனக்கு உன் சம்மதம்தான் வேணும்!"

"ஒருவேளை... அவன் என்னை வேண்டுமென்றே பயமுறுத்தியிருப்பானோ? அப்படித்தான் இருக்கும்!"

"சரிப்பா!" அவள் கூறியவுடனே, உற்சாகத்துடன் வெளியே வந்தார் குரு.

"என் பெண்ணுக்கும் சம்மதம்தான்... எனக்கும் உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு!

"சீரெல்லாம் எங்க இஷ்டப்படியே செய்யச் சொல்லிட்டதா ராஜாத்தி அக்கா சொன்னாங்க... உங்களுக்குக் குறை



வில்லாதபடி எல்லாத்தையும் நல்லாவே செஞ்சிடுறேன்!" மகிழ்ச்சியுடன் உரைத்தார்.

"எங்களுக்குப் பூரண சம்மதம்! நான் இப்பவே போய் முறையா பொண்ணுக்குப் பூ வெச்சிட்டு வந்திடறேன்!" என்றபடி எழுந்தார் புஷ்பா.

உள்ளே, சந்யோகிதாவிற்குள் கனவுச் சிறகுகள் முளைக்க ஆரம்பித்திருந்தன.

ஏனோ, கண்டவுடனே இதயக் கூட்டிற்குள் அவனை வைத்துப் பூட்டியவளுக்குள், ஒரு இனிய தடதடப்பு!

அப்போதுதான் பங்கஜத்துடன் உள்ளே வந்தார் புஷ்பா.

"சதா! ரொம்ப சந்தோஷம்மா! நானும் உங்க மாமாவும் நீதான் எங்க மருமகளா வரணும்னு நினைச்சோம்... அது நடக்கப் போகுது!"

பெருமிதத்துடன் கூறியபடி, அவள் தலையில் பூவைச் சூடி விட்டார்.

திக்கென்று அதிர்ந்த இதயத்திற்குள், மௌன வருடலாய் ஒரு புல்லாங்குழலின் சப்தஸ்வரம்!

அவர்கள் சென்று வெகு நேரமாகியும் அவளால் இயல்பாகவே இருக்க முடியவில்லை.

அவன் வந்த நொடி நிஜமாவென்ற தவிப்பும் கிளர்ச்சியும், அவளை வெகுவாய் ஆட்கொண்டன.

ஆனால், அவன் கூறியது உண்மையாக இருக்குமோ வென்ற பயமும் கூடவே எழ... 'ஏன் அவன் திருமணத்தைத் தவிர்க்கிறான்...? ஒரு வேளை வாழ்க்கையில் நிறையச்

சாதிக்க வேண்டுமென்று விரும்புகிறானோ...? எல்லாவற்றிற்கும் உற்ற துணையாக நின்று, நான் உதவ வேண்டும்...' மனதிற்குள் ஒரு உறுதி வந்தது.

ஆனால், அவளுடைய எதிர்பார்ப்புகள் பொய்க்கப் போவதை அவள் அப்போது அறியவில்லை!

அதே நேரம், ஹோட்டல் அறையிலிருந்த ப்ருத்வியோ கடும் கோபத்தில் இருந்தான். 'நான் அவ்வளவு கூறியும் அந்தப் பெண் புரிந்து கொள்ளவில்லையே... கடவுளே... இதை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்...' பெரும் குழப்பம் அவனுக்குள்!

காலம், எவருக்கும் காத்திராமல் விரைய, திருமண வேலைகள் வேகமாக நடக்க ஆரம்பித்தன.

இரு குடும்பத்திற்கும் பொதுவான ஒருவராய், ராஜாத்தி ஒரு மாதம் முன்பே வந்து விட்டார்.

நாட்கள், மயிற்பீலியின் வருடலாய், அவளைக் கனவுகளால் வருடிக் கடந்தன. பரிட்சை, திருமணத்திற்கான நகைகள் - புடவைகள் எடுப்பது, கனவுலகில் சஞ்சரிப்பதென்று சதாவும் பிஸியாக இருந்தாள்.

ஆனால், பெண் பார்த்துவிட்டுச் சென்ற பிறகு, ஒருமுறைகூட ப்ருத்வி அவளோடு பேசவில்லை.

சிறு ஊடலோடு அவள் காத்திருக்க, பனிப் பொழிவு நின்ற பிறகும் பனித் திவலைகளைச் சுமந்திருக்கும் புல்வெளியாய், அவளுக்குள் மின்மினிச் சாரலாய் அவன் ஞாபகங்கள்!

ஆனால், அவன்தான் அவளிடம் எந்தத் தொடர்புமின்றி மௌனமாக இருந்தான்.



# 4

திருமண நாளும் வந்து விட்டது.

மாங்கல்யம் அணிவித்து முடிந்ததும், சிறு வெட்கத்துடன் உயர்ந்த அவளுடைய பார்வைக்கு, அவனுடைய பாராமுகமே பதிலாய்!

சிறு உறுத்தலுடன் மற்ற சடங்குகளில் அவள் பங்கேற்க, புஷ்பாவும் பரணீதரனும் அவளை ஒரு பூவாய்த் தாங்கினர்.

அன்றிரவு...

சதா, தனியறையில் ஒரு தேவதையின் சாயலுடன் காத்திருக்க, அறைக்குள் வந்தவனிடம், பெரும் கோபமும் இறுக்கமுமே தெரிந்தன.

வேகமாக அவளருகில் வந்தவன், அவள் நீட்டிய பால் டம்ளரை வாங்காமல் அடிக்குரலில் சீறினான்.

"நான் உன் கிட்டே என்ன சொன்னேன்... நீ என்ன செஞ்சிருக்கே? இந்தக் கல்யாணத்தில இஷ்டமில்லைன்னு சொல்லச் சொன்னேனே... ஏன் செய்யலை?" அடிபட்ட புலியாய் உறுமினான்.

இதை எதிர்பார்க்காததால் ஒரு கணம் உறைந்து நின்றவள், உடனே உயிர்த்தாள்.

தப்பு செய்து விட்டோமோவென்ற விதிர்ப்பை, நேசம் அடக்கியது.

"நான்... எப்படிச் சொல்றது? பெண் பார்க்க வந்தது நீங்க! நீங்கதானே உங்க வீட்டில மறுத்திருக்கணும்!" தைரியமாகவே கேட்டாள்.

"ப்ச்! அதான் முடியலையே... அதான் உன்னைச் சொல்லச் சொன்னேன்!" எரிச்சலுடன் மொழிந்தான்.

"உங்களாலேயே முடியலைன்னா, ஒரு பெண்ணாலே எப்படி முடியும்?"

"ம்... எங்க வீட்டில, அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்து இப்பதான் நார்மலாயிருக்காங்க... அதோட, அவங்க ரெண்டு பேரும், முதன் முதலா என்கிட்டே கேட்ட ஒரு யாசகம் இது... அதை எப்படி என்னால மறுக்க முடியும்?"

"அப்படின்னா...?" சதா புரியாமல் வினவினாள்.

"அப்படின்னா... அஞ்சு மாசம் முன்னாடி உன்னைப் பெண் பார்க்க வரதா சொல்லிட்டு, வராமப் போன மாப்பிள்ளை நான் இல்லை... என் அண்ணன் பிரபு!"

அவன் கூறியதும் திக்கென்று அதிர்ந்து நிமிர்ந்தவளுக்குள், சட்டென்று எதுவோ உடைந்தது போல்!

அப்படியே தொய்ந்து போய் அருகிலிருந்த கட்டிலில் அமர்ந்தாள் அவள்.

பிருத்விராஜ் பேச ஆரம்பித்தான்...

"நான் அப்போ ஸ்டேட்ஸிலே எம்.பி.ஏ. படிச்சிட்டிருந்தேன். திடீரென்று ஒரு நாள் அம்மா போன் பண்ணி, அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்ததைப் பத்தி சொன்னாங்க... அப்பதான் உன்னைப் பத்தியும், உனக்கும் பிரபுவுக்கும் திருமணம் செய்யலாம்னு முடிவு செஞ்சிருக்கிறதாவும் சந்தோஷமாய்ப் பேசினாங்க!

"இன்னொரு விஷயமும் நான் இப்ப சொல்லியாகணும்! நான் அவங்க சொந்தப் பிள்ளை இல்லை! பிரபுதான் அவங்க மகன்! என்னை ஒரு ஆர்ஃபனேஜில இருந்து



தத்தெடுத்துக்கிட்டவங்க அவங்க! அந்த நன்றியும், ப்ரியமும் எப்பவுமே எனக்கு உண்டு...

"அப்போதான் அந்த அதிர்ச்சிச் செய்தி! பிரபு திடீர்னு ஒரு ஆக்சிடெண்ட்டுலே இறந்து போயிட்டான்..." சட்டென்று அவன் விழிகள் நீரில் மிதந்தன.

"அதுக்குக் கூட என்னால வர முடியலை... உடம்பு சிதைஞ்சிட்டதாலே, உடனே கிரிமேட் பண்ணிட்டாங்க... என் படிப்பு முடிஞ்சு நான் வந்தப்பதான் உன்னைப் பத்தி சொன்னாங்க...

"ஒரு பெண்ணோட வாழ்க்கை வீணாகிடக் கூடாதுன்னு, பிரபுவோட இறப்பைப் பத்தி சொல்லலைன்னாங்க... உங்களுக்குத் தெரிஞ்சா வருத்தப்படுவீங்க... உன்னை ராசியில்லாதவள்னு மத்தவங்க சொல்லிடுவாங்களோன்ற பயம்!

"பையன் அமெரிக்காவுக்குப் போயிருக்கறதா பொய் சொல்லிட்டு, மூணு மாசம் கழிச்சி நான் வந்தவுடனே எடுத்துச் சொல்லி, இந்தக் கல்யாணத்தை முடிக்கக் காத்திருந்ததா அப்பா சொன்னாங்க...

"நீதான் இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்னு விரும்பறதா சொன்னப்ப, என்னால மறுக்க முடியலை... ஆனா என் மனசுல வேற ஒரு பொண்ணு ரொம்ப நாளா இருக்கா! அவளையும் என்னால மறக்க முடியலை...

"பெரிய இக்கட்டான சூழ்நிலை! அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்... பிரபுவோட இறப்பு... இதுக்கு அப்புறமும் உன்னை ராசியில்லாதவள்னு யாரும் சொல்லிடக் கூடாதுன்னு அம்மாவோட பயம்... எல்லாத்துக்கும் மேலா நன்றிக் கடன்... இதெல்லாம்தான் என்னைச் சரின்னு சொல்ல வச்சிது...

"ஆனா உன்னால இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியும்னு நான் நினைச்சேன்... அதான் போன் செஞ்சேன்... ஆனா நீ செய்யலை..."

பெரும் விரக்தியும் கோபமும் அவன் குரலில் தெரிவதாய்!

அதுவரை இடியாய் இறங்கிய அந்தச் செய்தியால், உடைந்து போய் அமர்ந்திருந்தவள், மிரண்டு போய் நிமிர்ந்தாள்.

"சாரி... இதெல்லாம் எனக்குத் தெரியாது!" கம்மிய குரலில் மெல்ல முணுமுணுத்தாள்.

"ஆனா இப்ப ஒண்ணைத் தெரிஞ்சுக்க... வாழ்க்கையில நீ பெரிய ரிஸ்க் எடுத்திருக்கே...! என்னால உன்னை என் மனைவியா ஏத்துக்க முடியாது... இந்த அறையைப் பொறுத்தவரைக்கும் நாம யாரோதான்! வெளியேதான் கணவன் மனைவி... அதுவும் மத்தவங்களுக்காக... புரியுதா?" அழுத்தமான குரலில் கர்ஜித்தான்.

அன்று, ஒற்றைத் துளியாய் அவனை உள்வாங்கியிருந்த நெஞ்சிற்குள், கோடி அலையடிப்புடன் இன்று அவன் நிறைந்து தெரிய, செய்வதறியாமல் துடித்து அமர்ந்திருந்தாள் சதா.

உணர்வுகள் மரத்துப் போய் எதையுமே ஏற்க மறுக்க, அவனுடைய நியாயமும் புரிவதாய்!

அத்துடன், தன்னைப் பெண் பார்க்க வருவதற்குள் இறந்து போன அந்த முகமறியா பிரபுவை நினைத்தால், பெரும் வருத்தமாக இருந்தது.



எல்லாவற்றிற்கும் மேலாக, தன்னை ராசியில்லாதவளென்று ஒதுக்காமல் மிகுந்த பிரியத்துடன் ஏற்றுக்கொண்ட பெரியவர்களின்மேல், பெரும் மரியாதையும் அன்பும் பெருகின.

இதை எதிர்பார்த்திராத இதயம் வெகுவாய் அலை பாய - அவனோ, அருகிலிருந்த சோபாவில் ஒரு தலையணையை எடுத்துப் போட்டு உறங்க ஆரம்பித்தான்.

'உனக்கும் எனக்கும் எந்தப் பந்தமும் இல்லை... என் கடமை தாலி கட்டியதுடன் முடிந்துவிட்டது' என்பதுபோல் அவன் திரும்பிப் படுத்துக் கொண்டதை, அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

எதையும் ஜீரணிக்க முடியாமல் அமர்ந்திருந்தவள், வெகு நேரம் கழித்தே உறங்க ஆரம்பித்தாள்.

## 5

மறுநாள் காலையில் எழுந்த போதும், வரவேற்பு - மறுவீடென்று பொழுது கழிய, அன்றிரவும் உறங்கா இரவாய்! அடுத்த நாளிரவே இருவரும் சென்னைக்குக் கிளம்ப, ராஜாத்தி அத்தையும், மணி மாமாவும் அவளுக்குத் துணையாகக் கிளம்பினர்.

நெகிழ்ந்த மனதும், சிவந்த கண்களுமாக வழியனுப்பிய குருநாதனையும், வேம்புவையும் பார்த்தபோது, அவளால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே இயலாது போயிற்று!

அழுதழுது சிவந்த விழிகளுடன் அவள் அமர்ந்திருக்க, உணர்ச்சியின்றி அவளையே கூர்ந்திருந்தான் ப்ருத்வி.

முதல் வகுப்பு கூபேயில் அவர்களிருவர் மட்டும் செல்லும்படி, நான்கு டிக்கெட்டுகளையும் புக் செய்திருந்தார் குருநாதன்.

ராஜாத்தியும், மணியும் அடுத்த கம்பார்ட்மெண்டில் இருந்தனர்.

அவளுக்குள்... சாரலாய் உணர்வுகள் பெருக, அவனை மறக்கவும் முடியாமல், விலகவும் துணிவின்றி, அமர்ந்திருந்தாள்.

திடீரென்று, "சாப்பிடலாமா?" என்று முகம் தெரியாத ஒருவரிடம் கேட்பதைப் போல் வினவினான் அவன்.

"வேண்டாம்... எனக்குப் பசிக்கலை..."

மெதுவாகக் கூறியவளிடம், "எனக்கு நல்ல பசி! நான் சாப்பிடப் போறேன்!" என்றபடி, சாப்பாட்டைச் சாப்பிட ஆரம்பித்தான்.

'நீ என்னவானால் எனக்கென்ன!' என்ற அலட்சியம் அதில் தெரிய, அவளும் கண்களை இறுக மூடி உறங்குவது போல் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

'என்ன திமிர்... பசிக்கிறதென்று கூறியும்கூட இணைந்து கம்பெனி கொடுக்கும் ஒரு மேனர்ஸ் கூடத் தெரியவில்லையே?' கசந்தது அவன் நெஞ்சம்.

பிறகு, மறுபுறம் திரும்பிப் படுத்திருக்கின்றவளை ஏறெடுத்தும் பாராமல் சாப்பிட்டு முடித்தவன், வீம்பாகப் படுத்துக் கொண்டான்.

ஏன் இந்த வாழ்க்கை என்று கசந்தது நெஞ்சம்!

மறுநாள் காலையில் சென்னையில் இறங்கியபோது, அவர்களை அழைத்துச் செல்லப் புஷ்பாவும் பரணீதரனும், குவாலிஸுடன் காத்திருந்தனர்.



வீட்டிற்குச் சென்றதுமே நிறைய உறவினர்கள் அறிமுகப் படுத்தப்பட, குளித்துத் தயாராகி வந்தபோது, அனைவரும் பிடித்துக் கொண்டனர்.

ஒரே கேலியும் கிண்டலும், அரட்டையுமாகப் பொழுது சென்றது.

தொடர்ந்த நாட்களில், புஷ்பாவும் பரணீதரனும் அவளைக் கண்ணுக்குக் கண்ணாகக் கவனித்துக் கொண்டனர்.

ப்ருத்வி, வேலை வேலை என்று விலகிச் செல்ல, அவர்களிடம் மிகவும் ஒட்டிக் கொண்டாள் அவள்.

புது இடம் என்ற குறையே தெரியாமல் அவளுக்கு ஒரு தாயாக, தோழியாகக் குறுகிய காலத்திலேயே மாறிப் போனார் புஷ்பா!

அவர்களின் பெருந்தன்மையும், உயர்ந்த உள்ளமும் புரிந்திருந்ததால், இயல்பாவே அவளால் மனம் ஒன்றிப் பொருந்திப் போய்விட முடிந்தது.

தினமும் அவளைக் கேட்டுவிட்டே எல்லாச் சமையலும் செய்யும்படி சமையல் செய்யும் புவனாவைப் பணித்திருந்தார் அவர்.

ஒரே மாதத்தில், அந்த வீட்டின் உள் அலங்காரம், தோட்டம் எல்லாமே மாறிப் போயிருக்க, அனைவருக்கும் பிடித்தமானவளாக ஆகிப் போனாள் அவள்.

சதாவின் பொறுமையான அணுகுமுறையும், பாசமான பேச்சும், வெகுளித்தனமும் எல்லோரையும் சட்டென்று கவர்ந்து விட்டன.

ஆனால், யாருக்கு அவள் மேல் நேசம் வந்திருக்க வேண்டுமோ, அவன் மட்டும் விட்டேத்தியாக ஒதுங்கியே இருந்தான்.

பெற்றோர்களுக்கு மத்தியில் ஒன்றிரண்டு வார்த்தைகளாவது பேசுபவன், அறைக்குள் நத்தையாகச் சுருங்கிக் கொள்வான்.

அவளுக்குத்தான் மிகவும் கஷ்டமாக இருக்கும்... யாரை நம்பித் தன் வாழ்க்கையை அவள் ஒப்படைத்தாளோ, அவன் அவளைத் திரும்பியும் பார்ப்பதில்லை.

அதனாலேயே, இன்னும் அதிகமாகப் புஷ்பாவிடமும் பரணியிடமும் மனதார நெருங்கிப் போனாள் அவள்.

ஒரு நாள், கம்பெனியிலிருந்து தாமதமாக வந்த பிறகும், முன்னறையிலிருந்த கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்து, கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"என்னப்பா... தூங்கப் போகலையா? ஏதாவது அக்கௌண்ட்ஸ் ஸ்டோர் பண்ணி வைக்கணும்னா சதாவுக்குப் பழக்கிவிடேன்... அவ எல்லா விஷயத்திலயுமே ரொம்ப ஷார்ப் தெரியுமா?" பெருமையுடன் சிலாகித்தார் பரணி.

உதட்டோரங்கள் ஏளனமாக வளைய, அவளையே உறுத்து விழித்தவன், "ப்ச்... அதெல்லாம் சரிவராதுப்பா... இது ரொம்ப கான்ஃபிடென்ஷியல்..." எனச் சுழித்த உதடுகளுடன் கூறினான்.

"என்ன பேசறே ப்ருத்வி! மனைவியை விட உன் ரகசியங்களைப் பாதுகாக்கறவங்க யாராவது இருப்பாங்களா என்ன? இப்ப, எங்களைவிட உன்மேல அதிக அக்கறை உள்ள அவதான்... அதை முதல்லே புரிஞ்சிக்க..."

ஆணித்தரமாகக் கூறிய புஷ்பா, வாஞ்சையுடன் அவன் சிகையைக் கோதிவிட்டு வெளியேறினார்.



அவனுக்காகப் பாலை எடுத்து வந்த சதா, அதை மேசையில் வைத்துவிட்டு ஒன்றுமே பேசாமல் வெளியேறினாள்.

இதயம் நெருப்புக் குமிழியாய்த் தகித்தது.

அன்றிரவு அறைக்கு வந்தவன், "உனக்கு இன்ட்ரெஸ்ட் இருந்தா ஃபேக்டரி அக்கௌண்ட்ஸ் எல்லாம் பார்க்கலாம்!" எங்கோ பார்த்தபடி விட்டேத்தியாகக் கூறிவிட்டுக் குளியலறைக்குள் சென்று விட்டான்.

அவளுக்கோ 'நான் உங்கள் மனைவி' என்று கத்த வேண்டும் போல் ஒரு உணர்வு!

ஆனால்... அப்போதுதான் மகாத்மா காந்தியின் பொன் வரிகள் நெஞ்சிற்குள் பரவின!

'பொறுமை... பொறுமை' என்று அறிவுறுத்தியது இதயம்!

'பொறுமையும் விடாமுயற்சியும் மலைகளையும் வெல்லும்! பொய்யை மெய்யாலும், ஆத்திரத்தைச் சகிப்புத் தன்மையாலும் வெல்லலாம்!' அவை எவ்வளவு சத்தியமான வார்த்தைகள் என்பது புரிவதாய்!

ஒரு நாள்... அவன் மாறுவானென்ற நம்பிக்கைப்பூ மனதில் பூத்தது!

மறுநாளிலிருந்து பரணி கற்றுத் தர, கம்ப்யூட்டரில் டைல்ஸ் கம்பெனியின் அக்கௌண்ட்ஸ் விபரங்களை எல்லாம் சரிபார்க்க ஆரம்பித்தாள், சந்யோகிதா!

அதுவே பழகிப் போக, இப்போதெல்லாம் ப்ருத்வியின் வேலைகள் வெகுவாய்க் குறைந்து போயின.

வீட்டிற்கு வந்ததும் டென்ஷன் இல்லாமல் டிவி பார்த்தபடி பொழுதைக் கழிக்க ஆரம்பித்தான்.

வெளியிலும் அலைந்து விட்டு வந்து, கம்ப்யூட்டரிலும் அமர்வது குறைந்திருந்தது.

ஒரு நாள் அதுபோல் அவன் அமர்ந்திருக்க, பரணியும் புஷ்பாவும் சதாவின் புகழ் பாட ஆரம்பித்தனர்.

"பாத்தியா ப்ருத்வி, சதாவோட சாமர்த்தியத்தை... நான் சொல்லிக் குடுத்த உடனே சுலபமாக் கத்துகிட்டா... கம்ப்யூட்டர் கோர்ஸ் படிச்சவ இல்லையா? உன் வேலையை ஈஸியாக்கிட்டா... இப்ப நீ ரிலாக்ஸ்டா இருக்க முடியுது பாரு!"

"அது மட்டுமா? இப்ப வீட்டு வேலையிலிருந்தும் எனக்குப் பெரிய ரிலீஃப்... சமையல், மெனு போடறது... வீட்டை நிர்வகிக்கறது... தோட்டத்தை மாத்தி அமைக்கறதுன்னு எல்லாமே சதாதான் செய்யறா... நான் நிம்மதியா இருக்கேன்..."

புஷ்பா கூற, "இப்படியே இருந்தா நாங்க ரெண்டு பேரும் சீக்கிரமே துருப்பிடிச்சிடுவோம்... எங்களை ஆக்டிவ்வா வைக்கறது உங்க கையிலதான் இருக்கு!" என நமட்டுச் சிரிப்புடன் முடித்தார் பரணி!

அசுவாரசியமாகத் திரும்பியவன், "போதும்மா உங்க மருமக புராணம்... அவ வந்ததும் மகனையே மறந்திட்டீங்க போல... கொஞ்சம் என்னையும் ஞாபகம் வெச்சிக்கங்க... என்னவோ என் கையிலதான் இருக்குன்னீங்களே அப்பா... அது என்ன?" அழுத்தமாகக் கேட்டான்.

"ம்... சீக்கிரமே ஒரு பேரக் குழந்தையைப் பெத்துத் தந்துட்டா நாங்க சுறுசுறுப்பாயிடுவோம்... அதைத்தான் அப்பா சொல்றாரு."



புஷ்பா கூறியதும், சதாவின் முகம் வெட்கத்திலும் தவிப்பிலும் சட்டென்று சிவந்து விட, இரு கன்னங்களிலும் இளம் சிவப்பு ஆர்க்கிட்கள் மலர்ந்தன.

அதைக் கண்ட ப்ருத்வியின் மனதில் கடும் ரௌத்ரம் பரவியது.

அன்றிரவு அறைக்குள் வந்ததுமே, தன் மனதை மறைக்காமல் கொட்டி, அவளை அதிர வைத்து விட்டான் அவன்.

குளியலறையிலிருந்து நைட்டியுடன் அவள் வெளியே வர, அவனுக்குள்ளோ கடும் சீற்றம்!

அவள், எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கியதில், எரிமலையாகி இருந்தான்.

"என்ன... அம்மா குழந்தைன்னவுடனே அப்படியே சிவந்து போறே? நமக்குள்ளே எந்த உறவும் இல்லாதப்ப, குழந்தை மட்டும் எங்கேருந்து வருமாம்... அதையெல்லாம் எதிர்பாத்திட்டிருக்கிறதா இருந்தா, இப்பவே உங்க அப்பா வீட்டுக்குப் போயிடு!" மிருகமாய் உறுமினான்.

வார்த்தைகள்... திராவகத் துளிகளைச் சுமந்து அவள்மேல் வீழ்ந்தன.

உடலும் உள்ளமும் நாணலாய்த் தொய்ந்துவிட, அப்படியே மிரண்டு விழித்தபடி பனிச் சிற்பமாய் உறைந்து நின்று விட்டாள் சதா.

"இது உனக்கு பனிஷ்மெண்ட்... எனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலைன்னு சொல்லியும், என்னமோ என்னை ஜெயிச்சிட்ட மாதிரி நினைச்சி பிடிவாதமா

'பிடிச்சிருக்கு'ன்னு சொன்னேயில்லை... அதுக்கு நீ அனுபவிச்சித்தான் ஆகணும்!

"எந்தக் காலத்துலயும் நான் உன்னை மனைவியா ஏத்துக்கவும் போறதில்லை... என்னால ஒரு வாரிசு அம்மா அப்பாவுக்குக் கிடைக்கவும் போறதில்லை..." அலட்சியமாகக் கூறிவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

எப்போதும் போல் பாயை விரித்துக் கீழே படுத்த வளுக்குள், பெரும் சோகமும் வேதனையுமே நிறைந்தன.

ஆனால் உலர்ந்திருந்த கண்களில் கண்ணீர் மட்டும் வர மறுத்தது. அழுகை அவளுக்குப் பிடிக்காத ஒன்று!

இறப்புக்கும், பிறர் துயரத்துக்கும் தன்னையறியாது அழுது நெகிழ்ந்து விடுபவள், தன் பிரச்சனைகளுக்கு மட்டும் என்றுமே அழுததில்லை.

அழுகை, ஒரு மனிதனைப் பலவீனப்படுத்தி ஒடுக்கி விடுமென்பது அவள் கணிப்பு!

இன்றும், இரவு விளக்கொளியில் ஒளிர்ந்த அறைச் சுவரை வெறித்தபடி படுத்திருந்தாள்.

தான் செய்தது தவறோவென்று, மனதின் ஓரம் ஒரு சிறு வலி!

ஏன் அவனுக்குத் தன்னிடம் சிறு பரிவுகூட வரவில்லை... அந்த அளவுக்கு அவனுடைய இதயத்தை ஆக்கிரமித் திருக்கின்ற அந்தப் பெண் யார்...? வினாக்கள் அனலாய்த் தகித்தன.

அவனிடம் கேட்கவும் முடியாமல், என்ன செய்தால் அவனுடைய மனம் மாறுமென்று வழியும் புரியாமல், தனித்துத் தவித்திருந்தாள் அவள்.



# 6

மறுநாளிலிருந்தே, அவளிடமிருந்து மேலும் அதிகமாக ஒதுங்கத் துவங்கிய வன், சிடுசிடுப்பே உருவாக மாறிப் போனான். அவனை மாற்றும் வழி வகை தெரியாது, அவள்தான் பெரிதும் திணறிப் போனாள்.

புஷ்பாவுடன் பேசுவது, எம்பிராய்டரி செய்வது, படிப்பது, வீட்டை நிர்வகிப்பது, கம்ப்யூட்டரில் கணக்குகளைப் பார்ப்பதென்று பொழுது சென்றாலும், ஏதோ ஒரு வெற்றிடம் அவளைப் பலமாய் ஆக்கிரமித்ததுதான் உண்மையாய்!

எல்லாவற்றையும்விட, தனக்கும் அவனுக்குமிடையே நடக்கும் பனிப்போர், பெரியவர்களுக்குத் தெரியாமல் இருப்ப தற்காகத்தான் அவள் படாத பாடு படவேண்டி யிருந்தது.

ஒரு நாள் மாலையில் அவளிடம் பேச ஆரம்பித்தார் புஷ்பா.

"சதா! இப்ப இருக்கற ஜெனரேஷன் மாதிரி நீங்க ரெண்டு பேரும் ஃபேமிலி ப்ளானிங் அது இதுன்னு இருந்தி டலையே?" தவிப்புடன் கேட்டார்.

சட்டென்று தர்ம சங்கடத்துடன் அவள் தலைகுனிய, "சாரிம்மா! பர்சனலைக் கேட்டுட்டேனா?" என்றவரின் குரலில், பெரும் அலைப்புறுதல் தெரிவதாய்!

அவரை மாற்ற வேண்டுமென்று தோன்ற, "அப்படி எல்லாம் இல்லை அத்தை!" என அவள் அவசரமாக மொழிந்தாள்.

"அப்பாடா! இந்த வீட்டில பிரபு திரும்பி வந்து பிறக்கணும்னு எங்களுக்கு ரொம்ப ஆசைம்மா! உன்கிட்டே, ப்ருத்வி எல்லாம் சொல்லி இருப்பானே...!"

அவருடைய வார்த்தைகள், அப்போதுதான் உள்ளே வந்த ப்ருத்வியின் செவிகளில் ஸ்பஷ்டமாக விழுந்தன.

மௌனமாகத் தலையசைத்தவளால், எதுவும் கூற முடியவில்லை.

அன்றுதான் புஷ்பா வேறொரு பிரச்சனையையும் ஆரம்பித்து வைத்தார்.

"என்ன ப்ருத்வி! இதுவரைக்கும் நீ சதாவை வெளியே எங்கேயுமே அழைச்சிட்டுப் போகலை! கல்யாணமாகி ரெண்டு மாசம் ஆகப் போகுது... இந்த ஞாயிற்றுக்கிழமையாவது வெளியே போயிட்டு வாங்க..." அக்கறையுடன் கூறினார்.

ஞாயிறன்று அவரிடம் மறுக்கவும் முடியாமல், எதையும் வெளிப்படுத்தவும் இயலாமல், வேண்டா வெறுப்பாகச் சதாவுடன் வெளியே கிளம்பினான் அவன்.

மாயாஜாலுக்குச் சென்று ஒரு சினிமா பார்த்துவிட்டு இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

சதா, அவளுக்குள் மூழ்கியிருக்க, அவனோ ஏதோ யோசனையிலிருந்தான். அப்போதுதான், "ப்ருத்வி..." என்ற உற்சாக அழைப்பு கேட்டது.

உடனே திரும்பினால், அங்கு ப்ருத்வியுடன் கல்லூரியில் பயின்ற நண்பன் விவேக் நின்றிருந்தான்.

"ஹாய் விவேக்! நீ ஸ்டேட்ஸிலேருந்து எப்படா வந்தே?" ப்ருத்வி மகிழ்ச்சியுடன் விசாரித்தான்.

"போன வாரம்தான்டா... அப்புறம்... எப்படி இருக்கே... கல்யாணமாயிடுச்சா? எனக்கெல்லாம் இன்விடேஷனே கிடையாதா? எனிவே கங்கிராட்ஸ்..." என்று கை குலுக்கி வாழ்த்தினான்.



சதா மரியாதைக்கு எழுந்து வணங்கினாள், "உன் ஒய்ஃப் ரொம்ப அழகு ப்ருத்வி..." இயல்பாகவே பாராட்டினான் அவன்.

திடீரென்று கிடைத்த பாராட்டில் சதாவின் கன்னங்கள் மெலிதாய்ச் சிவக்க, அவனுக்கோ பெரும் ஆச்சர்யம்!

"ஹேய்! உன் ஒய்ஃபுக்கு ப்ளஷ் அடிக்குது பாரு... இந்தக் காலத்துல கூட இப்படியா? யு ஆர் வெரி லக்கி மேன்!"

அவன் கூறும்போதே, ப்ருத்வியின் உடலில் ஒரு பாறையின் இறுக்கமும், ஒருவித விரைப்பும் தோன்றுவதைச் சதா ஓரக் கண்ணில் கண்டு விட்டாள்.

பயத்துடன் அவள் நிற்கும்போதே, "பைடா விவேக்" என்றபடி அமர்ந்துவிட்டான் அவன்.

ஒரு கணம் மூச்சுவிட மறந்து உறைந்து நின்றிருந்தவள், தொப்பென்று அமர்ந்தபோதுதான், அடிக்குரலில் சீறினான் அவன்.

"ஏய்... என்ன நினைச்சிட்டிருக்கே நீ உன் மனசுலே! எவனோ ஒருத்தனோட காம்ப்ளிமெண்ட்டுக்கெல்லாம் முகம் சிவக்குது! அவனுக்குத்தான் அறிவில்லை... இன்னொருத்தன் மனைவியை ஓவரா புகழ்றது தப்புன்னு தெரியலை... வழியறான்... சே!" சினத்துடன் மேசையை ஓங்கிக் குத்தினான்.

சட்டென்று மனம் லேசாகி, சிறு புன்னகை ஒன்று அவளுடைய இதழ்களில் ஜனித்தது.

இன்றாவது தன்னை மனைவி என்று ஒத்துக் கொள்ள அவனுக்கு மனம் வந்ததே என்ற உணர்வு, மற்றதை மறக்கடிப்பதாய்!

அவளுடைய முக மாற்றத்தை உணர்ந்தவன், உடனே ரௌத்ரமாகிப் போனான்.

"என்ன சிரிக்கறே?" அடிக் குரலில் பொருமினான்.

"ம்... இன்னிக்குத்தான், நான் உங்க மனைவிங்கறதே உங்களுக்கு ஞாபகம் வந்திருக்கு இல்லை...? ம்... அதை நினைவுபடுத்த ஃபாரின்லேருந்து ஒருத்தர் வரவேண்டி யிருந்திருக்கு... அதான் சிரிச்சேன்..."

எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ, கூறிவிட்டாள்.

"புல் ஷிட்..." என்றபடி எழுந்தவன், வேகமாகச் சென்று கை கழுவ, உடனே பின்தொடர்ந்தாள் அவள்.

**கா**ரில் வீட்டிற்குச் செல்லும்போதும், இருவருக்கு மிடையே மௌனப் போர் தொடர்ந்தது.

அதுவரை இருந்த இதம், தன்னால்தான் கெட்டுவிட்டதோ வென்ற குற்றவுணர்வு அவளிடம்.

வீட்டிற்கு அருகில் சென்றவுடன், யோசனையுடன் அவளிடமே திரும்பினான் அவன்.

"இதெல்லாம் அப்பா அம்மாவுக்குத் தெரிய வேண்டாம்." ஒருவித விலகல் தன்மையுடன் வந்தது அவன் குரல்!

அந்த நிமிடம், ஏனோ அவனைச் சீண்ட வேண்டும் போல்!

"ம்... நான் சொல்லிட்டா..." தலை சரித்து அவள் குறும்புடன் கேட்க, கார் கிறீச்சென்ற சடன் பிரேக்குடன் நின்றது.

"ஏய்... என்ன மிரட்டறியா? போய்ச் சொல்லு! ஒரு பையன்தான் இறந்துட்டான்... இந்தப் பையன் வாழ்க்கையாவது சந்தோஷமா இருக்கணும்னுதான் இந்தக்



கல்யாணத்தைச் செஞ்சாங்க... அதுவும் ஃபெயிலியர்னு தெரிஞ்சு அவங்க நொந்து போகட்டும்!"

"ஒரு நிமிஷம்! இந்தக் கல்யாணத்தை ஃபெயிலிய ராக்கினது நான் இல்லை... அது உங்க கைங்கர்யம்தான்! என்னைப் பொறுத்த வரைக்கும் இது எனக்கும் பெரிய இழப்புதான்... ஆனா, அதை அத்தை மாமா கிட்டே சொல்லி பரிதாபம் தேடிக்கறதும் எனக்குப் பிடிக்காது!

அவங்களை நான் நோகடிக்கவும் மாட்டேன்... நான் ஒண்ணும் சாடிஸ்ட் இல்லை!" பொறுக்க இயலாமல் பொரிந்து தள்ளி விட்டாள்.

"ஓ! அப்ப நான்தான் சாடிஸ்ட் அப்படிங்கிறியா?" கண்கள் பளிங்காய் ஜொலித்து இடுங்க, ஒருவிதக் கூர்மையுடன் கேட்டான்.

அந்தப் பார்வையை ஒரு கணம்கூடத் தாங்க இயலாமல் ஜன்னல்புறம் திரும்பியவளை, அவன் குரல் உசுப்பியது.

"நான் கேள்வி கேட்டா பதில் சொல்லணும்! என்னை என்ன முட்டாள்னு நினைச்சியா?"

பல்லைக் கடித்தபடி அவன் சீற, சட்டென்று சிரித்து விட்டாள் அவள்.

"ஒரு நிமிஷம்...! உங்களை சாடிஸ்ட்டுன்னோ, முட்டாள்ன்னோ நான் நினைக்கலை! நீங்களே தான் பட்டியல் போட்டுக்கறீங்க... சாரி!" என்றபடி திரும்பிக் கொண்டாள்.

மனதிற்குள்... மௌனச் சிரிப்பு மையம் கொண்டது.

காரைக் கோபத்துடன் விரட்ட ஆரம்பித்தான் அவன்.

வீட்டு வாசலில் கார் நின்றதுமே சப்தம் கேட்டு வெளியே வந்து விட்டார் புஷ்பா.

"என்னம்மா! நல்லா என்ஜாய் பண்ணினீங்களா?" வாஞ்சையுடன் விசாரித்தவரிடம், "ம்... ரொம்ப நல்லா என்ஜாய் பண்ணினோம் அத்தை... அவர் கிட்டயே கேளுங்களேன்... ஏங்க அப்படித்தானே?" குறுகுறுத்த விழிகளுடன் கேட்டாள்.

"ம்... ம்..." என்றபடி எதையும் வெளிக்காட்ட முடியாமல் அவன் உள்ளே செல்ல, அவனை முதன் முதலில் வீழ்த்திய பெருமிதம் அவளுக்குள்!

"சரி! நீங்க ரெண்டு பேரும் போய் ரெஸ்ட் எடுங்க..." என்று அனுப்பி வைத்தார் புஷ்பா.

அவள் அறைக்குள் வந்ததுமே, "என்ன... அம்மா கிட்டே என்னை மாட்டிவிடறியா? ரொம்பத் திமிர்தான் உனக்கு!" சுள்ளென்று காய்ந்தான்.

"நான் ஒண்ணும் மாட்டிவிடலை... உண்மையா எனக்கு நல்லாப் பொழுது போச்சு... அதைத்தான் சொன்னேன்." உள்ளார்ந்த சிரிப்புடன் முடித்தாள்.

ஒரு வேங்கையின் சீற்றத்துடன் வேகமாகக் குளியலறைக்குச் சென்று படாரென்று கதவை மூடிக் கொண்டான் அவன்.

அந்த வாரமே, நவராத்திரி என்பதால் வீட்டில் கொலு வைத்தனர்.

புஷ்பாவும், சதாவுமாகச் சென்று உறவினர்களையும், நட்பு வட்டத்தையும் அழைத்து விட்டு வந்தார்கள்.



கும்பகோணத்தில், பிறர் வீட்டுக் கொலுவிற்குச் சென்றிருந்தாலும், அவளுடைய வீட்டில் பழக்கமில்லை என்பதால் கொலு வைத்ததில்லை.

அதனால், இங்கு பெரும் உற்சாகத்துடனும் துடிப்புடனும் எல்லா வேலைகளிலும் முழு மனதுடன் பங்கு கொண்டாள் சதா.

தினமும் ஒரு மெனு என்று சுண்டலும் இனிப்பும் செய்கின்ற வேலையைத் தன்வசமாக்கிக் கொண்டாள்.

கொலுவுக்கு முன்பாக அழகிய பார்க் ஒன்றைப் புஷ்பாவின் உதவியுடன் அழகுற அமைத்திருந்தாள்.

வண்ணச் சீரியல் விளக்குகள் மின்ன, செயற்கைப் புல்வெளியும், பல வண்ண மலர்த் தோட்டமும், அட்டையில் செய்த கார்டன் பெஞ்சுகளும், ஓரத்தில் சிறு அருவியுமாக அந்த அலங்கார அமைப்பு இதயத்தை அள்ளியது.

முதல் நாள், வந்து சென்ற அனைவருமே அவளை மிகவும் பாராட்டினர்.

அப்போதுதான் ஃபேக்டரியிலிருந்து வீட்டிற்கு வந்த ப்ருத்வியிடம், அவனுடைய நண்பன் தனபாலின் தாய் ஜெயா சதாவை வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

"ப்ருத்வி! நீ குடுத்து வச்சவன்ப்பா! சதா, எவ்வளவு அழகா 'பார்'க்கை அமைச்சிருக்கா! நல்ல ரசனை, நல்ல புத்திசாலித்தனம், அழகு, அமைதி எல்லாம் சேர்ந்து அமையற பெண் கிடைக்கறது ரொம்பக் கஷ்டம்!"

"நீ ரொம்ப லக்கி ப்ருத்வி! இவளை அருமையா பார்த்துக்கப்பா!" வாஞ்சையுடன் வேண்டுகோள் விடுத்தார்.

அசுவாரசியமாகத் தலையாட்டியபடி பார்வையைத் திருப்பியவனுடைய விழிகள் ஒரு கணம் ஸ்தம்பித்து உறைந்தன. அவனே எதிர்பாராதவிதமாக, அத்தனை கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டிருந்தது அந்தப் பூங்கா!

விழிகள் யோசனையும் ஆராய்ச்சியுமாகத் திரும்ப, அழகிய ஓவியப் பெண்ணாய் நின்று, வருபவர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள் சதா.

"சரி! இந்த வாரம் எங்க வீட்டுக் கொலுவுக்குச் சதாவையும், புஷ்பாவையும் நீ கட்டாயம் அழைச்சிட்டு வரணும்."

அன்பான ஒரு வேண்டுகோளை விடுத்து விட்டு அவர் கிளம்ப, தாம்பூலம் தர ஆரம்பித்தார் புஷ்பா.

நம்ப இயலாத வியப்புடன் அந்தப் பூங்காவை அளவிட்டவன், மறு கணமே தலையைக் குலுக்கியபடி, அறைக்குள் சென்று விட்டான்.

முதலில் அவனுடைய பார்வையில் தெரிந்த பிரமிப்பும், கணநேரத்தில் அந்த பாவனை விலகி, உடனே ஒளிர்ந்த அலட்சியமும், சாதகப் பட்சியாய் அவனையே நோக்கிக் கொண்டிருந்த சதாவிடம், பெரும் சோர்வை வரவழைத்தன.

அது புரியாமல், "உன் வீட்டுக்காரன் உன்னையே விழுங்கிடுற மாதிரிப் பார்த்துட்டுப் போறான்... போய் அவனைக் கவனி!" குறும்புடன் கூறி விட்டு விடைபெற்றார் ஜெயா.



# 7

அந்த வாரக் கடைசியில், சதாவும், ப்ருத்வியுமாக அவனுடைய நண்பன் தனபாலின் வீட்டிற்குச் சென்றனர். வீட்டில் கொலுவிற்கு வருபவர்களை வரவேற்பதற்காக, புஷ்பா தங்கி விட்டார்.

எளிமையாக வைக்கப்பட்டிருந்த அந்தக் கொலுவும், சதாவை மிகவும் கவர்ந்தது.

தனபாலின் மனைவி பவானி அலுவலகத்திலிருந்து வந்திராததால், சதாவையே தாம்பூலம் வைத்துத் தரச் சொன்னார் ஜெயா.

பிறகு அவளைப் பாடும்படி அவர் வற்புறுத்த, முதலில் தயங்கியவள், மெல்லப் பாட ஆரம்பித்தாள்.

*"நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா!*
*நின்னைச் சரணடைந்தேன்!*
*பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்...*
*என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று...*
*நின்னைச் சரணடைந்தேன்...!"*

கொலுசுகள் பேசுவது போல்... காற்றில் மிதந்து வரும் புல்லாங்குழல் இசையாய்... மழைத் துளிகளின் தாள லயமாய்ப் பரவியது, அந்தப் பாரதியின் பாடல்!

புன்னாகவராளி ராகத்தில் குழலும் யாழும் இணைந்து கசிந்த நாதமாய், அவள் குரல் காற்றில் அலையெனப் பரவி, அனைவரையும் அசைய விடாமல் கட்டிப் போட்டது.

முதன் முதலாக அவளுடைய குரல் மென்பதிவை ஏற்படுத்த, பெரும் அலைப்புறுதலுடன் தவித்துப் போனான் ப்ருத்வி!

அவள் நெக்குருகப் பாடி முடித்ததும், அனைவரும் மனம் கனிந்து பாராட்டி விட்டுக் கலைந்து செல்ல, வேகமாக வந்து திருஷ்டி கழித்தார் ஜெயா!

"எவ்வளவு அற்புதமான பொண்ணுப்பா இவ! புஷ்பா எல்லாம் சொன்னா! வீட்டை நிர்வகிக்கிறதாகட்டும்... மாமனார் மாமியாருக்கு மரியாதை தரதாகட்டும்... உனக்கும் ஃபேக்டரி வேலையில உதவறதாகட்டும்... ரசனையோட கொலு வைக்கறது... அருமையாப் பாடறதுன்னு என் கண்ணே பட்டுடும் போலிருக்கு!

"எங்க வீட்லயும் இருக்காளே ஒரு பொண்ணு... ஒண்ணும் சொல்ல முடியலைப்பா... நீங்கல்லாம்தானே கூட இருந்து, அவன் கல்யாணத்தை நடத்துனீங்க... இப்ப இவன் கஷ்டப்படறான்..." ஒரு பெருமூச்சுடன் உள்ளே சென்றார்.

"என்ன தனபால்... இது நாங்க ஃப்ரெண்ட்ஸா சேர்ந்து நடத்தி வச்ச மேரேஜ்... உன் மனைவிக்கும் உனக்கும் என்ன ப்ராப்ளம்?"

அககறையுடன் விசாரித்த நண்பனிடம், மனதைத் திறந்து கொட்டித் தீர்த்து விட்டான், தனபால். அபஸ்வரமாய் ஆரம்பித்து, சுருதி சேராத் தம்புராவாய் வாழ்க்கை தனித்துப் பயணிப்பதைக் குமுறலுடன் விவரிக்க ஆரம்பித்தான்!

"முதல்லே அவ நல்லாத்தான் இருந்தா ப்ருத்வி... போன வருஷம் ஐ.டீ ஃபீல்டுல வேலைக்குப் போனப்புறம்தான், அவ கிட்ட நிறைய மாறுதல்!

"லவ் மேரேஜ்ன்னாலும், அம்மா அப்பா அவளை மனசாரத்தான் ஏத்துக்கிட்டாங்க! வரவர அவ போக்கே சரியில்லைடா!



"தினமும் ராத்திரி வீட்டுக்கு வர ரொம்ப லேட்டாகுது... வேலையை விடச் சொன்னா மாட்டேங்கிறா... வீக் எண்டுலே கூட வீட்டில இருக்கறதில்லை... பார்ட்டி, பப், டிஸ்கொதேன்னு ரொம்ப மாறிப் போயிட்டா... என்ன செய்யறதுன்னு புரியலை!

"அதிகப்படியான பணம்கூட சில சமயத்துலே தலைகால் புரியாம ஆட வைக்கும்... நம்ம இயல்பையே மாத்திடும்கிறது இப்பத்தான் புரியுது! தப்பு பண்ணிட்டமோன்னு பயம் வருது!

"மாறிட்டேயிருக்கிற இந்த வாழ்க்கையில எதுவுமே நம்ம கையில இல்லை... அதோட, எதுவுமே நிரந்தரமில்லையே... அவளா வாழ்க்கையைப் புரிஞ்சிக்கணும்னு நான் விரும்பறேன்... பார்ப்போம்! சில விஷயங்களை உடைச்சிச் சொல்ல முடியாது ப்ருத்வி!"

ஒருவித விரக்தியோடு அவன் முடிக்க, அவளுக்கோ பெரும் பரிதாபம் வருவதாய்!

புருவ மத்தியில் சிறு யோசனை முடிச்சுடன் அமர்ந்திருந்த ப்ருத்விராஜுக்கோ, என்ன சொல்வதென்றே புரியவில்லை.

இருவரும் விடைபெற்று வீட்டிற்குத் திரும்பி வரும் போது, அசாத்திய மௌனத்திலிருந்தான் அவன்.

வீட்டிற்கு வந்ததும் கொலுவைப் பற்றிப் புஷ்பா அவனிடம் விசாரிக்க, "ப்ச்..." என்றபடி உள்ளே சென்று விட்டான் அவன்.

"நல்லா இருந்தத்தை... நீங்க ஏன் வரலைன்னு ஜெயா ஆன்ட்டி ரொம்ப விசாரிச்சாங்க... பவானிதான் வீட்டில இல்லை... ஆபீஸிலேருந்து வராததால, அவங்களைப் பாக்க முடியலை!"

"ப்ருத்வி ஏம்மா டல்லா இருக்கான்... தலைவலியா?"

அக்கறையுடன் கேட்டவரிடம், "தெரியலத்தை..." என்று கூறும்போதே, அவன் குரல் இடைமறித்தது.

"அவ எப்படிம்மா சொல்வா? இது அவளை மாதிரி ஒரு பெண்ணைப் பத்தின விஷயமாச்சே..." ஏளனமாக அவளையே ஊடுருவியபடி கூறினான்.

ஒன்றும் புரியாமல் விழித்த புஷ்பா, "என்னப்பா... என்ன பிரச்சனை... ஏன் ஒரு மாதிரிப் பேசறே?" எனக் குழப்பத்துடன் கேட்டார்.

"அம்மா! நம்ம தனபாலோட ஒய்ஃபைப் பத்திதான் சொன்னேன்... பாவம்மா அவன்...! இந்தப் பொண்ணுங் களுக்கே ரொம்பத் திமிர்! ஆண்களோட வாழ்க்கையில நிம்மதி, சந்தோஷத்தை எல்லாம் அழிக்கறதுக்குன்னே அவதாரம் எடுத்து வந்திருக்காங்க... சே!" வெறுப்புடன் கூறிவிட்டு உள்ளே சென்றான்.

"என்னாச்சும்மா இவனுக்கு? பெண்கள் மேல ஏன் திடீர்னு இவ்வளவு வெறுப்பு?" குழப்பத்துடன் விசாரித்தார்.

நெஞ்சம்... ஒரு பெண்ணால், பெண்ணியத்தையே சாடுபவனை எண்ணி நொந்து - மெதுவாகத் தனபாலின் வீட்டில் நடந்த விஷயங்களைப் பற்றி அவள் கூற, அயர்ந்து போய் விட்டார் புஷ்பா.

"ஓ! அதான் ப்ருத்விக்கு இவ்வளவு கோபமா? பாவம் தனபால்... நீ போய் ட்ரெஸ் மாத்திட்டு ப்ருத்வியைக் கவனிச் சிட்டு வாம்மா... சாப்பிடலாம்!" யோசனையுடன் உள்ளே சென்றார்.

வாடிய மலராய்... அவளுக்குள் சிறு சோகம் மையம் கொண்டிருந்தது!



பிறகு தொடர்ந்த நிமிடங்கள் மௌனத்திலேயே கழிய, தனக்குச் சாப்பாடு வேண்டாமென்று மறுத்துவிட்டுச் சீக்கிரமே படுக்கச் சென்று விட்டான் ப்ருத்வி.

சிறிது நேரம், பரணியுடனும் புஷ்பாவுடனும் கேரம் விளையாடி விட்டு, அவள் பால் டம்ளருடன் அறைக்கு வந்தபோது, அவன் அங்கு இல்லை!

சிட்-அவுட்டில் விளக்கெரிய மெதுவாக எட்டிப் பார்த்தால், வெறித்த பார்வையுடன் நாற்காலியில் சாய்ந்திருந்தான்.

அசைவு தெரிந்ததும் திரும்பியவனின் கண்ணோரங்கள், கூர்மையுடன் இடுங்கின.

"பால் எடுத்திட்டு வந்திருக்கேன்... சாப்பிடத்தான் இல்லை... இதையாவது குடிங்க!" எதிரிலிருந்த டீப்பாயில் வைத்தாள்.

"ம்! பொதுவா, மனுஷங்க செத்தப்புறம்தான் பாலை ஊத்துவாங்க... இப்பல்லாம் பொண்ணுங்க உயிரோட இருக்கும்போதே ஊத்திடுறீங்க!" குத்தலாக மொழிந்தான்.

சுள்ளென்று பொங்கிய கோபத்துடன், "பொண்ணுங் களைப் பத்தி இவ்வளவு க்ரிட்டிசைஸ் பண்றீங்களே? ஏன்... நீங்க விரும்பினதும் ஒரு பொண்ணைத்தானே! அவங்க மட்டும் இதுக்கு விதிவிலக்கா என்ன? அவங்களை மட்டும் மறக்க முடியலைன்றீங்க?" தைரியமாகக் கேட்டு விட்டாள்.

"ஏய்..." கடும் சினத்துடன் எழுந்தவன், "அவளைப் பத்தி உனக்கு என்ன தெரியும்...? அவ ஒரு தேவதை! இனி ஒரு வார்த்தை அவளைப் பத்தி பேசினே... ப்ச்!" தொப்பென்று நாற்காலியில் அமர்ந்தான்.

அந்த நேரம், அதற்கு மேல் அவனைத் தொந்தரவு செய்ய மனமின்றி உள்ளே வந்தவள், அவனுக்குள்

பெண்களைப் பற்றிய வெறுப்புச் சதவிகிதம் அதிகரித்துக் கொண்டே போவதை அறியவில்லை!

ஆனால், அவனுடைய சொற்கள் கூரிய அம்பாய் இதயம் தைத்ததையும் விலக்க முடியவில்லை... உள்ளே பெரும் வலி பரவியது!

# 8

சதாவின் வார்த்தைகளால், ப்ருத்வி இளமை நினைவுகளில் ஆழ்ந்திருந்தான்... ஞாபகக் கிளைகளில் பால்யச் சுவடுகள் மலர்ந்து அவனைப் புது உலகிற்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்திருந்தன.

தன் ரிஷிமூலத்தை அறிய... அந்த நதி பின்னோக்கிப் பயணித்தது! டெல்லியில் வசித்து வந்த ப்ருத்விராஜுக்கு, அப்போது பத்து வயதிருக்கும்! அவனுடைய அப்பா செந்தில் ஒரு தமிழர்... டெல்லியில் பிசினஸ் செய்து வந்தவர்... அங்கேயே ஒரு பஞ்சாபிப் பெண்ணைப் பார்த்துக் காதல் கொண்டு மணந்து கொண்டவர்! ப்ருத்வியின் செல்லப் பெயர் பாபு! அவனுடைய அம்மா பாயல், அவனை அப்படித்தான் அழைப்பாள்.

படிப்பில், விளையாட்டில் என்று எல்லாவற்றிலும் சுட்டிப் பையன் அவன்!

தமிழ்நாட்டிலிருக்கும் தங்கள் குடும்பத்துடன் தொடர்பை இழந்திருந்த செந்தில், திருமணத்திற்குப் பிறகு பதினோரு வருடம் கழித்து, முதல் முறையாகத் தாய் நிலம் செல்லக் கிளம்பினார். மூவரும் ரயிலில் பயணிக்கும்போதுதான் அவனுக்கே சிறிது புரிந்தது.



மெதுவாக அவனுடைய தலையைக் கோதியவர், "நாம எங்கே போயிட்டிருக்கோம்னு தெரியுமா பாபு!" என்று பரிவுடன் கேட்டார்.

"ம்... அம்மா சொன்னாங்க... தமிழ் நாட்டில இருக்கிற, தாத்தா பாட்டி வீட்டுக்குன்னு... அவங்கள்லாம் எப்படி இருப்பாங்கப்பா?"

"ம்... நானே பாத்துப் பத்து வருஷத்துக்கும் மேலே ஆயிடுச்சி... உங்கம்மாவை விரும்பி நான் காதல் கல்யாணம் செஞ்சிக்கிட்டதுலே, அவங்களுக்குக் கோபம்... அங்கே போனப்ப எங்களைச் சேத்துக்கலை!" பெரும் வருத்தம் தொனித்தது அவர் குரலில்!

"ஏம்ப்பா...?" புரியாமல் கேட்டான் அவன்.

"நான் அவங்க கிட்டே சொல்லாம கல்யாணம் செஞ்சிக் கிட்டேன்னு உங்க தாத்தாவுக்கு என் மேல ரொம்பக் கோபம்... ம்... எல்லாம் கனவு மாதிரி இருக்கு... இல்லை பாயல்?"

"ஆமாங்க... அந்தக் கோபத்தோட வந்து, வேலையையும் பார்த்துக்கிட்டு கிஷோரோட சேர்ந்து டெக்ஸ்டைல் ஷாப்பும் ஆரம்பிச்சு, நல்லா வளர்ந்தப்புறம்தான் சொந்த ஊருக்குப் போவேன்னு, நீங்க வைராக்கியத்தோட இருந்ததை மறக்க முடியுமா?"

பெருமிதத்துடன் கூறிய பாயல், மகனை இழுத்து அணைத்துக் கொண்டார்.

அந்தச் சிறு வயதிலும் அவனுக்கு ஏதோ புரிந்தாற் போல்!

"பாட்டி தாத்தா எல்லாரும் நமக்காக வெயிட் பண்ணிட்டிருப்பாங்களாப்பா?" ஆவலுடன் கேட்டான்.

"இல்லை... அவங்க கிட்டே நாம வரப் போறதைச் சொல்லலை... நேரில போய் ஒரு இன்ப அதிர்ச்சி தரலாம்னு இருக்கோம்!"

"ஏங்க... இப்பவும் அவங்க நம்மளை ஏத்துக் கலைன்னா?"

"அதெல்லாம் மாறி இருப்பாங்க... அதுவும் நம்ம பாபுவைப் பாத்தா எல்லாம் மாறிடும்... பேரக் குழந்தைன்னா, தாத்தா பாட்டிங்களுக்கு எப்பவுமே தனிதான்... தெரியுமா? சரிடா செல்லம்... நீ அப்பா மடியில படுத்துத் தூங்கு!"

தன்னை மடியில் சாய்த்துத் தூங்க வைத்த வரையில் தான், அவனுக்கு ஞாபகமிருந்தது. பிறகு கண் விழித்தபோது, எல்லாமே முடிந்திருந்தது.

தீவிரவாதத் தாக்குதலுக்கு அந்த ரயில் இலக்காகி யிருக்க, பக்கத்து கம்பார்ட்மெண்டில் வெடித்த வெடிகுண்டு இவர்களுடைய கூபேயிலும் அலையாய்ப் பரவ, எங்கும் புகை மண்டலமாய்... தீனக் குரலும்... அழுகையுமாய்!

பாபு, தூக்கியெறியப்பட்டிருந்தான்.

அவனுடைய பெற்றோர் என்ன ஆனார்களென்றே தெரியவில்லை.

கும்மிருட்டும், புகையும், நிகழ்ந்த சம்பவத்தின் பாதிப்புமாக, துவண்டு போயிருந்தான்.

அப்போதுதான், இரு கரங்களால் அவனைத் தூக்கி அணைத்துத் தோளில் போட்டு, ஒரு உருவம் நடக்க ஆரம்பித்தது.

கண் விழித்தபோது, பாபு மருத்துவமனையிலிருக்க, அருகில் ஒரு இளைஞர் நின்றிருந்தார்.



"என்னப்பா... ரொம்ப வலிக்குதா... பயப்படாதே... சரியாயிடும்." பரிவுடன் கூறிவிட்டு, அவன் தலையைக் கோதி விட்டார்.

உடனே, தன் தந்தையின் நினைவுதான் அவனுக்கு வந்தது.

"அம்மா... அப்பா...?" அவன் ஈனசுவரத்தில் கேட்க, "வருவாங்க..." என்றவரின் விழிகளில் பெரும் அலைப் புறுதலும், தவிப்பும்!

பிறகு, அவன் உடல் தேறி வந்தபோதுதான் தெரிந்தது... அவனுடைய தாய், தந்தை இறந்த விபரம்!

ஒன்றும் புரியாமல் அழ ஆரம்பித்தவனைச் சமாதானப் படுத்தியது அவர்தான்!

நடேசன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த மனிதர், இரவு பகலாக அவனைக் கவனித்துக் கொண்டு அருகிலேயே இருந்தார்.

இரண்டு நாட்கள் கழித்துதான், ஒரு போலீஸ் ஆபீசர் வந்து எல்லா விபரமும் கூறினார்.

அவன் பயணம் செய்த கோச்சிலிருந்த அனைவருமே இறந்துவிட்டதை அறிந்த அந்தச் சிறு பிஞ்சுக்கோ என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அங்கு யாரையும் அறிமுகமில்லாத, தெரியாத ஒரு நிலை!

"நானும் அந்த ட்ரெயின்லதான் வந்தேன்... நல்ல வேளை, கடவுள் கிருபையால தப்பிச்சேன்... இந்தப் பையனை நானே அழைச்சிட்டுப் போறேன் சார்!

"இவனைத் தேடி யாராவது வந்தா சொல்லுங்க... நான் திண்டுக்கல்லுக்குப் பக்கத்துல இருக்கிற சிறுமலை அடிவாரக்

கிராமத்தில்தான் இருக்கேன்... என் அட்ரஸைக் குடுத்துட்டுப் போறேன்... யாராவது வந்தா தகவல் தெரிவியுங்க! அதுவரைக்கும் இவன் எங்க வீட்டிலேயே இருக்கட்டும்." என்றார்.

"அப்படி நாங்க அனுப்பக்கூடாது... ஆனா மூணு நாளா நீங்கதான் இந்தப் பையனைக் கூட இருந்து கண்ணும் கருத்துமா கவனிச்சிட்டதா நர்ஸ் சொன்னாங்க!" என்றவர் பாபுவிடம் திரும்பினார்.

"என்ன பாபு... இவர் கூடப் போறியா? உன் உறவுக் காரங்க யாராவது வந்தா திரும்ப அனுப்பறோம்."

உடனே. 'சரி'யென்று தலையசைத்தான் அவன்.

இந்த மூன்று நாட்களாக, பரிவும் கனிவுமாக நடேசன் அக்கறையுடன் கவனித்த விதம், அவனைப் பெரிதும் நெகிழச் செய்திருந்தது.

தாய் தந்தையும் இறந்த நிலையில், உறவுகள் யாரென்றும் புரியாத தருணத்தில் பாசத்துக்கு ஏங்கியவனுக்கு, ஒரே பற்றுக்கோடாய் உடனிருந்தவரை இழக்க மனம் வரவில்லை.

இடிந்து போயிருந்த அந்தப் பிஞ்சு மனதிற்கு எதையும் யோசிக்கவும் முடியவில்லை. ஒன்றும் புரியாத அந்த வயதில் திக்குத் தெரியாத காட்டில் தனித்து விட்டதைப் போன்ற ஒரு நிலையிலிருந்தவன், நடேசனிடம் பிரியத்துடன் ஒட்டிக் கொண்டான்.

எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு, மறுநாளே இருவரும் நடேசனின் சொந்த ஊருக்குச் சென்றனர்.



"பாபு! சின்ன வயசுல அம்மா அப்பாவை இழக்கற துக்கம், எவ்வளவு பெரிசுன்னு எனக்கும் தெரியும்... அதை அனுபவிச்சவன் நான்!

கவலைப்படாதேப்பா... உனக்கு நாங்க எல்லாரும் இருக்கோம்... வீட்டிலே உன்கூட விளையாட என் பொண்ணு அம்மு இருக்கா!

எதுவாயிருந்தாலும் நீ எங்ககிட்டே தயங்காமக் கேக்கலாம்!"

அவன் மெதுவாகத் தலையசைத்தபோது, அவர் விழிகள் கசிந்தன.

பிறகு, திண்டுக்கல்லிலிருந்து, காரில் பயணித்தபோது, அந்த வித்தியாசமான உலகம், அவனை மிகவும் ஈர்த்தது.

டெல்லியிலேயே பிறந்து வளர்ந்தவனுக்கு இந்த மண்ணின் பசுமையும், மலைகளுடன் வனப்பு மிகுந்த சூழலும் புதிதாய்!

முன்புறம் பெரும் தோட்டத்துடன் தெரிந்த அந்தப் பெரிய வீடு அவனை மிகவும் கவர, சுவாரசியம் கலந்த வியப்புடன் காரிலிருந்து மெல்ல இறங்கினான் அவன்.

"என்ன பாபு... இதான் நம்ம வீடு... பிடிச்சிருக்கா?"

அவர் கேட்ட விதமே மனதை இதமாக்க, "ம்..." என்று உற்சாகத்துடன் தலையசைத்தான்.

மனதோரம்... டெல்லியில் தன் தாய் தந்தையுடன் வாழ்ந்த ஞாபகங்கள் உடனே வந்தன!

மலையரசியின் மடியில் கம்பீரமாக வீற்றிருந்த அந்த வீடு, அவனுக்குள் வித்தியாசமான ஒரு உலகை அறிமுகப் படுத்தப் போவது புரிந்தது.

கார் சப்தம் கேட்டதுமே உள்ளே இருந்து ஒரு இளம் பெண்ணும் சிறு பெண்ணும் வேகமாக வெளியே வந்தனர்.

"வாங்க... வாங்க" என்று வரவேற்றபடி வந்தவளை, தன் மனைவி தேவி என்று அவனுக்கு அறிமுகப்படுத்தினார் நடேசன்.

"நான் போன்லே சொன்னேனே தேவி, அந்த பாபு இவன்தான்..."

வாஞ்சையுடன் அவர் கூற, ஓடி வந்து அணைத்துக் கொண்டார் அவர்.

"பாபு... நல்லாயிருக்கியா? இனிமே நீ எதுக்கும் கவலைப்படக் கூடாது... உனக்கு நாங்க இருக்கோம்... என்ன வேணுமோ, என்கிட்டே கேளுப்பா. நான் செய்யறேன்..."

அந்த வார்த்தைகள் உதட்டிலிருந்து வராமல், உள்ளத்திலிருந்து ஒலித்ததை, அந்தக் கணமே புரிந்து கொண்டான் அவன்!

அப்போதுதான், தன் தந்தையின் பின்னாலிருந்து எட்டிப் பார்த்த ஒரு ரோஜா முகத்தைக் கண்டான் அவன்!

சிறுவெட்கமும் கூச்சமுமாக, கரிய பெரிய விழிகள் ஆராய்ச்சியுடன் அவனையே நோக்க, ஏனோ அவளை உடனே பிடித்துப் போனது பாபுவுக்கு!

"அங்கிள்! இவதானே நீங்க சொன்ன அம்மு?" உற்சாகத்துடன் கேட்டான்.

"ஆமாம்ப்பா! இவதான் எங்க வீட்டுக் குட்டித் தேவதை அம்மு! ஸ்கூல்லே ஃபர்ஸ்ட் ஸ்டேண்டர்டு படிக்கிறா..." பெருமிதத்துடன் தன் மகளை அறிமுகம் செய்தார் அவர்.



"அம்மு... இங்கே வா... உனக்கு ஒரு புது ஃப்ரெண்ட் கிடைச்சிருக்கான் பாரு... இனிமே இந்த சம்மர் லீவுலே நீ ஜாலியா இவனோட விளையாடலாம்!"

அவர் கூறியதும் முதலில் மிரண்டு விழித்த அம்மு, மெதுவாக அவனருகே வர, அவன் நட்புடன் கை நீட்டினான்.

சிறு தயக்கத்திற்குப் பிறகு, தன் பிஞ்சு விரல்களை அதில் பதித்தவள், அன்று முதல் அவனுக்குச் சிறந்த தோழியாகிப் போனாள்.

தாய், தந்தையை ஒரே நேரத்தில் இழந்து வந்தவனுக்கு, அவர்களுடைய பரிவும் பாசமும் பெரும் மருந்தாய்!

ஒரு கூட்டுப் பறவையாய் அவர்களுடன் வசிக்கத் துவங்கியவனை, தாய், தந்தை இறந்த சோகமே தாக்காமல் பாசமாய் மூவரும் அரவணைத்தனர்.

## 9

அவர்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்த ஒரு வாரத்திலேயே, அந்தக் குடும்பத்துடன் பெரிதும் ஒன்றிப் போனான் அவன்.

கோடை விடுமுறை அப்போதுதான் ஆரம்பித்திருந்ததால், அம்முவுடன் சேர்ந்து புதுப் புது விளையாட்டுகளை ரசனையுடன் கற்றுக் கொள்ளத் துவங்கி யிருந்தான்.

ஓடுகள் வேயப்பட்டு, சுற்றிலும் தூண்கள், தாழ்வாரங்கள் சூழ, நடுவில் அழகிய முற்றத்துடன் வித்தியாசமான அமைப்பிலிருந்த அந்த வீடு, அவனுள் ஆழப்பதிந்தது உண்மையாய்!

இன்றும்... இளமையில் தான் அங்கு வாழ்ந்த நாட்கள் சொற்பமாகவே இருந்தாலும், அந்தத் தருணங்கள்... இன்றும் அவனுக்குள் ஒரு ஸ்வரத் தாலாட்டாய்!

கம்பிகள் இடப்பட்டு மேற்கூரை வேய்ந்திருந்தாலும், சூரியனின் வெள்ளிக் கதிர்களையும், நிலவின் தங்கச் சாரலையும், அமிர்தமாய்ப் பொழிகின்ற மழையையும் வீட்டிற்குள்ளே அழைத்து வந்து ரம்யமாய் அறிமுகப் படுத்துகின்ற பரந்த முற்றம், இன்றும் ஒரு பொக்கிஷமாய்... ஞாபக அடுக்குகளில் நீங்காத் தடம் பதித்திருக்கிறது.

அம்முவுடன் சேர்ந்து பாண்டி, கல்லாங்காய், கண்ணாமூச்சி, பம்பரம், பரமபதம், பல்லாங்குழி என்று விளையாடிய புதுப் புது விளையாட்டுகள்... இன்று நினைத்தாலும் மயிற்பீலியாய் வருடுகின்றன.

பௌர்ணமி நாட்களில், நான்கு பேரும் மொட்டை மாடிக்குச் சென்று ஜமுக்காளத்தில் அமர்ந்து, வான் நட்சத்திரங்களை எண்ணியபடி, தேவி பக்குவமாய் உருட்டித் தந்த உருண்டைகளை உள்ளங்கையில் ஏந்தி ரசித்து ருசித்தது, பொற்காலமாய்!

டெல்லியில்கூட இந்தச் சுகங்களை அவன் அனுபவித்த தில்லை!

ஒரு நாள், தோட்டத்தில் இருவரையும் அழைத்து அவர்கள் உதவியுடன் கூட்டாஞ் சோறாகச் சர்க்கரைப் பொங்கலைச் சமைத்துத் தேவி அளித்தது இன்றும் தேவாமிர்தமாய் நாவில் நிற்கிறது.

ஒரு மகன் இல்லாத குறையை, அவனை அழைத்துச் சென்று அனைவரிடமும் காட்டிப் போக்கிக் கொண்ட



நடேசனின் அன்பையும், அவனால் இன்று வரை மறக்கவே முடியவில்லை.

பதநீர், பனங்கிழங்கு, நொங்கு, இளநீர், வெள்ளரிப் பழம், சோளம் என்று இருவரும் பாசமாய்ப் பகிர்ந்து உண்டதும், இன்று கனாக் காலமாய்!

ஒரு மழை நாளில் அந்த முற்றத்தில் இருவரும் காகிதக் கப்பல்கள் விட, அன்றுதான் தன் மழலைக் குரலில் அவனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டாள் அம்மு.

"பாபு... இது மாதிரி ஒரு நாள் நிஜக் கப்பல்லே என்னை அழைச்சிட்டுப் போவியா?"

மழலையில் வெகுளித்தனமாக அவள் கேட்ட கேள்விக்கு ஆழ் மனதில் பொங்கி வந்த பிரியத்துடன், "நிச்சயமா அம்மு! நான் பெரியவனானதும் உன்னைக் கட்டாயம் அழைச்சிட்டுப் போவேன்," என்று கூறியது, இன்றும் மறக்க முடியாத மந்திரச் சொற்களாய் ஞாபகம் வந்தது.

ஒருமுறை வெற்றிலை பாக்கை இடித்துப் பக்கத்து வீட்டுப் பாட்டி கொடுக்க, "ஊஹும்... மாடு முட்டும்... நீயும் சாப்பிடாதே பாபு!" என்று அவனை அழைத்துக் கொண்டு அவள் ஓடியதும்... அவனுடைய பல் ஒரு நாள் விழுந்து விட, இருவருமாகச் சேர்ந்து அதை வெளியில் காண்பிக்காமல் சிறு குழியிட்டுப் புதைத்ததும்...

"கோட்டான் கத்துது, தூங்குங்க..." தேவியின் குரலுக்குப் பயந்து தூங்குவது போல் இருவரும் பாவ்லா செய்ய, போர்வை இடுக்கிலிருந்து ஒற்றைக் கண் சிமிட்டி அவள் சிரித்ததும்... அந்த ஊரிலிருந்த ஒரே ஒரு டெண்ட் தியேட்டரில்

மணலைக் குவித்து அமர்ந்து முறுக்கு, கடலை உருண்டை சகிதமாக குடும்பத்துடன் பழைய சினிமா பார்த்த ஞாபகமும்... இன்று எண்ணினாலும் திகட்டாத சொர்க்க நாட்கள்!

அன்று அந்த ஊரில் ஏசி இல்லை... கார் இல்லை... ஷவர் இல்லை... ஆனால் விண்ணை முட்டும் உற்சாகமும், கவலை இல்லா நாட்களுமாய் அவை கழிந்தன.

அந்தக் கூடத்திலிருக்கும் ஊஞ்சலில் அவனும் அம்முவுமாகச் சேர்ந்து மகிழ்ந்து ஆடியதும், விடுமுறை முடிந்ததும் அருகிலிருக்கும் பள்ளிக்கு அவளுடன் சென்று தனியாக அமர்ந்து படித்ததும், இன்று நடந்தது போல்!

பிறகு தனியாக ஒரு ஆசிரியரை வீட்டுக்கே வரவழைத்து அவனுக்கு ஆறாம் வகுப்புப் பாடத்தை ப்ரைவேட்டாகப் படிக்க ஏற்பாடு செய்தார் நடேசன்.

ஆறு மாதங்கள், சொர்க்கத்தை அறிமுகப்படுத்தி, பழைய நினைவுகளைக் கனவாய் மறக்கச் செய்து, தென்றலாய் விரைந்தன.

அப்போதுதான் ஒரு ஞாயிறன்று நடேசனின் ரைஸ் மில்லில் இருக்கும் பெரிய தண்ணீர்த் தொட்டியில் நீர் நிரப்பி இருவரும் ஆட்டம் போட ஆரம்பித்தனர்.

அவர்கள் உள்ளே இருப்பதை அறியாமல் யாரோ மீண்டும் மோட்டார் போட்டு விட்டுச் செல்ல, அதை அறியாமல் நீரில் துழாவித் திளைத்துக் கொண்டிருந்தான் அவன்.

அதே நேரம் தொட்டியிலிருக்கும் படிகளில் அமர்ந்திருந்த அம்முவிற்கோ, ஏதோ ஒரு வித்தியாசம் தெரிய, திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.



அதற்குள் நீரின் அளவு அதிகரித்திருக்க, நீருக்குள் மூழ்க ஆரம்பித்தான் பாபு!

உடனே கத்தி சுத்தியிருந்தவர்களை உதவிக்கு அழைத்தவள், பாய்ந்து அவன் தலைமுடியைப் பற்றி இழுத்துப் படியில் போட, மற்றவர்கள் ஓடி வந்து முதலுதவி செய்து அவனைக் காப்பாற்றினர்.

அவன் கண் விழித்ததுமே முதலில் கண்டது, அழுதழுது சிவந்திருந்த அம்முவின் முகத்தைத்தான்!

உடனே எழுந்து அமர்ந்தவனிடம், "என்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டே இல்லே பாபு...? நான் பயந்துட்டேன்..." விசும்ப ஆரம்பித்தாள் அவள்.

"ஊஹும்... நான் போக மாட்டேன்... நீயும் என்கூட கடைசி வரைக்கும் இருக்கணும்... இருப்பியா?"

அழுத்தமான குரலில் அவன் கேட்க, கைப்பிடித்து அவள் சரியென்றது மற்றவர்களுக்கு எப்படியோ - அவனுக்குள் பெரும் பாதிப்பை ஏற்படுத்த... அந்தக் கணமே அவனுக்குள் நீங்காமல் நிறைந்து, ஒரு தேவதையாகிப் போனாள் அம்மு!

அன்றிலிருந்து இன்று வரை அவனால் அம்முவை மறக்கவே முடியவில்லை.

அவளுடைய சாயல் சதாவிடம் சிறிது தெரிவதைப்போல் தோன்றியதாலேயே, தான் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டோமோவென்று... இன்றுகூட ஒரு சந்தேகம் எழுவதாய்!

மனம் மீண்டும் பழைய கூட்டிற்குள் தாவியது... அவனுடைய வாழ்க்கை வசந்தத்தைச் சுமந்து ரம்யமாய்ச் சென்று கொண்டிருந்தது.

அப்போதுதான் ஒருநாள், அவனுடைய கனவுகளைக் கலைக்கவென்றே போலீசுடன் வந்து சேர்ந்தார், அவனுடைய தந்தையின் பார்ட்னரான கிஷோர்.

அவனைக் கண்டதும் அவர் உற்சாகத்துடன் கட்டிப் பிடித்து முத்தமிட, அவனுக்குத்தான் உள்ளே முணுக்கென்று சிறு வலி!

பிறகு பெரியவர்கள் கூடி முடிவு செய்ததில், பாபு கிஷோருடன் டெல்லிக்குச் செல்வதென்று ஏற்பாடாயிற்று.

பாபு தான் எதையோ இழந்ததுபோல் துடித்துப் போனான்.

அதைவிட நடேசனும், தேவியும் பித்துப் பிடித்ததைப் போலாயினர்.

அம்முவோ, அவன் பிரிந்து செல்லப் போவதை ஜீரணிக்க முடியாமல் அழுதழுது உடைந்து போயிருந்தாள்... அவளுக்குக் காய்ச்சலே வந்துவிட்டது.

அவன் அந்த வீட்டை விட்டுக் கிளம்பும் நாளும் வந்தது.

கிஷோருடன் காரில் ஏறியவன், திரும்பவும் இறங்கி ஓடி வந்து அம்முவைக் கட்டிக் கொண்டு அழ, வெகுவாய்ச் சமாதானம் செய்த பிறகுதான், கிஷோர் அவனை டெல்லிக்கு அழைத்துச் சென்றார்.



செந்திலின் நண்பர் என்றதாலும், போலீஸ் வந்ததாலும், நடேசனால் மறுக்கவும் முடியவில்லை.

ஆனால், அங்கு சென்ற பிறகுதான் அவனுக்கும் புரிந்தது...

கிஷோரின் குடும்பம் அவனை ஒரு வேலைக்காரனைப் போல் நடத்த ஆரம்பித்தனர்.

படிப்பும் நிறுத்தப்பட்டிருக்க, மூன்று மாதங்கள் கழித்து சொத்துக்களை விற்று எடுத்துக் கொண்டவுடன், ஒரு கருணை இல்லத்தில் அவன் சேர்க்கப்பட்டான்.

படிப்புச் செலவை மட்டும் கார்டியனாக கிஷோர் ஏற்க, ஒரு கான்வென்ட்டில் பயில ஆரம்பித்தான்.

ஒரு வருடம் வீணாகி இருந்தாலும், நல்ல புத்திசாலி என்பதால், எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண்கள் எடுத்துத் தேறினான்.

அப்போதுதான் அங்கு உடன் பயின்ற பிரபுராஜ் அவனுக்கு நெருங்கிய தோழனானான்.

அவன் படிப்பில் வெகு சுமார் என்பதால், பாபுவே அவனுக்குப் பாடங்களைச் சொல்லித் தர ஆரம்பித்தான்.

அந்த வருடம் அரைப் பரீட்சையில் பிரபு அதிக மதிப்பெண்கள் எடுத்துத் தேறியிருக்க, அந்த வருட இறுதியில் ‘கம்பைண்ட் ஸ்டடி’ என்று பாபுவும், பிரபுவின் வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தான்.

விடுமுறையிலும் இருவரும் சேர்ந்து பொழுதைக் கழிக்க, அடுத்த வருட ஆரம்பத்தில் பிரபு தன் பெற்றோரிடம் ஒரு கோரிக்கை வைத்தான்.

"அப்பா! ப்ருத்வியும் நம்மோடயே இருக்கட்டுமே... அவனை நாமளே படிக்க வைக்கலாமே... நம்ம வீட்டுலேயே இருந்தா, அவன் எனக்குப் பாடமெல்லாம் நல்லா சொல்லித் தருவான் இல்லியா?" ஆர்வத்துடன் கேட்டான்.

பாபுவைப் பள்ளியில் அழைக்கும் பெயர் 'ப்ருத்விராஜ்' என்பதால் நண்பர்களுக்கு ப்ருத்வியென்றால்தான் தெரியும்! அதனால் எல்லோருக்குமே ப்ருத்வியாகிப் போனான்.

பிறகு பரணியும் புஷ்பாவுமாகக் கலந்து பேசி ஒரு நல்ல முடிவாய் எடுத்து ப்ருத்வியைத் தங்கள் வீட்டிலேயே வளர்க்க ஆரம்பித்தனர்.

அன்றிலிருந்து, நட்புக்கு இலக்கணமாய்ப் பிரபுவும் ப்ருத்வியும் சீரும் சிறப்புமாய் வளர்ந்தனர்.

ஆனால், ப்ருத்வியால் மட்டும், தன் பிஞ்சு மனதில் பதிந்த அம்முவை மறக்கமுடியவில்லை!

இரண்டு வருடங்கள் கழித்துப் பரணீதரனுக்குச் சென்னைக்கு மாற்றலாகி விட்டது.

எல்லாப் படிப்பையும், மெரிட்டிலும் ஸ்காலர்ஷிப்பிலுமே ப்ருத்வி முடித்தான்.

வெளிநாட்டுப் படிப்பும், அப்படியே அமைந்தது.... அப்போதும்... மாறா நேசத்துடன் அவன் இதயத்தில் - புத்தகத்தின் நடுவே ஒளித்து வைத்த மயிலிறகாய்... நீங்காதிருந்தாள் அந்த தேவதை!

அதனால், அமெரிக்காவிற்கு எம்.பி.ஏ படிக்கச் செல்வதற்கு முன்பு, சிறுமலைப் பகுதிக்குச் சென்று நடேசன்



குடும்பத்தாரையும், அம்முவையும் ப்ருத்வி ஆவலுடன் தேடினான்.

ஆனால், ரைஸ் மில் எப்போதோ விற்கப்பட்டிருக்க, அவர்களுடைய வீட்டையும் வேறு யாரோ வாங்கிக் குடியிருந்தனர்.

அவர்களுக்கும் பழைய ஓனரைப் பற்றிய எந்த விபரமும் தெரியவில்லை.

சோர்ந்து போய்த் திரும்பியவனுக்குள், சிறு நம்பிக்கைச் சுடராய் அம்முவின் நினைவுகள்!

என்றாவது ஒருநாள், அவளையே கைப்பிடிப்போம் என்ற உதிராத நம்பிக்கை! இன்று கடவுளின் தீர்ப்போ என்னவோ, பிரபுவே தங்கள் தாய் தந்தைக்கு அளித்துச் சென்றது போல், அவர்களின் தத்துப் பிள்ளையாய் ப்ருத்வி இருக்கிறான்.

அவனால், தன் மனதில் சிறு வயதிலேயே தேவதையாய் இடம் பெற்று உயிரிலும் உணர்விலும் ஒன்று கலந்த அம்முவை, இன்று வரை மறக்க முடியவில்லை.

மொட்டை மாடி... பவுர்ணமி நிலவுகள்... எங்கோ ஒலிக்கும் ஒற்றைக் குயிலோசை... இன்று தொலைக் காட்சிகளில் மட்டுமே காண முடிகிற சிறு வயது விளை யாட்டுக்கள்...

எப்போதோ அபூர்வமாய்க் கண்களில் தென்படுகின்ற ஊஞ்சல்... மழை நீர் தேக்கிப் பாமரச் சிறுவர்கள் விடுகின்ற காகிதக் கப்பல்...

இப்படி எல்லாமே, தன் உயிரைக் காப்பாற்றிய அந்தக் குட்டித் தேவதையின் நினைவுகள் அவனுக்குள் ஆழமாய்ப் பதிந்துவிட்டதை இன்றும் பறை சாற்றிக் கொண்டுதான் இருக்கின்றன.

சுகவரிகளாய்... அவள் முகவரியே நெஞ்சம் முழுவதும்...!

ஆனால் தங்கள் மகனுடைய இழப்பையும் மீறி, சதா தங்களுக்கு மருகமளாக வர வேண்டும் என்ற உயர்ந்த உள்ளங்களின் கோரிக்கையை, அவனால் மறுக்கவும் முடியவில்லை.

அவளுடைய ஞாபகங்கள் மட்டும்... ஆலமர வேர்களாய் நெஞ்சமெங்கும் பரவியிருந்தன. நன்றிக் கடன் பட்டு, இன்று இருதலைக் கொள்ளி எறும்பாய் அவன்!

## 10

பழைய ஞாபகங்கள்... இரை தேடி முடித்துக் கூடு திரும்பிய பறவையாய் நிகழ்காலத்திற்குள் புகுந்தன.

எழுந்து உள்ளே வந்தபோது, அம்முவின் ஞாபகத்தை ஆழ்மனதிலிருந்து புதையலாய்க் கிளறி விட்டுவிட்டு, அதைப் பற்றிய சிந்தனையே இன்றி நிச்சலனமாய்த் தரையில் உறங்கிக் கொண்டிருந்தாள் சதா.

சிறு வெறுப்பும் சீற்றமுமாய்ப் படுத்துக் கொண்டான் அவன். ஏனோ, சதாவின் மேல் கோபம் அதிகரித்துக் கொண்டே போனது.



அவள் மட்டும் தன் வாழ்வில் வரவில்லையென்றால், அமெரிக்காவிலிருந்து வந்ததும், ஒரு டிடெக்டிவ் ஏஜென்சி மூலமாக எப்படியாவது தேடி அம்முவைக் கண்டுபிடித் திருப்பான்... அந்த தேவதையைக் கண்ணுக்குள் வைத்துப் பூஜித்திருப்பான்.

இன்று... வளர்ப்புப் பெற்றோர் அமைத்துக் கொடுத்த வாழ்க்கையிலும் ஒன்ற முடியாமல், அம்முவைத் தன் மனதிலிருந்து நீக்கவும் முடியாமல் தவித்துக் கொண்டி ருக்கிறான்.

அந்த நேரம், மனதில் தாபத்துடன் ஒரு வினா ஜனித்தது.

என் தேவதையே... என் பெண்மையே... எங்கிருக்கிறாய் நீ...?

என் குரல் காதில் விழாத தூரத்திலா...? என்னை ஞாபகம் வைத்திருக்கிறாயா?

உன் நினைவில், அக்னித் திவலையை விழுங்கியது போல்

உடல் முழுவதும் அனலாய்த் தகிக்க...

தவித்து நான் நிற்பது தெரியுமா உனக்கு?

திடீரென்று ஏதோ புரியாத சப்தம்...

சட்டென்று கனவு கலைந்து, நினைவுச் சிதைவு ஏற்பட்டு நிமிர்ந்தால், சதாதான் விக்கலை நிறுத்தத் தண்ணீரை எடுத்து அருந்திக் கொண்டிருந்தாள்.

குரோதமும், சினமுமாகத் திரும்பிப் படுத்து, உறக்கத்தை யாசிக்க ஆரம்பித்தான் அவன்.

மறுநாள் அவனை அழைத்த பரணி, டைல்ஸ் தயாரிப்பில் புதிதாக ஒரு யுக்தியைக் கூறினார்.

அன்றிரவு அவன் உறங்கப் போகும் முன்பு அவனை அழைத்தவர், "ப்ருத்வி! டைல்ஸ்லே புதுப் புது டிசைன்ஸ் அறிமுகப்படுத்திட்டே இருந்தாத்தான், மார்க்கெட்டுல நிலைச்சு இருக்க முடியும்...

பூஜை ரூமுக்கேத்த மாதிரி கடவுள் உருவங்கள்... படுக்கையறைக்கு ஏத்த மாதிரி பூக்கள்... சமையலறைக்கு ஏத்த மாதிரி பழம், காய்கறிகள்னு இதுவரைக்கும் டிசைன் செஞ்சோம்...

இப்போது புது ஐடியா ஒண்ணு தோணியிருக்கு! வரவேற்பறையில சோபா போடறதுக்கு நடுவிலே இருக்கிற இடத்துல உண்மையான கார்ப்பெட் மாதிரி, பலவிதமான அளவுகள்ளே வர மாதிரி, கலர் கலரான டிசைன்லே டைல்ஸ் தயார் செஞ்சோம்னா புதுமையா இருக்கும் இல்லையா?" ஆர்வத்துடன் கேட்டார்.

சட்டென்று, அவன் முகத்தில் ஒரு சுடர் தெரிவது போல்!

"தேங்க்யூப்பா... முயற்சி பண்ணலாம்... நல்ல ஐடியா வாத்தான் தெரியுது!" உற்சாகத்துடன் பாராட்டினான்.

மறுநாளே அதற்கான டிசைன்கள் போடப்பட்டு, மாடல்கள் தயாராக ஆரம்பித்தன.

அந்த வார இறுதியில், தனபாலின் தாய் ஜெயாவிட மிருந்து ஒரு விபரீதச் செய்தியைத் தாங்கி ஒரு போன் வந்தது.



விபரமறிந்து துடித்துப் போனவன், உடனே அலுவலகத் திலிருந்து கிளம்பி மருத்துவமனைக்குச் சென்றான்.

அங்கு, அதிகமான மன உளைச்சலால் தூக்க மாத்திரைகளை விழுங்கித் தற்கொலைக்கு முயன்று மீண்டிருந்தான் தனபால்.

ப்ருத்விக்கோ, உடலும் உள்ளமும் பதறிப் போனது.

ஐசியூவிற்கு வெளியே கண்ணீருடன் நின்றிருந்த ஜெயா. அவனைக் கண்டதும் வாய் பொத்தி விம்ம ஆரம்பித்தார்.

"என்னாச்சும்மா? ஏன் இப்படிச் செஞ்சான்?"

பதட்டத்துடன் வினவிய ப்ருத்வியிடம், நேற்று நடந்த விபரங்களை நடுக்கத்துடன் கூற ஆரம்பித்தார் அவர்.

"நேத்து, பவானி வீட்டுக்கு வரதுக்கு எப்பவும் போல லேட்டாச்சுப்பா... வரும்போதே வித்தியாசமாத்தான் இருந்தா... அப்புறம்தான் தெரிஞ்சுது... அவ குடிச்சிட்டு வந்திருக்கிற விஷயம்!

"உடனே தனபால் கத்த ஆரம்பிச்சான்... ரெண்டு பேருக்கும் வாய்த் தகராறு முத்தி ரசாபாசமாயிடுச்சி... அப்பதான்..."

மேலே பேச முடியாமல் அவர் தடுமாற, "சொல்லுங் கம்மா... அப்புறம் என்னாச்சி?" தவிப்புடன் கேட்டான் அவன்.

"அப்பதான், அவ, தான் வேற ஒருத்தனை விரும்பற தாகவும், பெரிய பணக்காரன்னும் அவன் கூடத்தான்

இவ்வளவு நேரம் ஈசிஆர் ரோடில இருக்கற ரிசார்ட்டில தங்கிட்டு வந்ததாகவும், ஆபீசுக்கே போகலைன்னும் ஒரு இடியைத் தூக்கிப் போட்டா!"

"கடவுளே...!"

"நான் அப்படியே மரத்துப் போய் மயங்கிச் சரிஞ்சு உக்காந்திட்டேன்... ரொம்ப நேரத்துக்கு என்ன நடந்ததுன்னே எனக்கு நினைவில்லை...

திடீர்னு சுய நினைவு வந்து கண் முழிச்சிப் பாத்தா, என் பக்கத்துல வித்தியாசமா கையைப் பரப்பி நினைவில்லாமக் கிடந்தான்ப்பா தனபால்!

பதறிப் போய் எழுந்து பார்த்தேன்... அவன் பக்கத்துல என்னோட தூக்க மாத்திரை பாட்டில் காலியா இருந்தது...

உடனே பக்கத்து வீட்டுக்காரரை எழுப்பி இங்கே கொண்டு வந்து அட்மிட் பண்ணினோம்..."

"இப்ப பவானி எங்கே?" மிருகமாய் உறுமினான் ப்ருத்வி.

"தெரியலைப்பா! நான் கண்ணு முழிச்சப்ப அவ வீட்டில இல்லை! ஒருவேளை அவங்கப்பா வீட்டுக்குப் போயிருக்காளோ என்னவோ?"

"சரிம்மா... நான் பாத்துக்கறேன்... நீங்க தைரியமா இருங்க... அவனைப் பாத்துட்டு வரேன்..."

ஐசியூவிற்குள் சென்று தனபாலைப் பார்த்தபோது, நினைவு திரும்பியிருக்க, தாங்க முடியாமல் அழ ஆரம்பித்தான் அவன்.

அவனைச் சமாதானப் படுத்திவிட்டு வெளியே வந்தபோது, வாழ்க்கையே சூன்யமாகிப் போன ஒரு உணர்வு!



பெண்கள் அனைவருமே மாயப் பிசாசுகளாய் உருக்கொண்டு மனதில் உலா வந்தனர்.

ஒரு வழியாக அவன் தேற ஆரம்பித்து, வீட்டிற்கு வந்ததும், ஒருநாள் அவனைப் பார்ப்பதற்கு, புஷ்பாவையும் சதாவையும் அழைத்துச் சென்றான் ப்ருத்வி.

புஷ்பா, ஜெயாவிற்கு ஆறுதல் கூற, இருவரும் தனபாலிடம் பேசிக் கொண்டிருந்தனர்.

சதாவின் மனம் அவனுக்காக உருகியது... "அண்ணா! எந்தத் தோல்விக்கும் தற்கொலை ஒரு தீர்வு கிடையாது! ஒண்ணு அவங்களைத் திருத்தணும்... இல்லை, நாம மனசை மாத்திக்கணும்!

"பவானி செஞ்சது மன்னிக்க முடியாத தப்புதான்... ஆனா, தப்பு செஞ்சவங்களே தைரியமா இந்த சமூகத்தில நடமாடறபோது, நிரபராதியான நீங்க ஏன் தண்டனையை ஏத்துக்கணும்!

"இதுக்கான தண்டனையை அவங்களுக்குக் குடுங்க... 'நீ பிரிஞ்சு போனதால நான் ஒண்ணும் உடைஞ்சு போயிடலை... முன்பை விட சந்தோஷமா இருக்கேன்'னு வாழ்ந்து காமிங்க...

"முடிஞ்சா வேலையில் ஃபாரின் போற ஆஃபர் கிடைச்சா உடனே ஏத்துக்கங்க... ஒரு சேஞ்சா இருக்கும்... அம்மாவை நாங்க எல்லாரும் பாத்துக்கறோம்...

"மத்தவங்க நம்மை நிராகரிக்கும்போது அவங்க புறக்கணிக்கவே முடியாதபடி, வியந்து பார்க்கிற மாதிரி உயர்ந்து காட்டுங்க...

"கடவுள் எப்பவுமே ஊமையா இருக்க மாட்டார்... நிச்சயமா உங்களுக்கான நல்ல எதிர்காலமும் அழகான பரிசும் காத்திட்டிருக்கும்...

"அதை முயற்சி பண்ணித் தேடி மீட்டெடுக்க வேண்டியது நம்ம கடமை!

"நிச்சயமா நீங்க புதுத் தெம்போட, தைரியமா, வீரியத்தோட வாழ்க்கையில நிமிர்ந்து ஜெயிச்சுக் காட்டுங்க... ஒரு நாள் அவங்க உங்க காலடியில வந்து விழுவாங்க பாருங்க..."

ஒரு வித வேகத்துடன் அவள் முடித்தபோது, யாரோ தோள் தொடுவது புரிந்தது.

திரும்பினால், ஜெயாவும் புஷ்பாவும் நின்றிருந்தனர்.

தனபாலின் விழியோரங்களில் நீர் கசிய, புது நம்பிக்கை ஒளி சிறு கீற்றாய் அவன் பார்வையில் ஒளிர்ந்தது.

"ரொம்ப நன்றிம்மா – இவ்வளவு அழகா அவன் மனசுல பதியற மாதிரி அட்வைஸ் பண்ணினதுக்கு! இதுக்குத்தான் நண்பர்கள் வேணும்கிறது... நாம தவறான பாதையில போனா திருத்த... சரியான பாதை காட்ட, எல்லாத்துக்குமே நல்ல நட்பு வேணும்!" உணர்ச்சிகள் நிறைந்த நிலையில் கூறினார் ஜெயா.

"தேங்க் யூ சோ மச் சதா..." மெல்லிய குரலில் கூறிவிட்டு கண்களை மூடி மெல்லச் சாய்ந்து கொண்டான் தனபால்.

பிறகு பெண்கள் அனைவரும் வெளியே வர, ப்ருத்வி மட்டும் அவனுடைய கையை ஆதரவாகப் பற்றியபடி, சிறிது நேரம் அங்கேயே அமர்ந்திருந்தான்.



கன்னத்தில் கோடாய் இறங்கிய நீரின் சுவடுகள், தனபாலின் வேதனையைப் பறை சாற்ற, இதயம் கனத்துப் போனது.

'ஏன், இந்தத் தலைமுறையில் சில பெண்களின் போக்கு பாதை மாறிப் போகிறது...?'

'அதிகப்படியான பணமா? இரவு நேரங்களிலும் இரு பாலாருமாக வேலை செய்கின்ற சந்தர்ப்பங்களா...? நமது பண்பாட்டுக் கலாச்சாரங்கள் அழிந்து, மேல் நாட்டு மோகமும், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கிற மாய மனப்பான்மையும் அதிகரித்ததா...?' விரக்தியுடன் பல வினாக்கள் ஜனித்தன.

ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சதாவும் இதையேதான் நினைத்திருந்தாள்.

பிறகு மூவரும் விடைபெற்று வீட்டிற்குச் சென்ற போதுதான், முதன் முறையாக ப்ருத்வி அவளிடம் மனம் திறந்து பேசினான்.

அவர்களுடைய அறைக்குச் சென்றதும், அவளிடம் திரும்பியவன், "தேங்க்ஸ் சதா, தனாவுக்கு நம்பிக்கை கொடுக்கற மாதிரிப் பேசினதுக்கு ரொம்ப நன்றி! பாவம் அவன்! நான், பிரபு எல்லாரும் சேர்ந்துதான் அவனுக்கு லவ் மேரேஜ் செஞ்சு வெச்சோம்! அப்ப அங்கிள் உயிரோடு இருந்தாரு... ரெண்டு பேரும் சம்மதிச்சித்தான் ஏத்துக்கிட்டாங்க...

"அப்போ, பவானி வீட்டில அவளைச் சேத்துக்கலை... இப்போ ஏத்துக்கிட்டாங்க போலருக்கு... ஆனாலும் இந்த மாதிரி நடக்கறது தப்புன்னு பொண்ணுக்கு அட்வைஸ் பண்ண மாட்டாங்க... சே..." சீற்றத்துடன் பொருமினான்.

அமைதியாக அவனையே நோக்கியவளுக்குள், முதன் முதலாக அவன் மனம் திறந்து தன்னிடம் பேசியது, பெரும் இதமாய்! மழை நின்றும் மரக்கிளைகள் மாயத் தூறல் போடுவது போல்... நெஞ்சிற்குள் சாரலாய் அவன் வார்த்தைகள்!

அதில் உறைந்து நின்றிருந்தவளை, அவன் குரல் உசுப்பியது.

"என்ன... அங்கே தனாகிட்டே அப்படி அட்வைஸ் பண்ணினே! இப்போ இப்படி அமைதியா நிக்கறே?" ஒருவிதக் கூர்மையுடன் கேட்டான்.

"ம்... நீங்க என்கிட்டே நன்றி சொல்றதா...? உலகமே தலை கீழா சுத்தற மாதிரி... அமாவாசை அன்னிக்கு திடீர்னு முழு நிலவு பிரகாசிச்ச மாதிரி இருந்தது... அதான் ஃப்ரீஸ் ஆகி நின்னுட்டேன்..."

சிறு உதட்டுச் சுழிப்புடன், குறும்பாக நிறுத்தினாள்.

அந்தச் சிறு செய்கை அவனுக்குள் பெரும் பாதிப்பை ஏற்படுத்த, "ஓ" என்றவன் ஏதோ ஞாபகத்தில் சிறிது நேரம் பேசவேயில்லை.

"ஏன்... என்னாச்சி... என்னைச் சொல்லிட்டு நீங்க அமைதியாயிட்டீங்க?"

"ம்... ஏதோ பழைய ஞாபகங்கள்... அது சரி... எனக்கு ஒரு ஹெல்ப் செய்யணுமே?" சிறு தயக்கத்துடன் நிறுத்தினான்.

"என்ன... சொல்லுங்க..."



ஆவலுடன் அவள் கேட்க, "இல்லை! நான் போய்ப் பவானி கிட்டே பேச முடியாது. ஆனா, ஒரு பெண்ணா, இதைப் பத்தி நீ தைரியமாப் பேசலாம்... அதான்... எனக்காக இந்த உதவியைச் செய்ய முடியுமா?" மெதுவாக யாசித்தான்.

"நிச்சயமா செய்யறேன்... அவங்க எங்கே வொர்க் பண்றாங்கன்னு சொல்லுங்க... போன் நம்பர் இருந்தாக் குடுங்க... நாளைக்கே பேசறேன்." உறுதியுடன் முடித்தாள் அவள்.

அன்றிரவு அவள் உறங்கி விட்டாலும், அவனால் ஏனோ உறங்கவே முடியவில்லை!

ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகு மோதி, இதயப் பாறை இளகியதுபோல் ஒரு வித உணர்வு!

அவளுடைய ஒரு சிறு உதட்டுச் சுழிப்பு... எங்கோ அவனை அழைத்துச் செல்வதாய்!

மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தபோது, அந்த முகம் குழந்தைத்தனமாய்... எந்தவிதக் கர்வமும் இறுக்கமும் இன்றி, மெல்லிய விளக்கொளியில்... நிலவின் மறுபதிப்பாய்!

ஏனோ அன்று அவளைப் பார்க்கும்போது, அம்மு வையே பார்ப்பதுபோல்!

எந்த யுகத்திலோ அவளுடன் இணைந்து பழகிய உணர்வு புதிதாய் எழ, தலையைக் குலுக்கி, அதை விலக்கித் திரும்பிப் படுத்துக் கொண்டான் அவன்.

# 11

மறுநாள் மாலையில் அவன் பவானியின் செல் எண்ணைத் தர, அடுத்த நாளே அவளைத் தொடர்பு கொண்டாள் சதா.

"ஹலோ! நான் தனபால் அண்ணா ஃப்ரெண்ட் ப்ருத்வியோட ஒய்ஃப் சதா பேசறேன்! உங்களோட நான் கொஞ்சம் தனியாப் பேசணுமே!" மெதுவாகக் கேட்டாள்.

"சாரி! இப்ப இருக்கற சூழ்நிலையில நான் யாரோடவும் பேச விரும்பலை!" சட்டென்று தொடர்பைத் துண்டித்து விட்டாள் அவள்!

ஆனால் சதா விடுவதாயில்லை... அன்று மாலையே அவளுடைய அலுவலகத்திற்குப் போய்விட்டாள்.

தேடி வந்தவளை மறுக்க முடியாமல் அங்கிருந்த காபி ஷாப்பிற்கு அழைத்துச் சென்றாள் அவள்.

நாற்காலியில் அமர்ந்ததுமே, "உங்களுக்கு என்ன பேசணும்? எனக்கு டைம் இல்லை... அதோட இது எங்க பர்சனல் மேட்டர்!" அலட்சியமாக மொழிந்தாள்.

"இது உங்க பர்சனல் மேட்டர்தான் பவானி! ஆனா அது வீட்டுக்குள்ளே இருக்கிற வரைக்கும்தான்! இப்ப தனபால் அண்ணா தற்கொலைக்கு முயன்று ஹாஸ்பிட்டல் வரைக்கும் போய்ப் பிரச்சனை தெருவுக்கு வந்தாச்சு!"

அழுத்தமான குரலில் அவள் கூற, விதிர்த்துப் போய்ப் பவானி நிமிர்ந்தபோதுதான், அவளுக்கு விபரமே தெரியா தென்பது புரிந்தது.



"என்ன...? தனா தற்கொலைக்கு..." அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை.

"ஆமாம்! இப்ப குடும்ப வன்முறைச் சட்டமெல்லாம் பெண்களுக்குச சாதகமாகவே இருந்தாலும், ஆண்களுக்கும் சட்டம் துணை வரும்!

அன்னிக்கே என் ஹஸ்பெண்ட் ப்ருத்வி, உங்க மேல ஒரு போலீஸ் கம்ப்ளையிண்ட் குடுத்திடலாம்னு சொன்னாரு...!

மன உளைச்சலாலயும், மனைவியோட கேரக்டர் சரியில்லாததாலயும், தனா அண்ணா தற்கொலைக்கு முயன்றதாகவும், அதுக்குக் காரணம் நீங்கதான்னும், இனிமே அவருக்கு ஏதாவது நேர்ந்தாலும் அதுக்கும் நீங்கதான் காரணம்ன்னும், புகார் கொடுக்கலாம்னு சொன்னாரு!"

"என்ன...! என்னை மிரட்டறீங்களா...?" பயமும் மிரட்சியும் அவள் விழிகளில் அப்பட்டமாய்க் கசிந்தன.

"இல்லை... மிரட்டலை! உண்மையைச் சொல்ல வந்தேன்... சில நேரங்கள்லே ஆர்டிஓ விசாரணை, ஆண்களுக்கும் சாதகமான முடிவைத் தரும்...

தனா அண்ணாவோட நண்பர்கள் எல்லாருமே உங்களுக்கு எதிரா சாட்சி சொல்லுவாங்க... அவர் தற்கொலை முயற்சியே ஒரு முக்கிய சாட்சியாயிடும்...

அப்புறம்... உங்க புது நண்பர் நினைச்சாக்கூட இதிலிருந்து உங்களைக் காப்பாத்த முடியாது...! வேணும்னா கேட்டுப் பாருங்களேன்... இந்த விஷயத்துல கோர்ட்டுக்கு அவர் துணைக்கு வராரான்னு? ...ம்...!"

அமர்த்தலாகக் கேட்டுவிட்டு, அவளையே கூர்ந்தபடி அமர்ந்திருந்தாள் சதா.

"உங்களுக்கு அதெல்லாம் எப்படித் தெரியும்...?" தர்மசங்கடமும் தவிப்பும் தெரிந்தன அவள் குரலில்!

"ம்... தனா அண்ணாதான் எங்க வீட்டுக்காரர்கிட்டே சொன்னாங்க... இன்னொண்ணும் சொன்னாங்க... அது என்னன்னு தெரியுமா...? உங்க மேல போலீஸ் புகார் குடுக்க அவங்க சம்மதிக்கலை!" மெல்ல நிறுத்தினாள்.

சட்டென்று நிமிர்ந்தவளின் விழிகளில் நீரின் முகவரி!

"உங்க மேல இவ்வளவு பாசம் வெச்சிருக்கறவரை, எப்படிங்க ஏமாத்த மனசு வந்தது? அதுவும் லவ் மேரேஜ் வேற!

ஹும்... பொண்ணுங்கன்னா மாரல் வேல்யூஸ் கொஞ்சமாவது இருக்கணும்! நாம மிருகங்களா என்ன? நமக்குன்னு ஒரு கலாச்சாரம், பண்பாடு எல்லாமே இருக்கு! அதை விட்டுட்டு கற்கால மனிதர்களா வாழ நினைச்சா, அப்புறம் எதுக்கு நம்ம அறிவை மேம்படுத்தற படிப்பு... பக்குவம்... முதிர்ச்சி எல்லாம்!

எப்படி வேணும்னாலும் வாழலாம்னா அதுக்கு எதுக்கு இந்தக் கல்யாணம், சடங்குகள், ஒருவனுக்கு ஒருத்திங்கற கோட்பாடெல்லாம்...?

அதையெல்லாம் உடைச்செறிஞ்சிட்டு 'லிவிங் டு கெதர்'ங்கிற மாதிரி - பிடிச்சா வாழறது, பிடிக்கலைன்னா பிரியறதுன்னு உங்க மாதிரியே யோசிக்கிறவரைத் தே தடுத்து, அந்த மேல் நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாமே?



எதுக்கு தனா அண்ணா மாதிரி 'இன்னசெண்ட்' ஆனவங்க வாழ்க்கையைப் பலியாக்கணும்?

கை நிறையப் பணமிருந்தும் குடும்பத்தோட நேரம் செலவிட முடியாதது... அதிகமான சம்பளம்... ஒரு மாய வலை மாதிரி உலகத்து சந்தோஷம் அத்தனையையும் தங்களால விலைக்கு வாங்க முடியும்கிற வேகத்தைத் தர்றது... தவறான தொடர்புகள் அதிகமாகிறது... நீயா நானான்ற ஈகோ இரண்டு பேருக்கும் இடையில நெருப்பா தகிக்கறது... இதெல்லாம்தான் பல விவாகரத்துகளுக்குக் காரணமாகுது!

ரொம்ப சுலபமா அழிவுப் பாதையில போகலாம்... அதை வெற்றிப் பாதையா மாத்தறதுதான் கஷ்டம்!

அதிகமான பணம்... கேட்க ஆளில்லாத நிலை... ஆண்களோட கூடவே பழகுற அதிகத் தருணங்கள்... தேவையில்லாத ஆடம்பரங்கள் நம்மைச் சுத்திப் போட்டுக் காட்டற நட்பு வட்டம்... எல்லாமே இருந்தாலும் தனக்குன்னு ஒரு ஒழுக்கம் - வரையறையை வகுத்துக்கிறவதான் நிஜமான தமிழ்ப் பொண்ணு!

முதல்லே நீங்க ஆறறிவு படைச்ச மனுஷியா... இல்லை அஞ்சறிவு மிருகமான்னு முடிவு செய்யுங்க பவானி... நான் வரேன்!"

கைப்பையை எடுத்துக்கொண்டு வேகமாக விரைந்தவளை, அழுத்தமான குரலொன்று நிறுத்தியது.

"வெல்டன் சதா! அவளுக்குச் சரியான பாடம் சொல்லிக் குடுத்தே!" ப்ருத்விதான் அங்கு நின்றிருந்தான்.

"நீங்க எப்படி இங்கே?"

அவள் குழப்பத்துடன் கேட்கும்போதே, "நான் ஒரு வேலையா இந்தப் பக்கம் வந்தேன்... அப்பதான் நீங்க ரெண்டு பேரும் இந்தக் காபி ஷாப்புக்குள்ளே நுழையறதைப் பார்த்தேன்.

உங்களுக்கு அடுத்த டேபிள்லேதான் நான் இருந்தேன்... இந்த அரையிருட்டில நீங்க கவனிக்கலை... அவளை நீ ஹேண்டில் பண்ணின விதம் சூப்பர்ப்! அவ நிச்சயமா யோசிக்க ஆரம்பிச்சிருப்பா!" உள்ளார்ந்த மகிழ்வுடன் கூறினான்.

"ம்... அப்படி யோசிக்க ஆரம்பிச்சா, அது தனா அண்ணாவுக்குச் சாதகமான முடிவைக் குடுக்கும்... பார்ப்போம்..."

மெல்லிய குரலில் கூறிவிட்டு அவள் நகர, "வா... நாம ரெண்டு பேரும் எங்கேயாவது டிபன் சாப்பிட்டுப் போகலாம்..." என்று அழைத்துச் சென்றான் அவன்.

சாப்பிட்டு விட்டுத் திரும்பும் வழியெல்லாம் கடும் யோசனையிலிருந்தாள் அவள்.

வீட்டிற்குச் சென்றதும், சதா பவானியை கார்னர் செய்ததை - சரியான பாடம் புகட்டியதை, புஷ்பாவிடம் வியப்புடன் விவரிக்க ஆரம்பித்தான் ப்ருத்வி!

எல்லாவற்றையும் அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தவள், மெதுவாக எழுந்து தோட்டத்திற்குச் சென்றாள்.



இரவுக் காற்றின் சீறல், தேகத்தைத் தழுவி முடிகளோடு சில்மிஷம் செய்ய ஆரம்பித்தது... உதிர்ந்து கிடந்த மரமல்லிப் பூக்களின் நறுமணத்தைச் சுமந்து கை வீசி வரவேற்றது... தென்றல்!

வானில் நிலவுப் பெண் நட்சத்திரத் தோழர்களின் ஆதிக்கமின்றிக் கலங்கலாய்த் தனித்திருந்தாள்.

திடீரென்று தூரத்தில் ஒளிர்ந்த ஒரு மின்னல் கீற்று எங்கோ மழை பெய்து கொண்டிருப்பதை, மௌனமாய் அறிவித்தது.

மனிதர்களின் வித்தியாசமான பரிணாமங்கள் சிறு கசப்பை ஏற்படுத்த, தனக்குள்ளேயே பொங்கிய நினைவுகளுடன் உறைந்து நின்றிருந்தாள் அவள்.

அப்பா இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பார்... இந்த ஞாயிறு எப்போதும் போல் பேசி நலம் விசாரிக்க வேண்டுமென்று தோன்றியது.

எவ்வளவுதான் புஷ்பாவும் பரணியும் அன்பைப் பொழிந்து அவளைத் தங்கமாகப் பார்த்துக் கொண்டாலும், எங்கோ மூலையில் சிறுவலி... ப்ருத்வியின் புறக்கணிப்பால்!

எவ்வளவு கனவுகளைச் சுமந்து இந்தத் திருமணக் கூட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள்... எல்லாமே முகமறியா ஒரு பெண்ணினால் சிதறிப் போனதே!

முதன் முதலாக, ஒரு ஆண்... நேசத்துடன், அன்பாக... உள்ளம் கவர் கள்வனாக இதயத்தில் பரிணாமம் கொண்டும், அந்த அன்பும் நேசமும் புரிந்து கொள்ளப்படாமலே புதையுண்டிருக்கிறதே?

அவனைப் பற்றிய தேடல், ஒரு ஏக்கத்துடன் அவளை ஆக்கிரமித்தது.

அந்த நொடி, பின்புறம் ஒலித்த காலடியோசையால் நினைவுலகம் சிதைந்தது.

மெதுவாகத் திரும்பினால், ப்ருத்விதான் வந்து கொண்டிருந்தான்.

"அம்மா அப்பாவுக்கு ரொம்பப் பெருமை! இப்படி ஒரு பொண்ணு மருமகளா வர இந்த வீடு குடுத்து வெச்சிருக்கணும்னாங்க! அவங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு... நான் ரொம்ப அதிர்ஷ்டசாலியாம்!" மெல்லிய குரலில் கூறினான்.

"ஹும்! சொல்ல வேண்டியவங்க சொல்லலையே... மத்தவங்க புரிஞ்சிக்கிட்டு என்ன பிரயோஜனம்?"

சட்டென்று வார்த்தைகள் வந்துவிட, வேகமாக உள்ளே சென்று விட்டாள் அவள்.

ஆனால் அங்கேயே நின்றிருந்த ப்ருத்விக்கோ, அவளுடைய நினைவுகள் பனிச் சிதறலாய் ஆக்ரமிக்க, தான் இதுபோல் எப்படி மாறினோம் என்பது புரியாத புதிராய்!

மனதில் பதிந்த நல் வயிரமாய், இப்போது அவள் விசுவரூபமெடுப்பது புரிந்து சிறு கோபம் கூட வந்தது.

தோளில் உரிமையுடன் அமர்ந்து அலகு கோதிப் பறந்து செல்லும் வளர்ப்புப் பறவையாய் அவள் ஞாபகங்கள்!

வெகு நேரம் கழித்து அவன் உள்ளே சென்றபோது, அவள் ஆழ்ந்த உறக்கத்தின் வசமிருந்தாள்.



# 12

அந்த வாரத்தில் ஒரு நாள், புது ப்ரொஜெக்டில் அவன் பிசியாக இருந்த போது, அவனுடைய பர்சனல் செல் ஒலித்தது. எடுத்தால், தனபால்தான் அழைத்திருந்தான்.

"ஹலோ தனா... எப்படி இருக்கே? சாரிடா... உன்னை அப்புறம் காண்டக்ட் பண்ணவே முடியலை... கொஞ்சம் பிஸி... அதான்..."

"பரவாயில்லைடா ப்ருத்வி! நான் நார்மலாயிட்டேன்... நேத்துலயிருந்து வேலைக்கும் போக ஆரம்பிச்சிட்டேன்..."

"குட்! எதுக்கும் கவலைப்படாதேடா! அப்படிப் பவானி ஒத்துவரலைன்னா, அவ விரும்பினா டைவர்ஸுக்குச் சரின்னுடு!" ஆதரவாகக் கூறினான்.

"ப்ருத்வி! நானும் அது விஷயமாத்தான் உன்னைக் கூப்பிட்டேன்... இன்னிக்குக் காலையில பவானி என்னைத் தேடி வந்திருந்தா!"

"ஓ! என்ன வேணுமாம் அவளுக்கு?" அலட்சியமாகக் கேட்டான் ப்ருத்வி.

"இல்லை... தான் திருந்திட்டதா சொல்றா! நான் திரும்பவும் ஏத்துக்கறதா இருந்தா வேலையைக்கூட விட்டுடறேங்கிறா... எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலைடா!"

"என்ன திடீர் ஞானோதயம்? அவ உண்மையாத்தான் சொல்றாளான்னு சரியா தெரிஞ்சுக்க தனா! திரும்பவும் நீ ஏமாறக்கூடாது... இப்பதான் நீ நார்மலுக்கே வந்திருக்கே!" அடிக்குரலில் எச்சரித்தான்.

"அதான்... உன்கிட்டே யோசனை கேட்டேன் ப்ருத்வி. உன் ஒய்ஃப் சதா கூடத் தன்னோட தனியா பேசினதா சொன்னா!

அப்புறம் நிறைய யோசிச்சிப் பாத்தாளாம்... அவங்க அம்மா, அப்பாவும் என்கூட வாழறதுதான் சரின்னு பிடிவாதமா சொல்லிட்டாங்களாம்...

இப்பதான் புத்தி வந்திருக்குன்னு நினைக்கிறேன்... இன்னிக்கு அம்மாவோட பேசிட்டு ஒரு முடிவெடுக்கலாம்னு இருக்கேன்டா..."

"சரி தனா! ஆனா நல்லா யோசிச்சி ஒரு சரியான முடிவா எடு... அதுதான் உன் குடும்பத்துக்கும் எதிர்காலத்துக்கும் நல்லது!"

"பைடா ப்ருத்வி... சதாகிட்டே நான் ரொம்ப தேங்க்ஸ் சொன்னேன்னு சொல்லு!" என்றபடி போனை வைத்தான்.

அன்று மாலை வீட்டிற்குச் சென்றபோது, எதிர்பாராத விருந்தாளியாய்ப் பவானி வந்திருந்தாள்.

தனாவின் விஷயம் தெரியுமென்பதால் புஷ்பாவும், பரணியும் அவளை வரவேற்று அமர வைத்து விட்டு உள்ளே சென்று விட, சதாதான் டிபன் காபி கொடுத்து உபசரித்தாள்.

"சதா! நான் உங்ககூட தனியா கொஞ்சம் பேசணும்... வெளியே போகலாமா?" மெதுவாகக் கேட்டாள்.

"நானும் வரேன்... மூணு பேருமாவே போகலாம்." இடையிட்டது ப்ருத்வியின் குரல்!

"நீங்க..." அவள் தயக்கத்துடன் எழும்போதே, "அவருக்கு எல்லாம் தெரியும் பவானி!" என்றாள் சதா.



தர்ம சங்கடத்துடன் அவள் விழிக்க, "கணவன் மனைவிக்குள்ளே எந்த ஒளிவு மறைவும் இருக்கக் கூடாதுன்றது எங்க பாலிசி!" வேண்டுமென்றே அழுத்தமாக மொழிந்தான் ப்ருத்வி!

அந்த வார்த்தைகள்... அவளுக்குள் மாயப் பொன் மானாய்!

ஆனால் சட்டென்று அவனிடம் திரும்பிய சதாவின் பார்வையை எதிர்நோக்கத் தைரியம் இன்றி, கார் சாவியை எடுத்துக்கொண்டு வாசலுக்குச் சென்றான்.

கடற்கரைக்குச் சென்று காரை நிறுத்தியவன், "போய்ப் பேசிட்டிருங்க... நான் ஏதாவது ஸ்நாக்ஸ் வாங்கிட்டு வரேன்," என்றபடி விலகிச் சென்றான்.

அவன் இங்கிதத்துடன் அகன்றது பெரும் நிம்மதியைத் தர, சதாவிடம் பேச ஆரம்பித்தாள் பவானி.

"நீங்க சொன்னதை நான் ரொம்ப யோசிச்சேன்... என் பாய்ஃபிரெண்ட் ராகுல் கிட்டேயும் இதுபத்திப் பேசினேன்... அப்பதான் அவன் சுயரூபமே தெரிஞ்சுது...

எனக்காக வந்து பேசவோ என்னை ஏத்துக்கவோ அவன் தயாரா இல்லை! எந்தவித ரெஸ்பான்சிபிலிடியும் இல்லாம என்னை ஒரு போகப் பொருளாத்தான் அவன் நினைச்சிருக்கான்றது அன்னிக்குதான் எனக்குத் தெரிஞ்சுது.

தனக்குக் கல்யாணமே ஆகலைன்னு என்கிட்ட சொன்னதுகூட பொய்தான்னு புரிஞ்சிக்கிட்டேன்... இப்போ இதுதான் ஃபேஷன்... கல்ச்சர் மாறிட்டு வருது... ஒருத்தனுக்கு ஒருத்தின்றதெல்லாம் பத்தாம் பசலித்தனம்னு அவன் சொன்னதை எப்படி நம்பினேன்?

இப்படி இதுக்கு முன்னாடி எத்தனை பேர் அவன் வலையில விழுந்தாங்களோ தெரியலை... உங்க அட்வைஸால சரியான நேரத்துல நான் தப்பிச்சிட்டேன்...

ஆனா இப்ப என் வாழ்க்கைதான் கேள்விக் குறியாயிடுச்சி! விஷயம் தெரிஞ்சவுடனே எங்கப்பா அம்மா கூட என்னைக் கேவலமாய்ப் பாக்கறாங்க...

தனா கிட்டே பேசிட்டேன்... இப்ப அவர் முடிவுதான் என் முடிவும்! அவர் ஏத்துக்கிட்டா வேலையை விட்டுடலாம்னு இருக்கேன்... இல்லைன்னா பிரிஞ்சு போய் ஏதாவது ஒரு வுமன்ஸ் ஹாஸ்டல்லே இருக்க வேண்டியதுதான்..."

கண்ணீருடன் முடித்தவளைப் பார்த்தாள், சதா பரிதாபமாய்!

'ஏன், தங்கள் கைக்குக் கிடைத்த அற்புதமான வாழ்க்கையையும் வசதி வாய்ப்பையும் சில பெண்கள் புரிந்து கொள்வதில்லை...? பத்திரப்படுத்திக் கொள்ளத் தெரிவதில்லை...?' பல வினாக்கள் எழும்பின.

"என்ன சதா... பேச மாட்டேன்றீங்க? உங்களுக்கும் என்னைப் பார்த்தா வெறுப்பா இருக்கா...?" ஆதங்கத்துடன் கேட்டாள்.

"இல்லை பவானி... பாவமா இருக்கு...! வாழ்க்கையைப் புரிஞ்சிக்கத் தெரியாம, கலாச்சாரத்தோட அருமை தெரியாம, மேல்நாட்டு நாகரிகத்துக்குள்ளே முழுமையாய்ப் போகவும் முடியாம, நம்ம பண்பாட்டையும் மறந்துட்டு, பக்குவமும், மன முதிர்ச்சியும் இல்லாம இருக்கற இந்தத் தலைமுறைப் பெண்கள் சிலரோட பிரதிநிதியா உங்களைப் பாக்கிறேன்!



ஒரு கைதேர்ந்த நல்ல சிற்பியாலதான் அற்புதமான சிலையை உருவாக்க முடியும்!

அதுமாதிரிதான் ஒவ்வொரு பெண்ணும்... அவ நல்ல மாதிரியா இருந்தாத்தான் அந்தக் குடும்பம் நல்லாயிருக்கும் பவானி! பல குடும்பங்கள் நல்லாயிருந்தா ஊர் நல்லாயிருக்கும்... ஊர் பிரச்சினை இல்லாம இருந்தா நாட்டுக்கு சுபீட்சம்... விவாகரத்துக்கள் குறையும்..."

அதற்குள், ப்ருத்வி சோளம், சுண்டல், பஜ்ஜி என்று ஸ்நாக்ஸுடன் வந்து அமர்ந்தான்.

ஏதோ ஒரு தயக்கம் சூழ, இருவரும் மெதுவாகச் சாப்பிடத் துவங்கினர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, "இவர் தனா அண்ணாகிட்டே பேசுவாரு! நீங்க கவலைப்படாதீங்க... எப்பவுமே திருந்தி வந்தவங்க, தப்பே செய்யாதவங்களை விட உயர்ந்தவங்க... ஒரு குடும்பத்தோட ஆணிவேர், கணவனும் மனைவியும் தானே! சமூகப் பிரச்னைன்றது, தனி மனித வாழ்க்கையையும் குறிக்கும்தானே! திருந்தறது நல்ல மாற்றம்!

ஏன்னா, திரும்பவும் அந்தத் தப்பை செய்யப் பயப்படுவாங்க இல்லியா?" சிறு முறுவலுடன் முடித்தாள் சதா.

பிறகு சிறிது நேரம் கடலலைகளின் ஓசையும், அருகிலிருந்த ராட்டினத்தின் ஒலியும் மட்டுமே பெரிதாய்க் கேட்டன.

பவானி வெகுவாக மாறியிருப்பதும், தெளிவான ஒரு முடிவுக்கு வந்திருப்பதும் அவள் முகத்திலேயே தெரிந்தது... தன் தவறுக்காகக் கூனிக் குறுகிக் கூசி நிற்பதும் புரிவதாய்!

ஆதரவுடன் அவளுடைய கையைப் பிடித்து அழுத்திய சதாவிற்கு, பெரும் இதமாய்!

அவள் இவ்வளவு சீக்கிரம் மாறுவாளென்று எதிர்பார்க்காததால், சிலீரென்று ஒரு சிலிர்ப்பு உள்ளுக்குள் ஓடியது.

ஒரு குடும்பம் இணைவது எவ்வளவு பெரிய விஷயம்... எதையோ சாதித்த ஒரு திருப்தி உணர்வு!

பல குடும்பங்களின் கூட்டணிதானே ஒரு சமூகம்... இப்படிப் பலர் திருந்தினால் அதுதான் உயர்வு!

பிறகு சாப்பிட்டு முடித்ததுமே, பவானியை அவளுடைய தாய் வீட்டில் விட்டுவிட்டு இருவரும் திரும்பினர்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு சதா. பவானி இந்த அளவுக்கு மாறினதுக்கு உன் பேச்சும் ஒரு காரணம்னு நான் நினைக்கிறேன்... தேங்க்யூ சோ மச்...! தனா வாழ்க்கை இனியாவது சந்தோஷமா இருந்தா சரி!"

சிறு கூச்சத்துடன், "வெல்கம்...!" என்று மெதுவாக முணுமுணுத்தாள் சதா.

"இப்பல்லாம் நான் உன்கிட்ட நிறைய நன்றிக் கடன் படறேன் இல்லை...?" குறுகுறுத்த விழிகளுடன் அவளையே கூர்ந்தபடி கேட்டான் ப்ருத்வி!

அதற்குப் பதில் கூறாமல் முறுவலித்தவளின் விழிகள், உடனே தழைந்தன. இதயத்தைச் சுகமாய் நனைத்தது... அவனுடைய குறுகுறு பார்வை! அன்று வீட்டிற்கு வந்து இந்த மகிழ்ச்சியான செய்தியைப் புஷ்பாவிடம் கூறிவிட்டு உள்ளே சென்றவளுக்குள், ப்ருத்வியின் மாற்றம் பெரும் புதிராய்!



பனிச் சாரலில் சிலிர்த்த மலர்க் குவியலாய்... இதயத்திற்குள் ஒரு இனிய சிலிர்ப்பு!

அவனின் நினைவுப் பக்கங்களை ஆக்ரமிக்க, அவனுடைய வார்த்தைகளும், பார்வையும் உற்சாகத்துடன் போரிட்டன.

## 13

மறு வாரமே, தனபால் – பவானிக்கு இடையே இருந்த வேறுபாடுகளைக் களைந்து இருவரும் இணைந்த விபரத்தை, ஜெயா போன் செய்து மகிழ்ச்சியுடன் கூறினார்.

உலகத்தை வென்ற உற்சாகம் தெரிந்தது அவரிடம்!

அந்த வாரக் கடைசியில், ப்ருத்வியின் குடும்பத்தை விருந்துக்கும் அழைத்தார்.

அந்த வாரத்தில்தான் கார்ப்பெட் டிசைன்களின் – பல்வேறு நிறங்களிலும், வடிவிலும், அளவுகளிலும் – சாம்பிள் டைல்ஸ்கள் தயாராகி வந்தன.

எல்லாமே மிகவும் அழகாக வந்திருக்க, தந்தையிடம் காண்பிப்பதற்காக, ப்ருத்வி சிலவற்றை வீட்டிற்கே எடுத்து வந்திருந்தான்.

ஹார்ட் அட்டாக் வந்த பிறகு, அவர் அதிகமாக ஃபேக்டரிக்குச் செல்வதில்லை.

டெக்ஸ்டைல் ஷாப்பிற்கு மட்டும் அடிக்கடி சென்று வருவதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

இப்போதெல்லாம் அவருடன் சதாவும் சென்று, பல புதுப் புது ஐடியாக்களையும் பெண்களைக் கவரும் விதமான யுக்திகளையும் கூறிப் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாள்.

இன்று ஹாலில் அவன் பரப்பி வைத்த டைல்களைப் பார்வையிட்ட பரணி, உடனே உற்சாகத்துடன் சதாவின் கைகளைப் பற்றிக் குலுக்கினார்.

"சதா! உன் ஐடியா இதிலேயும் நல்லா வொர்க் அவுட் ஆகியிருக்கும்மா!" மனமாரப் பாராட்டினார்.

சட்டென்று உயர்ந்த புருத்வியின் பார்வை, வெகு கூர்மையாக அவளிடம் பதிய, மறுகணமே அதில் அளவிட முடியாத உற்சாகமும், சுவாரசியமும் தெரிவதாய்! வாய்மொழியால் சொல்லப்படாத சொற்கள்... அவன் விழிகளில் அர்த்தம் மிகுந்து கசிவதாய்!

"அப்பா! நீங்க என்ன சொல்றீங்க...? இது சதாவோட ஐடியாவா?" பிரமிப்புடன் கேட்டான்... அவனால் நம்பவே முடியவில்லை.

"ஆமாம்ப்பா! ஆனா அவதான் உன்கிட்டே சொல்ல வேண்டாம்னு சொன்னா!"

விழிகள் குறும்புடன் குறுகுறுக்க, அவளருகில் வந்தவன், "எத்தனை தடவை என்னை நன்றி சொல்ல வைப்பே சதா... வாயே வலிச்சிடும் போலருக்கு... எனிவே தேங்க் யூ சோ மச்!" கனிந்த குரலில் உரைத்தான்.

அவள் தேகமெங்கும்... கோடிப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்பின.



"வெல்கம்..." மென்குரலில் கூறிவிட்டு அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அவளுடைய உள்ளார்ந்த சிரிப்பை யோசனையுடன் அளவிட்டவன், "என்ன சிரிக்கறே?" எனக் கண்கள் இடுங்கக் கேட்டான்.

"ம்... இது மாதிரி இன்னும் எத்தனை தடவை நீங்க நன்றி சொல்லணுமோன்னு நினைச்சேன்... அதான் சிரிச்சேன்." குறும்புடன் பதில் கொடுத்தாள் அவள்.

"ஊஹும்..." ஒற்றை விரல் உயர்த்தி 'பத்திரம்' என்பது போல் அவன் இரு கண் சிமிட்டிச் சிரித்தான்.

முதன் முதலாக, மகனும் மருமகளும் சந்தோஷமாக இணைந்து பேசிக் கொண்டதில், புஷ்பாவிற்குள் பெரும் மகிழ்ச்சி!

என்னதான் இருவரும் பெரியவர்களுக்காக நடித்தாலும், ஆத்மார்த்தமாக இணைந்து நகைத்தது இன்றுதான்!

இருவரிடையேயும்... புதிதாய் ஒரு ஏகாந்த இழை நெய்யப்பட்டிருந்தது.

பரணியும் அதை உணர்ந்து நிறைவுடன் உள்ளே சென்றார்.

**அ**ந்த வார இறுதியில், தனபாலின் வீட்டிற்கு நான்கு பேருமே விருந்திற்குச் சென்றனர்.

ஜெயாவும், பவானியும் சமையலில் அசத்திக் கொண்டிருக்க, ஆண்கள் மூவரும் டிவி பார்க்க ஆரம்பித்தனர்.

பிறகு, புஷ்பாவையும் ஜெயாவையும் ஓய்வெடுக்கும்படி அனுப்பிவிட்டு, சதாவும் பவானியும் சமையலைத் தொடர்ந்தனர்.

பெரியவர்கள் பேசும்போதுதான், சதா கொலுவில் பாடியதைப் பற்றி ஜெயா நெகிழ்ந்து பாராட்டினார்...

உடனே ஆர்வத்துடன் நிமிர்ந்த புஷ்பா, அது நிஜமாவென்பதுபோல் ப்ருத்வியிடம் பார்வையாலேயே வினவினார்.

"ஆமாம்மா! அன்னிக்கு நான் சொல்ல மறந்திட்டேன்..." தர்ம சங்கடத்துடன் பதிலிறுத்தான் அவன்.

பிரிந்தவர் கூடியதில்... அங்கு உற்சாகமும், பரவசமும் கரை புரண்டோடியது.

பிறகு விருந்து முடிந்ததும் அனைவரும் சதாவைப் பாடச் சொல்லி வற்புறுத்தினர்.

என்ன பாடுவதென்று புரியாமல் தவித்தவளுக்கு, பவானிதான் எடுத்துக் கொடுத்தாள்.

"காணி நிலம் வேண்டும் பராசக்தி பாடுங்களேன்" என்று அவள் கூறியதும், பாட ஆரம்பித்தவளுக்குள், இனிமையும், உறுதியும், நிமிர்வும் கலந்து நிறைந்தன.

"பத்தினிப் பெண் வேண்டும்" என்று அவள் முடிக்க, "ஊஹூம்... இங்க ஏக பத்தினி விரதன் வேணும்னு நீங்க பாடியிருக்கணும்." தன் நண்பனைக் குறும்புடன் காண்பித்த படி கூறினான் தனபால்.

உடனே வேறு ஞாபகத்தில், ஏதோ ஒருவித இறுக்கம் வந்து அவள் இதயம் தழுவியது!



சட்டென்று குனிந்து கொண்டவளின் முகத்தில் படிந்த கரிய நிழலையும், விதிர்ப்பையும் ப்ருத்வியால் மட்டுமே உணர முடிவதாய்!

விழிகள் தகித்துச் சமாதானப் புறாவை தூதுவிட, அவளோ அதை உணரவில்லை. ஏனென்று புரியாமல் தவித்திருந்தவன், வீடு திரும்பித் தனியறைக்கு வந்ததுமே, விடாமல் கேட்டு விட்டான்.

"தனபால் சொன்னதும், உன் முகம் ஏன் அப்படி இருண்டு போச்சு? ஏன்... நான்தான் வேணும்னு... நீ நினைக்கணும்னு தானே அவன் சொன்னான்... நாம ரெண்டு பேரும் கணவன், மனைவி! அதை மறந்திட வேண்டாம்." சுள்ளென்று முடித்தான்.

அவன் வார்த்தைகள், அக்னித் திவலைகளாய்க் காற்றில் பரவிப் பெரும் சூடேற்றின.

"ஹூம்... அதை நான் மறக்கலை! மறந்தது யாருன்னு உங்களுக்கே தெரியும்! ஆனா, அதுக்காக என் முகம் மாறலை!"

இருவருக்கும் நடுவே... விழிகளுக்குப் புலப்படாத ஒரு மாயச்சுவர் எழும்பியது.

"அப்புறம்?" ஈட்டியின் கூர்மையுடன் சர்ரென்று வந்தது கேள்வி!

" 'ஏக பத்தினி விரதன்'னாரே உங்க ஃப்ரெண்ட்... அதுக்காகத்தான்! மனசுல ஒரு பொண்ணை நினைச்சிட்டு, இன்னொரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு குழம்பித் தவிக்கிறவங்களை, ஏக பத்தினி விரதனா என்னால

கற்பனை பண்ணிக்கூடப் பாக்க முடியலை!" அதே வேகத்துடன் பதிலடி கொடுத்தாள்.

அவளுடைய இழப்பின் வலி, உள்ளே கனமாய் உணரப்பட... விழிகள் தீப்பிழம்புகளாகின.

அது அவனுடைய ஈகோவிற்குப் பெரும் சாட்டையடியாய்!

"ரொம்பத் துணிச்சல்தான் உனக்கு!"

"ஹும்! உங்ககிட்ட கத்துக்கிட்டதுதான்!"

"ஆனா நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் ஏக பத்தினி விரதன்தான்! என் தேவதையை மனசுல பொக்கிஷமா நினைச்சிட்டு, உன்னை ஏத்துக்கிட்டிருந்தாதான் தப்பு! நான் இருவாச்சிப் பறவை மாதிரி... என்னால, மனசுல விரும்பினவளை மறக்க முடியாது!

அவ இருந்த இடத்துல என்னால வேற யரையுமே கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியலை... அப்பவே நான் ஏக பத்தினி விரதன்தான்!"

அழுத்தமான குரலில் கூறிவிட்டு, குளியலறைக்குச் சென்று முகத்தில் அறைந்தாற் போலக் கதவைச் சாத்தினான் அவன்.

அவன் மனதில் பல யுகங்களாக ஒளித்து வைக்கப் பட்டிருந்த கோப வார்த்தைகளின் பிரசவம் இன்று!

ஒரு கணம் உறைந்து நின்றவள், மறுநொடியே அருகிலிருந்த சிட் அவுட்டின் கதவைத் திறந்து சென்று அமர்ந்தபோது, உடலும் உள்ளமும் பதறித் துடித்தது.

'கடவுளே... எனக்கு மட்டும் ஏன் இந்த சோதனை? என் வாழ்க்கையில் இனிமை என்ற ஒன்றை ஏன் தர மறுக்கிறாய்? மறுகி நின்றாள் அவள்.



கும்பகோணத்தில், தன் தந்தையுடன் கழித்த சொர்க்க நாட்களுக்காக மனம் வெகுவாக ஏங்கத் தொடங்கியது.

ஏனோ, காதலெனும் வார்த்தை மேலேயே பெரும் கோபம் வந்தது... தான் மனதினுள் சேமித்து வைத்திருக்கும் நேசக் குளத்தின் கரையில்... சுய அடையாளத்தைத் தொலைத்து, தான் மட்டும் தனித்து நிற்கும் அவலம் முகத்திலறைவதாய்!

இதயத்தின் மௌனக்கதறல்... இயலாமையுடன் ஒற்றைத் துளியாய்!

## 14

அன்றிலிருந்து, இருவருக்குமிடையே பெரும் ஒதுக்கமும் விலகல் தன்மையுமே அதிகரிக்க ஆரம்பித்தன.

நாட்கள் மாதமாய் உருவெடுக்க, அவர்களுடைய 'பரணி டைல்ஸ்' ஃபேக்டரியின் புதுத் தயாரிப்பான 'கார்ப்பெட் டிசைன் டைல்ஸ்' மார்க்கெட்டில் பெரும் வரவேற்பைப் பெறத் துவங்கியது.

உற்பத்தியும், லாபமும் கணிசமாக அதிகரிக்க, நல்ல வடிவமைப்புக்கான பரிசையும் அது பெற்றுத் தந்தது.

அன்றிரவு, சதாவை அழைத்து உற்சாகத்துடன் அந்த நல்ல விஷயத்தைக் கூறினான் ப்ருத்வி.

"சதா! ரொம்ப தேங்க்ஸ்! உன் ஐடியாவால புரொடக்ஷனும், லாபமும் அதிகமானதோட, நமக்குப் பெரிய பரிசும் கிடைக்கப் போகுது! இன்னிக்குதான் அது தெரிஞ்சுது... சாரி...

ஏதேதோ டென்ஷன்... அதான் உன்கூட இப்பல்லாம் சரியாவே பேச முடியலை!" தயக்கமும், தவிப்புமாய் முடித்தான்.

பேசும்போதே, வார்த்தைகள் அனிச்சையாய்ச் சிக்கித் தடைபெற்றன.

சிறு முறுவலுடன் திரும்பியவளுக்குள், அவன் கோபம் தீர்ந்த திருப்தி!

அவள் பார்வை ரகசியமாய் அவனைத் திருட... மனதிற்குள் ஒரு மல்யுத்தம்!

இருவருக்குமிடையே அதுவரை திரை விரித்திருந்த தடையும், ஊடலும் விலகிய நிம்மதியுடன் மெதுவாக "வெல்கம்" என்றாள்.

"ஏன் இவ்வளவு டல்லா சொல்ற...? நம்ம கம்பெனிக்கு நல்ல புகழ் வந்தா, உனக்குப் பெருமையில்லையா?" அவன் யோசனையுடன் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லலையே? இதை நீங்களா செஞ்சிருந்தா உங்களுக்குப் பெருமையெல்லாம் சேர்ந் திருக்கும்... எனக்கு நன்றி சொல்ல இவ்வளவு தயங்கி கஷ்டப்பட்டிருக்க வேண்டாம்!"

"சரி... நான் அதுக்காகத் தயங்கலை... உன்னைத் தேவையில்லாம நோகடிச்சு... அன்னிக்கு... கடுமையாப் பேசிட்டேன்... அதான்... கஷ்டமா இருந்தது!"

"பரவாயில்லை! நான் அதை அன்னிக்கே மறந் துட்டேன்... நீங்கதான் இன்னும் சின்னப் பசங்க உப்பு



மூட்டை சுமக்குற மாதிரி அதை மனசுல பாரமா சுமந் திட்டிருக்கீங்க போலருக்கு!"

இயல்பான குரலில் அவள் கூற, "அப்போ என்கிட்டே சாதாரணமா பேசியிருக்கலாமே... ஏன் விலகி விலகிப் போனே?" அழுத்தமான குரலில் மடக்கினான்.

உடனே, வழி மறந்த பறவையாய்த் தவித்துத் திணறியது மனசு!

"ம்... நீங்க எப்பப் பாரு முகம் திருப்பிக்கிட்டு கடுமையாக இருந்தீங்க... எனக்கும் கொஞ்சம் தன்மானம், சுய மரியாதை எல்லாம் இருக்கே! அதான் ஒதுங்கி இருந்தேன்!"

"ஓ! ஆனா இந்த ஒரு மாசமா, நான் ரொம்ப லோன்லியா ஃபீல் பண்ணினேன்... கொஞ்சம் தவிச்சுக் கூடப் போயிட்டேன் தெரியுமா?"

ஒரு காந்தப் பார்வையுடன் அவன் கேட்க, சட்டென்று இளகிய மனதில், லட்சம் மயில்கள் தோகை விரித்தன.

இதயத்திற்குள் இனம் புரியா ஒரு உணர்வு சிலீரிட, அவன் பார்வை குளிர் சந்தனமாய்த் தேகமெங்கும் பரவியது.

"ஓகே... ஓகே... நம்பறேன்." இரு கைகளையும் விரித்து தலை சரித்துச் சிரித்தாள் அவள்.

முதன் முதலாக அதை ரசித்தவனுக்குள் பூஞ்சாரலும், வெண்பனிக் கூட்டமும் ஒன்றாய்த் தேகம் தீண்டிய உணர்வு!

சட்டென்று தலையைக் குலுக்கித் தன்னை நிலைப் படுத்தியவன், மெதுவாகக் கை நீட்டினான்.

"ஃப்ரெண்ட்ஸ்...?"

அவன், பெரும் எதிர்பார்ப்பும் குறுகுறுப்புமாய்க் கேட்க, "ம்... ஃப்ரெண்ட்ஸ்!" என்று தன் விரல்களை அதில் பதித்தாள் அவள்.

திருமணத்திற்குப் பிறகு முதன் முறை நேர்ந்த ஸ்பரிசம், அவளை ஒவ்வொரு செல்லிலும் சிலிர்க்கச் செய்ய, அவனோ மின்சாரம் பாய்ந்தது போல் கையை இழுத்துக் கொண்டான்.

ஆனாலும், அவனுடைய ரகசியப் பார்வை... மனங்கொத்திப் பறவையாய் இதயம் குடைந்தது.

அங்கு, இரண்டு உயிர்களை இணைத்து, வதைத்து, விதிர்க்கச் செய்து கண்ணா மூச்சி விளையாடிக் கொண்டிருந்தது காதல்!

"என்ன... இவ்வளவு வேகமாகக் கையை இழுத்துக் கறீங்க? சம்சாரம் அது மின்சாரம்கிறது சரிதான் போலருக்கு!" குறும்புடன் இழுத்தபடி நிறுத்தினாள் அவள்.

"ம்... உன்னை என்னவோன்னு நினைச்சேன்... ஆனா... சரி! இந்த வாரம் நம்ம ஃபேக்டரியில ஒரு சின்ன பார்ட்டி இருக்கு... அதைச் சொல்லத்தான் வந்தேன்..."

"ஓஹோ... அதுக்கு முன்னாடி என்னை என்னவோன்னு நினைச்சதாச் சொன்ன ஞாபகம்... அது என்னான்னு நான் தெரிஞ்சிக்கலாமா?" பணிவது போல் பாவ்லா காட்டிக் குனிந்தபடி கேட்டாள்.

அவளின் ஒவ்வொரு அசைவையும் அழுத்தமாய் விழிகளில் படமெடுத்து இதயத்தில் இறுக்கிக் கொண்டது... பார்வை!



சட்டென்று தலையைப் பின்னால் சரித்துச் சிரித்தான் அவன்.

"எவ்வளவு டென்ஷன் இருந்தாலும் இப்படிச் சட்டுன்னு ரிலாக்ஸ் பண்ற மாதிரி உன்னால எப்படித்தான் பேச முடியுதோ...?"

லேசாகச் சிரித்தபடி கூறியவன், அவள் பார்வையின் தீவிரத்தை உணர்ந்ததும் –

'சரி சரி! உன்னைச் சரியான வாலுன்னு சொல்ல வந்தேன்... போதுமா? ஆனா அதுக்காக அடிச்சிடாதேம்மா... என் உடம்பு தாங்காது!" பயப்படுவது போல நடித்தான்.

"ஆஹா... ரொம்ப பயந்த மாதிரிதான்!" கிண்டலாகக் கூறிவிட்டு சிட்அவுட்டுக்குள் சென்றவளையே, ரசனையுடன் தொடர்ந்தன அவன் விழிகள்!

'என்றிலிருந்து... நீ என்னை இப்படிச் சரித்து வீழ்த்த ஆரம்பித்தாய்?' விடை புரியாமல் தவித்தது மனது!

அந்த வார இறுதியில், ஃபேக்டரியில் நடக்கும் பார்ட்டிக்கு, புஷ்பாவுடனும், பரணியுடனும் சென்றிருந்தாள் சதா.

அழகிய டிசைனர் சேலையில், ஒரு ஓவியப் பாவையாய் அவன் பக்கத்தில் அவள் நிற்க, ஒருவிதச் சுகமான இனிய மௌன நிலையிலிருந்தான் ப்ருத்வி.

## 15

முக்கியமான உயர்நிலை ஊழியர்கள் அனைவரும், அவளுடைய ஐடியாவை மனமாரப் பாராட்ட, அவனுடைய செக்ரட்டரி வனஜா மட்டும் அலட்சியமாக ஒதுங்கியே நின்றிருந்தாள்.

பார்ட்டி முடியும் நேரத்தில் அவளருகில் வந்தவள், "உங்களோட நான் கொஞ்சம் தனியாப் பேசணும் மேடம்!" மெதுவாகக் கூறினாள்.

சிறு யோசனையுடன் உள்ளே இருந்த டிரெஸ்ஸிங் ரூமிற்கு அவளுடன் சென்றாள் சதா.

அங்கு சென்றதுமே வேகமாகத் திரும்பியவள், "மேடம்! நான் சாரை ரொம்ப நாளாகவே லவ் பண்றேன்... அவரும் என்னை விரும்பறாரு!" என்று கூறியதும் சதா விதிர்த்து நிமிர்ந்தாள்.

எங்கோ ஒரு ஒற்றைக் குயில் தீனமாய்க் கூவ, அதன் சிறகுகள் சடசடவென்று முறிந்தாற் போல்!

'ஓ... இவள்தான் ப்ருத்வியின் காதலியோ...? ஒரு வேளை, வசதியில் குறைந்தவள்ன்னு தன் மாமியாரும், மாமனாரும் இவளை மருமகளாக ஏற்க மறுத்திருப்பார்களோ?

இல்லை... பிரபுவிற்கு முடிப்பதாக இருந்த தன்னை மறுக்க வேண்டாமென்று ப்ருத்வியை வற்புறுத்தியிருப்பார்களோ?'

குழப்பத்துடன் அவள் தவிக்க, அந்த நொடியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டாள் வனஜா! இருவரின்



வீட்டிலும் ஒரே வேலைக்காரிதான் வேலை செய்வதால், சில விஷயங்கள் அவளுடைய வம்பு தேடி அலையும் செவிகளுக்கு விருந்தாகியிருந்தன.

"என்ன மேடம்... குழப்பமா இருக்கா? அந்தக் கால ராஜாலேருந்து இந்தக் காலப் பண்ணையாரு வரை மேல் தட்டு வர்க்கத்தினருக்கு, இதெல்லாம் சாதாரணமாச்சே!

இப்பவும் அவருக்கு மனைவி நீங்கதான்! ஆனா... மனசுல நான்தான்! அதனாலதான் அவரோட 'லிவிங் டு கெதர்' மாதிரி ஒரு வாழ்க்கை வாழ நான் சம்மதிச்சேன்... வாழ்ந்துட்டும் இருக்கோம்..." கர்வத்தில் கண்கள் மின்னக் கூறினாள்.

மறுகணமே, "நோ..." என்று வீறிட்ட சதாவின் விழிகளில், இரு நெருப்புக் கங்குகள்!

எதிரெதிர்த் திசையில் பயணித்தாலும்... அவனைப் பற்றி நன்றாக அறிந்திருந்தாள்.

"பொய்... அவர் அப்படிப்பட்டவர் கிடையாது... உன்னை விரும்பினாருன்னு சொன்னப்ப, ஒருவேளை உண்மையோன்னு நினைச்சேன்...

ஆனா வீட்டிலே மனைவி இருக்கும்போது, ஆபீஸிலே உன்னோட தகாத உறவு வெச்சிக்கிற அளவுக்கு மட்டமான மனிதர் அவர் இல்லை!

ஒரு பெண் இப்படிக் கீழ்த்தரமானவளா இருக்க முடியுமா? சே..." வெறுப்புடன் வாசல்புறம் திரும்பியவள், அப்படியே பனிச் சிற்பமாய் உறைந்து நின்று விட்டாள்.

அங்கு ரௌத்ரம் சுமந்த முகத்துடனும், சிவப்பு வைர மாய் ஜொலித்த விழிகளுடனும் ப்ருத்வி நின்றிருந்தான்.

அவனைக் கண்டதுமே வெளுத்த முகத்துடன் வனஜா பதறிப் போக, "ஏய்... கெட் லாஸ்ட்...!" மிருகமாய் உறுமினான் அவன்.

"சாரி சார்..." ஒற்றை வார்த்தையுடன் நடுங்கியபடி அவள் வெளியே ஓட, வேகமாகச் சதாவின் புறம் திரும்பினான் அவன்.

பனியில் சிலிர்த்து நடுங்கிய மலராய் நின்றிருந்தாள் அவள்.

உடலுக்குள்ளிருக்கும் உயிர் சுமையாகாததைப் போல், உள்ளே அவள் நிறைந்திருந்தாள்.

சட்டென்று கனிந்த முகத்துடன், "தேங்க் யூ சதா! தேங்க் யூ ஃபார் ட்ரஸ்டிங் மி!" ஆழ்ந்த குரலில் கூறி விட்டுச் சட்டென்று திரும்பி வெளியேறினான்.

அதுவரை அடக்கி நின்றிருந்த மூச்சுக் காற்று வெப்ப மாய்க் காற்றைச் சிதறடிக்க, பெரும் நிம்மதி வந்தது அவளிடம்!

அவன் பார்வை... இன்னும் நேசமாய் உள்ளே ஊடுருவுவதாய்!

அந்த வார்த்தைகள் பெரும் இதமாய்... வானிலிருந்து ஒரு தேவதைக் கூட்டம் கோடிப் பூக்களைத் தூவியது போல்...!

**அ**ன்று வீட்டிற்குச் செல்லும்போது, "உங்க ரெண்டு பேருக்கும் ஒரு சின்ன சர்ப்ரைஸ்... வீட்டுக்கு வாங்க... சொல்றேன்," என்றார் பரணி.



என்னவென்று யோசித்தபடி அவள் ப்ருத்வியிடம் திரும்ப, நெரித்த புருவங்களுடன் கருங்கல் பாறையாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் அவன்.

'என்ன வந்தது இவனுக்கு... திடீரென்று இலவம் பஞ்சாய்... பலநேரம் பாறையாய்...' சிலீரென்று ஒருவித உணர்வு பரவியது அவளுள்!

வீட்டிற்குச் சென்றதும் விமானப் பயணத்திற்கான இரண்டு டிக்கெட்டை அவளிடம் அளித்தார் புஷ்பா.

"கல்யாணமாகி ஆறு மாசமாகுது... நீயும் கேட்கலை... ப்ருத்வியும் உன்னை எங்கேயுமே அழைச்சிட்டுப் போற மாதிரி இல்லை... வேலை வேலைன்னு சுத்திக்கிட்டிருக்கான்..." என்றவர் மகனிடம் திரும்பினார்.

"ப்ருத்வி! உன் அப்பா இங்கே பத்து நாள் எல்லா வேலையையும் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டாரு!

நீயும், சதாவும் ஹனிமூன் போறீங்க... அங்கே குலுமணாலியில கெஸ்ட் ஹவுஸ்ஸெல்லாம் புக் பண்ணியாச்சு! போயிட்டு வாங்க..." முடிவாகக் கூறினார்.

"என்னப்பா இது... உங்க வேலையா?" சலிப்புடன் அலுத்துக் கொண்டான் ப்ருத்வி.

ஆனால், மணல் வெளியாய் வறண்டிருந்த மனதிற்குள்... மழைத்துளியாய் அவள் நினைவு!

"ஆமாம்! இப்படி வேலை வேலைன்னு 'வொர்க்க ஹாலிக்' மாதிரி சுத்திட்டிருந்தா அப்புறம் எதுக்குக் கல்யாணம்... மனைவி எல்லாம்? ரிலாக்ஸா போயிட்டு

வாப்பா!" வாஞ்சையுடன் முடித்த பரணியின் குரல் அவனை மீட்டது.

அவள் தயங்கி விழிக்க, கண்ணசைவில் அவளைத் தன்னுடன் வரும்படி ஏவிவிட்டு அறைக்குள் சென்றான் அவன்.

பின்தொடர்ந்தவளுக்குள் ஏதோ ஒரு இனம் புரியாத பயம் எழுவதாய்!

உள்ளே சென்றதும் திரும்பியவன், "எனக்கும் இது மாதிரி ஒரு ரிலாக்சேஷன் தேவைதான்! அப்பா எவ்வளவு சரியா ஒரு முடிவெடுத்திருக்காரு இல்லை! வீ நீட் எ ப்ரேக் சதா! போலாமா?" ஆர்வத்துடன் கேட்டான்.

"ம்..." என்று மௌனமாய்த் தலையசைத்தவள், உடனே நைட்டியுடன் குளியலறைக்குள் சென்று விட்டாள்.

முகம் கழுவி உடை மாற்றி அவள் வந்தபோது, அவன் ஏதோ ஒரு ஃபைலை புரட்டிக் கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும், "நாளைக்கு மறுநாள் ஈவினிங் ஃப்ளைட்... உனக்கு வேண்டிய ட்ரெஸ்ஸை பேக் பண்ணிக்கோ!" என்றவன் மீண்டும் வேலையில் ஆழ்ந்து விட்டான்.

அவனுடைய வார்த்தையில் மயங்கியது... நெஞ்சுக் கூடு!



# 16

**பி**ருத்வியின் மனதிலும்... ஈரம் உலரா நினைவுகளில் அவள்!

இன்று, நெஞ்சம் முழுவதும் அவளே நீக்கமற நிறைந்திருந்தாள்.

ஒவ்வொரு முறையும் நன்றிக் கடன் பட வைத்து, அவனை வீழ்த்தியிருந்தாள்.

வெகு நேரம் இளைப்பாறாமல் சிறகு விரித்திருந்த பறவை, ஓய்ந்து ஒரு மரக்கிளையில் அமர்ந்து தன் அலகால் சிறகுகளைக் கோதுவதைப் போல், நினைவுகளாலேயே அவளைக் கோதினாள் அவள்.

இரண்டாவது முறையும் காதல் வருமா...? உணர்வுகள் மொட்டவிழ்ந்தன!

அவனுடைய தொழில் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு செயல்பட்டதாகட்டும்...

தனபால் - பவானி வாழ்க்கையைச் செப்பனிட்டு, அதில் மீண்டும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தியதிலாகட்டும்... வனஜா கூறிய பொய்யை நம்பாமல், அவனை விட்டுக் கொடுக்காமல் பேசி உயர்த்தியதாகட்டும்...

இன்று அவன் மனதில் பெரும் மதிப்பும் மரியாதையும் வந்திருக்க, அவனது மனச் சிகரத்தில் இமாலய உயரத்திற்குச் சென்றிருந்தாள் சதா.

ஆறு மாதங்களுக்கு முன்பு அவளை எப்படி வெறுத் தான்...! இன்று அவனைச் சுலபமாகச் சரித்திருந்தாள் அவள்.

மனதிற்குள் பெரும் குற்றவுணர்வு, அடிபட்ட பட்டாம் பூச்சியாய்ச் சிலிர்த்துப் படபடக்க... ஏனோ இதயத்திற்குள் உயிரோவியமாய்த் தீட்டப்பட்டிருந்த அம்முவின் நினைவு!

வெண்பனிப் புகை மூட்டமாய்... அவளுடைய குட்டி உருவம் அங்குமிங்கும் ஓடியாடி அலைபாய, அந்தப் பால்ய நேசத்திற்குப் பெரும் துரோகம் செய்த உணர்வு!

தன் இதயத்தை... அனுமதியின்றியே யாரோ திருடியது போல்!

இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவித்தவன், உடனே ஒரு முடிவிற்கு வந்தான்.

மெதுவாகத் திரும்பியபோது சதா உறங்க முயற்சி செய்வது, அவள் புரண்டு படுப்பதிலிருந்தே தெரிந்தது.

"சதா..." மென்மையான அழைப்பு அவளை உசுப்ப, அவளுடைய இமைச்சிப்பிகள் மெல்லத் திறந்தன.

என்னவென்பது போல் எழுந்து அமர்ந்து நோக்கியவளிடம், முதலில் என்ன சொல்வதென்றே தெரியவில்லை!

பிறகு மெதுவாக ஆரம்பித்தான் அவன்.

"இன்னிக்கு வனஜா கிட்டே எனக்கு சப்போர்ட் பண்ணி... என் மேல எவ்வளவு நம்பிக்கை வச்சிப் பேசினே... எனக்கே கஷ்டமா இருந்தது... ரொம்ப குற்றவுணர்வு வேற... எப்படி?" தயக்கத்துடன் நிறுத்தினான்.

அவள் இதழ்களில் சிறு புன்னகை மின்னல் ஒன்று சட்டென்று ஓடியது.

"ம்... உங்களைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்... இங்கே இருந்த இந்த ஆறு மாசத்துல உங்களை நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன்.



அவங்க உங்களை விரும்பினதா சொன்னப்ப, என்னையறியாம அவங்கதான் நீங்க சொன்ன உங்க காதலியோன்னு ஒரு எண்ணம் எனக்குள்ளே வந்தது...

ஆனா 'நாங்க 'லிவிங் டு கெதர்' வாழ்க்கை நடத்தறோம்'னு சொன்னப்பதான் நான் முழிச்சிக்கிட்டேன்... உங்களை அந்த மாதிரிக் கற்பனை பண்ணிப் பார்க்கக்கூட முடியாமத்தான் வன்மையா மறுத்தேன்...

பழைய காதலியோட நினைவுகளோட வாழற ஒருத்தர் நிச்சயம் தப்பு பண்ணமாட்டாருன்ற நம்பிக்கையும் வந்தது... அதான்!"

"இவ்வளவு சொன்ன நீ, அந்தக் காதலி யாருன்னு கேக்க மாட்டியா?" மிருதுவாகக் கேட்டான் அவன்.

"ம்... அது உங்க பர்சனல் மேட்டர்... அதை எப்படி நான்...?" அவள் பெரிதும் தயங்கினாள். ஆனாலும்... ஆறுதல் மந்திரமாய் அவன் வார்த்தைகள் தொடர்ந்தன.

"இல்லை! நானே சொல்றேன்... நீங்கள்லாம் நினைக்கிற மாதிரி இது சமீபத்திய காதல் கதை இல்லை... என் சின்ன வயசுல, நான் முதன் முதலா உணர்ந்த மாறா நேசம் அது...!"

சிறிது நேரம், உதடுகளால் பேசாமல், தயக்க வார்த்தைகளைச் சுழித்த புருவங்கள் உச்சரித்தன.

ஜன்னல் வழியே வானில் உலா வந்த நிலாவைப் பார்த்தபடி மெதுவாகப் பேச ஆரம்பித்தான் அவன்.

உள்ளம்... மிதவையாய்ப் பால்ய நதிக்குள் மிதக்க ஆரம்பித்தது.

## 17

பிருத்வி... முதன் முறையாகத் தன் மனக் கதவைத் விரியத் திறந்தான்.

தான் சிறு வயதில் ரயில் விபத்தில் தப்பித்தது... ஒரு தமிழ்க் குடும்பம் தன்னைக் காப்பாற்றி வளர்த்தது... அங்கு தனக்குக் கிடைத்த இனிய உறவுகள்...

அவன் பேசப் பேச அவள் விழிகளில் இரு நிலவுகள் உதயமாகி நம்ப முடியாத தவிப்புடன் புலன்கள் சிலிர்த்தன. உயிரையும், உணர்வுகளையும் அசைத்து... பரவசத்தின் சிகரத்தை அறிமுகம் செய்தது... அவன் பேச்சு!

இனிய தோழமையுடன் விளையாடி... ஒரு நேரம் தன் உயிரைக் காப்பாற்றிய அந்தக் குட்டித் தேவதையின் அன்பு!

எல்லாவற்றிற்கும் மேலாக பொக்கிஷமாய் இன்றும் ஆழ் மனதினுள் புதையலாய் ஒளிந்திருக்கும் அம்முவின் நேசம்... அவளை இன்னும் மறக்க இயலாமல் தவிப்பது...

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று ஒரு விசும்பல் சப்தம் கேட்பது போல்!

அவனுடைய அன்பில் ஆடிப் போயிருந்தது... அவள் மனது!

சட்டென்று அவன் திரும்ப, "பாபு..." என்றபடி ஓடி வந்து அணைத்துக் கொண்டாள் அவள்.

அவனுக்கோ ஒன்றுமே புரியவில்லை... உறங்கிக் கிடந்த நேசம் உசுப்பேற்றப்பட்டது.



'இவள்... இவளா என் அம்மு... எப்படி...? கடவுளே... இதை நிஜமாக்கி விட மாட்டாயா? இரு காதலைச் சுமக்க முடியாமல் நான் தவிக்கிறேன்!'

ஒன்றும் புரியாமல் தவித்தபடி அவள் முகத்தை நிமிர்த்தியவுடன், மேகத்துக்குள்ளிருந்து வெளி வந்த முழு நிலவாய் அம்முவின் முகம்!

அவளை எங்கோ பார்த்துப் பழகியதைப் போன்ற ஒரு உணர்வு முன்பு தோன்றியதை, அவனால் இன்றும் மறக்கவே முடியவில்லை.

"அம்மு...?"

பெரும் உணர்ச்சிப் பெருக்குடன் அழைத்தவனுக்கு, நாணம் என்ற ஒற்றை வார்த்தையில் இரு கன்னங்களிலும் ரோஜாக்களைப் பதியன் போட்டுப் பதிலாகப் பரிசளித்தாள் அவள்.

தன்னை மறந்தாலும், அவளை மறவாதிருந்த நெஞ் சிற்குள்... எப்படி இத்தனை நாட்களாக இது புரியாமல் போனது...? ஆளுமையுடன் எழுந்தது கேள்வி!

'இத்தனை நாட்கள்... இந்த அழகு முகத்தைத் தானே தொலைத்துத் தேடிக் கொண்டிருந்தேன்...

ஆனால், அது என்னருகிலேயே இருந்திருக்கிறது! சிறு வயது முகத்தில் பெரும் மாற்றம் வந்திருக்க, இன்று அவளுடைய ஒற்றை அழைப்பில்... தொலைந்து போயிருந் தவளைத் தேடிக் கண்டிருக்கிறேன்.

என் பெண்மையே! இத்தனை நாட்களாக என்னருகிலேயே நீ இருந்தும் எப்படி அறிந்து கொள்ளாமலிருந்தேன்...?

சிறுவயது குட்டி அம்முவே நெஞ்சமெங்கும் நீக்கமற நிறைந்திருந்ததால், உன் இளமையும், வாலிப விசுவரூபமும் என்னுள் பதியவில்லையோ...?'

"ஓ காட்... இது தெரியாம எத்தனை நாளை வீணடிச்சிட்டு, உன்னையும் நோகடிச்சிருந்திருக்கேன்." தவிப்புடன் வந்தது அவன் குரல்!

யுகம்யுகமாய்க் காதலை... மூச்சுக்காற்றாய்ச் சுவாசித்த இதயத்திற்குள்... பெரும் நேசத் தூறல்கள்!

சட்டென்று அவளுடைய முகத்தை இரு கைகளிலும் ஏந்தியவன், மழைச் சாரலாய் முத்தமிட ஆரம்பித்தான்.

அந்த அன்புத் தாக்குதலில் தன்னையே இழந்து நின்றது, அந்தப் பெண்மை! அந்தப் பெண்ணைப் பந்தாடிய காதல் நோய்க்கு... இன்று மருந்தாய் அவன்!

நொடிகள் மணித் துளியாய் மாற, சங்க கால நற்றிணைப் பாடலில் புணர்ச்சிக்குப் பின்வரும் தலைவனின் நிலையிலிருந்தான் ப்ருத்வி!

"நின் மேனி வனப்பு என் கண்களையும் மழுங்கச் செய்கின்றது" எனும் பொருள்பட வரும்

*"நோயும் நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த*
*வேய் வனப்புற்ற தோளை நீயே"*

என்ற பாடலை நினைவுபடுத்தியது அவன் செய்கை!



அவன் விழிகள் வாள்களாய் மாறி அவள் மேனியெங்கும் உரச, புதிதாய் அவளுக்குள் பல மாயங்கள்!

அந்த வாள்களின் நுனிகளில் அனிச்ச மலர்களும், அன்னச் சிறகும் ஜனித்தது போல் ஒரு உணர்வு!

செவிமடல்களைச் சிலிர்க்கச் செய்யும் அவனுடைய சுவாசம் சிலிர்ப்பாய்!

மெல்ல இமை மூடியவள், "அவ்வளவு சின்ன வயசிலே நான் எப்படி உங்களை ஈர்த்தேன் பாபு... ஆச்சர்யமா இருக்கு!" கிசுகிசுப்பான குரலில் கேட்டாள்.

அவள் செவிகளுக்கு அருகில் குனிந்து, அங்கு செல்லமாய்ச் சிணுங்கிய சுருள்முடியைக் குறும்புடன் கோதியவன், மென் குரலில் கண்மூடிப் பேச ஆரம்பித்தான்.

சமீப நாட்களாகப் புரிபடாதிருந்த அவனுடைய மூடிய இதயத்தின் சூட்சுமம், அவளுக்கு மெலிதாய்ப் புலப்பட ஆரம்பித்தது.

"எனக்கு அது எப்படி நிகழ்ந்ததுன்னு புரியலை அம்மு! என்னாலேயே சரியா உணர முடியாத ஒரு இனிய ரசவாதம் அது!

ஆனா, உன் கூடப் பழகின அந்த நாட்கள்... ஒரு அழகான நிலாக்காலம்னுதான் சொல்லுவேன்!

அந்த அழகான வீடு... நாம ரெண்டு பேரும் சேர்ந்து விளையாடிய பாண்டி, கண்ணாமூச்சி, பல்லாங்குழி, பரமபதம், பம்பரம்னு அற்புத விளையாட்டுக்கள்...

எந்தக் கவலையுமில்லாம, உற்சாகமா சேர்ந்து ஆடின ஊஞ்சல், கூட்டாஞ்சோறு... மொட்டை மாடியில சாப்பிட்ட நிலாச் சோறு... வித்தியாசமான அனுபவமா டெண்ட் கொட்டகையில் பார்த்த சினிமா... நீ என்னைக் காப்பாத்தி உயிர் குடுத்தியே அந்தத் தண்ணீர்த் தொட்டி...

மழை கழுவிய தார்பாதையிலே தூரத்து மலைக்குப் பின்னாடி அரைவட்டமா தெரிஞ்ச வானவில்லைப் பிடிக்க கை கோத்து நாம ஓடினது... ஒரு மழை நாளிலே முற்றத்துல நீர் தேக்கி நாம ரெண்டு பேரும் சேர்ந்து விட்ட காகிதக் கப்பல்கள்...

அன்னிக்கு நீ கேட்டியே... இது மாதிரி நிஜக் கப்பல்லே என்னை அழைச்சிட்டுப் போவியா பாபுன்னு? எதை மறக்க முடியும் அம்மூ?" அவன் குரல் பெரிதும் உடைந்திருந்தது.

அவன் முடித்ததும், அவளிடமிருந்து பெரும் விம்மல் சப்தம் எழ, பதறிப் போனான் அவன்.

உதடுகளின் புன்னகை... உள்ளேயே புதைய, இதயமே இரண்டாகி விடும் போல் துடித்தது.

"ஏய்... என்னாச்சு? ஏன்டா அழறே?" ஆதங்கத்துடன் அணைத்துக் கொண்டான்.

"சாரி... நீங்க எப்படி எல்லாம் என்னை ஞாபகம் வச்சிருக்கீங்க...! மனசுக்குள்ளேயே வெச்சிப் பூஜிச்சிருக்கீங்க! அது புரியாம நீங்க வேற யாரையோ காதலிக்கறதா நினைச்சி... ப்ச்!" விழிகளில் கண்ணீருடன் விம்மினாள்.

"சே... அழக் கூடாது... அதான் இப்ப ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சிக்கிட்டமே... அதுவும் பத்தலைன்னா, நமக்கு முன்னாடி நீண்ட ஒரு எதிர்காலம் தன் கையில அழகான பரிசோட காத்துட்டிருக்கு!



இனிமே வாழ்நாள் முழுக்க, எல்லாத்தையும் பகிர்ந்து கிட்டு, ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் குடுத்து, நியாயமான காரணங்களுக்கு அதிகாரம் செலுத்தி, தேவையில்லாத பிடிவாதம் பரப்ப - அதை அடக்கி, பரஸ்பரம் ஒருவர் உணர்வுகளுக்கு மத்தவங்க மதிப்புக் குடுத்து...

சில நேரம் ஊடல்லே சண்டை போட்டு... பல நேரங்களில் மத்தவங்களுக்கும் கேக்கறதுக்கு சுதந்திரம் குடுத்து... சின்ன வயசு அம்மு - பாபு மாதிரி கடைசி வரைக்கும் பிரியாம வாழணும்னு நான் ஆசைப்படறேன் அம்மு...

அன்னிக்கு நீ என்னைத் தண்ணித் தொட்டியிலிருந்து காப்பாத்தினியே, அப்ப நீ கேட்டியே... 'என்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டே இல்லை?'ன்னு... அதுக்கு நான் என்ன பதில் சொன்னேன்னு ஞாபகம் இருக்கா அம்மு?" ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

"ம்..." என்று தலையசைத்தாள் அவள்.

"ப்ளீஸ்! அதை நீ இப்ப உன் வாயால சொல்லேன்!" பரபரப்பும் தவிப்பும் மிகுந்து தெரிந்தன அவன் குரலில்!

உள்ளே சுகமான நினைவுகள் அலையலையாய்ப் பரவி, இது கனவா நிஜமாவென்ற மாயப் பரவசம் உள்ளே பரவியது!

" 'நான் உன்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன்... நியும் என் கூடக் கடைசி வரைக்கும் இருக்கணும்...

இருப்பியா?'ன்னு கேட்டீங்க இல்லை...?" பழைய நினைவுகள் பரிசளித்த உற்சாகமும் வெட்கமுமாய் கேட்டாள் அவள்.

"ம்... இப்பவும் அதான் கேக்கறேன்... என் கூடவே இருப்பியா அம்மு? இந்தத் தடவை உன்னை விட்டுட்டு எங்கேயும் போகமாட்டேன்... என்னை நம்புடி..."

அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தியபடி ஏக்கத் துடன் கேட்டவனுக்கு என்ன பதில் கூறுவதென்று புரியாமல் ஒரு கணம் விழித்தவள், மறு கணமே அந்த விரல்களைப் பற்றி அழுத்தமாக முத்தமிட்டு, தன் பதிலை இனிய ஸ்பரிசத் துடன் தெரிவித்தாள்.

உடல் முழுவதும் சிலிர்த்த அந்த முரட்டு ஆண்மை மென்மையாய் இளகியது.

"இப்ப இப்படிச் சொல்றே! ஆனா என்னை மறந்திட்டே இல்லை அம்மு?" இறங்கிய குரலில் கேட்டான் அவன்.

ஒரு மௌன அம்பு மனதில் பாய, சட்டென்று நிமிர்ந்தவளின் விழிகளில் வானவில்லின் வர்ண ஜாலங்கள்!

காதலோடு சேர்ந்து இளகிய மனதிற்குள் அதன் வலியும் வேதனையும் சுகமாய்ப் பரவின.

## 18

**நி**னைவுகள் புகை மண்டலமாக, முழுவதும் புலராத விடியல் பொழுதாய்!

அந்த இனிய இளமை சாம்ராஜ்யத் தில், ஒரு நண்பனாய்... தோழனாய்...



சக கூட்டாளியாய் மட்டுமே அவன் பதிவு செய்யப்பட்டிருந்தது புரிந்தது.

ஒப்பனை இல்லா நிஜங்களின் முகவரிகள் - வார்த்தைகளாய் ஜனித்தன.

"மறக்கலை பாபு... சத்தியமா மறக்கலை... என்னால உங்களை மறக்கவும் முடியாது... ஆனா என் மனசிலே சிறு வயதுத் தோழனா... பால்ய நண்பனா... பொக்கிஷமா உங்க நினைவுகள் இப்பவும் இருக்கு...

ஆனா... காதல்... அது..."

அவள் தவித்துத் திணறும்போதே, அவன் முகத்தில் கரிய நிழலொன்று படிவதாய்!

"காதல் மட்டும் இல்லேங்கிறே... அப்படித்தானே?" குற்றம் சாட்டும் பாவனையுடன் கேட்டான் அவன்.

மனதின் இனிமை குலைக்கப்பட்டதும்... நேசச் சரங்கள் அறுபடுவது போல்... அவனுக்குள் மெலிதாய் இறங்கிய ஒரு இடியின் தாக்கம்!

"இல்லை பாபு... அப்படிச் சொல்லலை... நட்பு, தோழமைங்கறது வேற! ஆனா... காதல்ங்கிறது என்னைப் பொறுத்த வரைக்கும் மனசு முதிர்ச்சியடைஞ்சப்புறம்தான் வந்தது...

அதுவும் என்னை முதன்முதலா பொண்ணு பாக்க வந்த உங்க மேலதான்...! அது என் மனசுக்குள்ளே நீங்க ஆழமாய்ப் பதிஞ்சிருந்த காரணத்துனாலயும் இருக்கலாம்... அதான் நீங்க மறுத்தும், நான் சம்மதம் சொன்னேன்!"

வெட்கத்துடன் அவள் முடிக்க, "ஓ! தேங்க் காட்... எவ்வளவு கஷ்டம், மன உளைச்சல், தப்பு செஞ்சிட்டமோன்ற தவிப்பு... இப்ப எல்லாம் போயிடுச்சி!

நான் காலேஜ் முடிச்சவுடனே, உங்க ஊருக்கு வந்து உங்களைத் தேடினேன் தெரியுமா? நீங்க அந்த ஊரை விட்டே போயிட்டதா சொன்னாங்க!

அப்புறம் அமெரிக்கா போயிட்டேன்! திரும்பி வந்தவுடனே ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸி மூலமா உன்னைத் தேடணும்னு முடிவெடுத்திருந்தேன்...

அப்பதான் பிரபுவோட மரணம்... அப்பாவோட ஹார்ட் அட்டாக்... அம்மாவோட கோரிக்கைன்னு எல்லாமா சேர்ந்து என்னைச் செயல்பட விடாம செஞ்சுடுச்சி!

அது சரி... ஆன்ட்டியும் அங்கிளும் எங்கே? குரு அங்கிள் எப்படி உன் அப்பாவா...? ஒண்ணுமே புரியலை... பாரு, எனக்கிருந்த உற்சாகத்துல அதையே கேட்க மறந்திட்டேன்..." தவிப்புடன் வினவினான்.

சட்டென்று அவள் முகத்தில் பரவிய வேதனைப் பூச்சு உதிர்ந்து, பால்யத்தின் நெடிய வார்த்தைகளில் வீச ஆரம்பித்தது.

விழியோரங்கள்... திடீரென்று ஈரப் பிரதேசமாய் மாறின.

சிறு சோகத்துடன் அவன் மார்பில் சாய்ந்தவள், "ம்... நீங்க போய் ஒரு வருஷத்துல, அப்பாவும் அம்மாவும் எங்க தோப்புல இருந்த பெரிய கிணத்துல தவறி விழுந்து



இறந்துட்டாங்க. அம்மா விழுந்தவுடனே அப்பாவும் குதிச்சி... ப்ச்... ரெண்டுபேரையுமே காப்பாத்த முடியலை!

குரு அப்பா என் சித்தப்பா... அவங்க கல்யாணமே செஞ்சிக்கலை... ஏதோ அக்ரிகல்சுரல் ரிசர்ச் அது இதுன்னு நிலம்... விவசாயம்னே வாழ்க்கையைக் கழிச்சிட்டாங்க!

எங்கப்பா அம்மாவுக்கப்புறம், அங்கே இருந்த சொத்தை எல்லாம் வித்துட்டு இங்கே கும்பகோணத்துக்கே என்னை அழைச்சிட்டு வந்திட்டாங்க...

அங்கேதான் நான் படிச்சேன்! கிராமத்துல இருந்த வயலை எல்லாம் குத்தகைக்கு விட்டுட்டு, கும்பகோணத் துலயே வீடு வாங்கிக் குடியேறிட்டோம்!

கிராமத்துலருந்து - கூடவே வேம்புவும் ஆதரவில்லாம எங்களோடவே வந்துட்டாங்க... அவங்க சமையலைப் பாத்துக்க, சித்தப்பா என்னைச் சிரமமில்லாம வளர்த்தாங்க!

சின்ன வயசுலருந்து நான் அவங்களையும் அப்பான்னுதான் கூப்பிடுவேன். அதனால யாருக்கும் எந்த விளக்கமும் தேவையிருக்கலை!

ஆனா அத்தை, மாமாகிட்டே முன்னாடியே எல்லாத்தை யும் ராஜாத்தி அத்தை சொல்லிட்டதா அப்பா சொன்ன ஞாபகம்! அதான்... உங்களுக்கும் தெரியும்னு நினைச்சேன்!

ஆனா... சாரி... அது எங்க தப்பு... பிரபு அண்ணாவுக்கு என்னைப் பார்க்க வர முடிவு செஞ்சப்பன்னு நினைக் கிறேன்..." தர்ம சங்கடத்துடன் முடித்தாள்.

உடனே அவளை ஆதரவுடன் அணைத்தவன், "ரொம்பக் கஷ்டமா இருக்கு அம்மு! ஆன்ட்டியும் அங்கிளும் எவ்வளவு அருமையான மனுஷங்க... அற்புதமான ஒரு ஜோடி அவங்க... அங்கிள் மனசறிஞ்சு ஆன்ட்டி நடந்துப்பாங்க...

ஹூம்... என்னாலயே அவங்களை மறக்க முடியலைன்றப்போ, அந்தச் சின்ன வயசுல நீ எப்படித் தவிச்சிருப்பே! கடவுளே...

அப்போ உன்னை ஆறுதல்படுத்த உன்கூட நான் இல்லாமப் போயிட்டேனே... ஆனா, நாம குரு அங்கிளுக்குத் தான் நன்றி சொல்லணும்!

இன்னிக்கும் என் மனசுல, பசுமையா, ஒரு அற்புதமான தம்பதிகளா அவங்க ரெண்டு பேரும் நிறைஞ்சிருக்காங்க!

நல்லவங்களை ரொம்ப நாள் கடவுள் வாழ விடறதில்லையோ... அவங்களை எல்லாம் தன் கிட்டே அழைச்சிருப்பாரோ தெரியலை...!

பிரபுவும் ரொம்ப நல்லவன் அம்மு... அவனுக்கும் வாழக் குடுத்து வைக்கலை பாரு! ம்..."

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவன், "எல்லாம் பிரபுவால வந்தது... அவன்தான் முதல்லே என்னை அழைச்சிட்டு வந்து, அப்பா அம்மாவுக்கு இன்னொரு மகனாக்கினான்...

அப்புறம், உன்னையும் எனக்காக விட்டுக் குடுத்துட்டுப் போயிட்டான்! அவன் பெரிய தீர்க்கதரிசின்னு நினைக்கிறேன்... நீ எனக்கு மட்டுமே சொந்தமானவள்ன்னு அவனுக்குத் தெரிஞ்சிருக்கு பாரு!



அம்மா ஒரு நாள் சொன்னாங்களே, பிரபு திரும்பவும் சீக்கிரமே நம்ம வீட்டில வந்து பிறக்கணும்னு... நிச்சயமா அது நடக்கும் பாரு!"

அவன் விழிகளில் சிறு நீர்த் துளி... பெரும் நன்றிப் பெருக்காய்!

ப்ருத்விராஜின் கைகளை ஆறுதலுடன் பற்றி அவள் மென்மையாய் அழுத்த... அந்த ஸ்பரிசத்தின் இதம் புரிந்து வெகுவாய்த் தெளிந்தான் அவன்!

சிறிது நேரம்... பெரும் நிசப்தத்தைச் சுமந்து கழிய, திடீரென்று, "அம்மு... எனக்கு ஒரு யோசனை தோணுது! நாளைக்கு எடுத்திருக்கிற ஏர் டிக்கெட்டைக் கேன்சல் செஞ்சிட்டு, சிறுமலைக் கிராமத்துக்குப் போய் நம்ம ஹனிமூனைக் கொண்டாடலாமா?" குறுகுறுத்த விழிகளுடன் ஆர்வமாய் வினவினான்!

"ம்..." உற்சாகத்துடன் தலையசைத்து அவளும் ஒப்புதல் தர, மறுகணமே இருவருக்கும் வசந்தங்கள் வாழ்த்துப் பாடுவது போல்... மூன்று சொர்க்கங்களும் சொந்தமாய்! இருவரின் எண்ணங்களிலும்... பால்ய நாட்களின் நேசப் பதிவுகள்!

விழியோரங்கள் கனவில் மிதக்க, பெரும் எதிர்பார்ப்புடன் சதாவை ஏந்திக் கொண்டான் ப்ருத்வி!

இதயத்திற்குள்... நேசத்தூரிகை தீட்டிய ஓவியமாய்... அவள்!

நாளை... இந்த இரு அன்றில்களும், இன்பச் சிறகடித்துப் பல தடை தாண்டிப் பால்யக் கூட்டிற்குள் தம் பாதம் பதிக்கப் போகின்றன!

அவன் வாழ்வில்... அன்று உயிர்காத்த தெய்வமாய்... தேவதைாய் வந்து... இதயம் தீட்டிய ஓவியமாய் அவனுள் நிறைந்தவள், இன்று பெண்மையின் சொர்க்கமாகவே மாறியிருந்தாள்.

அவளுடைய தேக நந்தவனத்தில்... அவனுடைய வண்ணத்துப் பூச்சி விரல்களில் ஊர்வலம்!

முன்போ... அந்த ப்ருத்விராஜ், சந்யோகிதாவைக் குதிரை யில் சிறை எடுக்க, இன்று இவனோ தன் இதயத்தில் சிறை வைத்திருக்கிறான்.

வெளியே... இரவுப் பறவைகள், அவர்களுடைய உணர்வுகளுக்குப் பரிசாய் ‘சுபலாலி’ பாட... மலர்கள் அதற்கேற்ற மவுனத் தலையசைப்புடன் மகிழ்ச்சி கொண்டாடின.